ரைஸ் மில் நடத்துகின்றவர்கள் அந்த ரைஸ் மில்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்று ஆளும் கட்சியின் சார்பாகப் பேசினார்கள். தேசியமயமாக்கப்படும் என்ற கருத்து பேசப்பட்டது. மேலும் அரிசி அறைப்பதற்கான பெரிய ஆலைகளை ஏற்படுத்தவும் அரசாங்கம் முன்வந்திருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பல லட்சம் செலவில் பெரிய அளவில் நெல் அறவை செய்யப்படும் மில்லை ஏற்படுத்த இருக்கிறார்கள். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட ரைஸ் மில்களுக்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் முறை கைவிடப்படும் என்று பலமுறை தெரிவிக்கப்பட்டது.

2nd August 1965] [திரு. க. அன்பழகன்]

ஆலை சொந்தக்காரர்கள் ஆபத்தான நேரத்தில் அரிசி கிடைக்காதபடி செய்கிறார்கள். சிக்கலை ஏற்படுத்துகிறார்கள், விலையை ஏற்றுகிறார்கள் என்று அமைச்சர்களால் குற்றம் சாட்டப்பட்டது. இப்பொழுது நான் இந்த அறிக்கையில் காண்பது, தஞ்சை மாவட்டத்திலும் சென்னை மாநகரின் சுற்றுப்புறத்திலும் உள்ள அரிசி ஆலைகளில் பரிட்சார்த்தமாக நெல் காயவைக்கும் இயந்திரம் நிறுவும் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை சிவில் சப்ளை கமிஷனர் சிபாரிசு செய்யும் அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு கடன் உதவி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு கடன் உதவி வழங்குகிற அளவுக்கு அரசாங்கத்தின் திட்டம் வந்ததற்காக உண்மையாக நான் வருத்தப்படுகிறேன். பெரிய அளவில் முதல் போட்டு தொழில் நடத்துகிறவர்கள், விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறவர்கள் என்று அரசாங்கத்தால் குற்றம் சாட்டப்பட்டு வந்த நிலையில் இப்போது நெல் காயவைப்பதற்கு உபயோகிக்க ஏற்ற கருவியை அவர்களுக்கு கடன் வழங்குவதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. சென்னை சிவில் சப்ளை கமிஷனர் சிபாரிசு செய்யும் ஆலை சொந்தக்காரர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இந்த வேலைத் திட்டத்திற்காக 1965-66-ல் ரூபாய் இரண்டு லட்சமும் மூன்று ஆண்டுகளில் 20 லட்சமும் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1965 குறுவை அறுவடைக்கு முன் ஆறு உலர வைப்பு இயந்திரங்களை நிறுவ முடியுமென்று அரசாங்கம் எதிர்பார்ப்பதுடன் அதற்கு இந்தத் துணை மதிப்பீட்டில் ரூபாய் 100 அடையாள ஏற்பாடாக சேர்க்கப்பட்டுள்ளது. இதைப் படித்துப் பார்க்கிறபோது அரசாங்கம் தேசியமயமாக்கும் திட்டத்தைக் கைவிட்டதோடு மட்டுமல்ல, பெரிய அளவில் அரிசி அறைக்க நெல் காயவைக்கும் இயந்திரம் நிறுவுவதற்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு 20 லட்சம் வரை கடன் கொடுக்க முன்வருவது என்பது அரசியல் நோக்கத்தோடு அமைந்ததாகுமோ என்று அஞ்சுகிறேன். நெல் காயவைக்கப் பயன்படும் இயந்திரம் அரசியலில் பலரைக் குளிர் காயவைக்கவும் பயன்படுமானால் என்ன செய்வது? உண்மையாகவே ஆண்டு நிதி நிலை அறிக்கை தரும் நேரத்தில் பெரிய திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதைவிட்டு துணை மானிய கோரிக்கையில் இப்படிப்பட்ட செலவுகளை எல்லாம் காட்டுவது வருந்தத் தக்கது என்று கூறி வேறு சில கடமைகளை இந்த அறிக்கை நிறைவேற்றுவதாக இருக்கிறது என்ற கருத்தையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* DR. H. V. HANDE: Mr. Deputy Chairman, at the very outset I wish to express my personal views on the subjcet of family planning, which my hon. Friend Sri Krishnamoorthy raised. I have to say that I differ from Sri Krishnamoorthy one hundred per cent. The most important problem that is facing our country to-day is the explosive population, the seriousness of which probably many of us have not appreciated. The rate at which we are increasing our population is so fabulous that a time will come when it will cease to be a national problem. It may become an international problem. Our nation may become a problem for the

[Dr. H. V. Hande] [2nd August 1965

entire world. My hon. Friend does not have faith in statistics. At any rate, we have to accept some sort of statistics in the absence of anythingelse better than them. If only we scrutinise the rate of population growth, we will see how huge it is. The growth is very heavy. This is particularly very poignant among the poor people. If only we go and examine the lives of the poor people, we will find that the main problem is 'economics'. Nearly 8 to 9 children are there in one ordinary family, which is earning about eighty or ninety rupees per month. Can any one over imagine, with the present spiralling of prices and with the fantastic inflation that in the name of anything we can solve the problem except by requesting our brothers to cut short this fantastic growth in population? This is a very serious problem, which we may not appreciate now. But the problem will in a very short time become very explosive. My hon. Friend said that we did not want our children to die. Definitely we want our children to be happy. That is exactly what we want every family to realize. If we do not observe family planning, our children will be in great trouble later on. The problem of getting admission to any place like getting into the buses or walking on the roads is becoming more and more acute. One can analyse the problem very carefully and closely and find out what it is. The intrinsic problem is explosive population.

So, I request the Hon. Minister to reconsider his views. I also want to stress before this House that the amount spent is not at all sufficient. I would like the Government to spend a little more to educate the poor people. The poor people must be educated on the value of family planning. We have set up voluntary agencies to do family planning work. But the poor people have not appreciated. The educated people are informed of family planning. But the poor people have not been educated, and they have not yet appreciated it. So, there is lop-sided arrangement. My hon. Friend said that he did not believe in it. But I do not agree with him. As it is, there is a completely lop-sided implementation of policy, because the poor people are growing at a faster rate and they are not educated properly on family planning. We must solve the poverty that has stricken them, and the only solution therefore, as it is, is the reduction in the growth of population. We have to control the growth of population.

Having stressed the importance of family planning, I want to stress another important thing. The Government have stated that they are interested in persuading the eligible fathers. I would go a step further and request them to explain this to the eligible mothers also. They should not stop with fathers. Why not we adopt some sort of measures like this by which the mothers also are brought into the loop programme? The hon. the Health Minister must consider this programme and try to increase the loop programme. The delays in getting foreign exchange must be overcome. I would urge on the Hon. Minister to reconsider the question and see that the loop programme is spread all over the state.

2nd August 1965] [Dr. H. V. Hande.]

Sir, at this juncture I would like to congratulate the Hon. Minister on the prize that the Madras State got in the matter of implementing the family planning programme. Family planning is essential, and all the heads of States must sit togethr and try to solve this problem. Now we are 450 millions. In another ten years we may become 550 millions. My hon. Friend again said that this family planning concept was imported from the western countries. I beg to differ. Western countries have no problem of family planning. Their problem is to increase the population. It is not a western concept; this is a problem peculiar to the Asian countries. This is not at all the problem of the western countries This is not at all a concept imported from western nations. This problem is peculiar to this country.

Sir, in this context I would like to make another suggestion to the Hon. the Health Minister. In the matter of sterilisation, in the matter of vasectomy, the Health Minister or the Director of Medical Services could be a little more liberal. A number of House Surgeons may be made to perform the operations. After all, it is a simple operation. Now the House Surgeons are not allowed to do it. A number of House Surgeons could be encouraged to do it. A number of posters, more educative measures, everything under the command of the Government must be harnessed to spread family planning. 4-40 p.m.

Then, on the same page 10, item (i) refers to the establishment of a Post-Graduate Institute in Basic Medical Sciences. Of course, it is not clear what exactly the programme is. I presume it is something like this. The role of physiology, and some other scientific subject in medical department will be within its purview. Probably they are trying to interlink it. I would like to know where exactly this particular Institute is to be started, whether it is to be installed in the University or in the campus of the Madras Medical College or the Stanley Medical College so that the scientists and the doctors who are undertaking this post-gradutate medical science research will be able to have proper liaison, proper contact with the doctors, so that delay may be avoided. If it is in the University, and they have to get some basic materials from the hospital, there will be a lot of delay and slowing down of work. I would like to be informed where exactly they are going to have this Post-Graduate Medical Science Institute. Under the head "Medical" this is a major item involving an expediture of Rs. 42.50 lakhs.

Then, I come to another point which I would like the Health Minister to take particular note of. There is an item relating to improvement of Medical Colleges. Here I wish to state that the amount allotted is very, very meagre. A number of Medical Colleges and especially hospitals affiliated to the Medical Colleges need a good deal of improvement. They are in a very bad condition. The amount allotted here is totally insufficient. I will just give an example to the Health Minister for her consideration. There is the Stanley Medical College here in the Madras City. There is a

[Dr. H. V. Hande.] [2nd August 1965

hospital attached to it. Inside the hospital there is a Surgical Theatre. For the past nearly two years one particular Surgical Theatre is constantly being closed once in three or four days. No operation takes place for the reason that there is an overhead tank above the theatre and water drip down to the Surgical Theatre. I do not know whether they have represented this to the Government. Whatever it is, I would like the Hon. the Health Minister or the Chief Minister to allot a little more amount under this head for improvement to the theatre and to see that this leakage in the hospital of the premier City of Madras is closed. After all, there is a leak because there is an overhead tank over the Surgical Theatre and water drips down to the Surgical Theatre. If water drips down during an operation, the wound will become septic and it will cause danger to the life of the patient. It is a very important point which I would like the Health Minister to consider.

Then, in item (iii) on page 10 it is stated that the Government have sanctioned two additional Readers, one each for the E.N.T. and Opthalmology Deparments of the Madras Medical College, Madurai. I would like to know why such additional Readers should not be allotted to Madras also. Madras City, as I have already stated on a former occasion during question-time, is suffering very much due to paucity of E.N.T. department personnel. Sufficient doctors are not there to look after the patients. There are only one or two doctors: I do not know whether there are two doctors, but the capacity of the doctors, the capacity of the staff to discharge their duties towards these E.N.T. patients who go there, is very very poor. I will just give an example. Suppose a patient wants to have his tonsils taken away for some reason or other, he will have to wait for three or four months before an operation can be performed. By the time the operation is to take place we do not know what complications might have taken place. Therefore, I would like to take this opportunity to request the Government to see that something is done immediately. At least one more doctor should be posted. Let there be at least one more section. Let us have two or three teachers for the E.N.T. Department in the Madras Medical College itself so that they may cater to the vast needs of the citizens of Madras who are growing in fantastic proportions.

In conclusion I want to say only one thing. On page 11 it is stated that the Government have delegated powers to the Director of Medical Services to sanction the creation of posts of House Surgeons up to a maximum of 300 in a year as and when required. In other words, the Government had not previously granted this power. This is new power that is delegated to the Director of Medical Services. I have so much confidence in our Health Minister; there is no necessity to go on sanctioning powers to the Director of Medical Services. I am not at all satisfied with the way in which powers are delegated to the Dirtctor of Medical Services. The Health Minister, as a representative of the people, must try to have proper control over her department. Why give unnecessary discretionary powers to the Director of Medical Services who is,

2nd August 1965] [Dr. H. V. Hande]

after all, a departmental head, thereby exposing the Director to the pressure brought upon her? So, I would request the Health Minister not to go on delegating powers indefinitely in each Supplementary Demand. This habit of delegating powers unnecessarily to the Director of Medical Services must be forthwith stopped.

In the hope that the Government will consider the importans points raised, I conclude and I thank you, Sir.

திரு. எம். சுப்பையா செட்டியார்: கனம் உபதலைவர் அவர்களே, இந்த உப மானியக்கோரிக்கையின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல அனுமதித்ததற்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதில் முக்கியமானது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்போரேஷன் என்று ஆரம்பித்து, அதற்காக 6 கோடி ரூபாய், கிட்டத்தட்ட 7.6 கோடி ரூபாய் கொடுத்து இந்த ஸ்தாபனங்களின் நல்ல காரியங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற கருத்தில் செயல்படுவதற்கு முக்கியமாக அரசாங்கத்தையும், அதற்குப் பொறுப்பான மந்திரியையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்று கிண்டியில் இருப்பது போல பல ஜில்லாக்களில் வைத்திருக்கிறார்கள். அதை எடுத்து நடத்துகிறவர்களுக்கு திடீரென்று வாடகை முதலியவை ஏறி விடுகின்றன. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள் அதைத் தாங்குமா என்று யோசித்துப் பார்த்து, தொழிலுக்குத் தகுந்தாற்போல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரியே கவனிப் 4-50 p.m.
பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. உற்பத்திச் செலவு அதிகமானால், அதனால் விலைவாசிகள் ஏறுகின்றன. பல துறைகளில் நஷ்டம் ஏற்படுகிற நிலை ஏற்படுகிறது. தொழில்பேட்டையிலுள்ளவர்களுக்கு முடிந்த வரையில் நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவுக்கு இதில் 49 லட்சம், ஏறத்தாழ அரைக் கோடி ரூபாய் உபரியாகச் செலவு செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே அரசாங்கத்தின் செலவில் கிட்டத்தட்ட 43 கோடி ரூபாய் வரையில் அரசாங்க சிப்பந்திகளுக்காகச் செலவழிக்கிறோம். 163 கோடி ரூபாய் வருமானமுள்ள தமிழ் நாட்டில் சிப்பந்திகளின் செலவுக்காக கிட்டத்தட்ட 43 கோடி ரூபாய் செவழித்துக்கொண்டு வருகிறோம். அதுவும் பற்றாது என்று மேற்கொண்டு செலவு செய்யவேண்டுமென்று திட்டமிட்டு செலவு செய்வதைப்பற்றி, நான் ஆட்சேபத்துக்காகச் சொல்லவில்லை, இம்மாதிரி செலவுகளை ஏற்றிக்கொண்டு போனால், பொதுமக்கள் தான் கடைசியில் சுமக்க வேண்டி வரும் என்று கொஞ்சமாவது ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும். டியர்னஸ் அலவன்ஸ்—பஞ்சப்படியை உயர்த்தும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அடிக்கடி உயர்த்தி வருகிறோம். 1961-62-லிருந்து 1965-66-க்குள் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறோம். அது வரவேற்கத்தக்கது தான். இதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்க

வேண்டும். இந்த நிலையை நீடித்துக்கொண்டு போனால், செலவுகளை அதிகம் ஆக்கினால், கடைசியில் எங்கே போய் நிற்கப் போகிறோம், யாரிடம் பணம் வாங்குவது, பொதுமக்கள் எவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்து, தவறான தத்துவங்கள் காரணமாக ஏற்படும் விலைவாசியைச் சீர்திருத்தம் செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விலைவாசியை ஏற்றுகிற காரியங்களைச் செய்துகொண்டு, அது ஏறுகிறது என்ற காரணத்தால், அரசாங்கத்தில் வேலை செய்கிறவர்களுக்கு விலைவாசிப் படியை அதிகமாகக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, கொடுத்துக் கொண்டு போனால், பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு, மாத வருவாய் உள்ள இதர ஸ்தாபனங்களில் உள்ளவர்களுக்கு எவ்வளவு சிரமம் ஏற்படும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசிகள் ஏறுவதற்கு என்ன காரணம், இந்த மாதிரி தாறுமாறாக ஏன் ஏறுகிறது, இதைத் தடுக்க வழி இல்லையா என்ற அடிப்படையில் சிந்தித்து, அதற்கு வழிவகை செய்ய வேண்டுமேயொழிய இதே முறையில் சென்றுகொண்டிருந்தால் என்றாவது ஒரு நாள் நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலைக்குப் போகும் என்று சொல்லி கொள்ள ஆசைப்படுகிறேன். அரசாங்கமும் இதை உணர்ந்து வருகிறது என்பது மந்திரிமார்கள் பேசுவதிலிருந்து தெரிகிறது. எல்லோரும் ஒருமுகப்பட்டு விலைவாசி ஏற்றத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து ஜனங்களுக்கு நன்மை செய்யும் முறையில் செயலாற்ற வேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் இந்த உபரிப் படியைக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஏழைகள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அனுகூலம் கிடைக்கும் விதத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இப்போதுள்ள நிலையில் போனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. யுத்த காலத்தில் ஏதோ ஒரு நாட்டில் நோட்டுகளை கூடையில் போட்டுக் கொண்டு போய் சாமான்கள் வாங்கினார்கள் என்றார்கள். அந்த நிலைமையை உண்டாக்க வேண்டாம் என்று அரசாங்கத்தை கேட்டு கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவுக்கு கிட்டத்தட்ட அரைக் கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். முன்கூட்டியே 7½ கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். அதைத் தவிர, தவறு செய்கிறவர்களுக்காகத்தான் ஜெயில் வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் போலீசையும் ஜெயிலையும் சேர்த்துக் கொண்டு பார்த்தால், நம் நாட்டில் லா அண்ட் ஆர்டர்—அமைதியை நிலைநிறுத்த கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் செலவழிக்கிற நிலைமை ஏற்படுகிறது நூற்று அறுபது கோடி ரூபாயில், 10 கோடி ரூபாய் அமைதியைப் பராமரிக்கச் செலவு செய்கிறோம். இன்னும் கூடுதலாகச் செலவு செய்யும் சந்தர்ப்பம் வரலாம். இந்த மாதிரி செலவு செய்து கொண்டு போனால், பணத்தைத் தேடுவது கஷ்டமாகிவிடும். இனி மேல் வரி போட்டு வாங்க முடியாத நிலைமை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். போலீஸ் இலாகாவுக்குச் செலவு செய்வதைப்பற்றி கவலையில்லை. போலீஸ் இலாகா பொது மக்க

ளுக்கு நல்ல முறையில் சேவை செய்தால் எவ்வளவு செலவு செய்தாலும் பரவாயில்லை. போலீஸ் இலாகா பொதுமக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக சென்ற முறை இந்த சபைக்கு வந்துவிட்டுப் போன பிறகு, நான் வசிக்கும் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு திருடன் வந்து விட்டான். வீட்டுக்காரர்கள் பார்த்துவிட்டார்கள். திருடன் வெளியே ஓடி வந்து தெருக் கதவைச் சாத்திக் கொண்டு, வெளியே தாழ்ப்பாள் போட்டு விட்டு ஓடினான். கூக்குரல் கேட்டு, தெருக்காரர்கள் திருடனைப் பிடித்துக்கொண்டார்கள். போலீசுக்கு போன் செய்ய வேண்டுமென்று என் வீட்டுக்கு வந்தார்கள். அந்த சமயத்தில் நான் போனுக்கு வரமுடியாமல் போய், என் பையனைக் கூப்பிட்டு போலீசுக்கு போன் பண்ணச் சொன்னேன். போலீஸ் ஸ்டேஷனில் என்ன சொன்னார்கள் என்றால், திருடனைப் பிடித்துக் கொண்டு, சாட்சிகளை அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச்சொன்னார்கள். இதற்குள் நான் கீழே வந்து விட்டேன். நான் உடனே போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு, நீங்கள் வந்து அழைத்துக்கொண்டு போகிறீர்களா, அல்லது திருடனை விட்டு விடவா என்று கேட்டேன். வர முடியும் முடியாது என்று சொன்னால் மேல் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னேன். இது முதல் அனுபவம் அல்ல. பல வருஷங்களுக்கு முன்னால்—7, 8 வருஷங்களுக்கு முன்னால், நான் குடியிருக்கும் வீட்டிலேயே திருடன் வந்தான். இதே மாதிரி பிடித்து வைத்தோம். அப்போது என் வீட்டில் போன் இல்லாததால் போலீஸ் ஸ்டேஷனுககு ஒரு ஆளை அனுப்பினேன். ஸ்டேஷனில் இருந்து ஒரே கான்ஸ்டபிள், ஸ்டேஷனைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறேன், வேறு ஒருவரும் இல்லை. தயவு செய்து திருடனைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லிவிட்டார். இந்த நிலைமை பல பேர்களுக்கும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மாதிரி பொதுமக்கள் திருடனைப் பிடித்து வைத்தால் கூட அழைத்துப் போக தயாராயில்லாத போலீசாருக்கு நிறைய செலவு செய்கிறீர்கள். இந்தக் காரியத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும் என்று தான் எடுத்துச் சொன்னேன். போலீஸ்காரர்கள் எதற்கு உபயோகப்படுகிறார்கள் என்றால், அது தான் வருந்தக் கூடியதாக இருக்கிறது. மந்திரிமார்களுக்கு பந்தோபஸ்து கொடுக்க வேண்டியது தான். அதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொது மக்கள் ஆதரவால் அரசாங்கத்தை நடத்துகிறோம் என்று பறை சாற்றுகிற மந்திரிகள் ஒரு ஊருக்கு வருகிறார்கள் என்றால், அவர்கள் வருவதற்கு முன்பு போலீஸ் எக்சிபிஷன்—அந்த ஊர் பூராவும் போலீஸ் மயமாக இருக்கிறது. மந்திரிமார்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின், பொது மக்களின் கடமை. ஆனால் இந்த போலீஸ் எக்சிபிஷன் ஏன் ஒவ்வொரு ஊரிலேயும் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இன்னும் பல காரியங்கள் நடக்கின்றன. மந்திரிகளுக்கு போலீஸ் பந்தோபஸ்து கொடுப்பதைப்பற்றி வருத்தப்படவில்லை. போலீஸ் எக்சிபிஷனைப்பற்றிக்கூட, அரசாங்க சிப்பந்திகள் அரசாங்கம்

சொன்னதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக்கூட ஆட்சேபனையில்லை. ஆனால் சமீபத்தில் நமது தமிழ் நாட்டில் ஒரு திருவிழா நடந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்லாமலேயே தெரிந்து கொண்டிருப்பீர்கள். அந்தத் திருவிழா இந்த அரசாங்கத்தின் சார்பில் நடக்கக்கூடியதல்ல. ஆனால் மந்திரிகள் கலந்துகொள்ளுகிறார்கள். அதன் காரணமாகத் தான் போலீஸ் எக்சிபிஷன் நடக்கிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது. கூட்டத்தை கண்ட்ரோல் பண்ண வேண்டியது போலீசாரின் கடமைதான். ஒரு கட்சி சார்பாக நடக்கிற ஒரு காரியத்துக்கு ஒரு கட்சித் தலைவரின் பிறந்த தின விழாவுக்கு ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்களை வைத்து அரசாங்கத்தின் நிலைமைகளைத் தெரிவிக்க வேண்டுமா என்ற ஒரே கேள்வியை நான் கேட்கிறேன். அவரைக் குறை கூறவில்லை. நம் நாட்டுக்குச் சேவை செய்தவர், பெரிய மனிதர் என்பதை ஒப்புக்கொள்கிறேன் எதிர்க்கட்சியாக இருந்தாலும். பொது மக்களுக்காக, ஏழைகளுக்காக வாழ்கிறேன், பொது மக்கள் ஆதரவு இருக்கிறது என்று சொல்லக்கூடிய ஒருவருக்கு இந்த போலீஸ்காரர்களின் துணை எதற்காக இவ்வளவு தேவை என்று எனக்குப் புரியவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

உணவு தானியங்களைப் பற்றிப் பேசுவதற்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றி விரிவாகப் பேசுவதற்கு சீக்கிரத்திலேயே வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் இப்போது இதுபற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடலைபருப்பு, துவரம்பருப்பு முதலியவைகளை அரசாங்கம் வரவழைக்கும் நிலைமை ஏற்கெனவே இருந்து வந்தது. தமிழ்நாட்டிற்கு இது வரையில் வந்து கொண்டிருந்த இந்த தானியங்கள் இப்போது வராத நிலைமை ஏன் ஏற்பட்டது என்று தெரியவில்லை. இந்த விஷயத்தில் பஞ்சாப், குஜராத் முதலிய மாநிலங்களில் சர்க்கார் என்ன செய்தார்கள். உணவுப் பொருள் நெருக்கடியுள்ள மாநிலத்திலிருந்து அரிசியும் மற்ற தானியங்களும் வெளியே போகக்கூடாது என்ற கட்டுப்பாடு வந்தது. உடனே இந்த மாதிரியான துவரை, உளுந்து முதலியவைகளும் வெளியில் போகக்கூடாது என்று பல ராஜ்ய அரசாங்கங்கள் கட்டுப்பாடு கொண்டுவந்தன. இந்தக் கட்டுப்பாடு வந்தபோது இந்தப் பயறுகள் மூட்டை ஒன்று 40 அல்லது 50 ரூபாய் அளவில் விற்றன. தஞ்சாவூரில் கொத்துக்கடலை மூட்டைகளை அரசாங்கத்தார் விதித்த விலைக்கு விற்க வேண்டியிருந்தது. இந்தக் கடலை மூட்டைகள் வெளியே அனுப்பப்பட்டிருக்கின்றன. சென்னை சர்க்கார் இவைகளை என்ன விலைக்கு விற்றார்கள் என்று அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டால் நன்றாக இருக்கும். இவைகளை மூட்டை ஒன்று ரூபாய் 90 அல்லது ரூபாய் 110 வீதம் ஏன் விற்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன். சர்க்கார் டெண்டர் கேட்டு தானியத்தை விற்றிருக்கிறார்கள். இதை சர்க்காரே பொது ஜனங்களுக்கு விற்றிருக்கலாம். சர்க்கார் இதை வியாபாரியிடம் விற்றால், அந்த வியாபாரி இதை சமுத்திரத்திலா போட்டுவிட்டார்?

அவரும் இதை பொதுஜனங்களிடம் தான் விற்கிறார். எனவே சர்க்கார் ஏகபோகமாக வியாபாரம் செய்தால், என்ன ஏற்படும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது Black மார்க்கெட்டை ஏற்படுத்தும். பிடிவாதத்திற்கு மருந்து இல்லை. சர்க்கார் முதலில் சிலரை ஒழித்தார்கள். பிறகு அரிசி மில்காரர்களை சர்க்கார் ஒழித்தார்கள். அரிசி மில்காரர்கள் ஒழிந்தது, ஒழிந்ததுதான். இந்த நிலைமையில் சர்க்கார் அவர்களாக உணவுப் பொருள் உற்பத்தி செய்வதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அரிசியை சர்க்கார் பெரிய பெரிய பகாசுரன் கிடங்குகளில் வைத்திருந்தால், அரிசி கெட்டுப்போகாமல் எப்படி இருக்கும்? இந்த வருஷம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மழை பெய்யாவிட்டால் தஞ்சாவூர் குறுவை சாகுபடி எப்படி இருக்குமோ, தெரியவில்லை. அப்படி மழை வராமல் இருந்தால், சர்க்கார் இந்த வருஷம் சென்ற வருஷத்தை விட மோசமான அரிசியைத் தான் கொடுப்பார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன். நெல்லை அப்படியே வைத்திருந்து மழை காலத்தில் அரிசியாக அரைத்துக் கொடுக்க முடியாது. 5-00 p.m.
மழைக்காலத்தில் அரிசி கொடுக்க வேண்டும். சர்க்கார் அரிசி வியாபாரம் கடைசி வரையில் வெற்றிகரமானதாக இருக்காது. நிர்வாகச் செலவு ஒரு மூட்டைக்கு சர்க்கார் எவ்வளவு போட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் இரண்டு, மூன்று தினங்களுக்குப் பிறகு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பேச விரும்புகிறேன். படி ஒன்றுக்கு 20 அல்லது 25 பைசா நிர்வாகச் செலவு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் செலவையெல்லாம் உண்மையில் யார் சுமக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். சர்க்கார் தங்கள் செலவை உயர்த்திக்கொண்டு விட்டு அந்தச் செலவின் சுமையை பொது மக்கள் மீது வைக்கிறார்கள். தர்மசத்திரம் நடத்துவதென்றாலும் கொஞ்ச நாட்களுக்குத்தான் தர்மசத்திரங்கள் நடத்தலாம். அரசாங்கம் தர்மசத்திரமாக ஆகாமல் நல்ல முறையில் நடக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

டிரான்ஸ்போர்ட் இலாகாவைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்து இலாகாவிற்கு 6 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்து இலாகா வரிகளை உயர்த்திக்கொண்டே போகிறது. போக்குவரத்துத் தொழிலினால் கோடீஸ்வரர்கள் ஆனவர்கள் இருக்கிறார்களே என்று கனம் மந்திரிகள் சொல்லக்கூடும். ஆனால் நாங்கள் லைஸென்ஸ் இல்லாமல் லாரியோ, பஸ்ஸோ வாங்க முடியாது. இந்தத் தொழிலுள்ள கஷ்ட நஷ்டங்கள் அரசாங்கத்திற்கு இப்போது தெரியும். காரணம், இப்போது அரசாங்கமே போக்குவரத்துத் தொழில் நடத்துகிறது அரசாங்கமே, பல ரூட்டுகளில் வருமானம் இல்லாததால் அங்கே பஸ் போக்குவரத்து நடத்த பயப்படுகிறார்கள். அப்படி இருக்கும்போது, பஸ்களோ லாரிகளோ ஒன்றிரண்டு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு தாங்கமுடியாதபடி வரி போடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு டீஸல் எண்ணெயாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [2nd August 1965

பட்டிருக்கிறதா? இன்று டீஸல் எண்ணெய் வாங்குவது பகீரதப் பிரயத்தனமாக இருக்கிறது. டீஸல் எண்ணெய் இல்லாத தால் வண்டியை ஓட்டாமல் இருந்தால் அதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். வண்டி ஓடாத போது வரியைக் கட்டி விட்டால், மூன்று மாதத்திற்குப் பிறகு சர்க்கார் அந்த வரிப் பணத்தைத் திருப்பித்தருவார்களா? சாமான்களின் விலைகள் மேலும் மேலும் உயர்கின்றன. மக்களின் பிழைப்பிற்கு வழி காண்பதுதான் அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் மக்களின் பிழைப்பைக் கெடுக்கக்கூடாது.

சர்க்கார் திட்டம் போடுகிறார்கள். திட்டங்களைப் பற்றி இன்னொரு நாள் பேசுவோம். திட்டங்களே தேவையில்லை என்று சொல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பேசப்பட்ட திட்டங்கள் என்ன பலன்கள் தந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். திட்டங்களால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படக்கூடும். தீமைகளை நாங்கள் எடுத்துச் சொன்னோம். மக்களுக்கு நன்மைகள் செய்வதற்கான ஏற் பாடுகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்த கனம் உதவித் தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

*Sri V. K. RAMASWAMY MUDALIAR: Sir, with regard to allotment under food production. I would like to make one submission. Soil conservation should be taken up simultaneously and propaganda done. So many ryots in the interior villages do not know anything about soil conservation. If the Government are anxious to step up production, soil conservation work should be taken up in all seriousness and on an intensive scale.

Then, there should be soil testing machinery in every district under the control of the District Agricultural Officer. So much of literature has been issued by the Government on the subject and now ryots in the interior villages are keen about testing their soils. So, in every district small units may be located with a view of testing soil samples and these units can be put in charge of the District Agricultural Officers.

There has been so much of delay in the supply of new strains of paddy. Sufficient propaganda has not been done. Technical people of the department should be made to go to the interor villages to be in constant touch with the villagers. These are all my submissions with regard to agriculture.

Sir, with regard to family planning, the Government have been doing their best and I congratulate the Government on the work done by them. More intensive work should be taken up on still larger scale. The population growth in India is immense. It is going up every year by 1,20,00,000. That is the population of the whole of Australia. So, I should say, every year we are reproducing the entire population of Australia. This is a menace to the

2nd August 1965] [Sri V. K. Ramaswamy Mudaliar]

country, leave alone the refugees and others who are coming in We have so many mouths to feed. So, I would request the Government to pay liberal grants both to canvassor and the man who undergoes the operation and set up the family clinics in all the districts. Thank you, Sir.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் டெபுடி சேர்மன் அவர்களே, இந்த விவாதத்தைத் துவக்கிய கனம் அங்கத்தினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சேலம் மாவட்டப் பிரிவினைபற்றிக் குறிப்பிட்டார்கள். அதையே கனம் உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களும் குறிப்பிட்டார்கள். திரு. ராஜா அய்யர் அவர்கள் சொன்னது, சேலம் மட்டும் பிரிக்கப்பட்டால் போதாது, இன்னும் மற்ற ஜில்லாக்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும். ராமநாத புரம் பெரிய பரப்புள்ள பெரிய மாவட்டம். புதுக்கோட்டை வேறு இருக்கிறது; எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கூறினார்கள். மற்றவர் ஏன் சேலத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்று தர்மபுரி தேர்தலை நினைத்துக்கொண்டு பேசினார். அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது. சேலத் தைப்பற்றி, அதைப் பிரிப்பதைப் பற்றி மாவட்டத்தைப்பற்றி எதுவும் தெரியாது. ஆனால் தர்மபுரி தேர்தல் இன்னும் அவர்களை விட்டு நீங்கியபாடில்லை. சேலம் பிரிவினை என்றால் தர்மபுரி தேர்தல் தான் அவர்கள் கண் முன்னே தெரிகிறது. ஜில்லா பிரிவினை என்பது ரொம்ப நாட்களாக அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிற விஷயம்.

திரு. என். வி. நடராசன்: தர்மபுரி தேர்தலைப் பற்றி குறிப் பாகச் சொல்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் அதைப்பிரித்ததைத்தான் குறிப்பிட்டார் திரு. அன்பழகன். மாவட்டத்தைப் பிரிப்பதில் ஆட்சேபணையில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நானும் அதைத்தான் சொல் கிறேன். திரு. அன்பழகன் அவர்களை தர்மபுரி தேர்தல் விட்ட பாடில்லை என்றுதான் சொன்னேன். சேலத்தைப் பற்றியோ, பிரிவினை அவசியமா இல்லையா என்பதைப்பற்றியோ கவலை இல்லை. தர்மபுரி தேர்தல்தான் கண்முன் நிற்கிறது. அது நடந்து ரொம்பநாள் ஆகிவிட்டதே, வேறு தேர்தலை எடுத்துக் கொள்ளலாமே என்றுதான் குறிப்பிட்டேன். பெரிய ஜில் லாக்கள் பல தமிழ்நாட்டில் இருக்கின்றன. சேலத்தைப் பிரிக்க வேண்டுமென்ற யோசனை ரொம்ப நாட்களாக இருந்தது. ரெவின்யூ போர்டார் அதைப்பற்றி ஆராய்ந்தார்கள். பிரிப்பது என்றால் செலவு அதிகமாகுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. பிரிப்பது என்றால் அதிலிருந்து பல சர்ச்சைகள் ஏற்படக்கூடும். டி.ஆர்.ஓ. ஒருவரைப் போட்டு ஏற்பாடு செய்ய லாம் என்றும் யோசிக்கப்பட்டது. கோவைக்கு ஜாயிண்ட் கலெக்டர்போட்டு கலெக்டருக்கு உள்ள வேலையை பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பிறகுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் களும் கனம் அன்பழகன் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். 5–10
ஜில்லாவில் ரொம்பப் பெரிய ஜில்லா சேலம் ஜில்லா. பெரிய p.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1965

ஜில்லாவாக இருப்பதோடு மட்டுமல்லாமல் வடசேலம் பகுதியிலுள்ள கிருஷ்ணகிரி, ஹொசூர் போன்ற இடங்கள் எல்லாம் ரொம்ப தூரமாக இருப்பதால் அவற்றில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு ஆண்டுக்கு முன்பு அப்போது தர்மபுரி தேர்தல் வருமென்ற நினைவே இல்லை. மறைந்த அங்கத்தினர் அப்போது உயிரோடு இருந்தார். அப்போதே பிரிவினை முடிவு செய்யப் பட்டது. சேலம் ஜில்லா மட்டும் பிரிக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பது உணர்ந்து பிரிக்கப்பட்டது. கனம் ராஜா அய்யர் அவர்கள் யோசனைக்கு சில நான் சொல்ல விரும்புகிறேன். மற்ற ஜில்லாக்களை எடுத்துக்கொள்வதாக இல்லை. கனம் ராஜா அய்யர் சொல்லியதைப் போல ராமனுதபுரத்தை எப்படிப் பிரிப்பது, புதுக் கோட்டையை எங்கே சேர்ப்பது என்றெல்லாம் பார்த்தால் முடிவில்லாத சர்ச்சை ஏற்படும். அது வேண்டாம். இருப்பதை வைத்துக் கொண்டே அதிக கவனம் செலுத்தலாம் என்று இருக்கிறோம். சேலம் மாவட்டம் முன்பே பிரிக்கலாம் என்ற முடிவு ஏற்பட்டு அதற்காக ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டு ஆராயப் பட்டது. செலவு அதிகமாகிறது என்று அப்போது நிறுத்தி வைக்கப்பட்டது. எத்தனை காலத்திற்கு நிறுத்தி வைப்பது, அது சரியல்ல என்று உப தேர்தல் வருவதற்கு முன்பே ஏப்ரல் முதல் தேதியில் மாவட்ட பிரிவினை செய்யும் யோசனை இருந்தது. வரவுசெலவுத் திட்டம் தயாரித்தபோது அந்த யோசனை பரிசீலனை செய்யப் பட்டது. ஏப்ரல் முதல் தேதியில் அதை எடுத்துக்கொள்ள போதிய ஏற்பாடு இல்லை. அக்டோபர் முதல் தேதி எடுத்துக்கொள்ளலாம் என்று வரவுசெலவுத் திட்ட காலத்தில் முடிவு செய்யப்பட்டதால் மேலும் அதற்கு என்ன செலவாகுமென்று விவரங்கள் அப்போது இல்லை. வரவுசெலவுத் திட்டத்தில் போடாமல் துணை மானியத்தில் பிரிவினையால் ஏற்படக் கூடிய செலவு வந்திருக்கிறது. சேலத்தைப் பிரிக்கவேண்டுமென்று ரொம்ப நாளாக அங்குள்ளவர்கள் கோரிக் கொண்டுதான் இருந்தார்கள். பிரிவினை முடிவு செய்யப்பட்டதே தவிர, தலைநகரை எங்கே வைப்பது என்ற சர்ச்சை வந்தது. அப்போது இதில் சர்ச்சை வேண்டாம், பிரிவினை வேண்டாமென்று சொன்னால், அதை நிறுத்திவிடுவதாகக்கூட நான் சொன்னேன். பிரிவினை வேண்டுமென்று சொன்னார்கள். தர்மபுரியா, கிருஷ்ணகிரியா என்று சர்ச்சை செய்துகொண்டிருக்கவேண்டாம், என்றும் அதைக் கலந்து பேசுவதற்காகவும் இரண்டு சாரார்களும் வந்தார்கள். வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும்கூட வந்தார்கள். எம்.எல்.ஏ.-க்கள் இரண்டு பேரைப் போட்டு யோசனை கூறச் சொன்னேன். அதை யொட்டி அரசாங்கம் முடிவு செய்யுமென்றும் சொன்னேன். எல்லோரும் இதை ஒப்புக்கொண்டார்கள். அதன் பேரில் வடசேலத்திற்கு தர்மபுரி தலைநகர் என்று முடிவு செய்யப் பட்டு அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்வி இலாகா இரண்டாகப் பிரிக்கப்பட்டதையொட்டி கனம் ராஜா அய்யர் அவர்கள் குறிப்பிட்டு அதை இன்னும் மூன்றாகப் பிரிக்கலாம் என்று சொன்னார்கள். பிரிக்கவே கூடாது என்பது கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய

2nd August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

யோசனை. கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் ஒன்று சிறிதாகவும் ஒன்று பெரிதாகவும் இருப்பதாகச் சொன்னார். கல்வி என்றால் ஆரம்பக் கல்வி உயர்நிலைக் கல்வி இரண்டும் ' Integrated subseet ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாது என்பதை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். கல்லூரிகளைச் சேர்த்து ஒரே டைரக்டராக இருக்கவேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். ஆரம்பக் கல்வி வேறு, உயர்நிலைக் கல்வி வேறு என்று பிரிப்பது சரியில்லை. ஆரம்பக் கல்வியை எங்கே நிறுத்துவது? ஆறாவது, எட்டாவது என்று முன்பு மாடல் ஸ்கூல்களில் இருந்தது. எங்கே உயர்நிலைக்கல்வி துவங்குகிறது? இப்போதெல்லாம் பதினோராவது ஸ்டாண்டர்டுக்கு பதினோரு ஆண்டுகள் இருக்கிறது. அது ' integrated course ' முன்பு இவற்றில் வித்தியாசம் இருந்தது. முன்பு ஆரம்பக் கல்வியை முடித்து உயர்நிலைப் பள்ளிக்குப் போனால் அங்கு பரிட்சை வைத்துத்தான் எடுத்துக் கொள்வார்கள். இப்போது அப்படியில்லை. கல்வி என்றால் கிராமத்திலுள்ளவர்களுக்கு உயர்நிலைக் கல்விதான் குறைந்த பட்ச கல்வி என்ற உணர்ச்சி இருக்கிறது. ஆகையால் அதைப் பிரிக்கக்கூடாது என்று ஒரே இலாகாவாக வைக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் அதிகமாகின்றன. பல்கலைக்கழகம் பற்றியும் யோசிக்கவேண்டும். அதனால்தான் இதற்கென்று ஒரு தனி டைரக்டர் போட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

டி.இ.ஓ.-வுக்கு அசிஸ்டெண்டாக சிலரைப் போட்டிருக்கிறது. இங்கேதான் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள், ஆசிரியர்கள் குறைகளைச் சொல்கிறார்கள், டி.இ.ஓ.-வுக்கு அசிஸ்டெண்டாகப் போட்டிருக்கிறவர்கள் ஆசிரியர்கள் குறைகளை விசாரித்து அவர்களுக்கு அது குறைவாக இருக்கிறது சம்பளம் போதாது என்றெல்லாம் கேட்கிறார்கள். இலாகாவில் உள்ள வேலைகளைச் செய்யலாம் அவர்கள். அவர்களும் கேட்கலாம், ஆசிரியர்களிடத்தில் உள்ள அளவு கடந்த அக்கரையின் காரணமாக.

பஞ்சப்படி பற்றி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பஞ்சப்படி அதிகமாகிக் கொண்டு போகிறது. விலையும் ஏறிக்கொண்டு தான் போகிறது. பஞ்சப்படியில் பாகுபாடு வேண்டுமென்கிறார்கள். குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு நிறையவும், நிறைய சம்பளம் வாங்குகிறவர்களுக்கு குறைவாகவும் பஞ்சப்படி கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. பஞ்சப்படி சாதாரணமாக சம்பளத்தோடு ' லிங்க் ' செய்யப்பட்டிருக்கிறது. வெறும் பஞ்சப்படி மாத்திரம் இல்லை. எல்லாம் சரி சமமாக இருந்தால் இந்த வித்தியாசம் எதற்கு? மத்திய அரசாங்கம் எப்படிக்கொடுக்கிறார்களோ அதையொட்டித்தான் பஞ்சப்படி அவ்வப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அது தவிர்க்கக்கூடாத செலவாகத் தான் இருக்கிறது.

அதோடு மற்றொன்று, இந்த பருப்பு தினுசுகள், அரிசி இவையெல்லாம் அரசாங்கம் கொள்முதல் செய்வதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு கண்ட்ரோலை தவிர்ப்பதற்கில்லை. கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் எவ்வளவு

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1965

தான் சொன்னாலும் சரி, மக்களின் நன்மையை முன்னிட்டு கண்ட்ரோல்டு எகானமி நமக்கு அவசியம் வேண்டும். கண்ட்ரோலை எடுக்கும் நோக்கம் இல்லை. கண்ட்ரோல் இல்லாத நிலைமை ஏற்பட்டால் வேறு வேலையை அரசாங்கம் பார்க்கலாம். ஆனால் இன்றைய நிலைமை அப்படியில்லை. திட்டத்தை நிறைவேற்றி வருகிறபோது கண்ட்ரோல்டு எகானமி வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு வைத்துக்கொள்கிறோம். கண்ட்ரோல் இல்லாதபோதுகூட பருப்பு சில இடங்களில் கிடைக்கவில்லை, என்று பலர் புகார் செய்துவருகிறார்கள்.

இப்போது வேறு மாநிலங்களிலிருந்து State to State தான் கொடுத்திருக்கிறார்கள். மொத்தமாக அவர்கள் வாங்கிக் கொண்டு, அவர்கள் கொடுக்கிறார்கள். ஆகையினால் தான் அதை அரசாங்கமே வாங்க பணம் போடுகிறது. தானியங்கள் வைக்கிற கோடவுன்கள் கட்டுகிறதைப்பற்றிச் சொன்னார்கள். தானியங்கள் சேதம் அடையக் கூடாது என்று தான் நவீன முறையில் கோடவுன் கட்டுகிறோம். அதற்கு வேண்டிய செலவு ஆகிறது. அது அதிகச் செலவு என்று சொன்னார்கள், திரு. அன்பழகன் அவர்கள். அதிகச் செலவு ஒன்றும் இல்லை. எவ்வளவு ஆகிறதோ அந்த அளவுக்குத் தான் மானியம் கோரப்படுகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ரொம்ப ஆவேசமாக, உருக்கமாக, உணர்ச்சியோடு பேசினார்கள். அதைப்போல் டாக்டர் ஹண்டே அவர்களும் உருக்கமாகப் பேசினார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்வதை நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இன்றைக்காவது ஏற்பட்டதே என்று எனக்கு மகிழ்ச்சி. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். என்றைக்கும் குடும்பக் கட்டுப்பாடு என்ற எண்ணம் இல்லாமல் இல்லை. பண்டையகாலத்தில் கூட இருந்தது. அவர்களுக்குத் தெரியாதா? பழைய வைதீகர் நாள் பார்க்கிறது நட்சத்திரம் பார்க்கிறது என்று தடை விதித்தார்கள். அதெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு அடிப்படையில் தான். பண்டைய காலத்தில் நம் முன்னோர்கள் அதையெல்லாம் அனுசரித்தார்கள். அது இயற்கைக் கட்டுப்பாடு. நவீன காலத்துக்கு அது பொருந்தாது. ஆகையினால் இந்தச் செயற்கைக் கட்டுப்பாடு வேண்டியிருக்கிறது. டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்லியது போல், ஜனத்தொகை பெருத்து வருவதைப்பற்றிப் பல பெரிய நிபுணர்கள், அறிஞர்கள் எல்லாம் ரொம்ப பயங்கரமாக வர்ணிக்கிறார்கள், கவலைப்படுகிறார்கள். வேறு பல நாடுகளுக்கும் இது கவலையைக் கொடுக்கிறது. நம் நாட்டைப்பற்றி பல நாடுகள் கவலைப்படுகின்றன. எவ்வளவு பெரிய திட்டம் வகுத்தால் என்ன, எவ்வளவு வருவாய் பெருகினால் என்ன, எவ்வளவு வசதிகளைப் பெருக்கினால் என்ன, கட்டுக்கு அடங்காமல் ஜனத்தொகை பெருகினால், திட்டங்கள் பலன் இல்லாமல் போகும் என்று, இதற்கு ரொம்ப முக்கியத்துவம் அளித்து, இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்

2nd August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்பதுதான் எண்ணம். டக்டர் ஹண்டே அவர்கள் சொல்லியது போல், இன்னும் வேறு பல முறைகள் சொல்லுகிறார்கள். எல்லோரும் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். Legalised Abortion என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் கொண்டுவரவில்லை. நம் குற்றச் சட்டத்தில் இது குற்றமாக இருக்கும்போது, அது குற்றம் இல்லை என்று சொல்லக்கூடாது என்பது என் அபிப்பிராயம். வேறு எந்தெந்த வகையில் உருப்படியான வகையில் கட்டுப்படுத்த முடியுமோ அந்தந்த வகையில் கட்டுப்படுத்துகிறோம்.

போலீசைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே கனம் 5-20 p.m.
அன்பழகன் அவர்களும் பழைய சம்பவங்கள்தான் நினைவு. கிளர்ச்சி நடந்தது, பலாத்காரம் நடந்தது, மக்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்போது போலீசார் சமாளித்தார்கள். போலிசாருக்கு ரொம்ப கடுமையான சோதனை. உயிரைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தைரியமாக தீர்த்துடன் மக்களைப் பாதுகாத்தார்கள். அதற்காகப் பாராட்டும் வகையில் இந்த இன்க்ரிமெண்ட் கொடுக்கப்பட்டது. தவறு செய்தவர்கள் இருக்கலாம். அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கிறது. தவறுதல் செய்து விட்டார்கள் என்று ஆர்.டி.ஓ, ரிப்போர்ட் இருக்கிறது என்றார். அதை சபையில் சமர்ப்பிக்கவில்லை என்று சொல்லியவுடன், இருக்கிறது என்று சொல்லிவிட்டால் அதை யாரும் மறுக்கமுடியாது என்று நினைத்துச் சொல்லியிருக்கலாம். எந்த அறிக்கையிலேயும் இல்லை. இந்தக் கலவரங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட எந்த ஆர்.டி.ஓ. ரிப்போர்ட்டிலேயும் இல்லை, ஆர்.டி.ஓ. ரிப்போர்ட் வேண்டாம், போலீஸார் யாரானாலும் தவறாக நடந்திருந்தால் அவர்கள் மீது தாட்சண்யம் இல்லாமல் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டு தான் வருகிறோம். போலீசாரைப் பற்றி கனம் அங்கத்தினர் சுப்பையா செட்டியார் சொல்லாமல் சொன்னார்கள். யாராய் இருந்தால் என்ன, எந்தக் கட்சியாய் இருந்தால், என்ன, அமைதியைப் பாதுகாக்கவேண்டும். போலீஸார் கோயில் திருவிழா, உற்சவத்திற்கு வரவில்லையா? எந்தத் தலைவரானாலும் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் பெரிய கூட்டம் வருகிறது என்றால், கூட்டத்தைச் சமாளிக்கத் தான் போலீஸ். அமைச்சர்களுக்காக வரவில்லை அந்தப் போலீஸ். இதெல்லாம் தோரணையில் இருக்கிறது என்று ஏதோ நினைத்துக்கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தில் இல்லாத தலைவர்கள் வந்தால் போலீசார் பந்தோபஸ்து கொடுக்கிறார்கள் என்றால், வருகிற கூட்டத்தை சமாளிப்பதற்காக போலீசார் பந்தோபஸ்தே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

அரிசி மில்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நிறைய ரைஸ் மில்கள் இருக்கின்றன, அவைகளை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் கேட்டார்கள். அவைகளை எடுத்துக்கொள்ளும் கொள்கையை இதுவரை அனுசரிக்கவில்லை. எல்லாவற்றையும் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு எடுத்துக்கொள்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1965

வோம். புதிதாக நவீன முறையில் ரைஸ் மில்கள் வந்தால், இருக்கிற மில்களுக்கு வேலையில்லை என்று சொல்லுவது உண்மைதான். பல மில்கள் இருக்கின்றன. நல்ல நவீன முறையில் பயன்படுத்தும் அக்கறை அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்றுதான் கடன் கொடுக்கிறோம். கடன் கொடுத்து அவர்களை ஊக்குவித்து அவர்கள் மேலும் நல்ல முறையில் இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று தான் விரும்புகிறோம். மற்றப்படி நிர்வாகத்தைப்பற்றிப் பலர் சொன்னார்கள்.

கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் திரு. வி. கே இராமசாமி முதலியார் soil testing conservation பற்றி எல்லாம் சொன்னார்கள். அதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுகிற விஷயங்கள் என்று சொல்லி, என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

5–22 p.m. DEPUTY CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 144. *Notification issued with G.O. Ms. No. 1597, Home, dated 5th May 1965 exempting from payment of tax for the vehicle bearing registration No. MSS 192 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Rural Development and Local Administration Department, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* 145. *Notification issued with G.O. Ms. No. 1465, Home, dated 23rd April 1965 exempting from payment of tax for the vehicles bearing registration Nos. MDH 3059 and PYS 24 belonging to the United Nations International Children's Emergency Fund and lent to the Director, Central Leprosy Teaching and Research Institute, Chingleput. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931, (Madras Act III of 1931).]*

* 146. *Notification issued with G.O. Ms. No. 1681. Home, dated 14th May 1965 exempting from payment of tax for the Jeep MDR 4379 and the Trailor MDR 4391 belonging to the Swedish Mission Hospital, Tirupputtur so long as the jeep and the trailer are used for leprosy control and eradication work. [Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

2nd August 1965]

* 147. *Notification issued with G.O. Ms. No. 1613, Revenue, dated 25th May 1965 regarding declaration of Pottagudi village in Sivaganga taluk as an inam estate. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

* 148. *Notification issued with G.O. Ms. No. 1824, Home, dated 26th May 1965 regarding amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under Section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

* 149. *Notification issued with G.O. Ms. No. 1733, Revenue, dated 5th June 1965 regarding amendments to the Madras Land Reforms (Fixation of Ceiling on Land Rules, 1962). [Laid on the Table of the House under section 112 (2) of the Madras Land Reforms (Fixation of Celing on Land Act, 1961 (Madras Act 58 of 1961).]*

* 150. *Notification issued with G.O. Ms. No. 1181, Rural Development and Local Administration, dated 24th May 1965 making amendment to the Madras Panchayats (Election of Presidents and Vice-Presidents) Rules, 1961. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

B. Reports, Notifications and other papers.

19. *Note on the proposed constitution of Ambattur Township.*

* 20. *Administration Report of the Madras State Electricity Board for 1962-63.*

* 21. *Speech (in English) by Minister for Industries on the Annual Financial Statement of the Madras State Electricity Board for 1965–66.*

*22. *Statement (in English) showing the action taken on the suggestions made by Members.*

---

* Laid on the Table of the House on 30th July 1965.

2nd August 1965]

APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 23 on page 5.)

(*a*) *Filling up leave vacancies.*—Under rule 4 (5) of Chapter-II of the rules relating to Elementary Schools, the management of an Aided Elementary School can appoint substitutes in vacancies caused by the grant of leave of three weeks or more to teachers of the school.

Vacancies caused by retirement of teachers.—There is nothing in the rules forbidding the filling up of vacancies caused by the retirement of any teacher, if the teacher-pupil ratio in force is satisfied.

Fresh appointment of teachers.—There are no rules or orders forbidding the fresh appointment of teachers in aided Elementary Schools, if the newly appointed teachers are paid out of the funds of the managements concerned without claim for grant from State Funds. If the managements wish to claim grant on behalf of teachers appointed afresh, the following conditions should be satisfied :—

(i) the teacher so appointed should satisfy the existing rules regarding qualifications—General and Technical, age, etc.

(ii) the fresh appointments should be within the maximum number of teachers admissible for assessment of grant for the school according to the current teacher-pupil ratio; and

(iii) the fresh appointments should be made against the additional posts allotted by the Education Department.

(*b*) Rule 4 (5) of the rules for aid, governing the filling up of leave vacancies is in the " Rules relating to Elementary Schools " with which the managements of all aided elementary schools are expected to be familiar. This rule has not been modified and as such the question of communicating to the managements of aided elementary schools a particular rule does not arise.

As to fresh appointments of teachers, the rules for aid have not been amended in confirmity with G.O. No. 250, Education, dated 29th February 1964. The G.O. has been communicated to the District Educational Officers and the Deputy Inspectors of Schools and the managements of the aided Elementary Schools have been notified through the usual monthly meeting of Teachers' Association Centres.

APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 28 on page 97.]

Subject.—Establishment—Panchayat Unions—Elementary School Teachers—Transfer—Instructions—Issued.

(G.O. Ms. No. 1238, Rural Development and Local Administration Department, dated 29th May 1965.)

2nd August 1965]

Several representations have been received by Government that frequent and indiscriminate transfers of Panchayat Union School Teachers cause great inconvenience to the teachers and dislocation of work in the schools. Government have therefore carefully considered the need for rationalising the system and instruct that the following procedure be followed in respect of transfers of teachers in Panchayat Union Schools. Applications for transfers received from the teachers and proposals for transfer sponsored by the Panchayat Union commissioner on administrative grounds before the commencement of the school year will be put up to an *ad-hoc* body of which the Revenue Divisional Officer of the division will be the Chairman and the Chairman, Panchayat Union Council, and the District Educational Officer having jurisdiction of the area, members and Panchayat Union Commissioner member—Secretary. This *ad hoc* body will scrutinise the proposals and take decisions which shall be put down in writing. These decisions should be implemented by the Panchayat Union Commissioner without the slightest deviation.

2. This *ad hoc* body will ordinarily meet in the month of April and May and finalise the transfer proposals before the commencement of the year.

3. Applications and proposals for transfer should not ordinarily be entertained after the commencement of the school year. In exceptional cases where such proposals have to be considered during the course of the year, the Panchayat Union Commissioner should send the proposals through the Panchayat Union Chairman to the Collector of the district and effect the transfer only after receiving his concurrence.

This procedure will come into effect immediately. For this year the *ad hoc* body may meet as soon as possible and finalise the transfer proposals.

APPENDIX III.

[*Vide* item IV on page 103.]

L. A. Bill No. 17 of 1965.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959.

BE it enacted by the Legislature of the State of Madras in the Sixteenth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Act, 1965.

2. *Amendment of section* 72, *Madras Act* 22 *of* 1959.—In section 72 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959) (hereinafter referred to as the principal Act),—

(i) for sub-section (6), the following sub-section shall be substituted, namely :—

"(6) Notwithstanding anything contained in sub-sections (4) and (5), if the Government, after taking into consideration such matters relating to the management and administration of the religious institution as may be prescribed, are satisfied at any time after the publication of a notification under sub-section (1) or sub-section (3), that it is no longer necessary to continue the notification, they may cancel the notification.";

(ii) in sub-section (7), the words "or deemed to have been published" shall be omitted.

3. *Amendment of section* 73, *Madras Act* 22 *of* 1959.—In section 73 of the principal Act, after the words "cancellation of the notification", the words, brackets and figure "under sub-section (4) or" shall be inserted.

4. *Insertion of new sections* 75-*A*, 75-*B and* 75-*C in Madras Act* 22 *of* 1959.—After section 75 of the principal Act, the following sections shall be inserted, namely :—

"75-*A*. *Notifications under Chapter VI-A of Madras Act II of* 1927 *to continue in force*.—Notwithstanding any judgment, decree or order of any Court and notwithstanding anything contained in the Madras Hindu Religious Endowments Act, 1926 (Madras Act II of 1927), or in the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951 (Madras Act XIX of 1951), or in this Act, but subject to the provisions of section 75-C, all notifications issued under Chapter VI-A of the Madras Hindu Religious Endowments Act, 1926 (Madras Act II of 1927) and in force immediately before the 30th September 1956 and which have not been subsequently cancelled by the Government, shall continue, and shall be deemed always to have continued, in force up to and inclusive of the 16th July 1965 and for a period of one year thereafter; and accordingly all acts, proceedings or things done or taken under the said Acts or this Act by the Government or by any officer of the Government or by any other authority in pursuance of the said notifications shall, for all purposes, be deemed to be, and to have always been, done or taken in accordance with law.

75-*B*. *Further continuance of notifications under Chapter VI-A of Madras Act II of* 1927.—(1) Where after the expiry of a period of six months from the 16th July 1965, the Commissioner is satisfied that in the interests of the administration of any religious institution governed by any of the notifications referred to in section 75-A it is necessary to continue the notification (hereinafter in this section referred to as the said notification) beyond the date of the expiry of the period of one year from the

16th July 1965, he may, by notice, published in the prescribed manner, call upon the trustee and all other persons having interest to show cause why the said notification should not be so continued.

(2) Such notice shall state the reasons for the action proposed, and specify a reasonable time, not being less than one month from the date of the issue of such notice, for showing such cause

(3) The trustee or any pe son having interest may thereupon prefer any objection he may wish to make against the action proposed.

(4) Such objection shall be in writing and shall reach the Commissioner before the expiry of the time specified in the notice aforesaid, or within such further time as may be granted by the Commissioner.

(5) Where no such objection has been received within the time so specified or granted, the Government may, on receipt of a report from the Commissioner to that effect, by notification declare that the said notification shall continue in force beyond the date of the expiry of the period of one year from the 16th July 1965.

(6) Where any such objections have been received within the time so specified or granted, the Commisioner shall hold an enquiry into the objections in the manner presrcbed, and decide whether or not the said notification should be continued as aforesaid.

(7) If the Commissioner decides that the said notification should be continued as aforesaid, he shall make a report to that effect to the Government, who may thereupon by notification, declare that the said notification shall continue in force beyond the date of the expiry of the period of one year from the 16th July 1965.

75-*C*. *Right of suit*.—(1) Any trustee or any person having an interest, who is aggrieved by the continuance of a, notification under section 75-A or under section 75-B may—

(i) in the case of the continuance of the notification under section 75-A, within sixty days from the 16th July 1965 ; and

(ii) in the case of the continuance of the notification under section 75-B, within sixty days from the date of the declaration under sub-section (5) or sub-section (7) of the said section 75-B; institute a suit in the Court for the cancellation of such notification and the Government shall cancel the notification if the Court so directs :

Provided that the Court shall have no power to suspend the operation of the notification pending the disposal of the suit.

(2) Any party aggrieved by a decree of the Court under sub-section (1) may, within ninety days from the date of the decree, appeal to the High Court.

[2nd August 1965

(3) Notwithstanding anything contained in section 75-A or section 75-B, if the Government, after taking nto consideration such matters relating to the management and administration of the religious institution as may be prescribed are satisfied that it is no longer necessary to continue a notification continued in force under section 75-A or under section 75-B, they may cancel the notification.

(4) In respect of a religous institution governed by a notification continued in force under section 75-A or section 75-B,—

(a) the scheme of administration, if any, settled and all rules, if any framed under such scheme shall cease, and shall be deemed always to have ceased, to apply to the institution and shall become, and shall be deemed always to have become inoperative; and such scheme and rules shall not be revived by reason of the cancellation of the notification under sub-section (1) or sub-section (3);

(b) the Commissioner shall have power and shall be deemed always to have had power to appoint a salaried executive officer who shall be a person professing the Hindu religion.".

5. *Amendment of Schedule to Madras Act 22 of 1959.*—In the Schedule to the principal Act,—

(i) under the heading "I Suits", after the entry "72 (4) Suit for the cancellation of the notification . . . . . . 50", the following entry shall be inserted, namely :—

"75-*C* (1) Suit for the cancellation of the notification 50";

(ii) under the heading "III Appeals to Court", after the entry "72 (5) Appeals to High Court . . . . 50", the following entry shall be inseted, namely :—

"75-*C* (2) Appeal to High Court . . . . . . 50";

(iii) under the heading "IV. Applications to Government Commissioner or Deputy Commissioner", for the entry "72 (6) Application to Government to cancel notification of religious institution under Chapter VI . . . . 5".

the following entries shall be substituted, namely :—

"72 (6) Application to Government to cancel notification 5

"75-*C* (3) Application to Government to cancel notification. . . . . 5".

6. *Repeal.*—The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Ordinance, 1965 (Madras Ordinance 1 of 1965) is hereby repealed.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Tuesday, the 3rd August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Hindi Books

*31 *Q.*—SRI K. S. ABDUL WAHAB : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Hindi books supplied by the Central Government to the schools in the State free of cost in the year 1963–64;

(b) the estimated cost thereof; and

(c) the mode of distribution?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. (a) 4,625 Hindi books have been received by the Director of Public Instruction from the Government of India during 1963–64 for free distribution to Educational Institutions in this State.

(b) Not known.

(c) All the books have been handed over to the Inspecting Officers for distribution among selected High Schools in their jurisdiction.

SRI K. S. ABDUL WAHAB : May I know, Sir, what other help the Centre is extending to the State for spreading Hindi in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member may put a separate question.

DR. H. V. HANDE : Sir, what is the difficulty of the Government in finding out the cost of the books? It could be easily ascertained.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, we are not interested in estimating the cost, because the books were distributed free of cost to us by the Government of India.

SRI S. K. SAMBANDHAN : Are the books intended only for learning Hindi or are they books dealing with other subjects?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : These are books which can be used profitably in the schools.

[3rd August 1965

DR. H. V. HANDE : The question specifically wants to elicit the estimated cost thereof. Either the question has to be disallowed or an answer given, Sir. Is it not?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is a question relating to the admissibility of the question, which has to be put to the Chairman as to why he admitted the question. Regarding the estimated cost, the cost was incurred by the Government of India, and how can we know that?

SRI S. K. SAMBANDHAN : I would like to know, Sir, whether these books are useful only for teaching Hindi to high school students or for learning Hindi or whether they are useful for learning any other subjects.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, these are Hindi books and these should enable not only the students but also the teachers to be equipped in Hindi.

SRI K. S. ABDUL WAHAB : May I know whether our Government supply Hindi books free of cost?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. K. SAMBANDHAN : Do the Central Government distribute Hindi books to any other State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think so, Sir.

Security of service for teachers

* 32 Q.—SRI G. KRISHNOMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to provide security of service for teachers in aided institutions in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to make any further provision for the security of service of teachers in aided institutions in the State, as there are already adequate safeguards in the rules providing security of service to teachers in aided institutions.

SRI G. KRISHNAMOORTHY : What are the rules now in force, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

SRI G. KRISHNAMOORTHY : The present rules allow the managements to terminate the services of the teacher especially at the age of 50—at the fag end of their services. When I brought in a private Bill called the 'Teacher Protection Bill' the Government gave an assurance that they themselves would bring in a separate Bill affording security of service to teachers. May I knoy what happened to it, Sir?

3rd August 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if the managements terminate the services of the teachers without adequate reasons, there is the remedy provided under the rules.

SRI G. KRISHNAMOORTHY : There are practical difficulties which we see in the enforcement of the existing rules, and there is still this question of managements terminating the services of teachers, as there is lacuna in the rules relating to the agreement entered into between the teachers and the management that they could be sent out for any good cause. What is the difficulty in the Government placing them on a par with the District Board teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member would point out what exactly is the lacuna in the rules, then the Government would examine and see how far they could amend the rules.

SRI G. KRISHNAMOORTHY : Could the Government assure me that there has not been any termination of services of teachers in aided schools during the past year at least?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member can easily see that I cannot be expected to give any such assurance.

SRIMATHI S. MANJUBASHINI : There are some cases where managements have to suffer with inefficient teachers because of these rules. Would the Government suggest any means by which they could appoint others terminating the services of inefficient teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the rules provide adequate remedy even in such a contingency.

S.S.L.C. Public Examination

* 33 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the rate per day of conveyance allowance given to departmental officers at the S.S.L.C. Public Examination for Centre within a radius of five miles of their work spot;

(b) whether there is any proposal to increase the same; and

(c) whether daily allowance is payable to them besides the conveyance allowance?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The departmental officers are paid actual expenditure incurred provided the charges are within the scheduled scales of charges for the conveyanceused—vide item 11 (a) and (b) of Appendix 7 to Madras Financial Code, Volume II.

(b) & (c) : Do not arise.

[3rd August 1965

SRI G. KRISHNAMOORTHY : Am I to understand from the reply that the conveyance allowance is given to those officers who go out even within a radius of five miles?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the departmental officers are paid the actual expenses incurred provided the expenditure is unavoidable and the charges are within the scheduled rates fixed for the conveyance used.

SRI G. KRISHNAMOORTHY : Are the rules against the payment of daily allowance to officers attending to such duties within a radius of five miles?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am not aware of that, Sir.

SRI G. KRISHNAMOORTHY : If it be so, what is the difficulty in the Government considering the question of paying at least the conveyance allowance though they are expected to do duty as Government servants?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, when they are paid actual expenses incurred by them, I do not think there is need to amend the rules.

SRI M. RAJAH IYER : Sir, when the Government servants do duty as Assistant Superintendents, why is it that the remuneration due to other Assistant Superintendents is denied to them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Government think that it is enough if they are paid actual expenses incurred by them.

Summer Institutes in Science Subjects

* 34 *Q.*—SRI K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Summer Institute in Science Subjects for teachers was held recently; and

(*b*) if so, the number of teachers who underwent training?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Particulars have been called for from the Directors of the Summer Institutes.

SRI S. K. SAMBANDHAN : May I know, Sir, the duration for which this institute was run?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Summer School in Biology, University Buildings, Madras, was run between 1st May 1965 to 19th June 1965, the Summer Institute in Chemistry, Annamalai University, Annamalainagar, from 26th April to 4th June 1965, and the Summer Institute in Mathematics, University Buildings, Madurai, from 1st May to 4th June 1965.

3rd August 1965]

SRI G. KRISHNAMOORTHY : May I know the duration of the course?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is what I had indicated just now.

DR. H. V. HANDE : Who are all eligible for this course?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Teachers working in colleges are eligible for this.

Grade II Tamil Pandits

* 35 *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the minimum qualification required for Grade II Tamil Pandits;

(*b*) whether a pass in the Madurai Tamil Sangam Examination is recognized; and

(*c*) the procedure to be adopted when persons with the minimum qualifications are not available?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Oriental Title with Pandit's or Secondary Grade Training.

(*b*) Yes; for purposes of appointments to non-Government Schools.

(*c*) Pandits possessing Oriental Title may be appointed on a temporary basis but such temporary appointments will be terminated when qualified persons become available.

SRI G. KRISHNAMOORTHY : Is it a fact that untrained Tamil Pandits qualified otherwise in Tamil are being sent out at the end of each year by the managements or District Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If they are untrained they will be sent out because they are appointed on a temporary basis.

SRI G. KRISHNAMOORTHY : Have the Government any proposal before them to depute them for training at the cost of the Government and see that they get trained?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information. The hon. Member may put a separate question.

SRI S. K. SAMBANDHAN : Is there a proposal to extend the period for which the untrained teachers could be employed by educational institutions, say, from three to five years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think so, Sir.

SRI G. KRISHNAMOORTHY : Have the Government any scheme to give special encouragement to Tamil Pandits with regard to the teaching of Tamil through these Tamil Pandits as in the case of Hindi?

[3rd August 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not understand what he hon. Member means by a special scheme of encouragement being given to improve Tamil teaching and encouraging Tamil teachers.

SRI S. K. SAMBANDHAN : As there is difficulty in getting trained teachers in all subjects, will the Government extend the period of employment of untrained teachers from three years to five years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. Sir. The Government do not think it should be difficult to get trained teachers for a period of three to five years.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, தமிழ் பி.ஏ. படித்தவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருக்க அனுமதிக்கப்படுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓரியண்டல் டைட்டில், செகண்டரி கிரேடு பயிற்சி இரண்டும் வேண்டும். அவை இரண்டும் அவசியமென்று கருதப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : ஓரியண்டல் டைட்டில் என்றால் தமிழ் வித்வான். கேரள பல்கலைக்கழக தமிழ் வித்வானை நியமிக்கிறார்களா? அப்படி நியமிக்காமல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல தடைகள் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

Madras General Sales Tax Act.

* 36 *Q.*—SRI M. SUBBIAH CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) who is responsible to give clarifications on the matter of levying sales tax on several items and the percentages noted against them in the Schedule to the Madras General Sales Tax Act;

(*b*) whether it is a fact that in the Department there is undue delay in giving clarifications for the requests made by individuals and associations to clarify the rate of tax; and

(*c*) the steps the Government have taken to expedite the reply and clarify the position?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Neither the Government nor the Board nor any Officer of the Commercial Taxes Departmnet can purport to clarify or interpret the provisions of an Act. It is essentially a function pertaining to the domain of the various authorities constituted under the Act and the law Courts.

(*b*) & (*c*) Do not arise.

3rd August 1965]

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, are the Government aware that the traders and merchants are put to considerable inconvenience and difficulties owing to difference of opinion or different types of clarifications given during assessment, that the merchants and traders have to suffer a heavy penalty by way of paying heavy taxes an dthen go to the higher authorities and appellate authorities, and that even in regard to small matters these sorts of things are going on, and, if so, will the Government look into these?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, it is true, that in cases of articles coming under single point, first schedule, the question always arises whether it falls under one or the other items 23 or 25. But then, Sir, the Government have no power to clarify. It has to go to the Assistant Appellate Commissioner or the Sales Tax Appellate Tribunal or the High Court. Sir, when the Bill was framed, the Deputy Leader of the Opposition will well remember, that most of the members of the Select Committee wanted that the Government should not have any power to clarify and that it should be a judicial interpretation.

SRI M. SUBBIAH CHETTIAR : My point is, there are rules and regulations framed by the Government and within those rules and regulations, the higher authorities, such as the Commercial Tax Officers and other higher authorities can give interpretations. Previously, some 15 or 20 years ago, whenever merchants wanted a clarification, they were able to clarify. Is there any harm in doing so now?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no harm in it; but the law as it stands does not permit it. The Act as it stood 15 or 20 years ago was different. Under the law as it now stands, we have given all the powers to the Assistant Appellate Commissioner, the Sales Tax Appellate Tribunal and the Courts.

SRI G. KRISHNAMOORTHY : Now the Government have begun to run the administration on an elaborate scale under the democratic set up. Is there any machinery by which they will give publicity to all that took place through legislation so that even a layman can have a handbook from which he may know the taxes that he has to pay to the Government instead of going to a lawyer? 3-10 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : Notification in the Gazette is supposed to be the publication to the people and all notifications are published in the Gazette.

SRI G. KRISHNAMOORTHY : May I know whether besides publication in the Gazette, the Government consider the need to just publicise these things, because we are running the Government on an elaborate scale and the ordinary layman, merchants and agriculturists knowing Tamil will know the latest law and be in a position to understand these things?

THE HON. SRI R. VENKATARAMAN : Translations are also from time to time published in Tamil.

[3rd August 1965

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விற்பனை வரி விகிதத்தில் ஏற்படுகிற ஐயத்தைப் போக்கிக்கொள்ள நீதி மன்றத்திற்குச் சென்று முடிவு தெரிந்துகொள்வதற்கு முன்னால் அந்த விகிதாசாரத்தைப் பற்றி அதிகாரிகளுக்கு எழுதுகிற போது உடனுக்குடன் பதில் அனுப்ப அவர்களுக்கு அரசாங்க சார்பில் ஏதேனும் ஆணை இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த சட்டத்தில் என்ன போட்டிருக்கிறதோ அதற்கு மேல் எந்த விதமான கிளேரிபி கேஷனோ விளக்கமோ கொடுக்க அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது. " Goat Hair " சம்பந்தமாக சமீபத்தில் ஒரு பிரச்னை எழுந்தது. ஒரு சதவிகிதமா 3 சதவிகிதமா என்ற கேள்வி எழுந்தபோது அதிகாரிகள் கிளேரிபிகேஷன் கொடுக்க முடியவில்லை. கோர்ட்டுக்குப் போனால், வேறு clarification அவர்கள் கொடுத்தால், அதுதான் 'பைண்டிங்' ஆகும். அவர்கள் மூன்று சதவிகிதம் வசூல் செய்யச் சொல்லி, அதிகாரிகள் ஒரு சத விகிதம் என்று சொல்லிவிட்டால் அக்கவுண்டண்ட்-ஜெனரல், தணிக்கை அதிகாரிகள் சர்க்கார் தவறு செய்துவிட்டது என்று சொல்கிறார்கள். அதனால் தான் கிளாரிபிகேஷன் கொடுப்பதில்லை.

Dr. H. V. HANDE : From the reply given by the Hon. Minister, can this House take it that the Assistant Appellate Commissioners have the responsibility for clarifying these rules?

The Hon. Sri R. VENKATARAMAN : No; when it goes on appeal, they will decide and their decisions are clarifications.

Sri M. SUBBIAH CHETTIAR : Are the Government aware that the officials are keen on collecting taxes so that the authorities may feel that they have collected their full quota? In some cases they even openly say " I do my job and if you have any grievances you can go on appeal and have your grievances redressed "? Such being the case, will the Government take care of the interests of the merchants and safeguard the *bona fide* interest of the people?

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member has made a speech. In fact it is not the purpose of the Government to collect more taxes. Only legitimate taxes, whatever due, will be collected, and the position is that officers in charge at that particular time and are in charge of that particular subject will exercise the powers vested in them under the law, and, if any person is aggrieved, he can go on appeal.

Kerosene Oil deposits

* 37 Q.—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places in Madras State where investigations were conducted to tap kerosene oil deposits;

(*b*) the places where these investigations were successful; and

(*c*) whether a detailed report thereof will be placed on the Table of the House?

3rd August 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) மண்ணெண்ணெய் அப்படியே பூமிக்குள்ளிலிருந்து கிடைப்பதில்லை. பண்படுத்தாத பெட்ரோலியம்தான் பூமியிலிருந்து கிடைக்கிறது. அதனைப் பண்படுத்துவதன் மூலமே மண்ணெண்ணெய் ஒரு துணைப் பொருளாகக் கிடைக்கிறது. இந்திய அரசாங்க எண்ணெய்—இயற்கை வாயுக் கமிஷன் இம் மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பெட்ரோலியம் கிடைக்கிறதா என்று பார்க்க கனிவள ஆய்வு வேலையில் ஈடுபட்டுள்ளது.

1. பட்டுக்கோட்டை (ஆவடிக்குமுனை அண்மையில்).

2. திட்டச்சேரி (காரைக்காலுக்கு அண்மையில்).

3. நிரவி (காரைக்காலுக்குத் தெற்கில்).

(இ), (உ) சோதனைகள் நடந்துவருகின்றன. அவற்றின் முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : Is there any proposal to appoint more Geological Officers under the State control and complete the geological survey of the whole State, Sir?

The Hon. Sri R. VENKATARAMAN : Madras is one of the few States, which has separate Geological Department of its own, and we have a complement of officers in it.

Sri K. S. ABDUL WAHAB : May I know the latest position of the Pattukkottai Oil Scheme?

The Hon. Sri R. VENKATARAMAN : There they have stopped the work, because of drilling difficulties and they have not been able to strike the marine sedimentaion.

Sri M. SUBBIAH CHETTIAR : According to foreign advice, there is the possibility of getting oil in the Cauvery region especially in Pattukkottai and Karaikal. If so, will the Government take all necessary steps to make things fruitful for the scheme?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir, in pursuance of this recommendation, the oil exldoration is being done in these areas. That is, they say the Cauvery basin consists of a belt and Karaikudi, but actual investigation in Pattukottai has not yielded very satisfactory results. Investigation in Thittacheri is more hopeful.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காவிரி வட்டாரத்தில் கிடைக்கக்கூடிய பெட்ரோல் முதலிய பொருள்களை ஒட்டி அந்த நிலப்பகுதிகளை அடுத்த கடல் பகுதியிலிருந்து ஓரளவு எண்ணெ எடுக்கப்படலாமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆராய்ச்சி நடைபெறுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி ரஷ்ய நிபுணர்கள் இப்போது ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கடலில் seismic சர்வே நடந்துக்கொண்டிருக்கிறது.

[3rd August 1965

Scholarship to Fishermen

* 38 Q.—SRI H. ETHIRAJULU (on behalf of Sri J. Ponnu-Swamy Villavarayar) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the fishermen community has been granted any scholarship in Tirunelveli district for the year 1962–63;

(b) if so, the categories of scholarships so granted; and

(c) if not, whether the Government will grant such scholarships in future?

THE HON. SRI P. KAKKAN : (a) No.

(b) Does not arise.

(c) The matter is under the consideration of Government.

(அ) இல்லை

(இ) இக் கேள்விக்கு இடமில்லை

(உ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

Educational and Service Concessions to Washermen

* 39. Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 215 on 27th March 1965 whether it is a fact that the washermen population in the Kanyakumari district are treated on a par with the Scheduled Castes for Educational and Service concessions?

THE HON. SRI P. KAKKAN : The Community 'Vannan' having been treated as a Scheduled Caste by the erstwhile Travancore-Cochin State in the Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district, continues to be treated as Schedule Caste in these areas even after the transfer of these areas to the Madras State. In all other parts of this State the community Vannan, being touchables, in treated as Most Backward Class.

'வண்ணான்' வகுப்பினர் முன்னாள் திருவாங்கூர் கொச்சி மாநிலத்திலிருந்த கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டை தாலுகாவிலும் ஷெட்யூல்டு வகுப்பினராகக் கருதப்பட்டு வந்ததால் சென்னை மாநிலத்துக்கு மேற்கண்ட பகுதிகள் மாற்றலாகிவிட்ட பின்னரும் ஷெட்யூல்டு வகுப்பினராகவே கருதப்படுகின்றனர். இம் மாநிலத்தில் மற்ற எல்லா பகுதிகளிலும் 'வண்ணான்' வகுப்பினர் தீண்டாமை என்னும் சமூகக் கேட்டினால் பாதிக்கப்படவில்லையாதலால் மிகவும் பின் தங்கிய வகுப்பினராகக் கருதப்படுகின்றனர்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : சமூகக் கேடுகளால் பாதிக்கப்படவில்லை என்றாலும் அவர்களுடைய நிலை கிட்டதட்ட தாழ்த்தப்பட்டோர் நிலையை ஒட்டித்தான் இருக்கிறது, ஆகையால் அந்த மாவட்டத்தில் அனுசரிக்கும் முறையை எல்லா மாவட்டத்திற்கும்

3rd August 1965]

விஸ்தரிக்கப்பட உத்தேசமுண்டா? அதை இப்பொழுதாயினும் அரசாங்கம் ஆராயுமா என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே பலமுறை ஆராய்ச்சி செய்திருக்கிறது. ஆகையால் இப்போது ஆராய்ச்சிக்கு இடமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : இந்தியாவிலுள்ள மற்ற பகுதிகளில் எல்லாம் அவர்கள் தீண்டாதவர்களாகக் கருதப் படவில்லை. ஆகையால் அவர்களை எல்லாம் கல்கத்தா, பம்பாய், டில்லி, ராஜஸ்தான், திரிபுரா போன்ற இடங்களிலும் கேரளா போன்ற இடங்களிலும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சலவை செய்து வைக்கும் துணிகளைத் தீண்டக்கூடாது என்று சொன்னால் வேறு சலவை செய்ய ஆள் இல்லை என்பதால் இந்த சூழ்ச்சி செய்து வைத்திருக்கிறார்களே தவிர உண்மையில் அவர்கள் ஒரு சதவிகிதம்கூட முன்னேறாமல் இருப்பதால் அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து இப்பொழுதாவது அவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்ப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : எப்போதுமே அவர்களைத் தீண்டத் தகாதவர்களாக நம் மக்கள் கருதியதில்லை. அதற்காகவே மாநிலத்து மக்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். ஹரிஜனங்கள் மாதிரி அவர்களை நடத்தவில்லை. நல்லமுறையில் தான் நடத்தி வருகிறார்கள். ஏற்கனவே மிகவும் பிற்பட்ட வகுப்பில் கிட்டத்தட்ட 50, 57 வகுப்புக்கள் இருக்கின்றன. எல்லோரும் இப்போது அரிஜனங்கள் பக்கமே வந்துகொண்டு இருக்கிறார்கள். அதற்கு சந்தோஷம், அதற்காக அரசாங்கம் எந்த முடிவும் எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : மற்ற பகுதிகளில் சேர்த்திருப்பதைத் தான் நான் கேட்கிறேன். மிகவும் பிற்பட்ட இனம் என்று இவர் 3-? p.m.
களை சேர்த்திருப்பதால் ஒருவிதமான சலுகையும் இல்லை. 1956-ல் திரு. காமராஜ் அவர்கள் இந்த சமூகத்தை மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு எழுதியனுப்பி இருக்கிறார்கள். அதையொட்டியாவது கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து இவர்களையும் அந்த நிலையில் சேர்த்துக்கொள்ள வழி செய்வார்களா?

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, செங்கோட்டை தாலுகாவில் உள்ள வண்ணார்களும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வண்ணார்களும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இரண்டு பேருக்கும் பாகுபாடு இல்லாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : முதல் கேள்வியில் பதில் சொல்லி விட்டேன். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்த போது பிற்பட்ட வகுப்பினரையும் தாழ்த்தப்பட்ட

வகுப்பினரையும் அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதை மாற்றக் கூடாது என்றும் நிபந்தனையில் எடுத்துக் கொண்டோம். அதன்படிதான் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. எம். எத்திராஜுலு : தமிழ்நாடு சர்க்கார் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவர்களுடைய நிலையை ஆராய்ந்து சர்க்காருக்கு ஒரு ரிபோர்ட் சமர்ப்பிக்க வேண்டுமென்று கோரப்பட்டது. அந்த அதிகாரிகள்கூட இந்த சமூகத்தினரை தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்த்தால்தான் அவர்கள் முன்னேற முடியும் என்ற ரிபோர்ட் சமர்பித்திருக்கிறார்கள். அதன்மீதாவது சர்க்கார் இவர்களைச் சேர்க்க முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது எந்த முடிவும் சொல்ல முடியாத நிலை இருக்கிறது.

Panchayat Elections

* 40 Q.—Sri M. SUBBIAH CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the school teachers in the entire State were drafted for election duty during the period of the Panchayat elections; and

(b) if so, whether it is a fact during that period the schools did not function properly?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : (அ) ஆம்.

(இ) பஞ்சாயத்துக் தேர்தல் காலங்களில் பாடசாலைகள் சரிவர நடைபெறவில்லை என்று சொல்வது சரியல்ல. வாக்குச் சாவடிகள் வைக்கப்பட்டிருந்த பாடசாலைகள் தேர்தல் தேதியன்றும் அதற்கு முந்தைய நாளும் மூடப்பட்டன. தேர்தல் நடந்த நாள் அந்தந்த பகுதிகளில் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. தேர்தல் வேலைக்காக எந்தெந்த பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டிருந்தனரோ, அந்த பாடசாலைகள் தேர்தல் காலத்தின் இதர நாட்களில் குறைந்த அளவு ஆசிரியர்களைக்கொண்டு நடைபெற்றுவந்தன.

Sri M. SUBBIAH CHETTIAR: Sir, are the Government aware that teachers from Pudukottai to Karur and vice versa have been drafted for this panchayat election work and practically, though for Government purposes the schools were running, no work has actually been carried out in those schools? May I know how many teachers have been drafted from those schools from one area to another, and how many have been left out in those schools?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை முதலில் பஞ்சாயத்துத் தேர்தலில் ஈடுபடுத்த வேண்டாமென்று சர்க்கார் 1964 அக்டோபர் 26-ல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. பிறகு கலெக்டர், அம்மாதிரி எலக்ஷன் பர்சானல் அதிகம் வேண்டுமென்றும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களையும் எடுத்துக் கொண்டால்தான் எலெக்ஷன் சாத்தியமாகுமென்றும் சர்க்காருக்கு

எழுதியதால் சம்மதிக்கப்பட்டது. அதற்கு முன்பு பள்ளிக்கூட நடைமுறைகள் நடத்துவதற்கு இடைஞ்சல் இல்லாதவகையில் இருக்கவேண்டுமென்று கலெக்டருக்கு எழுதினோம். சில பள்ளிகளில் போலிங் ஸ்டேஷன்கள் வைக்கப்பட்டிருந்தன. அம்மாதிரி இடங்களில் பள்ளிக்கூடம் நடத்தமுடியாது. ஆனால் கூடுமான வரையில் வெளியிடங்களில் மாற்றாத வகையில் செய்ய வேண்டுமென்பது அபிப்பிராயம். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப கலெக்டர்கள் செய்திருக்கிறார்கள். ஒரு ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்கு சென்றவர்கள் எலெக்ஷன் சம்பந்தமாக எத்தனை பேர் என்ற தகவல் இல்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்துத் தேர்தல் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்குத் தரப்படவேண்டிய பிரயாணப்படி, நாள்படி, முதலியன உடனுக்குடன் கொடுக்கப்பட்டனவா? இன்னும் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறதா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : அவர்களுக்கு உரிய படிகளை அந்தந்த ஆர்.டி.ஓ.-க்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கலெக்டர் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம். குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு பயணப்படி கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அதை துரிதப்படுத்த சொல்லலாம்.

Sri M. RAJAH IYER: Sir, may I draw the attention of the Government to the fact that while Government teachers have been able to draw advance of travelling allowance, most of the private teachers, who have been drafted for this duty, had to meet the expense from their own pockets and they have not been paid their travelling allowance? Would the Government give a directive that the travelling allowance must be paid within a few months after the conduct of the elections?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : அம்மாதிரி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து சீக்கிரமாக பயணப்படி பெற வழிசெய்யலாம்.

Dr. H. V. HANDE: Sir, were any high school teachers drafted for this work? If so, may I know how many?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : ஹைஸ்கூல் ஆசிரியர்கள் உண்டு. கல்லூரி ஆசிரியர்கள் உண்டு. எத்தனை பேர் என்ற தகவல் இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலும் தேர்தல் வேலையில் ஈடுபட்ட தனியார் பள்ளி ஆசிரியர்கள் யாருக்கும் படி கொடுக்கப்படவில்லை. பலமுறை கலெக்டருக்கு எழுதப்பட்டது. அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கான்பரசில் கூட அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உடனடியாக அவை கவனிக்கும்படி சுற்றறிக்கை அனுப்பப்படுமா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : கனம் அங்கத்தினர் எழுதினால் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கச் செய்யலாம்.

[3rd August 1965

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் சர்க்கார் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப்போல முன் பணம் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : நடந்துபோன பிரச்னையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். பிறகு அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : அடிக்கடி தேர்தல் வேலைக்கு ஆசிரியர்கள் அழைக்கப்படுவதால், அதை ஒழுங்கு செய்ய முயற்சிக்கலாம் அல்லவா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : முதலிலேயே இதுபற்றி குறிப்பிட்டேன். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை தேர்தலுக்கு உபயோகிக்க வேண்டியதில்லை என்று கலெக்டருக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. தவிர்க்க முடியாத நிலையில்தான் அவர்களை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : முன் பணம் கொடுத்த பிறகு அவர்கள் போகாமல் இருந்துவிட்டால் என்ன செய்வது ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: அதனால்தான் அவர்கள் வேலை செய்த பிறகே பயணப்படி கொடுக்கப்படுகிறது.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, in view of the factions experienced during the panchayat elections, do the Government feel that it is safer to utilise the services of the teachers, who have some respect in the villages, for election work ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government do not believe at all that teachers are generally involved in these local factions.

SRI M. SUBBIAH CHETTIAR : My object in putting this question is only to say that teachers are not involved in these factions. But in view of the factions and serious consequences and some of the worst things happening in these elections, do the Government feel that it is safer to enlist the services of these teachers for this work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Some people have to do the work.

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : ஆசிரியர்கள் பட்சபாதமற்ற முறையில் நடப்பார்கள் என்பதால்தான் இந்த மாதிரி பணிகளில் அவர்களைச் சேர்க்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, அனேகமாக எல்லாப் பள்ளிகளிலிருந்தும் ஆசிரியர்கள் இந்த வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் அதனால் இரண்டு மூன்று நாட்கள் மூடவேண்டியிருந்தது. இனிமேல் எலக்ஷன் நடப்பது பள்ளிகள் இல்லாத விடுமுறை நாட்களில்—கிருஸ்துமஸ், கோடை

3rd August 1965]

விடுமுறை போன்ற நாட்களில்—இருந்தால் பள்ளிகளின் வேலை பாதிக்கப்படாது என்பதால், அப்படி வைக்க அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடுமுறை காலங்களில் தேர்தல் வைக்கக்கூடாது என்று பொதுவான உத்தரவு இருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT *RE* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras District Development Councils (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 15 of 1965), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.

III.—DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1965-66 AND SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1964-65 OF THE MADRAS STATE ELECTRICITY BOARD—*cont.*

MR. CHAIRMAN : We now resume discussion on the Electricity Board Budget. Sri N. V. Natarajan will now speak.

* *திரு. என். வி. நடராசன் :* மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையின் பேரில் என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக, நமது மாநிலத்தில் மின்சார போர்டு ஆற்றிவரும் சிறந்த பணிகளுக்காக கனம் தொழில் அமைச்சரையும் மின்சார போர்டு தலைவரையும் அதன் ஊழியர்களையும் நான் மனமாறப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த போர்டிலுள்ள சில குறைகள் நீக்கப்பட்டால் மக்கள் இந்த போர்டினால் இன்னும் நல்ல பயனை அடைய முடியும் என்ற எண்ணத்தின்மீது அவ்வித சில குறைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம் மாநிலத்தில் மின்சார உற்பத்தி பெருகியிருப்பதாக கனம் தொழில் அமைச்சர் தம் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். நான் அதை மறுக்கவில்லை. மின்சார உற்பத்தி பெருகி வருகிறது என்றால், மின்சாரத்திற்கான கட்டணம் உயர்ந்து கொண்டே போகாமல் குறைய வேண்டும். அவ்வாறு அது குறைக்கப்பட்டால் தான், மின்சார உற்பத்தி பெருகி வருகிறது என்று நாம் பெருமைப்படவும் அதே சமயத்தில் மக்களும் அதன் பயனை அனுபவிக்கவும் முடியும். உணவு தானியங்கள் கொள் முதலின் போது அவைகளை இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயக் கருவிகளின் விலையையும் மின்சாரக் கட்டணத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் உணவு தானியங்களுக்கு விலை பெற விவசாயிகள் முன்வருகிறார்கள். அவ்வப்போது மின்சாரக்

கட்டணம் உயர்ந்தால், அந்தக் கட்டணத்திற்கேற்ப நெல்லின் விலையை உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென்று அவர்கள் சர்க்காரை கேட்பதும் அவ்வாறே விலை நிர்ணயிக்க சர்க்கார் முன்வர வேண்டியதும் தவிர்க்கமுடியாததாகிறது. எனவே விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை குறைவாக விதித்தால் உணவு தானியங்களின் விலை குறையும்; அதன் பயனை ஏழை மக்கள் அனுபவிக்க முடியும்.

சமுதாயத்தில் தாழ்ந்துள்ள மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் மின்சாரக் கட்டணத்தில் கூடிய வரையில் சலுகை அளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

3-30 p.m. மின்சார போர்டின் பணிகளிலுள்ள சில குறைகளை எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டினார்கள். இந்த போர்டு கோரும் டெண்டர்கள் இரு வகையானவை, ஒன்று 'ஓபன் டெண்டர்', மற்றொன்று negotiated டெண்டர், கூடியவரையில், ஓபன் டெண்டர்கள் கோருவதில் குறைபாடுகள் இல்லாமல் இருக்கலாம் என்பது எல்லோருடைய அபிப்பிராயமாகவும் அத்துறையில் இருப்பவர்களின் கருத்தாகவும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் அமைக்கப்படும் என்று கனம் தொழில் அமைச்சர் தம் அறிக்கையில் உறுதி கூறியிருக்கிறார். அதற்கான ஆரம்ப வேலைகள் இப்போது மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இருந்தாலும், இடையிடையே வரும் செய்திகளைப் பார்க்கும்போது இந்தக் கல்பாக்கம் மின்நிலையத் திட்டம் கைவிடப்பட்டுவிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இதில் சர்க்கார் உறுதியாக இருந்து இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி சொல்லிக் கொள்கிறேன்.

மின்சார போர்டு இவ்வளவு திறமையாக தன் பணிகளைச் செய்துவருவதற்கு கனம் அமைச்சரும் மின்சார போர்டின் தலைவரும் அதிகாரிகளும் எவ்வளவு காரணமாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அந்த போர்டின் ஊழியர்கள் இருக்கிறார்கள். அந்த போர்டிற்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதாக கனம் அமைச்சர் தம் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இது அவருடைய நல்லெண்ணத்தையும் நல்லாசையையும் எடுத்துக்காட்டுவாக நான் கருதுகிறேன். இதை நான் வரவேற்கிறேன். ஆனால் இதுபோன்ற அறிக்கையால் மட்டும் அந்த உறவு ஏற்பட்டுவிடாது. இந்தத் தொழிலாளர்களின் குறைகளை கூடிய விரைவில் நிவர்த்தி செய்தால்தான் இந்த உறவு நிலைத்து நிற்கும் என்பது என் கருத்து. இந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு இன்னின்ன வசதிகள் வேண்டும் என்று நீதி கோரி போர்டினிடமும் அரசாங்கத்தினிடமும் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் நீதி மன்றத்திலும்

இதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய இந்தப் பிரச்னை பல ஆண்டுகளாக தீர்த்துவைக்கப்படாமல் இருப்பது மிக, மிக வருந்தத்தக்கது. தொழில் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த கனம் தொழில் அமைச்சரின் நேரடிப் பொறுப்பிலுள்ள மின்சார போர்டின் தொழிலாளர்களுடைய இந்தப் பிரச்னை ஆண்டுக் கணக்கில் இழுபறியாக இருப்பது குறித்து வருத்தப்படுகிறேன். இப் பிரச்னையை விரைவில் தீர்த்துவைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறையில் தனியார் நிறுவனத்தை ஆதரிக்கக் கூடிய வகையில் சர்க்கார் நடந்து வருவது வருந்தத் தக்கதாகும். தனியாருக்கான பங்கை கூடியவரையில் குறைக்க வேண்டும். நான் இவ்வாறு கூறுவதை அரசாங்கத்தார் தவறாகக் கொள்ளக்கூடாது. சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சர்க்கார் அடிக்கடி கூறிவருகிறார்கள். இவ்வாறு கூறும் சர்க்கார் தனியாருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது சரியல்ல. கனம் அங்கத்தினர் திரு. வில்லவராயர் கூறியதுபோல, தூத்துக்குடியில் துவக்க இருக்கும் தனியார் துறை மின்சார நிலையத்தை சர்க்காரே ஏற்று நடத்தினால் நலமாக இருக்கும் என்று கனம் தொழில் அமைச்சருக்கு வலியுறுத்தி தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த போர்டில் உள்ள மொத்த தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நிரந்தரமான தொழிலாளர்கள் என்ற உரிமை இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு எந்த வசதியும் கிடையாது. தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற முறையில் எவ்வித சலுகையும் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை சுமார் 22,000 பேர், இவர்கள் டெம்பரரி லேபரர்ஸ் என்ற அவல நிலையிலிருந்து நிரந்தரமான தொழிலாளர்கள் என்று ஆக்கப்பட்டால், அவர்களது உற்சாகமான உழைப்பின் மூலம் விவசாயத்துறைக்கும் மற்ற துறைகளுக்கும் அவர்களது பணி பெருந்துணையாக அமையும். எனவே இவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், இந்த போர்டில், வேலைகள் காண்டிராக்ட்டிற்கு விடப்படும் முறை மாற வேண்டும். தொழிலாளர்களை சர்க்காரோ, போர்டாரோ நேரிடையாக நியமித்து அவ்வேலைகளை நேரடித் தொடர்பால் செய்தால் அது லாபகரமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் தவறுகள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மின்சார போர்டின் பணி இன்னும் சிறப்பு பெறவும் அதனால் ஏற்படும் பயன்கள் முழுமை பெறவும், இங்கே எடுத்துக் காட்டப்பட்ட தொழிலாளர்களின் குறைகள் தீர்க்கப்படுவது அவசியம். இந்தத் தொழிலாளர்களும் மின்சார போர்டாரும் கனம் தொழில் அமைச்சரும் சந்தித்துப் பேசினால் இவர்களுடைய குறைகள் அல்லது நீதி மன்றத்திலுள்ள வழக்குகள் ஒழுங்குற தீர்க்கப்பட

முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. சர்க்காரும் தொழி லாளர்களும் நீதி மன்றத்தை எதிர்பார்த்து நிற்பதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே சர்க்காரும், போர்டாரும், தொழிலாளர்களும் தாங்களே கலந்து பேசி இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டால் இந்த போர்டு வெற்றி பெற முடியும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள் கிறேன்.

திரு. கே. கமலக்கண்ணன் : மன்றத் தலைவர்களே, நம்முடைய தமிழ்நாடு மின்சார போர்டு துணை நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வேளாண்மை அபிவிருத்திக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மின் சக்தி வழங்கு வதில் நம்முடைய மாநிலத்தில் முதல் இடம் கொடுக்கப்பட் டுள்ளது. நம்முடைய மின்சார போர்டின் தலைவரும் தலைமை என்ஜினியரும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் நல்ல முறையிலே அக்கறையோடு பணியாற்றி வந்திருக்கிற காரணத்தால் தான், இன்றைக்கு மற்ற மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்தின் மின்சார போர்டு மக்களுக்கு சிறந்த சேவை செய்து, நம்முடைய வேளாண்மையை அபிவிருத்தி செய்யவும் தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்குவதற்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக் கிறது. அறிக்கையிலே காணுகிறபடி முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 30 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். அடுத்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 100 கோடி ரூபாய் மின்சார போர்டிலே செலவழித்திருக்கிற காரணத்தால், இன்றைக்கு சிறந்த முறையில் நம் நாட்டிலே மின்சக்தி நல்ல முறையிலே விளங்கி வருகிறது. ஆரம்ப காலத் தில் ஒருவருக்கு சராசரி 12 யூனிட் வழங்கப்பட்டு வந்து, இன் றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஏறக்குறைய நபர் 1-க்கு 120 யூனிட் என்று இன்றைக்கு கணக்கிட்டு இருப்பதை பார்க்கும்போது பாராட்டாமல் நாம் இருக்க முடியாது. வருமானம்
3 40 p.m. கூட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 5.94 கோடியாக இருந்தது ; இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 30.65 கோடியாக வருமானம் உயர்ந்திருக்கிறது என் பதைப் பார்க்கும்போது நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையும் கட்டத்தில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று நீர் மின்சார நிலையம், இரண்டு அனல் மின்சார நிலையமே இருந்து, இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 385 மெகாவாட் உற்பத்தி செய்யும் அளவிலே நாம் இருக்கிறோம். ஆண்டு தோறும் நம் தமிழ் நாட்டில் கோடை காலத்தில் பருவ மழை சில சமயங்களில் நம்மைப் பார்க்கிற காரணத்தால், மின்சார வெட்டு இருந்து வருவதைக் காணுகிறோம். ஆனால் அதிருஷ்டவசமாக இந்த ஆண்டு அப்படிப்பட்ட மின்சார வெட்டு இல்லாமல் தவிர்த்திருப் பதைக் காணும்போது, அது பாராட்ட வேண்டிய நிலைமைதான். ஆனால் இதற்குக் காரணம் நீர் மின்சார நிலையம் அதிகமாகவும் அனல் மின்சார நிலையம் குறைவாகவும் இருக்கிறது தான். அதனால் அனல் மின்சார நிலையங்களை அதிகரிப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கினால், கோடைகாலத்தில் ஏற்படும் வெட்டுக்களை

தவிர்க்கலாம், எந்தக் கஷ்டமும் இருக்காது என்ற என் அபிப்பி ராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓரளவுக்கு இந்த அனல் மின்சார நிலையம் உருவாக்குவதற்கு தனியார்கள் முன்வருவார் களானால், அதற்கு அரசாங்கம் உற்ற துணையாக இருந்து, அதற்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்தால், அது நன்மையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். எண்ணூர், தூத்துக்குடி அனல் மின்சார நிலையங்கள் அங்கீகாரம் செய்யப் பட்டு இருக்கிறதைப் பார்க்கும்போது நாம் பாராட்ட வேண்டி யிருக்கிறது. ஹொகனிகல் நீர் மின்சாரத் திட்டம் மூலமாக அதிகமான மெகாவாட் மின்சாரம் உற்பத்தி கிடைக்கும் என்ற நிலையில் அதைச் சீக்கிரமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பஞ்சாயத்துகளுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்து எல்லா கிராமங்களுக்கும் தெருக்களிலே விளக்குகள் போட வேண்டுமென்று ஒவ்வொரு கிராம மக்களும் உற்சாகமாக, ஊக்கமாக, பல இடங்களில் கூறுகிற காரணத்தால், இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு சட்ட மூலமாக ஒவ்வொரு தெருவிலேயும் மின் விளக்குகள் ஏற்படுத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்தால் அது நன்றாக இருக்கும் என்றும், ஹரிஜன காலனிகளுக்கும், அவர் களுக்கு தனி சலுகை கொடுத்து, விளக்குகள் போட்டால் மிக நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய மின்சார போர்டு, அதிலேயுள்ள பணி யாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் வசதி, இன்னும் சில நல்ல வசதிகளைச் செய்து கொடுத்தால் அவர்கள் இன்னும் நல்ல உற்சாகத்தோடு பணியை நல்ல முறையில் செய்வதற்கு வழிவகை செய்ததாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். சில கிராமங்களிலே இந்த விவசாயிகள் எலக்ட்ரிசிடி பம்ப் செட் போடும் போதும் மற்ற இடங்களிலும், 'லைவ் வயர்' எங்கே இருக்கிறது எப்படி இருக்கிறது என்று தெரியாத காரணத்தால் இந்த மின்சாரத்தால் ஆபத்து ஏற்பட்டு சிலர் மடிவதும், ஆபத்துக்குள்ளாவதுமாக இருக்கிறார் கள் என்று கேள்விப்படுகிறேன். அதற்கு விளம்பரம் மூலமாகவும், சினிமா மூலமாகவும், எப்படி ஆபத்து வருகிறது, அதை எப்படி தவிர்க்க வேண்டும் என்று சொல்லி, இந்தக் கிராம மக்களை ஆபத்திலிருந்து விடுவிப்பதற்கும், மற்றும் ஆபத்தில் சிக்காமல் இருப்பதற்கும் வழிவகைகளை விளம்பரம் மூலம் தெரிவித்தால் மிகவும் நன்மையாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். சூரிய வெப்பம் மூலமாகவும், சமுத்திர அலைகள் மூலமாகவும் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று சில விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதற்கு ஆவன செய்வதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தினால் மிக நன்மையாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன். பொதுவாக கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் போன்ற பொது இடங்களுக்கு எதிரிலே ஒரு விளக்கு இலவசமாக மின்சார போர்டார் போட்டுக் கொடுத்தால், அது மிக, மிக நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன், இந்த வீடுகளிலும் மற்றப்படி 'வயரிங்' செய் திருக்கிற இடங்களிலும் எறும்புகள் வயரிங் பாக்சில் புகுந்து, சில கெடுதல்கள் அந்த வயரிங்கில் இருப்பதால், வயரிங்கைப்

பாதிக்கின்றன என்று கூறுகிறார்கள். அதன் காரணம் என்ன என்பதைக் கவனித்து, அந்த வயரிங்கில் உள்ள ஆபத்துக்களைக் குறைக்க, கெமிகல்ஸ் எது எதைக் குறைத்தால் நன்றாக இருக்கும் என்று கவனிக்கவேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எஸ். கே. சம்பந்தன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகாவின் நிதி மானியத்தின் பேரில் ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்ல நான் விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இலாகாவின் வேலையைப் பற்றி, திறமையைப் பற்றி சொன்னதில் பெரும்பாலானவற்றை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால், மாநிலத்தில் செயல்படுகிற இலாகாக்களிலே நல்ல விதத்தில் ஒழுங்காக கூடுமான வரையில் செயல்படுகிற ஒரு இலாகா இருக்குமேயானால், அது மின்சார இலாகா என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்கு அடுத்தபடி நான் எந்த இலாகாவானாலும் இருக்கிறது என்பதை பொதுமக்கள் உணருகிறார்கள். சொல்லுகிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே மிக்க மகிழ்ச்சியோடு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றும் நமது மாநிலத்திலே மின்சாரம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிலேயும் பேச்சிலேயும் குறிப்பிட்டார்கள். இன்னும் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் நினைக்கிறபடி, பூர்த்தியான போதிலும், குறை இருந்து கொண்டு தான் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறை முன்னாலிருந்தே இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியானாலும் இப்படியிருக்குமென்று இப்போதே கூறுகிறார்களே, அப்படியானால் நினைக்கிறவை எல்லாம், திட்டமிடப்பட்டவை எல்லாம் நடைமுறையில் கொண்டுவருவார்களா என்ற ஐயப்பாடு அதிலிருந்து ஏற்படுகிறது. குறிப்பாக நமது மாநிலத்தில் இப்போது அதிகமாக தண்ணீரிலிருந்துதான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த மின்சாரத்தைத்தான் அதிகமாக நாம் உபயோகித்து வருகிறோம் என்று எண்ணுகிறேன். பல முறை இந்த மன்றத்தில் இதுபற்றி சொல்லியிருக்கிறேன். அதிகமாக தர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தவேண்டுமென்று கூறியிருக்கிறேன். இன்னும் நண்பர் திரு. நடராஜன் அவர்கள் சொல்லியதுபோல கல்பாக்கம் அட்டாமிக் பவர் ஸ்டேஷன் ஏற்படுவது பற்றி அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்திருந்தாலும் மத்திய அரசாங்கத்திலிருந்து வருகிறவர்கள் எதை எதையோ கிளப்பி இன்னும் அது முடிவாகவில்லை என்ற கருத்தை வெளிப்படையாக இந்த சென்னை நகரத்திலேயே சொல்லிவிட்டு போவதெல்லாம் மக்களிடையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எப்படியிருந்தாலும் அமைச்சர் அவர்களின் முயற்சியால் கல்பாக்கம் மின் நிலையம் கண்டிப்பாக வரப்போகிறது என்பதில் சந்தேகமில்லை. வந்தாலும் இன்னும் அதிகமாக தர்மல் ஸ்டேஷன்கள் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டியதை

அரசாங்கம் உணரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சாரத்தில் நாம் இவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறோமே தவிர மற்ற மாநிலங்களில் நம்மைவிட முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக பம்பாய் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 1951-ம் ஆண்டில் அவர்கள் 19 சதவிகிதம் தான் தர்மல் ஸ்டேஷனிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்துகொண்டு வந்தார்கள். 75 சதவிகிதம் ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர் அவர்களுடைய உற்பத்தியாக இருந்துகொண்டிருந்தது. 3-50 p.m. இந்த ஆண்டில் 43 சதவிகிதம் தர்மல் ஸ்டேஷனிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது என்று அவர்களுடைய கணக்கு சொல்கிறது. அதிலிருந்து எவ்வளவு தர்மல் ஸ்டேஷன்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது புரிகிறது. நிலக்கரி சம்பந்தப்பட்டவரையில், அந்த மாநிலமும் நம்முடைய மாநிலமும் ஒரே தூரத்தில்தான் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது அவர்களுக்குக் காட்டப்பட்ட மத்திய அரசாங்கத்தின் சலுகைகள் நமது மாநிலத்திற்கு ஏன் காட்டப்படவில்லை? பம்பாய் அரசாங்கம் செய்து வருகிற காரியங்கள் நம் அரசாங்கத்தால் ஏன் செய்யப்படவில்லை என்ற கேள்விக்கு இங்கு இடமிருக்கிறது. குறிப்பாக தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த டாக்டர் தர்மதேஜா அவர்கள் முன் வந்துள்ளார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவில் ஏற்படுத்திவிட்டார்கள். ஆந்திர அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டது. அதே மாதிரி நம் அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்தத் திட்டத்திற்கு என்ன ஆகியிருக்குமென்று கேட்கலாம். எப்படி இருந்தாலும், அதை மேற்கொள்வதில், நம்முடைய மாநிலத்தில் அனல் மின்சாரம் ஏற்படுவது, நமக்கு மகிழ்ச்சி. கோயம்புத்தூர் நூல் ஆலை சொந்தக்காரர்கள் எல்லாம் சேர்ந்து அவர்களுக்கு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்திக்கொள்கிறார்கள் என்று சட்டமன்றத்தில்கூட மதிப்பிற்குரிய நண்பர் திரு. பொன்னுசாமி செட்டியார் அவர்கள் கூறினார்கள். நானும் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். அதற்கு பதிலாக அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்று பதில் சொன்னதாக எனக்கு நினைவு. மத்திய அரசாங்கம் இதையெல்லாம் ஒப்புக்கொள்ளவில்லை என்று பதில் சொல்லி திருப்தியடையாமல் அவசியமானவைகளை மற்ற மாநிலங்கள் சுலபமாக சாதித்துக் கொள்வதை நாம் கவனிக்க வேண்டும். இந்த அரசாங்கம் சுலபமாக சாதிக்க சக்தியற்றதாக இருக்கிறது என்ற நிலை இருக்கிறது. எதிர் காலத்திலாவது அப்படியில்லாமல் இருக்கும்படி அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார சப்ளை குறைவில்லாமல் இருந்தால்தான் எந்த தொழிலும் செய்கிற மக்களுக்கு திருப்தியாக இருக்கும். ஒவ்வொரு இடத்திலும் கட்டுப்பாடும் சிரமமும் இருந்தால் தொழில் செய்ய

வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்கள்கூட தொழில் செய்ய முன்வருவதில்லை. மின்சாரம் இல்லாமல் எந்தத் தொழிலும் நடைபெறுவதில்லை. ஆகையால் மின்சாரத்தை தடையில்லாமல், சிரமமில்லாமல், தொழில் வளர்ச்சிக்கும் விவசாயத்திற்கும் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மற்றும் மின்சார போர்டில் மேல் அதிகாரிகள் எவ்வளவு சிறந்த முறையில் நேர்மையான முறையில் திருப்தியான முறையில் செயலாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதுதான். ஆனால் கீழ்த்தர சிப்பந்திகளிடத்தில் அந்த அளவுக்கு திருப்திகரமான செயலை எதிர்பார்க்க முடியவில்லை. முன் ஒரு தட்வை இதையே நான் குறிப்பிட்டேன். மேலும், மேலும் அதையே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே சொல்லப்பட்டவைகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு தரப்படவில்லை. அதில் சொல்லியிருக்கிறார்கள், யார் பேரிலும் புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று. அந்த அளவில்தான் அது இருக்கிறது. கீழ்த்தர சிப்பந்திகளுடைய சாதாரண லஞ்சக் குற்றங்களை அதனால் ஏற்படுகிற தாமதத்தை ஒழிக்க முன்வரவில்லை. அதற்காக இலாகா ஏதாவது செய்திருக்கிறதா என்று கேட்டால் தென்னார்க்காடு சம்பந்தப்பட்டவரையில் சிறிதளவுகூட இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்காக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். பல மாதங்களுக்கு முன்னால் ஒரு கேள்வி போட்டு இருந்தேன், அது சம்பந்தமாக. இன்றுவரை அதற்குப் பதில் இல்லை. ஒரு மாதம் பொருத்தாலும் அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரு புது டிரான்ஸ்பார்மருக்கு சார்ஜ் செய்தார்கள். அதற்கு முன்னால் பயிரிடக்கூடிய விவசாயிகள் மனு செய்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை பல இருக்கின்றன. அப்படி இருந்தும் அந்த டிரான்ஸ்பார்மர் முதலில் சார்ஜ் ஏற்றப்பட்டதும் விவசாயிகளுக்கு கொடுக்கப்படாமல் ரைஸ் மில்லுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மில்காரர்களுக்கு, பல மாதங்களுக்கு முன் மனுச் செய்துகொண்டிருந்த விவசாயிகளுக்கு அது கொடுக்கப்படவில்லை. இப்படிக் காலதாமதம் ஏற்படக் காரணம் லஞ்சக் குற்றம் என்பது சொல்லாமலே புரிந்துகொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். இவற்றையெல்லாம் உடனுக்குடன் கண்காணித்து ஆவன செய்தாலொழிய அதை நிவர்த்திக்க முடியாது என்று சொல்லி கொள்ள விரும்புகிறேன். Superintending Engineer ஒரு சில நாட்களுக்கு முன்னால் வந்து இந்த டிரான்ஸ்பார்மலிருந்து கிட்டதட்ட 75 குதிரை விசைக்கு இன்னும் சப்ளை கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டுப் போனாராம். அதற்குப் பின்னால் விவசாயிகள்— மனு செய்து கொண்டிருப்பவர்கள் இரண் பேர்—சென்று அங்குள்ள சூப்பர்வைசரிடம் கேட்டார்கள். அவர்கள் அதை நிராகரித்துவிட்டு அதோடு அவர்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது அதை முடித்துவிட்டுத்

தான் இதைச் செய்வோம் என்று மனுவைப் பெற்றுக்கொள்ளாமல் கூட நிராகரித்துவிட்டார். கீழ் மட்டத்தில் இதுபோன்று வேலை நடக்கிறது. இதையெல்லாம் அக்கறையோடு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி நான் இந்த மன்றத்தில் சொல்லிவருவது, தென்னார்க்காடு மாவட்டம் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விஷயத்தை குறிப்பிடுவேன். நான் பல நாடுகளிலும் நம் நாட்டில் பல மாநிலங்களிலும் பார்த்திருக்கிறேன். சென்னையிலும் பல சிற்றூர்களில் கூட பார்த்திருக்கிறேன். இருந்தாலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் இந்த மின்சாரம் அடிக்கடி கிட்டதட்ட ஒரு மணி அல்லது இரண்டு மணிக்கு ஒருமுறை நிற்பதைப் போல வேறு எங்கும் பார்த்ததில்லை. அப்படி எங்கும் இல்லையென்றுகூட சொல்லலாம். தென் ஆர்க்காட்டில் அது இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. நான் திரும்பத் திரும்ப இந்த சபையில் சொல்லி வந்துள்ள குறை இன்னும் நீக்கப்படவில்லை. ஏதோ ஒரு குறிப்பிட்ட நாளில்—ஞாயிற்றுக்கிழமையில்—கரெண்ட் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்தப்பட்டது என்றால் யாரும் குறை சொல்ல மாட்டார்கள். ஆனால் நினைத்தபொழுது கரெண்ட் நிற்கிறது. ஓடிக்கொண்டேயிருக்கும் விசிறி திடீரென்று நின்றுவிட்டு பிறகு ஐந்து நிமிஷங்களில் ஓடும். இம்மாதிரி பல நாட்களில் நடக்கின்றன. இந்தக் குறை எங்கள் மாவட்டத்தில் எப்போதும் இருக்கிறது. அந்தக் காலத்தில் எங்கள் மாவட்டத்தில் இருந்த லைசென்ஸ்காரர்கள் அமைத்த லைன்கள் மாற்றப்படாததால் இந்தக் குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் எதுவானாலும் இந்தக் குறையை மின்சார போர்டார் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தல் சொல்லிக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

திரு. எம். எதிராஜுலு: கனம் தலைவர் அவர்களே, மின்சார போர்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மின்சார போர்டு முக்கியமான காரியங்களுக்கு மின்சார வசதி அளித்து நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை ஒப்புக் கொள்ளாதவர்கள் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட இந்த போர்டை நிர்வகித்துவரும் அதிகாரிகளுக்கும் இந்த இலாகாவை ஏற்றுள்ள கனம் அமைச்சருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மின் விளக்கு எரிய வேண்டுமென்று நாம் நினைக்கும்பொழுது அதற்கான பொத்தானை அமுக்கியவுடன் அது உடனடியாக எரிவது போல அவ்வளவு துரிதமாக மின்சாரக் கழகம் வேலை செய்துவருகிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அது யாரோ ஒருவரைப் புகழுவதற்காக நான் அவ்வாறு சொல்லவில்லை. தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏராளமான கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்னார்காடு ஜில்லாவில், மின்சார சப்ளை கம்பெனி இருந்தபோது 400 கிராமங்களுக்குத்தான்

மின்சார வசதி கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது, கம்பெனி நீங்கிய பிறகு போர்டு கைக்கு வந்தபிறகு, 906 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரக் கழகத்தின் திறமைக்கு இதையே ஒரு உதாரணமாகக் கூறலாம். மின்சாரக் கழகத்தில் அனுபவம் வாய்ந்த பெரிய அதிகாரிகள் தேர்ச்சி பெற்றவர்கள், திறமை வாய்ந்தவர்கள் மிகத் திறமையுடன் வேலை செய்கிறார்கள். கீழ் மட்டத்திலுள்ள ஊழியர்களில் ஒரு சிலர் திறமைக் குறைவு காரணமாகவோ அசிரத்தை காரணமாகவோ நன்றாக வேலை செய்யாவிட்டால், அதை உயர்ந்த அதிகாரிகளிடம் தெரிவித்தால் அவர்கள் அதை உடனடியாகக் கவனிக்கிறார்கள் என்பது என் போன்றவர்கள் நேரிடையாகக் கண்ட உண்மை ஆகும். இதற்காக அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத்திற்கென மூன்றாவது திட்டத்தில் 175 கோடி ரூபாய் செலவழித்தோம். நான்காவது திட்டத்தில் இதற்கு 216 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மின்சார உற்பத்தி எவ்வளவுதான் அதிகரித்தாலும் தமிழ்நாடு தன்னிறைவு பெறவில்லை என்பது உண்மை. காரணம், இங்கே விவசாயமும் சிறு தொழில்களும், பெரிய தொழில்களும் அதிகமாக மின்சாரம் உபயோகிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. நாளுக்கு நாள் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி மின்சாரம் கொடுத்து வருகிறோம்; இதனால் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது.

4-00 p.m. அடுத்தபடியாக, அனல் மின்சார நிலையம் அமைப்பதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு அனல் மின்சார நிலையத்தை தூத்துக்குடியில் அமைத்து 12 வருஷங்களுக்குப் பிறகு அதை இந்த சர்க்காருக்குத் தருவதற்கு தனியார் ஒருவர் முன் வந்திருப்பதைப் பார்க்கும்போது, அவரைப் பாராட்டி, வரவேற்று அந்த அனல் மின்சார நிலையத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். சென்ற மாதத்திற்கு முன் மழை அதிகமாகப் பெய்யாவிட்டாலும் மின்சார வெட்டு வராதபடி நல்ல காலமாக மின்சாரக் கழகம் சமாளித்து விட்டது. அதன் காரணமாக, தொழில்கள் ஸ்தம்பிக்காத நிலைமை நிலவியது; யாருக்கும் எந்த விதமான கஷ்டமும் ஏற்படவில்லை. கனம் அமைச்சர் குறிப்பிட்டது போல இதுவே தமிழ் நாட்டுக்கு நல்ல திருப்பம் என்று கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் மின்சாரக் கழகத்தைப் பற்றி பல குறைகளை எடுத்துச் சொன்னோம். இந்தக் கழகத்தினர் அவைகளை கவனித்து அவைகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எல்லாம் சரியாக நடவடிக்கை எடுத்து அதற்கு தீர்வுகாண வேண்டும் என்பதைப் பற்றி ஒரு புத்தகம் அச்சடித்து நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு செய்ததன் மூலம் இவர்கள் ஜனநாயக ஆட்சியில் உள்ள சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நான் உண்மையாகவே இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இதே போல சட்ட சபை

பேசுவதையெல்லாம் எல்லா இலாகாக்களும் கவனித்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டால், சட்ட சபை மெம்பர்களுக்கு நிச்சயம் அவர்களுடைய தொகுதிகளில் பெரு மதிப்பு ஏற்படும்.

இந்த சந்தர்ப்பத்தில் சில குறைகளை நான் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தென்னாற்காடு ஜில்லாவில் மற்ற ஜில்லாக்களை விடக் குறைந்த அளவு கிராமங்களுக்கே மின்சாரம் வந்திருக்கிறது. ராமநாதபுரத்தில் 1,676 கிராமங்களுக்கும், வட ஆற்காடு ஜில்லாவில் 2,096 கிராமங்களுக்கும், செங்கற்பட்டு ஜில்லாவில் 1,745 கிராமங்களுக்கும் மதுரை மாவட்டத்தில் 1,536 கிராமங்களுக்கும், சேலத்தில் 1,312 கிராமங்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 1,567 கிராமங்களுக்கும், கோவையில் 2,707 கிராமங்களுக்கும் தென்னாற்காடு ஜில்லாவில் 906 கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மிகவும் பின்தங்கிய ஜில்லா. இந்த ஜில்லாவில் கிராமங்கள் அதிகம். திருக்கோவிலூர், கள்ளக்குரிச்சி, விருத்தாஜலம், செஞ்சி ஆகிய தாலூகாக்களில் அதிக கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. தென் ஆர்க்காடு ஜில்லா முன்பு கம்பெனியாரால் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இப்போது, அந்தக் கம்பெனிகளை போர்டு எடுத்துக்கொண்ட பிறகு, அங்கே அதிகமான கிராமங்களுக்கு அதிகமாக மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு பம்பு செட்டுகளுக்கு 20 பேர்கள் மின்சார வசதி கோரினால் அப்போது முதல் 4 பேர்களும் கடைசி 5 பேர்களும் பணம் கொடுத்து நடுவில் உள்ளவர்கள் பணம் கொடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டால், அந்த கோரிக்கை வருடக் கணக்கில் கவனிக்கப்படுவதில்லை. மின்சாரக் கழகத்தின் பேரில் குற்றம் சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. வேண்டுமானால், பணம் கட்டாதவர்களுக்கு பிற்பாடு மின்சாரம் கொடுக்கலாம். பணம் கொடுத்தவர்களுக்கு தாமதமின்றி மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்தால் தான் உற்சாகமாக உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். ஒரு சிலர் பணம் கட்டாத காரணத்தால் மற்றவர்கள் வருஷக்கணக்கில் பாதிக்கப்படுவதா ? ஆகவே விவசாயத்துறைக்கு மின்சாரம் கேட்கிறவர்களுக்கு காலதாமதம் இல்லாமல் கொடுத்து அவர்கள் குறையைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி தென்னாற்காடு ஜில்லாவை எடுத்துக் கொண்டால் பல பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை என்ற கருத்தைத் தான் அமைச்சர் அவர்களோடு சுற்றுப்பிரயாணம் செய்யும் போது என்னிடம் சொல்லப்பட்டது. இதற்கு மற்றொரு காரணம்கூட இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலேயும் தலைமை நிலையம் இருக்கிறது. மதுரை நகரிலே எஸ்.இ. ஆபீஸ் இருக்கிறது. ஏனைய மற்ற ஜில்லாக்களிலேயும் எஸ்.இ. ஆபீஸ் இருக்கிற காரணத்தால், டி.இ. ஆபீசில் போடுகிற எஸ்டிமேட் மற்றவைகளுக்கு உடனடியாக எஸ்.இ. ஆபீசில் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள்

[திரு. எம். எதிராஜுலு] [3rd August 1965]

ஆரம்பிக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் ஜில்லாவில் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. திருக்கோயிலூர், விருத்தாஜலம், கள்ளக்குறிச்சி முதலிய ஊர்களின் வேலைகளுக்கு காஞ்சிபுரம், வேலூர் போகவேண்டும்; கடலூர், சிதம்பரம் போன்ற இடங்கள், திருச்சி எஸ்.இ. ஆபீசுக்குப் போகவேண்டும். கடலூர் டி.இ. ஆபீசில் காரியம் முடிந்த பிறகு திருச்சியிலுள்ள எஸ்.இ. ஆபீஸ் போய்த் திரும்புவதற்குள் ஆறு மாதம், ஒரு வருஷம் என்று தடைபட்டு நிற்கிறது என்று தான் மற்றொரு காரணம். ஆகவே, தென்னாற்காடு ஜில்லாவின் தலைநகரான கடலூரில் எஸ்.இ. ஆபீசை சீக்கிரமாகக் கொண்டு வந்து அமைக்கும்படி மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று, இன்றைக்கு அனல் மின்சார நிலையம் தடைப்பட்டுப் போகிற காரணத்தால் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இன்னும் பல ஆராய்ச்சிகள் தமிழகமெங்கும் நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் அனல் மின்சாரம் தடைபடுகிற நேரத்தில்
4-10 p.m. மற்றொன்றை நான் தயாராக வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். நீர் மின்சாரம் அல்லது வேறு எந்த விதமான நடவடிக்கை எடுத்தாவது மின்சார வெட்டு ஏற்படும்போது மக்கள் பாதிக்காமல் ஈடு செய்ய தயாராக இருக்க வேண்டும். நீர் மின்சாரத்தால் ஈடு செய்ய முடியும். அப்படி பார்க்கும்போது, மலைகளில் ஓடும் ஆறுகளிலிருந்து வரும் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்று பார்க்கலாம். கள்ளக்குறிச்சியில் கோமுகி நதியில் ஒரு அணைக்கட்டு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வரும் தண்ணீர் கல்வராயன் மலையிலிருந்து 10 மைல் தூரம் வந்து விழுகிறது. நான் அங்கே சென்ற நேரத்தில் கோமுகி நதி மூலமாக நீர் மின்சாரம் எடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதையும் இந்த இலாகா பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மின்சார இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களைப்பற்றி இங்கே கூறப்பட்டது. நான் இந்தத் தொழிலாளர்களிடத்திலே தொடர்பு கொண்டு கேட்கிற நேரத்தில் சொன்னார்கள், தொழிலாளர்களுக்குக் குறை ஒன்றும் இல்லை என்று. இந்தத் தமிழ்நாடு சர்க்காரில் வேலை பார்க்கும் அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்கும் எந்தச் சம்பள விகிதம் அடிப்படையிலே கொடுக்கப்படுகிறதோ, அதைத் தான் மின்சார போர்டில் வேலை செய்கிறவர்களும் பெறுகிறார்கள் என்று இருக்கும்போது, ஏன் இந்தக் குழப்பம் இருக்கிறது என்று தெரியவில்லை. இதற்கு யார் காரணம் என்று. நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். கடைசியாக தென்னார்காடு ஜில்லாவில், வருடக் கணக்கில் பம்பு செட்டுகளுக்கு மின்சார சப்ளை கொடுக்காதவைகளை கணக்கு எடுத்து உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்வதோடு, கிராமங்களுக்கு மின்சார வசதி உடனுக்குடன் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையில் நமது போர்டார் அவர்கள் நல்ல முறையில் இந்த இலாகாவை நடத்தி மக்களுக்கு சேவை செய்வதைப் பாராட்டி, இந்த வரவு செலவு திட்டத்தை ஆதரிக்கிறேன்.

3rd August 1965]

திரு. எம். சுப்பையா செட்டியார் : கனம் தலைவர் அவர்களே, இந்த மின்சார பட்ஜட் விஷயமாக நடக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு சில வார்த்தைகள் சொல்ல அனுமதி கோருகிறேன். மின்சார இலாகா செய்யும் காரியங்களைப் பற்றி இங்கே சொல்லிய கருத்துக்களை நான் ஆதரிக்கிறேன். மின்சார இலாகாவையும் அதற்குப் பொறுப்பான தொழில் துறை அமைச்சரையும் பொதுவாக தமிழ்நாடு அரசாங்கத்தையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்கு முக்கிய காரணம் நாம் எதிர்பார்த்த அளவுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் செய்வதற்கு, தகுந்த மின்சார போர்டும் அமைத்திருக்கிறார்கள். ஆனால் செய்ய வேண்டிய காரியங்களை அதிகமான செலவில்லாமல், குறைந்த செலவில் சிக்கனமாகச் செய்யவேண்டுமென்று சொல்லலாமே தவிர, வேறு எந்தக் குறையும் அந்த போர்டின் பேரிலே, தமிழ்நாட்டு அரசாங்கத்தின் பேரிலே, யாரும் சொல்ல முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக அவர்கள் எல்லோரையும் மனமாரப் பாராட்டுகிறேன். அதிலேயும் முக்கியமாக தமிழ்நாடு மின்சார ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் பொதுமக்களின் நன்றி உரித்தாகும் என்று நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நாம் பல வருஷங்களாக இந்த மின்சார வெட்டினால் பாதிக்கப்பட்டோம். தெய்வாதீனமாக இந்த வருஷம் மழை குறைவாக இருந்தும் மின்சார வெட்டை தவிர்க்கும் விதத்தில் ஆற்றிய பணியை, நாம் பாராட்டத்தான் வேண்டும். நம் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யாவிட்டாலும் கூட, தேவைக்குத் தகுந்த முறையில் உற்பத்தி செய்கிறார்கள் என்பதைப் பற்றி சந்தோஷப்படத்தான் வேண்டும். இருப்பினும், ஒன்றிரண்டு காரியத்தைக் கவனிக்கும்போது, இந்த மின்சார ஸ்தாபனம் செயல்பட ஆரம்பித்து 8 வருஷங்களானாலும், அரசாங்கத்துறையிலுள்ள ஸ்தாபனமாக இருந்தாலும் கூட, என்ன கருத்தில் அப்படிச் செய்கிறார்கள் என்றால், அரசாங்கத் துறையில் அது ஒரு தனி ஸ்தாபனமாக இருந்து அதற்கு ஏற்படக்கூடிய செலவுகளை நன்றாகக் கண்காணித்து நல்ல முறையில், பயன்படுத்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்தலாம் என்ற காரணத்தால் அவர்கள் கொடுத்த கணக்குப் பிரகாரம், இன்னும் அந்த ஸ்தாபனம் லாபகரமாக வேலை செய்யவில்லை என்ற குறையைக் காணவேண்டியிருக்கிறது. இருந்தாலும் ஸ்தாபனம் பெரியதாக இருக்கும்போது அதிகமான லாபத்தை எதிர்பார்க்க முடியாது தான். அதிலேயும் மக்கள் சேவைக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் முறையில் அதிகச் செலவு ஏற்படலாம். சிக்கனம் தேவை என்றாலும், வரவுக்குத் தகுந்த செலவையும் புத்தகத்தில் காண்பித்திருக்கிறார்கள். லாபம் ஒரு பெர்சென்டாவது இருக்குமா என்று பார்த்தால் ஒரு இடத்திலாவது அந்த லாபத்தை காண்பித்திருப்பதாக என் புத்திக்குப் படவில்லை. இதைத் தவிர்த்து, சென்ற வருஷம் 27.71 கோடி ரூபாய் வரும்படி

காண்பித்து, செலவு இனங்களில் காண்பிக்கும்போது ஈடு செய்து கொண்டு விட்டார்கள். லாபத்தைக் காண்பித்தால் எல்லா மக்களையும் பிடிக்கக்கூடிய இன்கம்டாக்ஸ் போன்றவைகள் வரும். இருந்தாலும் கூடுமானவரை வரவு செலவைக் கட்டிக் கொண்டு போனால் போதும் என்று சென்ற வருஷம் மந்திரி அவர்கள் சொன்னதாக ஞாபகம். அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாது. லாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் காட்டியிருக்கிறார்கள். அடுத்த வருஷம் கிட்டத்தட்ட 31 கோடி ரூபாய் வருமானம் காட்டி, அதற்கு செலவையும் காட்டியிருக்கிறார்கள். அந்த இடத்திலேயும் நமக்கு செலுத்த வேண்டிய மூல தன வட்டி பூராவும் செலுத்தி விட்டதாகச் சொல்லுவதற்கு இடமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து லாபகரமாக நடக்கவில்லை என்றுதான் தெரிகிறது. ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : Rates-ஐ உயர்த்திவிட்டால் போதும். அதற்கு எவரும் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : அங்கத்தினர்கள் மட்டும் ஒத்துக்கொண்டால் போதாது. மின்சாரத்தை உபயோகப் படுத்தும் மக்கள் தாங்கள் கொடுக்க வேண்டியிருக்கும் என்று யோசிக்கிறார்கள். இப்போதே 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் வரை ரேட்டைக் கூட்டியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தனியார் ஸ்தாபனம், பொதுஸ்தாபன பப்ளிக் அண்டர்டேகிங்ஸ்-ஐப் பற்றிச் சொல்லும்போது, எல்லாம் பப்ளிக் அண்டர்டேகிங்காக இருந்தால் நல்லது என்று சிலர் ஆசைப்படுகிறார்கள். ஒரு சின்ன உதாரணம். முதலில் இந்த மாநிலத்தில் சென்னை போன்ற பெரிய நகரங்களில் மட்டும் தான் மின்சாரம் இருந்தது. திருச்சியில் சேஷசாயி என்பவர் தனியார் துறையில் ஆரம்பித்து, ஆரம்பித்த தேதி முதல் இன்று வரை, இன்று அரசாங்கத்திடம் விற்றாலும், 10 சதவிகிதத்திற்கு குறையாமல், அதற்கு மூலதனம் போட்டவர்களுக்கு வருமானமாக டிவிடெண்டு கொடுத்து வருகிறார்கள். அதிலே வேலை செய்யும் வேலைக்காரர்களுக்கு நல்ல ஊதியம் கொடுத்து நல்ல விதமாக நடத்தி வருகிறார்கள். இருந்தாலும் ஒரு குறை சொல்லுகிறார்கள். அவர்கள் லாபம் வருகிற இடத்தில் மட்டும் தான் நடத்துகிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சாரத்தைக் கொண்டு போகும் சந்தர்ப்பம் இருப்பதால், ஓவர் ஹெட் சார்ஜஸ்—செலவுகள் அதிகமாகிறது, அவைகளை ஈடு பண்ணுவதால் லாபகரமாக நடத்த முடியவில்லை என்று சொல்லலாம். அது உண்மையானதுதான். இருந்தாலும், சேஷசாயி அவர்கள் உற்பத்தி பண்ணும்போது, பல பேர்களுக்கு தெரிந்திருந்தாலும் கூட எல்லோரும் மின்சாரத்தை எடுப்பதற்கே பயந்தார்கள்.

அதைத் தொட்டாலே ஏதாவது ஆபத்து வரும் என்ற நிலைமையில் பல மக்கள் கருதிக் கொண்டு இருந்தார்கள். வசதியுள்ளவர்கள் தான் பயன்படுத்த முடியும் என்று இருந்தது. மின்சாரத்தை எல்லோரும் உபயோகப்படுத்த ஒரு யோசனை பண்ணினார்கள். ஒரே ஒரு அட்வர்டைஸ்மெண்டு போட்டார்கள், "எலக்ட்ரிசிடி யுவர் பெஸ்ட் சர்வன்ட்" என்று, "இன்று நாம் எந்த வேலைக்கு ஆள் வைத்துக்கொண்டாலும் இந்த மின்சாரத்தை நம்பி நாம் வேலை வாங்குவது போல வேறு யாரிடமும் வேலைவாங்க முடியாது." என்று அன்றைக்கு சொல்லியது ஞாபகம் வருகிறது. ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. மந்திரி அவர்களிடத்தில் நேற்று பேசிக் கொண்டிருக்கும்போது கூட சொன்னேன். மின்சாரத்திற்கு எத்தனை ரூபாய் செலவு செய்தாலும் அதிலிருந்து கிடைக்கும் பணம் ஐந்தாண்டு திட்டத்திற்குக் கிடைக்கும் என்று. அதை அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டாகள். தொழில் பெருக வேண்டுமென்றால் மின்சாரம் பெருகத் தான் வேண்டும். மேற்கத்திய நாடுகளில் மனிதருடைய சராசரி வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்ப்பதைப்போல மின்சாரம் ஒரு மனிதனுக்கு தனியாக எவ்வளவு கிடைக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு மனிதனின் உற்பத்தியின் அளவுதான் தேசத்தின் உற்பத்தி அளவைக் காட்டுகிறது என்று சொல்கிறார்கள். ஒரு மனிதனுக்கு 12 யூனிட்டாக இருந்தது 120 யூனிட்டாக வளர்ந்திருப்பதாகவும் அங்கு சொல்கிறார்கள். மேல் நாடுகளைப் பார்க்கும் போது பெருமைப்படும் அளவுக்கு இல்லாவிட்டாலும்கூட நம் மாநிலத்தைப் பொருத்தவரை நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் கட்டணத்தை உயர்த்தினால் லாபம் வருமென்று சொன்னார்கள். மின்சாரக் கட்டணம் ஒரு பைசா உயர்த்தினால்கூட லாபம் அதிகமாக வரும். உதாரணத்திற்குச் சொன்னால், விவசாயத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 7 பைசாவாக இருந்ததை எட்டு பைசாவாக்கியிருக்கிறார்கள். ஒரு பைசா உயர்வு சிறியதாக தெரிந்தாலும் அது மினிமம் சார்ஜாக வரும் போது ரூ. 17·50 ஆக உயர்ந்துவிடுகிறது. அது உற்பத்தி செலவில் எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியு 4-20 p.m.
மென்று நம்புகிறேன். மின்சாரம் வளர வளர அது எவ்வளவு மலிவாகக் மக்களுக்குக் கிடைக்கிறதோ அந்த அளவு நாட்டுக்கு நல்லது என்று அரசாங்கம் உணர வேண்டும். மின்சார போர்டு பற்றி நண்பர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட அது எல்லாம் வாஸ்தவமாகத்தான் இருக்கிறது. சர்வீஸ் வாங்குவதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. சர்வீசுக்கு எல்லா சாமான்களும் வந்துவிடும். ஒரு ஸ்குருவோ வேறு சிறிய சாமானோ இல்லை என்ற காரணத்தால் அந்த வேலையை ஒத்திவைத்துவிடுவார்கள். பிறகு வருவதற்கு பல மாதங்கள் ஆகின்றன. மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்ற மனப்பான்மை ஊழியர்களுக்கும் வரவேண்டும். மேல் அதிகாரிகள் அதை கீழுள்ளவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். சம்பளம்தான் முக்கியம் என்று கருதாமல் சேவை

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [3rd August 1965

மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். அது வந்தால்தான் இந்தக் காரியங்கள் நல்லமுறையில் நடக்கும். மேல் அதிகாரிகள் மிரட்டினால் காரியம் நடக்காது. கீழ் அதிகாரிகளும் மேல் அதிகாரிகளும் ஒத்துழைக்கவேண்டும். அதோடு சர்வீசுக்கு போகிறவர்கள் நல்ல எண்ணத்தோடு அவர்களை அணுகவேண்டும். நான் சொல்வதில் நண்பர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. சிலர் அதிகாரிகளிடம் போகும்போது அவர்களை மிரட்டக்கூடிய அளவில் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மின்சார போர்டு இது வரை செய்தது போதாது என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அண்டை ராஜ்யத்திற்கு அவர்கள் கேட்காமலே கொடுக்குமளவுக்கு அரசாங்கம் செய்வதற்கு, பண உதவி எவ்வளவு கொடுத்தாலும் தருமென்று சொல்லிக்கொண்டு, நல்ல காரியங்களை மேலும் ஊக்குவிக்கும்படி கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு இதில் முன்னேற்றத்தை உண்டாக்கிய அரசாங்கத்தையும் முக்கியமாக இருந்த தொழில் அமைச்சர் அவர்களையும், போர்டாரையும், கஷ்டப்பட்டு வேலை செய்யும் ஊழியர்களையும் பாராட்டி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து இந்த நிர்வாகம் நல்லமுறையில் வேலை செய்ய எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(Deputy Chairman in the Chair.)

* திரு. கே. வி. ராமசாமி: கனம் உப தலைவர் அவர்களே, இன்றைய தினம் எலக்ட்ரிசிட்டி விஷயமாக, நான் இதனை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். இன்றைய தினத்தில் விஞ்ஞான உலகமாக நம் நாடு மாறிக்கொண்டு வருகிற சமயத்தில் எலக்ட்ரிசிட்டி மிகமிக அத்தியாவசியம் என்பது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய தமிழ்நாட்டில் இன்றைய நிலைமையில் நல்ல முறையில் மற்ற மாநிலங்களைவிட மின்சார உற்பத்தி முன்னேறிக்கொண்டு வருவதைப்பற்றி எல்லோரும் சந்தோஷப்படுகிறோம். குறிப்பாக இந்த மின்சாரம் வந்தபிறகு சிறிய ஏழை வீட்டில்கூட திருமணம் நடந்தால் அவனும் அங்கு ரேடியோ, லவுட் ஸ்பீக்கர்கள் வைத்து கிராமபோனை உபயோகப்படுத்த ஆசைப்படுகிறான். அதேபோல ஒவ்வொரு கிராமத்திலும் சினிமாக் கொட்டகைகளும் மற்றவைகளும் அமைக்கப்பட்டு கிராம மக்கள் சந்தோஷமாக பொழுதுபோக்க அதைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல விளக்குகள் ஒவ்வொரு இடத்திலும் ஏராளமாக போடப்பட்டு ஜகஜ்ஜோதியாக விளங்குகிறது. பெரிய இடங்களில் விசேஷம் என்றால் அமாவாசை காலங்களில் கூட நிலவு எரிப்பதுபோல, இன்னும் சொல்லப்போனால், பகல் மாதிரி விளக்குகளை போட்டு அலங்கரிக்கிறார்கள். ஆகையால் இந்த எலக்ட்ரிசிட்டி வேண்டாமென்று சொல்லக்கூடியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். நம் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி நண்பர்கள் கூட வேறு பிரச்னையாக இருந்தால் எதிர்த்துப் பேசக்கூடியவர்கள்

3rd August 1965] [திரு. கே. வி. ராமசாமி]

அவர்கள் கூட நல்லமுறையில் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள் என்றால் அது பாராட்டத் தக்க விஷயமாகும். இந்த எலக்ரிசிட்டி விஷயத்தில் ஏன் தமிழ்நாடு பொருத்தவரையில் அது முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறது என்று ஆராய்ச்சி செய்யும்போது நம்முடைய தமிழக அமைச்சரவை அதற்கு வெகு முயற்சி எடுத்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. எங்கெங்கு தண்ணீர் துறைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் போய் அவற்றை வீணாக்காமல் மின்சாரத்தைப் பெருக்கி ஆவன செய்ய நல்ல அமைப்புகளைச் செய்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்த இஞ்சினியர் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டு நம் நாடு முன்னேற வேண்டுமென்ற கருத்தோடு கூட்டாக இருந்து வேலை செய்துவருவதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆனால் அதே நேரத்தில் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. நாள் என்றால், இரவு பகல் ஒன்று சேர்ந்து ஒரு நாள் ஆவதைப் போல, எவ்வளவு நல்ல காரியத்தைச் செய்தாலும், அருமையான புருஷன் பெண்ஜாதி இருந்தாலும், சிறிய சச்சரவு ஏற்படுவதை போல, குறைகள் ஏற்படுவது சகஜம்தான். அதைப்போன்று எந்த டிபார்ட்மெண்டிலும் சிறிய குறைகள் ஏற்படத்தான் செய்கிறது. அதனால் பல இன்னல்கள் கஷ்டங்கள் வரத்தான் செய்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு எலக்ட்ரிசிட்டி என்னவாகுமோ, தொழிலாளர்கள் என்ன செய்வார்களோ, மில்கள் எப்படியாகுமோ, விவசாயம் என்னவாகுமோ என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தோம். ஆண்டவன் கிருபையால் வானம் வருஷித்தது. மழை பெய்தது. தக்க சமயத்தில் மழை பெய்ததால் ஓரளவுக்கு நிம்மதியோடு இருந்து வருகிறோம். இன்றைக்கு தொழில் வளத்தை மட்டும் வளர்த்துக்கொண்டு போவது சர்க்கார் கடமை அல்ல. விவசாயம் மிகவும் முக்கியம் என்று உணர்ந்திருக்கிறோம். நானும் இந்த மன்றத்தில் உணவு அதிகமாக வேண்டுமானால் அதற்கு என்ன செய்யவேண்டுமென்று பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதையும் நான் சொல்லியே ஆகவேண்டும். இன்று எல்லாப் பொருள்களின் விலையும் அதிகமாக இருக்கிறது. விவசாயக் கருவிகளின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. மின்சார பல்பு, ஃபியூஸ் போன்ற மின்சாரப் பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. பம்பு செட்டின் விலை உயர்ந்திருக்கிறது. சென்ற மாதம் மோட்டாருக்கு ஒரு 'கேட் வால்வ்' வாங்கினேன். 'கேட் வால்வ்' வைக்க வேண்டும், அது இல்லாவிட்டால் 'வாஷர்' போய்விடும் என்று கேள்விப்பட்டேன். எனவே 'கேட் வால்வ்' வாங்கப் போனேன். 5 எச்.பி. மோட்டாருக்கான 'கேட் வால்வின்' விலை 85 ரூபாயாக இருந்தது. அது முன்பு 10 அல்லது 15 ரூபாயாக இருந்தது. அந்த 'வால்வுக்கு' ஏதாவது காரண்டி உண்டா என்று கடைக்காரரிடம் கேட்டேன். காரண்டி கிடையாது என்று அவர்

சொன்னார். அந்த 'வால்வ்' இரண்டே நாட்களில் 'க்ளோஸ்' ஆகிவிட்டது. பிறகு அதைக் கழட்டிவிட்டு வேறொன்று போட வேண்டியிருந்தது.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்: 'க்ளோஸ்' ஆன 'வால்வை' கடைக்காரரிடம் காண்பித்தீர்களா ?

திரு. கே. வி. ராமசாமி: கடைக்காரரிடம் அதைக் காண்பித்தால் அவர் அதை என் முகத்தில் தூக்கி எறிவார். அதை வாங்கும் போது அதற்கு காரண்டி கிடையாது என்று அவர் சொன்னார். சரி, ஆண்டவன் காப்பாற்றட்டும் என்று நினைத்துக்கொண்டு அதை நான் வாங்கினேன். ஆண்டவனும் என் பக்கம் துணை நிற்கவில்லை. பல்புகளை எடுத்துக்கொண்டால், அவை அடிக்கடி 'பர்ன்' ஆகி விடுகின்றன. எரிந்துபோன பல்புகளை கீழே போட்டால், அவைகளின் கண்ணாடி துண்டுகள் காலில் புகுந்துவிடும். எனவே எரிந்துபோன பல்புகளை நான் மூலையில் வைத்திருப்பேன். கண்ணாடி வாங்க வருபவர்களிடம் அதைக் கொடுக்கலாம் என்று எண்ணி அவைகளை வைத்திருந்தேன். அவற்றை வாங்கும்
4-30 p.m. புண்ணியவான்கள் யாரும் வரவில்லை. இவ்வாறு, விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஏற்கனவே பலர் சொன்னது போல மின்சாரத்திற்கான மினிமம் சார்ஜ் ஓரளவு குறைக்கப்பட்டிருந்தாலும் கரெண்ட் யூனிட் சார்ஜ் உயர்த்தப்பட்டிருப்பதால் இந்தக் கட்டணத் தொகை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த நிலைமையில், விவசாயிக்கு இன்னும் நல்ல காலம் வரவில்லை. இந்த விஷயத்தில், நான் இரவு-பகல் பற்றி பல முறை பேசிவிட்டேன். இதுபற்றி மீண்டும் மீண்டும் பேசி சபையின் நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. கூடிய வரையில் விவசாயிகளுக்கு பகலிலே மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இரவில் மின்சாரம் கொடுத்தால், விவசாயிகளுக்கு அது கஷ்டம் தரும். விவசாயிகளுக்கு சட்ட நுணுக்கம் தெரியாது. கட்டுப்பாடு இருந்தால், அதிகாரிகளின் 'பெர்மிஷன்' வாங்கி பம்பு செட்டை உபயோகிக்க வேண்டும். அனுமதிக்கப்படாத நேரங்களில் ஒன்றிரண்டு ஏக்கர் உள்ளவர்கள் பம்பை உபயோகித்தால், "பட, பட, பட பட" என்று சத்தம் வந்தவுடன் சூபர்வைசர் வந்து அவர்களைப் பிடித்துக்கொள்வார். அவர்கள் கை கால்கள் உதற, 'சற்று நேரத்தில் முடித்துவிடுகிறேன்' என்று சொன்னால், சூபர்வைசர் "ஏன் இப்போது கரெண்டை உபயோகிக்கிறீர்கள்" என்று கேட்டு ஃப்யூசை எடுத்துக்கொண்டு போய்விடுவார். விவசாயிகள் விதிகள் தெரிந்தோ தெரியாமலோ அனுமதிக்கப்படாத நேரங்களில் கரெண்டை உபயோகித்தால், சூபர்வைசர்கள் ஃப்யூசையே எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதன் விளைவாக வேளாண்மை கெட்டுப்போகிறது. விவசாயிகள் சூபரிண்டெண்டிங் எஞ்ஜினியரையோ மற்றவர்களையோ பார்த்து ஆபீசிற்கு விண்ணப்பம் போட்டு தகுந்த பணத்தைக் கொடுத்து மறுபடி ஃப்யூசைக் கொண்டுவருவதற்குள் பயிர்கள் காய்ந்து மோசமாகி

விடும். சூபர்வைசருக்கு 4 ரூபாயோ 5 ரூபாயோ கொடுத்துவிட்டால், மோட்டார் "பட பட, பட பட" என்று என்ன சத்தம் போட்டாலும் அவருக்குக் காது கேட்காது. பம்பு செட்டுகளுக்குக் கரெண்டுக்காக 20 பேர்கள் விண்ணப்பம் போட்டிருக்கும்போது முன்னால் 5 பேரும் பின்னால் 5 பேரும் பணத் தொகையைக் கட்டி நடுவில் இருப்பவர்கள் பணம் கட்டாமல் இருந்தால் கரெண்டு யாருக்கும் வருவதில்லை என்று தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். கரெண்டு வராததற்குக் காரணம் 'சம்திங்'. இந்த 'சம்திங்' கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். இந்த 'சம்திங்' வாங்குவது மேல் இடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. நடுவில் இருக்கும் பெருச்சாளிகள் தான் இப்படிச் செய்கிறார்கள். இப்படிச் செய்வது கழகத்திற்கே கெட்ட பெயரை உண்டாக்குகிறது. இதைத் தடுக்க வேண்டிய கடமை இந்தக் கழகத் தலைவருக்கு இருக்கிறது என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தக் கழகத்தில் வேலை செய்பவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. விளக்கு மரத்தில் வேலை செய்பவர்கள் திடீரென அதிர்ச்சி அடைந்து விழுந்து விடுகிறார்கள். அவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சூபர்வைசர் உத்தியோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட தகுதியுள்ள படிப்புவேண்டும். அந்த உத்தியோகத்திற்குக் கீழே இருப்பவர்களில் பலர் அந்தப் படிப்புப் படித்திருந்தாலும் அந்த உத்தியோகத்திற்கு நியமிக்கப்படவில்லை. இவர்களுக்கு சூபர்வைசர் உத்தியோகம் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டும்.

இந்தக் கழகத்தில் போதிய சம்பளம் இல்லாதவர்களுக்கு அதிகப்படியாக சம்பளம் கொடுத்தாகிலும் தகாத பிரசார வேலைகளைத் தடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். தகாத வேலைகளை செய்பவர்களை இந்த ஸ்தாபனத்திலிருந்து நீக்க வேண்டியது மேல் இடத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சார கழகத் தொழிலாளர்கள் பலர் வீடின்றிக் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் தர வேண்டும். இவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை அமைத்தால் தான் இவர்களிடமிருந்து கண்டிப்பான முறையில் வேலை வாங்க முடியும்.

இந்த போர்டு நல்ல காரியங்களை நன்றாகச் செய்வதால் இதைப் பாராட்டுகிறேன். இதில் உள்ள சில குறைகளை நீக்க வேண்டியது மிகவும் அவசியம். குறைகளை நீக்குவது கஷ்டம் தான். ஆனால் கஷ்டம் என்பதனால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கக்கூடாது. கண்காணிப்பு இருந்தால், குற்றம் செய்பவர்களுக்கு பயம் ஏற்படும்.

விவசாய உற்பத்திக்கு உதவும் முறையில் மின்சார உற்பத்தியை அதிகரிப்பது நல்லது. சர்க்காருக்கு விவசாயிகள் உதவி தேவையாக இருக்கும்போது, விவசாயிகளாகிய நாங்கள் சர்க்காருக்கு எங்களாலான உதவியைச் செய்வோம்.

அதற்காக நாளுக்கு நாள் சார்ஜ் அதிகப்படுத்தி வசூல் பண்ணுவது இருக்கக்கூடாது என்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. சர்க்காருக்கு பணம் தேவையாக இருக்குமானால், முடிந்த அளவுக்கு கஷ்டப்பட்டு எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு சர்க்காருக்கு கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள் விவசாயிகள். கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அந்த முறையில் வேண்டிய பணத்தை விவசாயிகளிடம் வாங்கி, சொல்ப வட்டி கொடுத்துக் கொண்டு வந்தாலும் பரவாயில்லை. நாளுக்கு நாள் ஒரு திட்டத்தைப் போடுவதால் அவர்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. அந்தக் குழப்பங்கள் வராத முறையில் விவசாயிகள் எந்த ஆபீசுக்குச் சென்றாலும், மரியாதை கொடுத்து உட்காரும்படி சொல்லி இதைச் செய்ய வேண்டும். அதை எல்லாம் செய்தால் விவசாயிகள் அவர்களை தெய்வமாகவே கும்பிடுவார்கள், வேறொன்றும் தேவையில்லை. இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு வணக்கத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

4-40 p.m. திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சாரக் கழகத்தின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கான நல்வாய்ப்பைக் கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மின்சாரக் கழகம் ஆற்றுகிற பல்வேறு பணிகளைப் பலரும் பாராட்டுவார்கள் என்பது, இதுவரை ஆற்றியுள்ள பணிகளைப் பொதுப்படையாக நோக்குகிறபோது, எவரும் ஏற்றுக் கொள்கிற ஓர் உண்மையாகும். குறிப்பாக ஏறத்தாழ 12 யூனிட்டுகள் அளவு சராசரி ஒவ்வொருவருக்கும் கிடைக்க கூடியதாக இருந்தது, 120 ஆக உயர்ந்திருக்கிறது என்பதும், பல்வேறு இடங்களில் மின்சார உறபத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதும், அதற்கான முதலீடு பெருகியிருக்கிறது என்பதும், இவையெல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது மகிழ்ச்சியளிப்பன. அப்படிப்பட்ட பெரிய கடமையைத் தொடர்ந்து, அதிலேயும் திறம்பட, நிறைவேற்றி வருகிற மின்சாரக் கழகத்தை, எதிர்க் கட்சியினராக இருந்தாலும், நாங்களும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை நான் உணருகிறேன். ஆனால் இப்படியெல்லாம் மிகச் சிறந்த வகையில் பணியாற்றுகிற காரணத்தால், அதிக மின் உற்பத்தி செய்கிற காரணத்தால், மின்சாரத்தை பயன்படுத்துகிறவர்களுக்குக் குறையே ஏற்படாமல் இருக்கிறதா என்றால், பல்வேறு வகையான குறை ஏற்படவும் வழி இருக்கிறது என்பதை நினைவூட்டுவது மிக, மிக அவசியமாகும். உதாரணமாக, திருமணத்திற்கு ஏராளமானவர்கள் வருகிறார்கள் என்ற அடிப்படையில்

அதிக அளவில் உணவு தயாரித்து வைப்பது என்பது முக்கியமான கடமையாகும். ஆனால் அதைவிடச் சிறந்த கடமை திருமணத்துக்கு வருகிறவர்களின் தரம், நிலை அறிந்து, அவர்களை எல்லாம் உணவு கொள்ளச் செய்வதாகும். அவர்களை உண்ணச் செய்கிற இடத்தில் தவறு ஏற்பட்டாலுங்கூட, பரிமாறுதல் குற்றம் ஏற்பட்டாலுங்கூட, திருமணத்தை நடத்துகிறவர்களுடைய குற்றமாகத்தான் பேசப்படுவது வழக்கம். பரிமாறுகிறவர்களோடு அந்தக் குற்றம் போவதில்லை. திருமணம் நடத்துகிறவன் இவ்வளவு லட்சணமாக நடத்துகிறான் என்று தான் சொல்லுவார்கள். அதனாலே, தன்னைக் குறை சொல்லிவிட்டார்களே என்று திருமணம் நடத்துகிறவன் வருத்தப்படுவதில் பலன் இல்லை. எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தியாகியாக விளங்குகிற நண்பர் இராமசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், இந்த இலாகாவின் தலைமைப் பொறுப்பிலே உள்ளவர்கள் நல்ல உள்ளத் தூய்மையோடு பணியாற்றினாலும், அதன் அடிமட்டத்தில் பல்வேறு இடங்களில் புரையோடுகிற நிலைமையும் குறைபாடுகள் வளர்வதற்கான சூழ்நிலையும் இருப்பது நாடறிந்த உண்மையாகும். மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட, அது வினியோகிக்கப்படுகிற ஒவ்வொரு கட்டத்திலேயும், அதைப் பெறுகிறவர்கள் நிலையிலிருந்து பார்க்கும்போது. குறை ஏற்படாமல் தடுக்கப்பட்வில்லை. அதற்கான வழிவகையைக் காணவேண்டுமென்ற கருத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புவது, குறைபாடுகளைப் பற்றிச் சொல்லுகிறபோது, அந்தக் குறைபாடுகள் ஏதோ மின்சாரக் கழகத்தின் தலைவர் மீதும், பொறுப்பிலே இருக்கிறவர்கள் மீதும் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள் என்று எண்ணி, அவர்கள் கூட மிகவும் வருத்தப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள் என்ற செய்தியை நான் கேள்விப்படுகிறேன். அவர்கள் அமைச்சர்களைப் பார்த்தாவது தைரியமாக இருக்க வேண்டும். குறைபாடுகள் சொல்லப்படும்போது, அமைச்சர்கள் நாங்கள் மேற்பார்வையிடுகிறோமே தவிர, எவ்வளவோ காரியங்கள் எப்படி எப்படியோ நடக்கின்றன என்று தைரியமாக இருக்கிறார்கள். சிலர் துணிச்சலாக, 'இதை எல்லாம் கூடக் குறை என்று சொல்லுகிறீர்களே' என்று கூடக் கேட்கிறார்கள். சொல்லப்படுகிற குறைபாடுகள் எல்லாம் பதவியில் உள்ளவர்களை எண்ணித்தான் சொல்லப்படுகிறது என்று எண்ணக் கூடாது என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். காரணம் மின்சாரக் கழகத்தின் தலைவராக விளங்குகிறவர், ஏற்கெனவே அந்தத் துறையின் தலைமைப் பொறியாளராக விளங்கிய காலத்திலேயே, அவர் ஆற்றிய பணியைப் பற்றி, அவரால் நிறைவேற்றப்பட்ட திட்டத்தைப் பற்றி, அவருடைய நல்ல தொண்டு உணர்ச்சியைப் பற்றி, நான் அறிந்திருக்கிற காரணத்தால், குற்றம் குறைகள் பேசப்படுகிற நேரத்தில், அப்படிப்பட்ட தகுதியுள்ளவர்களுக்கு இழுக்குத் தேடுவதற்காகப் பேசப்படுகிறது என்ற எண்ணத்திற்கு இடமில்லை என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட மின்சாரக் கழகம் மின்சார உற்பத்தியைப் பெருக்கி வருகிறது என்ற ஒரே காரணத்துக்காக அதைப் பாராட்டிக் கொண்டு இருந்து விட்டால், குறைகளைப் பற்றி யார் தான் எண்ணிப் பார்ப்பது? யார் தான் பரிசீலிப்பது என்பதையும் அந்தப் பொறுப்பிலே உள்ளவர்கள் எண்ணுதல் வேண்டும். நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை, மின்சாரக் கழகத்தை நன்றாகப் பால் கறக்கிற மாடாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இது எவ்வளவு கறவை தரும் என்று மட்டுமே எண்ணுகிறார்கள். மாடு இளைத்தால் கூட கவலைப்பட மாட்டார்கள், பால் கிடைத்தால் போதும். அதைப் போல் 'மின்சாரக் கழகத்துக்கு இடப்பட்ட மூலதனத்தில் இருந்து இவ்வளவு கோடி ரூபாய் வட்டியாகப் பெற முடிகிறது' என்பது அடிப்படையாகக் கருதப்படுகிறதே தவிர, அந்த வட்டி விகிதத்தைக் குறைத்துப் பெற எண்ணுவதில்லை. மூலதனம் ஏற்கெனவே போடப்பட்ட காரணத்தால், அரசாங்கம் மின்சார இலாகாவைப் பெற்று இருந்த காரணத்தால், வட்டியைப் பெறுவதை ஒரு வாய்ப்பு—எனக் கருதி அதைத் தாராளமாகப் பெற்று வருகிறது. அடுத்து, மின்சாரக் கழக ஊழியர்கள் பெற வேண்டிய உரிமைகளைப் பற்றி அந்த ஊழியர்களை எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்வது என்பதைப்பற்றி, குறைகளை நீக்கி செய்ய வேண்டிய முறையைப் பற்றி, அரசாங்கமும் அவர்களிடம் ஓரளவு பாரபட்சமாக நடந்து வருகிறது என்று அறிகிறேன். மின்சாரக் கழகமும், மின்சார உற்பத்தி பெருக்கம் முதலீடு இவற்றையே கருதுகிற காரணத்தால், ஊழியர்கள் குறைகளைப் போக்குவதில் எந்தவித அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அறிகிறேன். அப்படி நான் குறிப்பிடுவது, அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்ட கருத்துக்கு உண்மையில் மாறுபட்ட கருத்து தான். அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் "மின்சார கழகத்திற்கும் ஊழியர்கட்குமிடையே நல்லுறவு உள்ளது. "on the establishment side, there has been cordial relationship between the Board and its employees" என்று. அந்த நல்ல உறவு இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நல்ல உறவு இன்னும் முற்றும் கெட்டுப் போகவில்லை என்று ஒப்புக்கொள்கிறேன். நல்ல உறவு கொஞ்சம் கொஞ்சமாக சீர்கேடு அடைந்து வருகிறது என்பதை நான் நினைவூட்டாமல் இருக்க முடியாது. மேலும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்; "It has now been settled that the service conditions of the Board's employees will be on a par with the State Government employees." உண்மையாகவே அந்த முடிவுக்கு அமைச்சர் அவர்கள் வந்திருக்கக்கூடும். மின்சாரக் கழக ஊழியர்களை எல்லாம் அரசாங்க ஊழியர்களின் நிலைமைக்கு ஒப்ப அதே நிலையில் வைத்து நடத்துவது என்ற முடிவுக்கு வந்திருக்கக்கூடும். ஆனால் "செட்டில்டு" என்று சொல்லுகிறபோது, 'என் மனதுக்கு அப்படி உறுதிப்படுத்திக் கொண்டே' என்று அமைச்சர் சொல்வதாகப் பொருளே தவிர, மின்சாரக் கழகத் தொழிற் சங்கங்களும் அந்த முடிவை எடுத்துத் தீர வேண்டும் என்பதில்லை. அதே போல்

ஊழியர்களும் அந்த முடிவை இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஊழியர்களை எப்படி நடத்துவது என்பதைப் பற்றி முக்கூட்டு மாநாடு, அண்மையில் கூட நடைபெற்றிருக்கிறது. அந்த முக்கூட்டு மாநாட்டிலே கூட மின்சாரக் கழகத் தலைவர், அமைச்சர் அவர்கள், ஊழியர்கள் சார்பாக வந்த சங்கப் பிரதிநிதிகள் எல்லாம் கூடிய நேரத்தில், 'எங்களை எல்லாம் நீங்கள் அரசாங்க ஊழியர்களாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுங்கள்; அதற்குப் பின்னால் எல்லாச் சலுகையும் கிடைக்க வழி செய்கிறேன்' என்று அமைச்சரே ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களாக நடத்துங்கள் என்று கேட்டால், தங்களுக்குக் கிடைக்கக் கூடிய வேறு பல நலன்கள் சீர்கெட்டு விடும் என்ற காரணத்தால், தொழிலாளர்கள் அப்படிக் கேட்டுக்கொள்ளாத நிலையில் அந்தப் பேச்சும் முறிவு அடைந்திருக்கிறது. இந்த நோத்தில் "It has now been settled that the service conditions of the Board's employees will be on a par with the State Government employees" என்று அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திற்குத் தெரிவிக்கிற கருத்தானது, நாங்கள் அவர்களை அப்படித்தான் நடத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம் என்று தெரிவிப்பதாகத்தான் கருதுகிறேன். அப்படிப்பட்ட முடிவுக்கு அமைச்சர் அவர்கள் வந்திருப்பார்களானால், அந்த முடிவு பற்றி நீண்ட நாளாக விவாதம் இருக்கிற நோத்தில், அப்படி ஒரு முடிவு எடுத்திருந்தாலுங் கூட அந்த முடிவுக்கு ஏற்பவாவது, அந்த ஊழியர்களை நடத்துகிறார்களா என்றால், இல்லை. மின்சாரக் கழக ஊழியர்கள் பெற வேண்டிய வேறு பல நன்மைகளை, போனஸ், விலைவாசி ஏற்றத்துக்கு ஈடாகத் தரவேண்டிய ஈட்டுத் தொகை ஆகியவற்றை எல்லாம் பெற உரிமையுள்ள தொழிலாளர் என்று கொள்ளாவிட்டாலும், அரசாங்க ஊழியர் என்ற நிலையிலாவது எல்லாத் துறையிலும் அவர்களுடன் சமமாக வைத்திருக்கிறார்களா, அப்படி சமமாக வைப்பதற்கு மின்சாரக் கழகம் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்ற முறையில் கேட்க விரும்புகிறேன். உண்மையாக அந்த ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாகவும் இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடத்தப்படவில்லை என்பதாகும். மேலும் அமைச்சர் அவர்கள் உரையில் காணப்படுகிற சில கருத்துக்களின்படியே, இது பொதுத் துறையில் இருக்கிற ஒரு நிறுவனமாகும் என்பது ஏற்கப்பட்டிருக்கிறது. எனவே தொழில் நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள் என்னும் முறையில் பல கருத்துக்கள் இதற்கு முன்னால் ஏற்கப்பட்டிருக்கின்றன. பல முடிவுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த முடிவுகளின்படி அவர்கள் பெறவேண்டிய பலனைப் பெறவில்லை. அதற்கு நியாயமான வழிகளில் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க ஊழியராக நடத்துவது என்று தீர்மானித்து விட்டோம் என்று சொல்கிற அமைச்சர் அவர்கள் அரசாங்க ஊழியர்களைப்போல அவர்களும் பல்வேறு கட்டங்களிலே தங்கள் உரிமையைப் பெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால் பெறவில்லை என்பது விளங்கும். அந்த இலாகாவில் பணியாற்றுகிற தொடக்கநிலை ஊழியர்களாகக் கருதப்படத்தக்க எல்.டி.சி. எழுத்தர்கள், கிளார்க்குகள் சில ஆண்டுகள் பணி

[திரு. க. அன்பழகன்] [3rd August 1965

யாற்றிய பிறகு யு.டி.சி.-யாக உயர்வு பெறுவது என்பது அரசாங்கத்தில் மேற்கொள்ளும்முறை. வேறு தனிப்பட்ட யு.டி.சி.-க்களை வெளியில் இருந்து நியமிப்பது என்பது அரசாங்கத்தில் இல்லாத ஒன்று. மின்சாரத் துறையில் வெளியிலிருந்து நேரடியாக யு.டி.சி.-களை அஸிஸ்டெண்டுகளை நியமிக்கிறார்கள். அவர்களுக்குத் தகுதியிருக்கலாம். அதைக் குறைவாகக் கூறவில்லை. தனிப்பட்டவர்கள் உள்ளே வந்தால் அங்கேயே எல்.டி.சி.-யாக எட்டு, பத்து ஆண்டுகள் பணியாற்றி பயிற்சி பெற்றவர்கள் மேல் நிலைக்கு வரமுடியாமல் தடை
4-50 p.m. யேற்படுகிறது. எல்.டி.சி. ஆகப் பணியாற்றி யு.டி.சி. ஆக வந்த பலர் அதற்கு மேம்பட்ட நிலையில் சூபர்வைசர் போன்ற பதவி உயர்வு பெற முடிகிறதா என்றால் இல்லை. யு.டி.சி. ஆக இருந்த அந்த பணி (சர்வீஸ்) மட்டும்தான் கணக்கில் எற்றுக்கொள்ளப் படுகிறதே தவிர எல்.டி.சி. ஆக இருந்து பணி செய்த காலம் அதற்கான முக்கியத்துவம் அவர்களுக்கு மேல் நிலை பதவி உயர்வுக்கு கருதப்படாமல், அந்த சர்வீஸ் விடப்படுகிற காரணத்தால் பலர் பாதிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, அவர்கட்கு அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கிற சலுகையும் கிடைப்பதில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு வேண்டிய இலாக்கா டெஸ்டுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு ஆண்டு சம்பள உயர்வு அளிப்பது அரசாங்கத்தில் வழக்கமாக இருக்கிறது. அதே நேரத்தில் மின்சார கழகத்தில் அந்த ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை. சில தேர்வுகளை இலவசமாக எழுதி அவ்வத்துறை தேர்வுகளில் வெற்றி பெறலாம் என்று அரசாங்கத்தில் இருக்கிறது. அந்த வாய்ப்பும் அவர்களுக்கு கிடையாது. புக்-கீப்பிங் தேர்ச்சி பெற்றிருந்தால் தான் அவர்கள் எல்.டி.சி. நிலையில் இருந்து பிறகு யு.டி.சி.-யாக உயர்வு பெற முடியும் என்ற நிலை இன்றைய தினம் மின்சார கழகத்தில் வற்புறுத்தப் படுகிறது. அரசாங்கத்தில் அப்படியில்லை மேல்நிலைக்கு வந்த பிறகு அத்தேர்வில் தேர்ச்சி பெறலாம் என்று அனுமதி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களைப் போல அவர்கள் நடத்தப்படவில்லை. 'அரசாங்க ஊழியர்களாக நடத்துவது என்று தீர்மானித்துவிட்டோம்' என்று அமைச்சர் அவர்கள் சொல்வது, 'இண்டஸ்டிரியல் டிரிப்யூனல் சட்டப்படி தங்களை நடத்த வேண்டுமென்று' வேறு விதமான உரிமைகள் கேட்கிறபோது, 'இவர்களையும்தான் அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறோமே' என்றும் 'உரிமைகள் எதற்காக' என்றும் வாதிடத்தான் பயன்படுகிறதே தவிர வேறு அல்ல. உண்மையில் அவர்கள் அரசாங்க ஊழியர்களாக நடத்தப்படவில்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த ஊழியர்கள் அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளுக்காக ஆறு அல்லது ஏழு ஆண்டு காலமாகத் திரும்பத் திரும்ப வேண்டுகோள்கள் விடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்பட வேண்டிய விலைவாசி ஏற்றத்தையொட்டிய ஈட்டுத் தொகை நிச்சயமாகத் தீர்மானிக்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கும் விகிதாசார உயர்வை அவர்களுக்கு அளித்துவிட்டு அந்த அளவு உயர்த்தியிருப்பதால்

3rd August 1965] [திரு. க. அன்பழகன்]

வேறு உயர்வு தேவையில்லை என்று மறுத்துவிட்டார்கள். போனஸ் தேவையென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் மறுத்திருக்கிறார்கள். அவர்களால் கலந்து பேசியும் தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டு பிறகு அது அட்ஜுடிகேஷனுக்கு விடப்படவேண்டுமென்று கேட்டு, அதுவும் மறுக்கப்பட்டு பிறகு உயர் நீதி மன்றத்திற்கு வழக்காடச் சென்று அதன் காரணமாக 1960-ம் ஆண்டிலே ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் அந்தத் தீர்ப்பின் கருத்தைப் படிக்கிறேன்.

"The order of the Government, dated 11th June 1960, however *bona fide* it may be, with the best of intentions to bring about concord and amity between the workers and the Board, appears to have brought about a foreclosure of the mind of the Government in this matter and it may not be improper to construe it as having afforded sufficient ground, if not provocation, to the Petitioners to file this Writ Petition. I am of opinion that in the circumstances of this case, the insistence of a demand and refusal would be an idle formality."

என்று நீதிபதியின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்களுடைய வேண்டுகோள்களை அரசாங்கம் மறுத்து விட்டது. அரசாங்கத்தின் ஆலோசனையைப் பெற்று மின்சாரக் கழகமும் மறுத்துவிட்டது. அரசாங்கத்தின் செயல் முறையற்றது என்ற கருத்து உயர்நீதி மன்ற நீதிபதியால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் மறுபடியும் அரசாங்கம் மற்றொரு ஆணை பிறப்பித்து வேறு சில காரணங்களைக் காட்டி மறுபடியும் அட்ஜுடிகேஷனுக்கு விடவேண்டியதில்லை என்று தெரிவித்து, அதற்கும் தொழிற் சங்கம் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று அவர்கள் கூறிய தீர்ப்பிலும் திட்டவட்டமாக, அரசாங்கம் மறுத்திருப்பது முறையானதாகத் தெரியவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் மறுப்பு நியாயமில்லை என்ற கருத்தும், தொழிலாளர்கள் மேலும் அப்பீல் செய்வதும் முறையானது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. 1964 ஆகஸ்டில் இத் தீர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதனைப் படித்துக்காட்டுகிறேன்,

"Passing here for a while, I must confess my inability to understand how in the context of an industrial dispute, where certain increased allowance were demanded, the Government can take shelter behind the employer's plea that conceding the demand would mean a heavier salary bill. If a private employer were to plead that if any enhancement of the salary or other allowances of the employees were to be made, it would cut into his profits, would the Government be justified in accepting that and holding that the dispute should not be referred to adjudication ?".

தீர்ப்பில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது: அதுமட்டுமல்ல. அரசாங்கம் தந்திருக்கிற கருத்து பற்றி சொல்லும்போது,

• • • •

[திரு. க. அன்பழகன்] [3rd August 1965

The Government Order in this regard was :

"There is no available surplus out of which any bonus can be paid for 1957–58. As regards the other years, the balance sheets are not yet ready and the Union may raise the demand after the balance sheets are ready."

[அரசாங்கம் செய்தது பற்றி குறிப்பிட்டிருக்கிருர்கள்]

"It is exceedingly difficult to appreciate the rationale of the Government's Order. Whether bonus is payable and whether it should be paid at the rate of one or more month's pay per year is a matter principally for the examination by the adjudicating authority. Merely because the employer says that he has not prepared his balance sheets on commercial lines and would persumably take several more years within which to complete them, is that a circumstance upon which the Government can refuse adjudication? Several decisions have laid down the principles by which the payment of bonus is governed and it is for the adjudicating authority to determine this question on the basis of those principles. It is not for the Government to say whether there is any available surplus or not. Nor can I agree that the mere plea that the balance sheets are not ready is a sufficient answer for the refusal to refer."
என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. வேண்டுமாளுல் அரசாங்கம் இதன்மேல் அப்பீல் செய்திருக்கக் கூடும். அதனுடைய விளைவு என்னவென்று நான் கவலைப்பட விரும்பவில்லை. உயர் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதற்காக நான் பரிதாபப்படுகிறேன். உயர்நீதி மன்றக் கருத்துக்கள் தங்களுக்குச் சாதகமாக இல்லாவிட்டால் அதை மீறி மேலும் மேலும் அப்பீல் செய்ய வேண்டுமென்று கருதுவதும் எப்படியாவது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமல் தடுத்து நிறுத்துவதும் அரசாங்கத்தினுடைய நோக்கமாக இருக்குமாளுல் அரசாங்கத்தின் திறமையை உணர்கிறேன். ஆளுல் அதற்குள்ள நல்ல எண்ணத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறேன். தொழிலாளர்களிடத்தில் இப்படிச் செய்வது முறையல்ல என்று சொல்ல விரும்புகிறேன். தொழில் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து அவர்களுக்காக வாதாடியவர்கள். இன்றைக்கு இலாகா தொடர்பு இருக்கிற காரணத்திற்காக, தொழிலாளர்களுக்கு தொழில் நீதி பேசியவர்கள் இன்றைய அரசாங்கத்தில் இருப்பதால் ராஜ நீதி பேசுகிருர்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமையை மாற்றும் வரையில், உண்மையிலேயே அவர்கள் அரசாங்க ஊழியர்களாகத் தான் நடத்தப்பட வேண்டுமென்ருல், அதற்கு அவர்களுடைய சம்மதத்தை அரசாங்கம் பெற்ருக வேண்டும். 'அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றிருக்கிரேும்' என்றும் 'அவர்களிடமிருந்து கையெழுத்துப் பெற்றிருக்கிரேும்' என்றும் சர்க்கார் ஒருவேளை சொல்லக்கூடும். அப்படி சர்க்கார் கூறிளுல் அவர்களுடைய சம்மதத்தை சர்க்கார் எப்படி பெற்ருர்கள் என்பதை நான்

3rd August 1965] [திரு. க. அன்பழகன்]

அறிவேன். அது வேறு விஷயம். மின்சாரக் கழகத்தை தொழில் 5-00 p.m.
நிறுவனங்களுக்குச் சமமாக இயங்குவதற்கு சர்க்கார் அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அதை இயக்கும் பணியையும் அரசாங்கம் மேற்கொள்ளுவது சரியல்ல. அதை மேற்பார்வையிடும் பணியுடன் அதை இயக்கும் பணியையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ருல், அதைக் கலைத்துவிட்டு சர்க்கார் இலாகாவாகவே ஆக்க அரசாங்க முன்வரவேண்டும். மின்சாரக் கழகத்திற்கு சர்க்கார் முதுகெலும்பாக இருக்கிறது, அதை சர்க்கார் இயக்க வேண்டியிருக்கிறது என்ருல், சர்க்கார் அதை தங்கள் இலாகாவாக ஆக்க முன்வர வேண்டும்.

* திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேச இருக்கிறோம். 1951-லிருந்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் 1966-ம் வருஷத்துடன் முடியப்போகின்றன. இந்த மூன்று திட்டங்களின் பலன் பற்றி ஆராய்ந்து பார்த்து, அதன்படிதான் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருக்கிறதாக இந்தப் புத்தகத்தில் வரையப்பட்டிருக்கிறது. சர்க்கார் கொடுத்திருக்கும் குறிப்புகள் ஒரு பக்கம் இருக்க, பொது ஜனங்களுக்கு இந்த மூன்று ஐந்தாண்டு திட்டங்கள், பதினைந்து வருஷ சேவை என்ன பலனை அளித்து இருக்கிறது என்று பார்ப்போமானால், பொதுஜனங்கள் அதற்கு எந்த மதிப்பும் கொடுப்பதாக நமக்குத் தெரியவில்லை. பதினைந்து வருஷமாக, நாட்டின் மேம்பாட்டுக்காகப் போடப்படும் திட்டங்கள் எவ்வளவு தூரம் சாதாரண மனிதனுக்கு உதவியாய் இருந்து இருக்கிறது என்று பார்த்தால், அதிக நன்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஒருக்கால் வருங்காலத்தில், வரப்போகும் பிரஜைகளுக்காக நாம் இப்போது கஷ்டப்பட்டுக்கொண்டு, சரியான உணவுகூட இல்லாமல் வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு இருக்கிறோமா என்று பார்த்தால் அதற்கும் ஒரு வரையறை உண்டு என்றுதான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக ஆரம்பித்த ஒரு ஐந்தாண்டு திட்டமானது, இப்போது 2,000 கோடி ரூபாய்க்கு மேலே போகிறது. அகில இந்தியத் திட்டம், நம்முடைய மாகாணத்திலேயே 750 கோடி ரூபாய்க்கு திட்டம் வரையப்பட்டிருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் வருமானம் நமக்குத் தெரியும். இப்பொழுது 163 கோடி ரூபாயாக இருக்கிறது. இந்த ஐந்தாண்டுகளுக்கு 750 கோடிக்கு திட்டம் இட்டு இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய திட்டத்தில் யார் யாருக்கு அல்லது எந்தெந்த வகைக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பது தனிப் பிரச்னை. அதற்கு முன்பாக, அகில இந்திய ரீதியிலும் சரி, ராஜ்ய ரீதியிலும் சரி, இதிலே பாதித் தொகைக்கு மேலே விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் செலவழிப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் பார்த்தால், மூன்றாவது

திட்டத்தில் விவசாயத்தில் அதிகப் பலன் கிடைக்கவில்லை என்று சர்க்கார் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனக்கும் கிராமத்தில் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. அதற்கு என்ன காரணம் என்று பார்க்கப்போனால், அதற்கும் ஒரு வாக்கியம் உதவியாக இருக்கிறது. ஏற்கெனவே விவசாயத்தில் இருக்கிற நிலங்களிலேயே புதிதாகக் கண்டுபிடித்த முறைகளில், பக்கத்து ராஜ்ய முறைகளையோ, பக்கத்து தேச முறைகளையோ வைத்து, அதிலே நெல் பயிர் உண்டு பண்ணலாம் என்ற நோக்கத்தில் போயிருக்கிறதாகத் தெரிகிறதே தவிர, அதிகப்படி நிலங்கள் ஏருக்கு கொண்டு வரப்பட்டு விளைச்சலை அதிகப்படுத்த முயற்சி எடுத்து, அது பலன் அளிக்காததாக எழுதப்படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், மேல் நாட்டு ரசாயன உரங்கள், நம் உள்நாட்டில் தயாரானாலும்கூட, சரியாக எடுபடவில்லை. அவைகள் சரியாக எடுபட்டாலும் தானிய உற்பத்தி அதிகமாகாது. வெறும் தாள் தான் அதிகம் கிடைக்கும். ஆனால், பூச்சிகளை உண்டுபண்ணும். எப்படி இத்தனை விதமான பூச்சிகள் தானியத்துக்கு திடீரென்று வருகிறது என்பது தெரியவில்லை. ஆதிகாலத்தில் கொஞ்சம் பூச்சிகள் வரும், வேப்பம் பிண்ணாக்கைப் போடுவார்கள். இப்போது உரங்கள் என்று சொல்லி புதுப் புதுப் பெயரில் எவைகளையோ உபயோகப்படுத்துவதால், பூச்சிகள் நிறைய உண்டாகி, பிறகு அதைக் கொல்ல "போலிடால்" போன்ற அயல் நாட்டு மருந்துகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அந்த மருந்தைத் தொட்டாலே மனிதன் இறந்து விடுகிறான். இந்த ரசாயன உரம்தான் பூச்சிகளுக்குக் காரணமா என்று பரிசீலிக்க அரசாங்கத்தார் கடமைப்பட்டிருக்கிறார்கள். இருக்கக்கூடிய நிலங்களில் புது முறைகளினால் கடந்த 15 வருஷங்களில் உற்பத்தியை அதிகப்படுத்த முடியவில்லை என்றால் அதைப் பற்றி நன்கு ஆராய வேண்டியது அவசியமாகும். ஒரு
3-50 p.m சாதாரண மனிதன் ரயிலில் போகும்போது சாகுபடியாகாத நிலங்கள் நாட்டில் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில்தான் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. மீதி ஜில்லாக்களில் சாகுபடியாகாத நிலங்கள் அதிகம் காணப்படுகின்றன. நாட்டில் இந்த நிலங்கள் அதிகமாக இருப்பதால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அவசியமில்லை. (சிரிப்பு) அதிகமான ஜனத்தொகையைக் கொடுத்திருக்கும் கடவுள் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டிய நிலங்களையும் நிறையக் கொடுத்திருக்கிறார்.

கைத்தொழில் துறையில் நம் மாநிலம் மிகவும் முன்னேறியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது குறித்து கனம் கைத்தொழில் அமைச்சர் பெருமை கொள்ளலாம்; நாமும் அவருக்குப் பெருமை அளிக்கலாம். மிகவும் கீழே இருந்த நாம் பல வகையான கைத்தொழில்களில் ஈடுபட்டு முன்னேறியிருக்கிறோம்.

கல்வியை எடுத்துக்கொண்டால், 1½ லட்சம் மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பிற்கு வருகிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் கல்விக்கும் ஆசிரியர்களுக்கும்

போதிய மதிப்புக் கொடுக்கப்படவில்லை. கல்வியினால்தான் நாடு முன்னேறும் என்ற விஷயம் அகில இந்திய ரீதியில் ஏற்படவில்லை. பல திட்டங்களுக்காக மொத்தம் 20,000 கோடி ரூபாய் செலவழிக்கும்போது ஆசிரியர்களுக்கென ½ கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு மேலும் பணம் கொடுக்க வேண்டுமானால் அதற்கு திட்டத்திற்கு வெளியில் வகை செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ஜினியர்கள், விஞ்ஞானிகள், கைத்தொழில் நிபுணர்கள் முதலியவர்கள் சில பேர்கள் உருவாக்கப்பட்டாலும் அவர்கள் ஆசிரியர்களால்தான் உருவாக்கப்படுகிறார்கள், நான்காவது திட்டத்தில் கல்விக்காக 75 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. சென்ற வருடம் கல்விக்காக 39 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செலவில் கட்டிடங்களுக்கான செலவே 15 கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது. பள்ளி கட்டிடங்களுக்கும், ஹாஸ்டல் கட்டிடங்களுக்கும் நிறையப் பணம் செலவழிக்கப்படுகிறது. சர்க்காருக்கு கல்லிலும் சுண்ணாம்பிலும் தான் அதிக நம்பிக்கை இருக்கிறதே தவிர மனிதனிடமும் மனோ சக்தியிலும் அதிக நம்பிக்கை இல்லை என்று நான் அடிக்கடி சொல்லுவதுண்டு. இந்தியா பூராவிலுமாக 20 லட்சம் ஆசிரியர்கள் இருப்பார்கள். பாஷை வேற்றுமையோ மாநில வேற்றுமையோ பார்க்காமல் இவர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் கொடுப்பது என்றால், அதற்கு 120 கோடி ரூபாய்தான் வேண்டும். கல்வித் துறையில் ஆரம்ப ஆசிரியர்கள்தான் மிகவும் முக்கியமானவர்கள். தொழிலாளர்களும் சமூக ஊழியர்களும் மற்ற எல்லோரும் இவர்களால்தான் உருவாக்கப்பட வேண்டும். ஆரம்ப ஆசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் அகில இந்திய ரீதியில் ஆளுக்கு மாதம் 50 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால், திட்டத்தில் 120 கோடி ரூபாய்தான் அதிகமாகச் செலவாகும். 2,000 கோடி ரூபாய் செலவழிப்பவர்களுக்கு இந்தத் தொகை பெரிதா?

அடுத்தபடியாக, எல்லாக் கட்டங்களிலும் அதிகமான மாணவர்களுக்குக் கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கல்லூரிகளிலும், எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பிலும் அதிகமான மாணவர்களைக் கொண்டு வந்துவிடப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்குச் செல்லும் 80 லட்சம் குழந்தைகளில் வருஷத்தில் 7 லட்சம் பேராவது எஸ்.எஸ்.எல்.ஸி.க்குப் போக வேண்டும். இப்போது அத்தனை பேர் போவதில்லை. 15 சதவிகிதம் பேர்களே பள்ளிகளுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு மதிய உணவு கொடுத்தாலும், பள்ளிக்கு வர வேண்டிய குழந்தைகளில் 100 சதவிகிதத்தினரும் வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. காரணம், சமூகத்தின் போக்கு இப்போது அப்படி இருக்கிறது. பல குழந்தைகள் ஐந்து வகுப்புகள் படித்தவுடன் பள்ளியை விட்டுவிட்டுப் போகின்றனர். அது பற்றிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை. பக்கிங்ஹாம் கால்வாய்க்கு அருகில் குடியிருப்பவர்களைப் பார்க்கும்போது என் மனம் மிகவும் வேதனையடைகிறது. அங்குள்ள குடிசைகளில் இருப்பவர்களுக்கு திட்டத்தில் என்ன செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இவர்களுக்காக ஒரு 'ஸ்கீம்' இருக்கிறது.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: போதிய ஹரிஜனங்கள் கவனிக்கப்படவில்லை. ஹரிஜனங்களில் ஒரு லட்சம் பேர் தான் பயனடைய முடியும், Fringe of the Problem-ஐத் தான் தொட முடிகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு விடுகள் கட்டி காலியாக இருக்கின்றனவா? நரிக்குறவர்களுக்காக விடுகள் கட்டினோம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விடுகள் கட்டினோம். அந்த விடுகளுக்கு இவர்கள் போகாததால், அவைகளை என்.ஜி.ஓ-க்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: நம் சகோதர சகோதரிகளாகிய இவர்கள் ஆபாசமான இடங்களில் குடியிருப்பதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு மட்டுமே 'ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீம்' வந்திருக்கிறது, மற்றவர்களுக்கு இந்தத் திட்டம் வரவில்லை என்று, கவை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்திலிருந்து தெரிகிறது. இந்த ஏழை மக்களுக்கு பாலிடெக்னிக்கில் கல்வி அளிக்கத் திட்டம் இருக்கிறதா? இவர்களை விவசாயத் திட்ட வேலைகளில் சேர்த்துக் கொள்கிறோமா? இவர்களுடைய நலனுக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? சென்னையில் இவர்கள் என்ன பண்ணுகிறார்கள்? இவர்கள் எத்தனையோ பேர் பள்ளிக்குப் போகாமல் கோலி ஆடுகிறார்கள். இவர்கள் பள்ளிக்கும் போகாமல் ரிக்ஷாவும் இழுக்காமல் தெருவைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு man power வீணாகப் போகிறதே! எவ்வளவு பேர் வேலை இல்லாமல் சுற்றுகிறார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா? பிச்சைக்காரர்களை ஜெயிலில் அடைப்போம் என்று சொல்லும் சர்க்கார் அழுக்கு வஸ்திரத்தைக் கட்டிக் கொண்டு ஊரைச் சுற்றும் இவர்களுடைய
4 00 p.m. நலனுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது? புள்ளிவிபரம் இல்லாத குறையை எடுத்துச் சொல்லத்தான் இவற்றைக் குறிப்பிட்டேன். ஐந்தாம் கிளாஸ் படித்துவிட்டு பள்ளியை விடுகிறவர்கள் என்பது அந்தக் காலத்திலிருந்து இருக்கிறது. இதற்குத்தான் தேசப்பிதா காந்தியடிகள் பேசிக் எஜுகேஷன் என்று சொல்லக்கூடிய அடிப்படைக் கல்வியை கொண்டுவரவேண்டுமென்றார். அப்படி ஐந்து ஆறு வயது முதல் பதினாறு வயதுக் குழந்தைகளுக்கு அது அளிக்கப்பட்டிருக்கவேண்டும். இப்போது உள்ளதைப்போல மாண்டிசோரி அம்மையார் முறை போன்ற பள்ளிகளைச் சொல்லவில்லை, நவநாகரிக பள்ளிகளைச் சொல்லவில்லை. பேசிக் எஜுகேஷன்-ஐ நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைக் கற்றுக்கொடுத்திருந்தால் பிறரோடு ஒத்துழைக்கும் குணம், பகிர்ந்து உண்ணவேண்டுமென்ற உணர்வு, ஒற்றுமை மனம், பிறர் வந்தால் வாருங்கள் என்று மரியாதையோடு அழைக்கும் தன்மை இவையெல்லாம் வரக்கூடிய வகையில் அந்த அடிப்படைக் கல்வி வகை செய்யும். ஆனால் நாம் அடிப்படைக் கல்வியை விவசாயத்

திற்கும், நூல் நூற்பதற்கும் மட்டும்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். நூற்பு என்றால் பஞ்சு மூக்கில் போய்விடுகிறது என்கிறார்கள், சாட்டை இல்லை என்கிறார்கள். இப்படியெல்லாம் அந்தத் திட்டம் நல்ல முறையில் ஆரம்பக்கல்வியில் செய்யப்படவில்லை. நம் நாடு விவசாய நாடாக இருப்பதால் அதில் கல்வி அளிக்கப்படவேண்டும். அதையும் கவனிக்கும் முறையில் இரண்டரை மணி நேரம் கல்வி போதிக்கும் திட்டம் இருக்கவேண்டும். நம் தமிழ் நாடு மிகவும் பண்பாட்டுடன் வாழ்ந்த நாடுதான். தமிழ்நாட்டுக் குழந்தைகள் சிறந்த அறிவோடுதான் விளங்கின. இப்போது மாண்டிசோரி முறையில் சொல்வதுபோல கலர் பொம்மைகளை வைத்து பழக்கவில்லை அப்போது. இப்போது மூன்று வயதானாலும் சினிமா பாத்து விட்டு அதில் வருவதை நன்றாகப் பாடுகிற குழந்தைகளைப் பார்க்கிறோம். இக்குழந்தைகளுக்கு புலன் அடக்கம் வேண்டியிருக்கிறது. புலன் வளர்ச்சி பண்பாட்டினால் வந்தது. சிறிய குழந்தைகளுக்கு சமூகத்தில் எப்படி பழகுவது, தேசாபிமானம் எப்படி வளர்க்கப்படுவது, நம்முடைய தேசம் இது, நாம் எல்லாம் ஒன்று என்ற எண்ணமெல்லாம் எப்படி வளருவது? அவையெல்லாம் அடிப்படைக் கல்வியால் வரும், வெறும் கணக்குகளையும் மற்றவைகளையும் படிப்பதால் இவை வந்துவிடாது. இவற்றை வைத்துக்கொண்டு நாம் பழைய முறைகளை மறந்துவிடுகிறோம். அடிப்படைக் கல்வியால் நாட்டுப் பற்று வளர்க்கப்பட்டால்தான் பதினொரு வயது வரையுள்ள குழந்தைகள் எங்குபோனாலும், எந்தத் தொழில் செய்தாலும், வீட்டிற்கும், சமூகத்திற்கும் ஹானி ஏற்படாமல் தேசாபிமானத்தோடு கருணை உள்ளத்தோடு, தியாக சிந்தையோடு இருப்பார்கள். கல்வித்துறையில் அதற்கான வகை இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறதா? content of education முக்கியம். நம்முடைய கல்வியால் நமக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய நன்மை என்ன என்று சொல்லமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம். அது எப்படி நன்மை பயக்கும்படி செய்யவேண்டுமென்று யோசிக்கவேண்டும். கல்விக்காக 750 கோடி செலவழிக்கிறோம். நம் தமிழ் நாட்டுக்கு மட்டும் 75 கோடி செலவழிக்கிறோம். அதோடு அவ்வப்போது வருஷா வருஷம் 38 கோடி வேறு இருக்கிறது. ஐந்து வருஷத்திற்கும் 750 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். கல்விக்காக 75 கோடி ரூபாய் இருக்கிறது. அதை எதற்காக செலவழிக்கிறோம்? குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர்களைக் கேட்டால் பள்ளிக்கு அனுப்பப்படும் தங்கள் பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக வருவார்கள் என்ற நம்பிக்கையோடு அனுப்புவதாக சொல்வார்கள். அவர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள். அதோடு அவர்கள் தங்கள் பிள்ளைகள் சம்பாதிப்பதற்காக படிக்கவைப்பதாகத்தான் செல்வார்கள். பள்ளிக்கூடம் போனால் அங்கே ஒழுக்க முறைகள் பாடங்களில் போதிக்கப்படவேண்டும். அப்படியில்லாததால் சமூகமே ஒழுங்கில்லாமல் போகக்கூடிய நிலை ஏற்படுகிறது. வெள்ளையர்கள் தூவிவிட்ட விஷ விதை இன்றைய பாடத்திட்டத்தில் இன்றும் இருக்கிறது. அது வளர்ந்து அதிலிருந்து வீசுகின்ற விஷக்காற்றைத் தான் நாம் அடிக்கடி பார்க்கிறோம். வடநாடு தென்னாடு என்றும்

[திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி] [5th August 1965

இனம் என்றும் இப்படிப்பட்ட விஷயங்கள் சரித்திர பாடங்களில் நிறைய இருப்பதுதான் சிறிய குழந்தைகள் மனம் கெட்டுப் போவதற்குக் காரணம். சுதந்திரம் வந்தபிறகு பதினேட்டு வருஷம் ஆகியும் அந்த சரித்திர புத்தகத்தை மாற்றவில்லை. சமூக தீங்கு விளைவிக்கும் கணக்குப் புத்தகங்கள் மாறியதாகத் தெரியவில்லை. பாலின் ஜலமும் உயர்ந்தரகக் காப்பிக் கொட்டையில் மட்ட ரகக் காப்பிக் கொட்டையை கலப்பதும் கணக்கு புத்தகத்தில் இருக்கின்றன. ஒழுக்கத்தை வளர்க்காத கல்வி, கல்வி இல்லை. இதை உணரவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை கூட்டவேண்டுமென்பது ஒன்று, பாட அமைப்பு மாறவேண்டுமென்பது ஒன்று. இதற்குத்தான் காலஞ்சென்ற கோகலே அவர்கள் தேசியக் கல்வி வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு பிள்ளையும் தன் தேசத்தின் பெருமையையும் பண்பாட்டையும் காப்பாற்றக் கூடிய அளவுக்கு, பெரியவர்கள் எந்தவகையில் வாழ்ந்து பிற நாடுகள் அவர்களைப் பார்த்து ஆச்சரியப்படத்தக்க நிலையில் இருந்தார்கள் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள உதவுவதுதான் தேசியக் கல்வி. இப்போதெல்லாம் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று தனி வகுப்பாகக் கருதுகிறார்கள். எங்கும் இந்தியாவைப்போல் நூற்றுக்கு நூறு படித்தவர்கள் கிடையாது. எஜுகேஷன் வேறு, இன்ஸ்ட்ரக்ஷன் வேறு. பள்ளியில் சொல்லிக் கொடுப்பது இன்ஸ்ட்ரக்ஷன், பண்பாட்டில் வருவது எஜுகேஷன் என்பது. அந்த பண்பாட்டை பிரகாசிக்க செய்வதுதான் கல்வி என்று விவேகானந்தர் சொல்கிறார். அதற்காகதான் ஆசிரியர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். நம் பொது மக்களுக்கு கல்வி இல்லை, அறிவீனமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தியாவைப்போல பண்பாடுடைய நாடு கிடையாது. எழுத்து தெரிந்து கொண்டு அரை மணி, ஒரு மணி பேப்பர் படிப்பதா கல்வி? மனிதன் சமுதாயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை போதிப்பதுதான் கல்வி. இப்போது பள்ளிகளில், காலேஜுகளில் நடப்பது என்ன? பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதும், புத்தகங்களைப் பார்த்து, அதிலுள்ளவற்றை அப்படியே நெட்ரூப் போட்டு பரீட்சைகளில் வாந்தியெடுக்கும் பழக்கமும்தான் இப்போது இருக்கிறது. அதைத்தான் பரீட்சை என்று சொல்கிறார்கள். பிள்ளைகளை அன்றாடம் மேற்பார்த்து பள்ளிகளில் அவர்கள் தினசரி செய்கின்றவற்றை கவனித்து நல்லொழுக்கம், பரோபகாரம், சகிப்புத் தன்மை, பிறரிடம் நடந்துகொள்ளும் முறை இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து மார்க்கு போடவேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் ஒற்றுமை, நேர்மை வளரும். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள மக்கள் ஒரே மக்கள் என்ற எண்ணம் வரும். இன்றுள்ள திட்டம் அதைப் போதிக்கவில்லை. அதற்கு வழி தேடவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பு ஆசிரியர்கள் நிலை உயர்ந்தால்தான் நல்லது. பாட திட்டமும் தேசியமயமாகவேண்டும். விவசாயிகள், கைத்தொழில் செய்பவர்கள் எல்லாம் எப்போது வேலைக்கு போனாலும் நாம் செய்கிற வேலை இந்த தேசத்துக்காக, நம் நாட்டுக்காக என்ற

5th August 1965] *[திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி]*

எண்ணம் வரவேண்டும். நாம் செய்யும் நல்ல காரியங்கள் ஒவ்வொன்றும் நம் நாட்டுக்குச் செய்கின்ற நன்மை என்ற எண்ணத்தை உண்டாக்குவது கல்விதான். இதைச் செய்யாதது வருந்தத்தக்கது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

4-10 p.m.

DR. H. V. HANDE: Mr. Chairman, Sir, at the outset I would like to state clearly my views on the Draft Fourth Five-Year Plan that has been placed before us by the Madras Government. I do not agree *with it in toto*. The memorandum prepared by the Planning Commission on the Fourth Five-Year Plan envisages an outlay of Rs. 22,600 crores. That is what is stated here. Of this the outlay in the public sector will be of the order of Rs. 15,620 crores. Let us now see what was the outlay in the public sector in the First Plan. I have calculated this and it is about Rs. 1,960 crores. During the Second Plan it was Rs. 4,600 crores and during the Third Plan it was Rs. 8,250 crores. For the Fourth Plan the outlay is expected to go up to Rs. 15,620 crores. In other words the outlay of Rs. 1,960 during the First Plan has been boosted up to Rs. 15,620 crores for the Fourth plan. These, of course, relate to the Government of India.

In this connection, the Hon. the Chief Minister told us in his speech that there has been tremendous buoyancy in the matter of revenues. What was Rs. 90 crores in the beginning of the Third Five-Year Plan had now gone up to Rs. 160 crores. I would like to stress that this is only imaginary because in the beginning of the Third Plan the value of the rupee was nearly equal to 30 paise of the original rupee value but at the end of the Third Plan the value of the rupee has come down to 15 paise.

THE HON. SRI R. VENKATARAMAN: May I know what are the statistics or the source of information on which the hon. Member gives out this view?

DR. H. V. HANDE: Sir, I have got with me the book by 'Shenoy' borrowed only from our Library. I am prepared to show this book to the Hon. Minister any time. That book is my authority. I will be happy to have better information on the matter from the Hon. Minister. Whatever it is, my point is the Rs. 90 crores of revenue realised at the beginning of the Third Plan was equal only to Rs. 30 crores according to my valuation and the Rs. 160 crores now realised is worth only Rs. 25 crores on the basis of the original value of the rupee. The intrinsic value of the rupee has definitely gone down and it cannot be disputed. Even if this view is not accepted, I should like to state that the buoyancy is not such as we are given to understand from the figures. We got only twice the revenue and this increase is due to the fact that certain amounts of sales tax which we were not realising before on account of oversight or inefficiency, now we are collecting by putting forth extra efficiency. The increase in revenues is not due to a real increase in the national income. The national income has not gone up. It is because we have begun to realise certain taxes which we did not do earlier.

[Dr. H. V. Hande] [5th August 1965

Sir, after having established the fact that our revenue position is in a very bad shape and there is not that buoyancy claimed for it by the Hon. the Chief Minister, I would like to refer to another question, namely, whether we would be able to raise Rs. 750 crores from the public and redistribute it effectively. Whenever we collect money from the public we have a heavy responsibility in redistributing it in such a way that the gulf between the 'haves' and 'have nots' is bridged as much as possible. This work of redistribution should be done with great care and a sense of responsibility. We should not fritter away the amount collected from the public. In this matter we owe a great responsibility to the public because it is their money and not ours.

Now, Sir, coming to my next point, I would like to ask what are our economic ills and the problems facing us. Our desire is that every Indian and if we confine our attention now only to Madras State, everyone living in Madras State should have the basic necessities and they are mainly four, namely, food, shelter, clothing and employment. How best can we provide these basic necessities to our people? Can that be achieved by this sort of fantastic collection of revenues and redistribution by the State which amounts to a sort of State capitalism? Have we the right to collect the money from the public and run industries? Have we the right to start capitalistic industries? Have we the right to play with the amount that we realise by way of taxation from the public? These questions I would like to pose before our Government for a proper answer and clarification.

In this connection, Sir, I would like to submit one point regarding production. It may not be strictly within the scope of the discussion before us. To be able to appreciate fully the draft of the Fourth Five-Year Plan we must examine that aspect of the question and have a clear understanding. How are material resources augmented? By increased material production. I am sure everyone is agreed on that. We are also agreed that the four problems or ills facing us are housing, clothing, shelter and employment. The question now is how to solve those problems. Every one is agreed that these problems could be solved only by increasing material production. The next question is how best we can increase material production. Can that be done by the method now adopted by our Government or adopting a purely totalitarian method or are we to encourage a free economy? There are only three methods by which this could be achieved. One method, the totalitarian method had already been experimented by the Communist countries. The other is the method adopted by the liberal countries such as West Germany and Japan and known as the liberal economy. The adopting of these methods augments material production to a certain extent. In the one there is the factor of incentive as is done in free economics and in the other there is the threat of the bayonet or the gun as is done in the Communist countries where a person is made to do the work; work is extracted and production is increased by the use of force. Unfortunately,

5th August 1965] [Dr. H. V. Hande]

we have been experimenting with the third method which has so far not been experimented in any country in the world. This method is known as State Capitalism. We collect the money from the public by way of taxation and run industries without either the factor of incentive or the factor of force. We have adopted the middle path with the result that production has gone down considerably. The figures given particularly with reference to agricultural production are revealing. I will come to that shortly. By adopting this, the third method or the middle path, we have neither achieved the material production of the liberal countries nor the communist countries. We prefer, I personally prefer the liberal method because the material production there is more than what has been achieved in the totalitarian countries. There is this incentive factor in the liberal economy. Even the totalitarian countries have realised that incentives play an important part in increasing material production. Even in Russia it has now been proved that in small farms and house compounds they are able to produce more vegetables than in the collective fams. I have got authority to prove that even in Russia there is greater production of vegetables and food in private farms than in the collectives. Of the two application of force and the offer of incentives. I would prefer the offer of incentives to increase material production.

Now, let me take agriculture. During the Third Plan an amount of Rs. 36.98 crores would have been spent on agricultural production. This was aimed at stepping up production from 53,24 lakhs of tonnes to 69.78 lakhs of tonnes that is an increased production of 16 lakhs tonnes. This is in regard to food crops. This increase in production by 16 lakhs tonnes is to be achieved by investing Rs. 36.98 crores. Now under the Fourth Plan we propose to spend Rs. 85 crores to step up production from 65 lakhs tonnes to 82 lakhs tonnes. During the Third Plan the increase expected was from 53.24 lakhs tonnes to 69.78 lakhs tonnes. In other words for increasing production by 16 lakhs tonnes we spent nearly Rs. 37 crores, during the Third Plan. For increasing the production by the same quantity of 16 lakhs tonnes we are going to spend Rs. 85 crores under the Fourth Plan. We are to spend double the amount that we spent during the Third Plan to increase production by the same quantity during the Fourth Plan. This proves the buoyancy claimed for our revenues by our Chief Minister. The theoretical paper calculations show that we expect to get 82 lakhs tonnes. How much we will get in practice, in reality is quite another thing.

Now let me explain to the House how this figure has been arrived at. I invite the attention of the hon. Members to paragraph 9 on page 20 of the book supplied to us, an interesting piece of literature given to us. It is stated there that the principal objects of the Fourth Plan in regard to agricultural production are, (1) to assure a per capita consumption of foodgrains of 18 ounces per day, etc., etc. The total requirements of consumption at 18 ounces per head per day per annum for the population anticipated

[Dr. H. V. Hande] [5th August 1965

by 1970-71 will be of the order of 61.41 lakhs tonnes. Besides, provision will have to be made for seeds at 1.5 lakh tonnes. They have arrived at the figure of 82 lakhs tonnes, therefore, by finding out the requirements of each individual, the requirements of the population as a whole and the seed requirements. That is, they have arrived at the figure by finding out our requirements and not based on our capacity to produce it. The figure is based on our requirements which is something like this. I want to take up a job. I want a salary of Rs. 450 to meet all my requirements. I want two cups of coffee. I note down my daily requirements and then calculate on that basis my monthly requirements. I want so much for rent, so much for this, that and so on. And on that basis I require Rs. 450 to lead a decent life. So I start finding out a job where I can get Rs. 450 a month when getting a job itself is a problem. Therefore I say the estimate of production should be realistic, based upon our capacity such as the extent of cultivable land available, the fertility of the soil, the incentive factor that we have introduced among the tillers of the soil, their resources and not on our requirements. We cannot say we want so many things and so we will start getting it. From where will you get it? The same mistake was committed when the Third Plan was drafted. They said 'We want so many tonnes'. What 4-20 p.m. happened? They got less than what they wanted. So let us not waste our time in calculating how much we want. Let us find out how much we can get so that even if we are surplus there is no harm. There are others to whom we can give. It is not as if we lack enthusiasm for producing more. We are able to produce more food. We can give it to other State also. We can get money by selling it which is possible.

After having stressed this, I want to say that another important factor, that is, the land policy followed by us, is the main cause for this debacle. I have got statistics to show that there has been increase in production from what it was before. Now the production is much more My submission is that because of huge investment on fertilisers, the cost of production of food has been increased. Seventeen lakhs of additional tonnes of foodgrains is proposed to be achieved in the Fourth Five-Year Plan period. My submission is that as hon. Deputy Leader of the Opposition drew our attention some time before, the adoption of land policy has resulted in this food debacle. We have removed the incentive in the farmers for producing more food. The farmers must be allowed to cultivate their lands and produce food without any restrictions.

The storage accommodation in Government godowns is not satisfactory. I came across a very interesting item which I have got here with me. Sir, as a result of no proper storage, out of 85 million tonnes of country's whole agricultural produce, nearly $1\frac{1}{2}$ million tonnes are going to waste. That is the figure that they have given here. They have asked the Central Government to give more funds to make researches as to how this wastage is

5th August 1965] [Dr. H. V. Hande]

to be stopped. In the name of the Food Corporation, paddy is collectd from the villagers, and we do not know whether the foodgrains collected are properly stored. We are collecting paddy, but have we got the capacity to store it? We have been dilly-dallying with this question. When we are not able to get food, we are importing foodgrains from foreign countries. Our hard-earned tillers' food is being wasted by way of storing the foodgrains improperly. What exactly is the reason for this kind of wastage? I will just try to analyse this. We have been trying to collect so much rice from the people. In addition we are taxing the people to the extent of Rs. 750 crores. My hon. Friend Mr. Rajah Iyer was thinking of milk and honey flowing in the land. I am telling you that it is going to be a very terrible thing. The taxes that are levied by the Centre and the States will fall on the poor people. What is the national expenditure? It is about Rs. 22,000 crores for the whole country that has been envisaged. In other words, we are spending nearly Rs. $4\frac{1}{2}$ thousand crores for each year. We have to get this Rs. $4\frac{1}{2}$ thousand crores for these plans. Again for running the administration we want more money. The State taxation is there, the Central taxation is there and also the Corporation taxes are there. This Rs. $4\frac{1}{2}$ thousand crores goes to plan and another 2 to 3 crores will go as administrative expenses. We have no right to go on spending the tax-payers' money on these plans. We have a bureaucratic machinery.

(Deputy Chairman in the Chair.)

Let us take our State Secretariat. A number of secretariat I.C.S. and I.A.S. officers have been relegated to the Food Corporation. In other words, the I.C.S. and I.A.S. Officers who ought to have been working on the administrative side are getting extra load. The pay and allowances are to be paid by the Government and the expenditure incurred for running the administrative machinery for food distribution has to be worked out. The cost of food is going high and high. Intrinsically Government are spending a lot on the plethora of officers, who go about parading in their jeeps to the farmers' holdings. I may tell you that they give so much trouble to the people and the farmers are asked to part with the food that they have. Innumerable complaints and difficulties experienced by the agriculturists have been brought to the notice of the Government, and I do not know what action has been taken on them. These officers go in jeeps and trouble the poor ryots who do not know the rules and regulations to part with the rice. They have to part with it, and the result is that the farmer has no incentive to produce more. He wants to be free from unnecessary harassment of the jeepwallahs. Even the tiller has lost incentive to produce food. Unless he is made to realise that he has a place in the society, whatever be the plans they will be failures only. So, the bureaucratic machinery has taken away the incentive of the farmer. It is something like a block of ice. We have collected a block of ice and when we send it to the farmer or to the poor ryot, that ice gets lightly melted

[Dr. H. V. Hande] [5th August 1965

in the process. What I am trying to point out is the bureaucratic machinery is so top-heavy and so lop-sided that we are spending a large amount only for preserving bureaucraacy and officialdom. The amount that we spend on the bureaucratic machinery gets melted by the time it reaches the people. We have Block Deve-
4-30 p.m. lopment Officers in the Blocks. They also do not have sympathy for the farmers. I saw a number of pictures in Tamil papers about the possible methods of farming. I took the pictures to a number of farmers and asked them, ' What is your idea about these pictures ?' They said, ' Sir, all these are in books; we do not got anything '. That is the misery of the poeple. This is the way the publicity department is functioning. They do not get anything. This is something which we have to realise. We are investing a huge sum of Rs. 80 crores on production. Interest should be created in the farmers. When a person goes to the Block Development Officer, he is not given seeds. I am sure my hon. Colleague will agree with me that good seeds are taken away by the officials. It is a matter for investigation. I have complained that seeds which were kept to augment supply were taken away from the farmers. I had gone to the villages and known these things. I have personally visited the villages. I wanted to see at first hand things. The people are so miserable I see. When they go to the Block Development Officers, they are not given proper facilities. They are asked to come on the next day. On the next day when they go there, the answer is given that the officer is not there. Therefore, the poor ryot gets something in black market. So much of money invested on production melts away. Therefore, we should do something about this.

Sir, I next want to speak a few words about ' Health '. I find under ' Health ' a sum of Rs. 13.57 crores was spent in the third five-year plan period. The provision for the fourth five-year plan is Rs. 39.98 crores. This is three times. What is the net result? I can tell the House that to-day if a poor patient goes to the General Hospital or any other hospital in the morning to get a bottle of medicine, by the time he gets it he loses half a day. After having envisaged an expenditure of Rs. 30 crores for expenditure on ' Health ', if this is the state of affairs, how is the poor man to get any relief? Mr. Rajah Iyer spoke about people getting under Rs. 100. Their position is pathetic. There are so many patients who do not even get beds in the hospitals. In this metropolis, if patients do not get beds in the hospital, and if there are no sufficint beds, what is the plan for? I cannot understand. The poor patient does not have the money to get a taxi to take him to the hospital. He has to ring up the ambulance or get into a cycle-rickshaw. This is the position in Madras City. I do not know about the mofussil. It may be worse. Patients are made to lie on the floor. It is something disgraceful. In spite of all my shouting, the amount is going to be spent, because I am in the minority. But after having decided to spend this huge amount, let us spend the amount wisely. After having taxed the people, let us spend the tax-payers' money wisely in meeting the

5th August 1965] [Dr. H. V. Hande.]

basic requirements of the hospital. Let us have a few model hospitals in the city so that any foreign visitor can see how nicely the institution is run. He will feel that some attention is being given to the patients. Some sort of incentive to the patients for getting treatment in the hospital should be given. Let me not be parochial in talking about the city hospitals only. Let us take all the district headquarters hospitals and see that their basic requirements are met. Whatever be the expenditure, the basic requirements should be met. The Hon. the Health Minister is not here. But I request the Hon. the Minister for Industries to inform the Health Minister of my sentiments and to say also with what poignancy I have made out my remarks.

Sir, in spite of the fact that we have spent Rs. 17 crores, we have not been able to wipe out mosquitoes. Still the city is infested with mosquitoes. In a premier city like Madras. (Interruption). I feel that mosquitoes have increased by leaps and bounds, and the mosquito menace is a serious thing. Something must be done to eradicate this mosquito nuisance. After having decided to spend huge sums, let us ear-mark a certain amount for the eradication of mosquitoes. We all know how the dengue fever affected a very large number of people sometime before. The bad effects produced by mosquito is something which I need not tell the House. Everybody knows it. Let us do something about eradicating these mosquitoes. This should be done on a war-footing.

I now come to the most important thing which most of us are neglecting. The fourth plan has completely neglected the cure of the leprosy patients. These patients are moving about in the city. I have tried to get statistics of their number. My statistics show that six to ten lakhs out of a population of 3½ crores are suffering from leprosy. In other words, one out of every 30 persons is suffering from leprosy. Leprosy is a dangerous disease. It is not like any disease which affects only the person afflicted with it. The entire society is in danger. This is one point which must be remembered. Another point is that leprosy is a disease about which we can do something. This is not like cancer. For cancer we say cure is far-fetched. But leprosy can be wonderfully cured. With a little amount of treatment, it can be brilliantly treated. I am so certain that even within one year we can cure a large number of leprosy patients. The money spent on the cure of these patients is wisely spent, because we are not putting the money down into the drain. We can do something marvellous. A huge amount of Rs. 1 crore is to be spent. The amount was Rs. 20 lakhs last time. It is not at all sufficient. Out of Rs. 40 crores Rs. 1 crore is absolutely in-sufficient. Let them ear-mark a little more amount, and let them see that leprosy patients are cured. Something must be done in this regard. In this context, we may also think of establishing beggar homes. We will link up both these things. The leprosy

[Dr. H. V. Hande] [5th August 1965]

patients must not be loitering in the city and in the South Arcot and North Arcot districts. The leprosy rate is fantastically high. Something must be immediately done.

Before I wind up, I want to make mention of one thing. If the amount allotted for the draft fourth plan cannot be reduced, or if we cannot remove from our minds the obsession of plan, at least let us do as wise men do. Wise men have been telling us for the past few days, ' Let us give this plan a holiday '. I am one of those who firmly believe that we should give a holiday to these plans and we should not meddle with the public money. The plans make the poor man poorer and the rich richer. Let us as our elderly statesman has said the other day give a holiday for the plan. A number of economists have come forward with this statement. Some eminent persons and economists like Masani have said the same thing. Persons like Shenoy have said that we should give a holiday to the plan. The Prime Minister has come forward in Bombay and said that we should think twice before we jump into the plans. Let us not become victims. Let us see what the great industrialist of South India, Sir A. Ramaswami Mudaliar, has said in one of his speeches on the subject. Let us not be obsessed by the plans. Let us give ourselves a chance to get out of the clutches of the Planning Commission. Let us view it realistically. Even our Industries Minister—I am very proud to say that—has come out with some wonderful statements. I fully agree with him. I congratulate him on his statement. That is, let us multiply this by five times. That is, in the third plan an amount of Rs. 80 crores was provided. Let us multiply this by five. Let us have a maximum of Rs. 400 crores. In one plan period, we had the capacity to invest Rs. 80 crores. Let us now multiply it by five times. It was a memorable speech. I was all praise for the Industries Minister. I hope his wise counsel will be appreciated by the Planning Commission. I want to express through this House that at least what the Industries Minister said about the plan should be taken note of by the Planning Commission and a realistic approach made. There is no question of one State quarrelling with another. Let all the people sit together and come to decisions.

4-40 p.m. There is no question of a Steel Plant here and a Steel Plant there. For the Vizag Steel Plant we pay and for the Salem Steel Plant they pay. Whenever we install a Steel Plant, whether at Rourkela, Bhilai or Vizag, money is taken from everybody and the entire money is spent. Each one says, " We want a Steel Plant ". This is what a neutral observer says : " In one breath you say that you want less planning outlay and in another breath you say that you want this Steel Plant and that Steel Plant. " If all of us shout, " I want more amount for this or for that," then the total outlay will come to another Rs. 20,000 crores. That means the whole country will become bankrupt. Let us try to be

5th August 1965] [Dr. H. V. Hande]

realistic. Let us take the counsel of wise people and not bother about partyisms. Let us cut our coat according to the cloth and prune the Plan if we cannot completely scrap it.

Finally, only one thing I want to say as far as the legislators are concerned. I am sure the legislators will agree with it. We will go round from constituency to constituency and try to find out the defects in each constituency. Whenever we place before the Ministers the problems of the constituency, I request the Ministers to take immediate action so that not only they may get the help of the bureaucratic machinery but also the help of the legislators. We will go on touring constituencies and assess the problems. We shall see whether a particular thing is implemented or not. If such a realistic assessment is done and if this planning is given a holiday, I think the country will be better.

***திரு. டி. வி. தேவராஜ முதலியார் :** மன்ற உபதலைவர் அவர்களே! இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன்வருகிறேன். முன்னோர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்: ஒருவர் வழிப்பயணம் போகக்கூடாது, இருவர் போனால் பூதத்துக்கு சமானம், மூன்று பேர்கள் போனால், மத்திமம், நான்கு பேர்கள் போனால் தான் நல்லது. அதைப் போல் திட்டங்கள் வகுக்கும்போது முதல் திட்டத்தை வகுக்கும்போது, இந்தத்திட்டம் எப்படி முன்னேற்றம் அடையும் என்று நினைத்தார்கள். இரண்டாவது திட்டத்தை வகுக்கும் போது, அது எந்த நிலையில் இருந்தது என்றால், பூதத்துக்கு சமானமாக இருந்தது. மூன்றாவது திட்டம் மத்திமத்தில் இருக்கிறது. நான்காவது திட்டம் நல்ல முன்னேற்றம் அடையக் கூடிய திட்டம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மக்கள் மக்களாக வாழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கண்கண்ட தெய்வம் காந்தி மகான் வரையறுத்த " பச்சைப்பசேல் இந்தியா" என்ற வாக்குக்கு ஏற்ப இந்தத் திட்டத்தை வகுத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல வளர்ச்சி உள்ள திட்டம் இது. உணவில் கூட ஒரு திட்டம் இருக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்று சொன்னார்கள். நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து தொண்டாற்றுவது பாராட்டுக்குரிய விஷயமாகும். உணவு உற்பத்தியில் முன்னேற்றம் அடைந்து வந்தாலும், இருக்க இருக்க ஜனத்தொகை அதிகமாவதால் பஞ்சம் ஏற்படுகிறது. அதற்கும் ஒரு கட்டுப்பாடு திட்டம் எல்லாம் செய்து கொண்டு வருகிறோம். நல்ல முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிற நேரத்தில், மின்சக்தி ஒன்றை உதாரணமாகச் சொல்ல முடியும். அது உறக்கமின்றி பணியாற்றுகிறது. சூரியன், சந்திரன், காற்று இவை மூன்றும் தான் உறக்கம் இல்லாமல் பணி யாற்றக்கூடியது, பூமிக்கும் தண்ணீருக்கும் மனிதனுக்கும் உறக்கம் இருக்கிறது. ஆனால் சூரியன், சந்திரன், காற்று இவைகளுக்குத்தான் உறக்கம் இல்லை என்று முன்னோர்கள் எழுதியிருக்கிறார்கள் அதைப்போல் மின்சக்தி உறக்கமின்றி, இரவிலும்,

[திரு. டி. வி. தேவராஜ முதலியார்] [5th August 1965

பகலிலும் இருக்கிறது, பணியாற்றுகிறது என்பது பாராட்டப்பட வேண்டியது. மற்றஎல்லா மாகாணத்தையும் விட நம் மாகாணம் அதிலே நல்ல முன்னேற்றம் அடைந்து இருக்கிறது என்று பாராட்டுகிறார்கள். அதைப்போல் உணவு விஷயமும். காவிரி நதி பாய்கிற இடங்கள் இருந்தாலும், எங்கள் ஜில்லா நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறது. மின்சக்தி மூலம் தண்ணீர் இறைத்து, விவசாயம் செய்து, நெல் உற்பத்தியில் இரண்டாவது ஜில்லா எங்கே என்றால், வட ஆற்காடு தான் என்ற புள்ளிவிவரம் சர்க்காருக்குத் தெரியும். அதைப் போல் நல்ல உற்பத்தி செய்து கொண்டு தான் வருகிறோம். சில சமயம் கால மழை சரியாக இல்லாததால் கஷ்டம் வருகிறது. முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஓரெட்டில் வளராத பிள்ளை, ஈரெட்டில் பெறாத கல்வி, மூவெட்டில் பெறாத பிள்ளை, நாலெட்டில் அனுபவிக்காத இன்பம், ஐயெட்டில் பெறாத செல்வம், ஆறெட்டில் பெறாத ஞானம், ஏழெட்டில் பெறாத மோக்ஷமும், எட்டெட்டில் பெறாத புகழும் நரகத்துக்கு ஒப்பாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். நமது சர்க்காரும் 16 வயதில்தான் மேற்படிப்புக்குப் போகவேண்டுமென்று எழுதி வைத்திருக்கிறது. அதைப்போல் இந்த நான்காவது திட்டம் ஆரம்பிப்பதற்கு 16 வயது ஆகிறது. பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டும் என்று சொல்கிறேன். மணப்பந்தலில் அப்படித்தான் பெரியோர்கள் ஆசீர்வாதம் பண்ணுவார்கள். அதற்குப் பொருள், 16 பிள்ளைகள் அல்ல. பதினாறு செல்வங்களையும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டும் என்பது தான் பொருள். மனை, மனைவி, மக்கள், தாய், நீர், நிலம், கால்நடை, கல்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, ஏவல், பெறுமை, பொன், மணி, புகழ் போன்றவை. இந்தப் பதினாறு செல்வங்களையும் பெறவேண்டும். ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்றும் எழுதி வைத்திருக்கிறார்கள். அதனால் 16 செல்வங்களைத்தான் குறிப்பிடுகிறார்கள். இந்தத் திட்டம் நல்ல முறையில் வளரும் வாய்ப்பு இருக்கிறது. இது நல்ல முன்னேற்றத்துக்கு வரும் வாய்ப்பு. அதற்கு ஒத்துழைப்பு வேண்டும். அரசாங்கம் மக்களோடு ஒற்றுமையாக இருந்தால், நல்ல வாழ்வு வாழ்ந்து முன்னேற்றம் அடைய முடியும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. முக்கியமாக உண்ண உணவுக்கு வழி தேடிக்கொண்டிருக்கிறோம். பலருக்கு இரவில் படுக்கிறதற்கு ஒரு விதமான வசதியும் இல்லை. என் நண்பர் கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்கூட சொன்னார்கள். இருக்க வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியும் எல்லோருக்கும். அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். முதலில் சுகாதாரத்தோடு வாழ வசதி செய்ய வேண்டும். எங்கே குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்தாலும், அங்கே போய் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை அவர்களுக்கு சொல்ல வேண்டும். அவர்களோடு நோய் போகாது, நகரத்தையே பீடிக்கும், பிறகு மாகாணத்தையும் பீடிக்கும். நோய் பரவக்கூடியதாகும். அவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் நோய் இல்லாமல் செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமை. அங்கேயிருந்துதான் நோய்கள் உண்டாகின்றன.

5th August 1965] [திரு. டி. வி. தேவராஜ முதலியார்]

சுகாதார வழியை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களிடம் போய் சுத்தமாக இருங்கள் என்று பிராபகண்டா பண்ணுவதுஅவசியம். வள்ளுவர் சொன்னார்:

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பாரில்லானுங் கெடும்"

எடுத்துச் சொல்லக் கூடிய ஆள் இல்லாவிட்டால், கெடுக்கக்கூடியவர்கள் இல்லாவிட்டாலும் தானே கெட்டு விடுவான் என்று வள்ளுவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்களுக்கு சுகாதாரத்தோடு இருக்கும் வாய்ப்பை எடுத்துச் சொல்லி, அவர்களுக்குள்ள வசதியைச் செய்து கொடுத்தால், நல்ல முன்னேற்றத்துக்கு வாய்ப்பு இருக்கும் என்பதுதான் என் கருத்து. நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. சிதம்பரத்தின் பாடல் ஒன்று இருக்கிறது. அந்தப்பாடல்கள்தான் நமக்கு இருக்கிற பெரும் செல்வம். உயிரெனும் உடலுக்கு, உடலெனும் கும்மிக்கு, ஓயாத இரவும் பகலும் இரை தேடி, உற்று யோசிக்குமளவில் "உண்ணுவதும் உறங்குவதும் அல்லாது வேறு பயனும் கண்டதில்லை, பராபரமே". உண்ண உணவும் உறங்குவதற்கு வசதியும் செய்து கொடுத்து மக்கள் மக்களாக வாழ அரசாங்கம் நல்ல வழிகளைத் தேட வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு உடம்பு சரியில்லாததால் அதிகமாகப் பேசவில்லை. இந்த வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஆண்டவன் இந்தத் திட்டம் சரிவர நிறைவேற, மந்திரிமார்களுக்கும், சர்க்காரில் உள்ளவர்களுக்கும் நீண்ட ஆயுளைக் கொடுத்து, திடகாத்திரத்தையும் கொடுத்து ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லி, கனம் அங்கத்தினர் பால சுப்பிரமணிய அய்யருக்கும் நல்ல ஆயுளைக் கொடுக்க வேண்டுமென்று கூறி, உரையை முடிக்கிறேன் வணக்கம்.

திரு. எம். எத்திராஜுலு : கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விரிவாக எனக்கு முன்னால் பேசிய அனைவரும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தமிழகத்திலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள 291 கோடி ரூபாய்க்கு மேல், திட்ட இலக்குக்கு மேல் அதிகமாகச் செலவு செய்து, ஏறக்குறைய 340 கோடி ரூபாய் அளவுக்கு நாம் பெரும் சாதனையை தமிழகத்தில் சாதித்திருக்கிறோம் என்றால் தமிழகத்தில் மூன்றாவது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கும் நிலையைப் பார்த்து, இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருக்கும் ராஜ்யங்கள் அனைத்தும் இன்றைக்கு தமிழகத்தைப் பார்த்துப் பொறாமைப் படக்கூடிய அளவிலே இருக்கிறது என்பதை சொல்லத் தேவையில்லை. காரணம், நம் தமிழகத்திலுள்ள கனம் அமைச்சர்கள் எந்தப் பிரச்னையையும் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து காரியங்களைச் செய்கிறார்கள். இதன் காரணமாக தமிழகத்தில் நல்ல பொருளாதார வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இன்று தமிழ் நாட்டில் சிறந்த அமைச்சர்களின் ஆட்சி நடந்து வருகிறது என்பதை எல்லா ராஜ்யத்தினரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. வாதத் 4-50 p.m.

திற்கு வேண்டுமானால், இங்குள்ள ஆட்சியைப் பற்றி பல குறைகள் சொல்லலாம். உண்மையில், இங்கே நல்ல ஆட்சி நடக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு கொடுக்கப்பட்ட பணத்தை இந்த சர்க்கார் நல்ல முறையில் செலவழித்து இன்னும் அதிக மாகப் பணம் கேட்கக்கூடிய வகையில் திட்டங்களை நிறைவேற்றி யிருக்கிறார்கள். திட்டங்கள் 'பெய்ல்யூர்' ஆகாதபடி ஒவ்வொன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழக அரசு அதிகப் பணம் கேட்டிருக்கும்போது மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள பணம் கொஞ்சமே என்று நினைக்கிறேன். நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கு இப்போது 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டாலும் நான்காவது திட்ட இறுதியில் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்க நேரிடும் என்று நினைக்கிறேன். கல்வித் துறையிலும் தொழில் துறையிலும் உள்ள பல குறைகளைச் சொல்லி பல கோரிக்கைகளை நாம் எழுப்பியிருந்தாலும், இந்த ராஜ்ய சர்க்கார் இப்போது பணத்தைக் குறைத்துக்கொண்டு, பல காரியங்களைச் செய்த பிறகு போதிய தொகையை மத்திய அரசிடம் கேட்டுப் பெறத் தயாராயிருக்கிறார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் மூன்றாவது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது. இப்போது 750 கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டச் சுருக்கப் புத்தகத்தை படிக்கும்போது எத்தனை நாள் படித்தாலும் எல்லாவற்றையும் முழுதும் படிக்க முடியாது. இதைப் படிக்கும்போது தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. அதையெல்லாம் நன்றாகப் படித்துத் தெரிந்துகொள்ள சில நாட்கள் பிடிக்கும்; சர்க்கார் ஒதுக்கியிருக்கும் ஓரிரு தினங்களில் முடியாது. கடந்த மூன்று திட்டங்களில் சாதித்தவற்றையும் நான்காவது திட்டத்தில் சாதிக்கப்போவதையும் மிகவும் விளக்கமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகத்தில் சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் படிப்பதற்குத் தான் நேரம் வேண்டுமே தவிர படித்து வியாக்யானம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நான்காவது திட்டமும் நல்லமுறையில் நிறைவேறும் என்று நம்புகிறேன். முதலாவதாக பின்னடைந்த சமூகத்தினருக்காக இந்த நான்காவது திட்டத்தில் 45½ கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்கும், பின்னடைந்தவர்களுக்கும் கல்வியில் உபகாரச் சம்பளத்திற்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. மதிய உணவு, தொழிற் கருவிகள், உழவு மாடுகள், உபகாரச் சம்பளம் ஆகியவைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அதிகம் உதவி செய்ய வேண்டும். இன்று பின்தங்கிய இனத்தவர்களாக 158 சமூகத்தினர் இருக்கின்றனர். இவர்களில் ஏராளமான பேர் ஏழைகள். எப்படியாவது படித்து முன்னேற உணர்ச்சியுடன் படிக்கிறார்கள்.

ஆனால் போதிய மார்க்குகள் வாங்காத காரணத்தினால் இவர்களுக்கு உபகார சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. யாருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கலாம் என்பது மார்க்குகள் அடிப்படையில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பினர் முன்னேற்றத்திற்காக வருஷாவருஷம் கோடிக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்படுகின்றன. அதுவும் பற்றாக் குறையாகத் தான் இருக்கிறது. இன்று பின்தங்கிய சமூகத்தினர் எவ்வளவு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லாத் துறைகளிலும் உயர்த்தப்பட்டிருக்கிறார்களா என்று சர்க்கார் ஒரு கமிட்டியை அமைத்து அதன் மூலம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை உயர்த்தப்படுவதற்காக ஒரு தனி இலாகா இருக்கிறது; அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையெல்லாம் அந்த இலாகா செய்ய முற்படுகிறது. அதேபோல பின்தங்கிய சமூகங்களும் முன்னேற வேண்டும் என்பதை சர்க்கார் ஒத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் நலனையும் அவர்கள் முன்னேற்றத்தையும் கவனிப்பதும் சர்க்காரின் பொறுப்பாக இருக்க வேண்டும். இன்று பின்தங்கிய சமூகத்தினர் எத்தனையோ பேர் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்படுகின்றனர், உழுது பயிரிட சொந்த நிலம் இல்லாமல் இருக்கிறார்கள். சில சமூகத்தவர்கள் உத்தியோகத்தில் ஒரு சதவிகிதம்கூட இல்லை. கல்லூரி படிப்பதற்கும் அவர்களால் முடியவில்லை. அவர்கள் முன்னேறிய சமூகத்தோடு சேர்க்கப் பட்டிருப்பதால் அவர்கள் அந்த சமூகத்தினருடன் உத்தியோகத் துறையிலும் கல்வித் துறையிலும் போட்டியிட வேண்டியிருக் கிறது. இவர்களைப் பிரித்து தாழ்த்தப்பட்ட இனத்தவர் பட்டியலில் சேர்த்தால்தான் அவர்கள் முன்னேற முடியும். சோஷலிச சமுதாயம் அமைய முடியும். இவர்களுக்கான உபகாரச் சம்பளத் தொகையை அதிகப்படுத்த வேண்டும். மார்க்கு அடிப்படையில் இல்லாமல் வருவாய் அடிப்படையில் இவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க வேண்டும்; இப்படிச் செய்தால்தான் இவர்கள் முன்னேற முடியும். எத்தனையோ சமூகங்கள் இன்னும் முன்னேற முடியவில்லை. அவர்கள் பொருளாதாரத் துறையிலும் பிற துறைகளிலும் முன்னேற வேண்டும். அவர்களுக்கு உழவு கருவிகள் முதலியவைகளும் கொடுத்தால் நல்லது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வந்து விட்டது.

அடுத்தபடியாக நமது அதிர்ஷ்டவசமாக தமிழ் நாட்டின் 5 p.m.
தொழில் வளர்ச்சிக்கு நமது தொழில் அமைச்சர் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு ஒரு தொழில் என்ற முறையில் தமிழ்நாட்டில் வளர்ந்து கொண்டு வருகிறது. நேற்று பேசியவர்கள் சிலர் வேறு ராஜ்யங்களில் இதைவிட தொழில் அதிகமாக வளர்ந்திருப்பதாகக் கூறினார்கள். நானும் வெளி ராஜ்யங்களில் சென்று பார்த்திருக்கிறேன். இவ்வளவு பெரிதாக தைரியமாக பெரும் பெரும் தொழிற்சாலைகளை தமிழ் நாட்டில் ஏற்படுத்துவதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு வெளிநாட்டுக்குச் செல்லும்போதெல்லாம் அங்கே இருக்கிற தொழில்களை எல்லாம் தெரிந்துகொண்டு வந்து அதன்படி

[திரு. எம். எத்திராஜுலு] [5th August 1965

இங்கேயும் தொழில்களை வளர்த்துவரும் தொழில் அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது உண்மையில் நம்முடைய அதிர்ஷ்டம்தான் என்று நினைக்கிறேன். இரண்டாவது திட்டத்தில் 175 லட்சம் ரூபாய் செலவு செய்து 237 தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்தில் 500 தொழில் பிரிவுகளைக் கொண்ட 22 தொழில் பேட்டைகளை உண்டுபண்ணியிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட 12 தொழில் பேட்டைகள் அமைக்க இந்த திட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும் தென்னார்க்காடு ஜில்லாவில் இன்னும் ஒரு தொழில் பேட்டை வரவில்லை என்பதுதான் என்னுடைய குறை. ஒவ்வொரு நகரத்திலும் ஒரு தொழில் பேட்டை இருக்க வேண்டுமென்பதுதான் தொழில் அமைச்சரின் ஆசை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விருத்தாசலம் எந்த ஜில்லாவில் இருக்கிறது என்று தெரிந்துகொள்ளவேண்டும். வேண்டுமானால் கடலூரில் வேண்டுமென்று கேட்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு: அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். ஜில்லா தலைநகரில் கடலூரில் ஒரு தொழிற்பேட்டை வைப்பதாக இரண்டாண்டு காலமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் வந்தபாடில்லை. ஜில்லா தலைநகரான கடலூரில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெய்வேலியைப் பற்றிச் சொல்லலாம். நூற்று எழுபத்தைந்து கோடி ரூபாயில் பெரிய திட்டம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எட்டு உப தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளாவது தாலுகாவிற்கு ஒரு தொழிற்சாலையாக வைத்தால் அங்கங்கு இருக்கிற பின்தங்கிய மக்கள் ஏழை அரிஜன மக்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் அவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும். இப்போதிருக்கிற தொழிற்சாலைகள் எல்லாம் நெய்வேலியிலேயும் பக்கத்திலிருக்கிற விருத்தாச்சலத்திலும் தான் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தென்னாற்காடு தலை நகரான கடலூருக்கு ஒன்றும் வரவில்லை. ஆகவேதான் நான்காவது திட்டத்தில் வரக் கூடிய ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலத்தைக் கொண்ட 12 தொழிற்பேட்டைகளில் தென்னார்க்காடு ஜில்லாவுக்கு அவசியம் ஒரு தொழிற்பேட்டை கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்தத் திட்டத்தில் நான்கு நூற்பாலைகள் வர இருக்கின்றன. அவற்றில் நான்கு பொதுத்துறையிலும் மூன்று கூட்டுறவுத் துறையிலும் கொடுக்க இருக்கிறார்கள். கோவை, மதுரை போன்ற இடங்களைப் பார்க்கும்போது எங்கள் ஜில்லாவில் அதற்கான சகலவசதிகளும் இருக்கின்றன. ஆகையால் தென்னார்க்காடு தலைநகருக்கு நூற்பாலை ஒன்று கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லா ஜில்லாக்களைப் பார்க்கும்போது அங்கெல்லாம் இண்டஸ்டிரியல் ஸ்கூல், பாலிடெக்னிக்குகள் வந்திருக்கின்றன. ஆனால் எங்கள் ஜில்லாவில் ஒரு இண்டஸ்டிரியல் ஸ்கூல் கொடுத்திருக்கிறார்கள். பாலிடெக்னிக்

5th August 1965] *[திரு. எம். எத்திராஜுலு]*

ஸ்கூல் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திலாவது ஒரு பாலிடெக்னிக் கண்டிப்பாக தென்னாற்க்காடுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு வீட்டு வசதிக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 42 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். இரண்டாவது திட்டத்தில் நாலரை கோடியும் மூன்றாவது திட்டத்தில் பத்தேகால் கோடியும் ஒதுக்கி ஏறக்குறைய தொழிலாளர்களுக்கு 5,700 வீடுகளுக்கு மேல் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த வருமானக்காரர்களுக்கு 4,500 வீடுகளுக்கு மேல் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். சமுதாயத்தில் குறைய தொழிலாளர்களுக்கு 5,700 வீடுகளுக்கு மேல் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு மனைக் கட்டுகள் வாங்க ஒரு லட்சத்திற்கு மேல் மூன்றாவது திட்டத்தில் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சென்னை நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் ஐந்து லட்சம் மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதற்காக திட்டம் இருக்கிறது. அதையெல்லாம் வரவேற்கிறேன். இவ்வளவு உதவி செய்திருந்தாலும் பின்தங்கிய இனத்தவர்களுக்கு ஏன் ஒரு வீடுகூட கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வரவில்லை? அதற்கு திட்டம் வேண்டுமென்று பலமுறை இந்த மன்றத்தில் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். குறைந்த வருமானக்காரர்கள் ஆறாயிரம் ரூபாய் வருமானமுள்ளவர்களாக இருந்தால் 10 ஆயிரம் கடன் கொடுத்து வீடு கட்ட வசதி செய்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர்களில் பொருளாதார வசதியில்லாதவர்கள் வீட்டு வசதிக்கு கடன்கோர முடியாது. சர்க்காரும் கொடுக்காது. இருந்தாலும் எத்தனையோ பின் தங்கிய வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு செண்டு நிலம் கூட இல்லாதவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு 1 செண்டு, 2 செண்டு நிலமாவது வீடுகட்டிக் கொள்ள வாங்கிக் கொடுக்கக் கூடாதா ? அரிஜனங்களுக்கு 750 ரூபாய் நிதி உதவியும் அளித்து ஆயிரம் ரூபாயளவில் வீடு கட்டிக் கொடுக்கும் நிலை இருக்கும்போது பின்தங்கிய வகுப்புக்கு கட்டிக் கொடுக்கக் கூடாதா? இந்த நான்காவது திட்டத்திலாவது அதை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறக்குறைய ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் என்ற அளவில் வசதியான வீடுகளாக இல்லாவிட்டாலும் ஆயிரம் இரண்டாயிரத்தில் இரண்டு சுவர் வைத்து ஓடுபோட்டு ஒரு கதவு வைத்து இரண்டு செண்டு நிலத்திலாவது வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தில் உள்ள பின் தங்கிய வகுப்பினர் மிகப் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். கிராமத்திலுள்ள கருமார் தொழிலாளர்கள், மருத்துவர்கள், சலவைத் தொழிலாளிகள் மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். கிராமத்தார் நினைத்தால் இவர்களை எதுவேண்டுமானாலும் செய்யமுடியும். அப்படிப்பட்ட நிலையில் அந்த மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லமுடியாமல் மனதில் வைத்துக்கொண்டு கிராமங்களில் வாழ்கிறார்கள். அந்த மக்களின் கஷ்டத்தை குறைகளை அவசியம் பரிசீலித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதி போர்டு நிலம் வாங்குகிறார்கள். குறைந்த வருமானக்காரர்களுக்கு

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் ஒவ்வொரு ஜில்லாவிலும் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் ஒரு ஐம்பது, நூறு வீடுகளாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள பின்தங்கிய வகுப்பாருக்குக் கட்டிக்கொடுத்தால் நன்றாக இருக்கும். அவர்களுடைய குறையை ஓரளவு போக்குவதாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன். பின் தங்கிய ஏழைகளுக்கு இரண்டு, மூன்று செண்டிலாவது வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று கருணை கூர்ந்து 15 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியதற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

துறைமுகத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் நடுத்துறை துறைமுகங்களான நாகப்பட்டிணம் போன்றவைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதிகமாக அதை விளக்கிச் சொல்ல நேரமில்லை. இன்னும் துரிதமாக வேலை செய்யவேண்டும். இன்னும் எட்டு சிறிய துறைமுகங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அதில் மிக முக்கியமாக உள்ளது பரங்கிப்பேட்டை துறைமுகம் என்பதை அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அங்கிருந்து ஏற்கெனவே சிங்கப்பூர், பினங்கு போன்ற இடங்களுக்கு Rallis பிரதர்ஸ் கம்பெனி மூலமாக மணிலா, பயிறு, தானியங்கள் ஏற்றுமதியாகின்றன. அதே இடத்தில் இரும்பு உருக்காலை இருந்ததாகவும் தெரிகிறது. நான் இதை பொறுப்பில்லாமல் சொல்லவில்லை. இப்போது யாரை அனுப்பி பார்த்தாலும் பரங்கிப்பேட்டை துறைமுகத்தில் அக்காலத்தில் இரும்பை உருக்கியதன் அடையாளங்கள் தெரிகின்றதைப் பார்க்கலாம். இரும்பு உற்பத்தி செய்த உருக்கு துண்டுகள், தண்டவாளங்கள் அங்கே காணப்படுகின்றன. இங்கே எழும்பூர் ஸ்டேஷனில் உள்ள சில இரும்பு சாமான்களில் பார்த்தால் 'மேட் இன் போர்ட்ட நோவோ' என்று இருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக திரு. வேதரத்னம் பிள்ளை அவர்கள் தலைமையில் அறுபது எம்.எல்.ஏ-க்கள் கொண்ட ஒரு குழுவை அழைத்துப் போய் அந்தத் துறைமுகப்பகுதியைக் காட்டினேன். அவர்கள் பார்த்துவிட்டு அந்தத் துறைமுகத்தை உடனடியாக அவிருத்தி செய்யவேண்டும், ஏற்றுமதி இறக்குமதி செய்ய லாயக்கான இடம், கடற்கரை ஓரமாகவும், களிப்பு மண் உள்ளதாகவும், ரயில் வசதி வாய்ந்ததாகவும் ரோடு வசதியோடும் இருக்கிறது என்றும், இதையெல்லாம் பார்த்துத்தான் வெள்ளைக்காரன் அங்கே துறைமுகத்தைவைத்தான் என்றும் ஆகையால் அதை உடனே அபிவிருத்தி செய்யவேண்டுமென்று அந்த எம்.எல்.ஏ-க்கள் குழு சர்க்காருக்கு ஒரு மெமோரண்டம் தயார் செய்து அனுப்பியிருந்தார்கள். அதன் மேலே நானும் ஒரு கேள்வி கேட்டபோது எனக்கு
5-10 p.m. அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இதைப் பரிசீலித்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட துறைமுகம் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை. அதையும் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டு, அபிவிருத்தி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவததைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கோடிக் கணக்கான பணத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கி இருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு டாக்டருக்கு 6,500 வியாதியஸ்தர்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டததில், 5,900; மூன்றாவது திட்டத்தில், 4,600 பேர்கள்; இப்படி நாளுக்கு நாள் மருத்துவ வசதி அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. தலைவலி என்றால் கூட வீட்டிலே வைத்தியம் செய்துகொள்ள மனது போகவில்லை; உடனடியாக ஆஸ்பத்திரிக்கு போய் மருந்து சாப்பிட வேண்டுமென்று போகிறார்கள், சிறு சிறு வியாதிகளுக்கு அவரவர்கள் வீட்டிலே வைத்தியம் செய்துகொள்ள வைத்தியம் முறைகள் அடங்கிய ஒரு சிறிய புத்தகத்தை அரசாங்கம் தயாரித்துகொடுத்து ஆஸ்பத்திரிக்கு அதிக கும்பல் வராமல் தடுக்க முடியும். காலில் இடித்து இரத்தம் வந்தாலும் ஆஸ்பத்திரிக்கு ஓடுகிறார்கள். பழைய வைத்திய முறை எங்கே போய்விட்டது. என்றே தெரியவில்லை. பழைய பண்பாடு மக்கள் மத்தியில் வளர ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி செய்தால் ஓரளவுக்கு கூட்டத்தை குறைக்க முடியும். வேலூர் ஆஸ்பத்திரியில் பார்க்கும்போது எப்படி இந்த வியாதியை தீர்க்கிறீர்கள் என்று கேட்டேன். இப்போது வருகிற வியாதியஸ்தர்களின் குறிப்பை வைத்துக் கொள்கிறோம், மருந்து கொடுத்து வீட்டுக்கு அனுப்புகிறோம். ஆறு மாதம் சென்று, பிறகு வந்தால், என்ன வியாதியால் ஏற்கெனவே வந்தாய் என்று கேட்டு, அவர்கள் அந்த வியாதியைச் சொன்னால், தேதியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு கேஸ் ஷீட்டை எடுத்துப் பார்க்கிறோம். அந்த நோயை வைத்து இப்போது ஏற்பட்ட நோயையும் பார்த்து என்ன மருந்து கொடுக்கலாம் என்று ஆதாரமாக வைத்துச் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே நம்முடைய ஜெனரல் ஹாஸ்பிடல், பெரிய ஆஸ்பத்திரி, டெல்லியில் கூட இருக்கிறது, நான் போய்ப் பார்த்தேன். கேஸ் ஷீட் மெயின்டெனன்ஸ் அதற்கான செலவு ஆகி விட்டுப் போகட்டும். ஒரு மாதம் இருந்து வைத்திய சிகிச்சை செய்து கொண்டேன், ஆறு மாதத்திற்கு பிறகு சென்றாலும் கூட அதை எடுத்துப் பார்த்து என்ன வியாதி ஏற்கெனவே இருந்தது. இப்போது என்ன வந்திருக்கிறது என்று தெரிந்தால், எப்படிப்பட்ட வியாதியையும் தீர்க்க முடியும், ஆகவேதான் அப்படிப்பட்ட கேஸ் ஷீட் மெயின்டெனன்ஸ்-க்கு டிபார்ட்மெண்டுகளை ஏற்படுத்தி அவரவர்களுக்கு தனித்தனியாக இந்த கேஸ் ஷீட் மெயின்டெயின் செய்து சிகிச்சை பெறுவதற்கு முதலில் ஜெனரல் ஹாஸ்பிடலிலாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக மெடிகல் சர்விஸ்ஸிலிருந்து இரண்டொருவர் மத்திய சர்க்கார் மூலமாக பயிற்சிக்கு அனுப்பியும் கூட அந்த டிபார்ட்மெண்டில் வைக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். இதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாத்தனூர் அணைக்கட்டில் இரண்டாவது முறையாக 4,565 மிலியன் கன அடியிலிருந்து, 8,100 மிலியன் கன அடி தண்ணீர் விடப்

போகிறார்கள் என்று கண்டு மிக மிக சந்தோஷப்படுகிறோம்.
திருக்கோயிலூர் மக்கள் பூரிப்படைந்து வாழ்த்துகிறார்கள். திருக்
கோயிலூர் பக்கம் வரும் தண்ணீரை விருத்தாசலம் வரை வேண்டும்
என்று சொன்னார்கள். அதையும் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு
கோமுகி நதியில் அணைக்கட்டு கட்டப்படுகிறது. குறுக்கே 6 மைல்
நீளம் வேறொரு கால்வாய் வெட்டி தண்ணீரைத் திருப்ப
இருக்கிறார்கள். அதிலே 5,000 ஏக்கருக்கு வரப் போகிறது. அந்த
தண்ணீர் கள்ளக்குரிச்சிக்கு வந்தால் உளுந்தூர்பேட்டை வழியாக
வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் முன்னதாகவே கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். இதையும் செய்ய வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கடலூர் திருவத்திபுரம்
அணைக்கட்டு மூலமாக 2,000 ஏக்கருக்கு தண்ணீர் பாய்வதற்கு பல
ஆண்டுகளாகவே ஆணைபோடும்படி கேட்டு வருகிறோம். மழை
காலத்தில் வரும் தண்ணீரை தேக்கினால் இரண்டாவது கட்ட
பயிர் செய்ய ஏதுவாக இருக்கும். அங்கே அணை கட்டினால்
கடலூர் நகரப் பகுதியில் உள்ள 2,000 ஏக்கருக்கு
தண்ணீர் பாயும் என்று சொல்லிக் கொள்கிறேன். திண்டிவனம்
பக்கத்திலுள்ள மரக்காணம் என்ற இடத்துக்கு அருகே கந்தாடு
என்ற இடத்தில் சிறிய அணை போட்டு, கடலில் வீணாகப் போய்
விழும் நீரைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்
கள். 1960 முதலே சொல்லப்பட்டு வருகிறது, யாரும் அதை
எடுத்துச் செய்ய முன்வரவில்லை. நேரடியாகக் கடலில் போய்
விழும் தண்ணீரை, இப்படிப்பட்ட அணைக்கட்டு கட்டி தேக்கினால்,
அங்கேயிருக்கிற சுமார் 600 ஏக்கர் நிலத்துக்குப் பாயும் என்று
தெரிவித்து வருகிறார்கள். கடலூருக்குப் பக்கத்தில் உப்பலவாடி
கிராமத்தில் 500 ஏக்கருக்கு மேல் தண்ணீர் பாய வசதி இருந்தும்,
உப்புத் தண்ணீர் கலக்கின்ற காரணத்தால் நெற்பயிர் உற்பத்தி
செய்ய முடியவில்லை. அங்கேயிருந்த இஞ்ஜினியரை அழைத்துக்
கொண்டு போய்க்காட்டி அணையைக் குறுக்கே போடவேண்டும்,
பெரிய பள்ளம் வெட்டி கடலில் கொண்டுபோய் விட வேண்டு
மென்று சொன்னோம். அதற்கு லட்சக் கணக்கான பணம் வேண்டு
மென்று சொன்னார்கள். அதையும் இந்த நேரத்தில் கவனத்தில்
எடுத்துக்கொள்ளவேண்டும். அத்துடன் இந்த மருத்துவத்
துறையில் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். எங்கள் ஜில்லா பின்
தங்கிய ஜில்லா. எண்ணற்ற டாக்டர்களைத் தயார் செய்வதற்காக
நான்கு மருத்துவக் கல்லூரிகள் வைக்கப் போகிறீர்கள். பணி
வாகக் கேட்டுக் கொள்கிறேன். பின் தங்கிய ஜில்லா, பின் தங்கிய
இனத்தவர், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகிற மணிலாக் கொட்டை
ஜில்லா என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஜில்லாவில்
மருத்துவக் கல்லூரி ஒன்று வேண்டும். நான்கில் ஒன்று தென்னாற்
காடு ஜில்லாவில் எந்தப் பகுதியிலாவது கொடுங்கள் என்று
சொல்லிக்கொண்டு, கூட்டுறவுத் துறையைப்பற்றி சில வார்த்தை
கள் சொல்லி முடிக்கிறேன். ஏராளமாக பணத்தை நம் அரசாங்கம்
அவர்கள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. துரிதமாக
வேலை நடப்பதற்கு நாம் தூண்ட வேண்டும். கூட்டுறவுத் துறையில்
பின் தங்கிய இனத்தவர்களுக்கு எங்கெங்கே தேவையோ அங்கே

யெல்லாம் கூட்டுறவு சொசைட்டி ஏற்படுத்த வேண்டுமென்று
சர்க்கார் உத்திரவிட்டும் கவனிப்பதில்லை. கால தாமதம் செய்து
கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஒன்று சொல்லுகிறேன். நான்
இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக நமது கூட்டுறவு அமைச்சரைக்
கேட்டபோது, இந்தத் தமிழகத்தில் இருக்கக்கூடிய பின் தங்கிய
வகுப்பான சலவைத் தொழிலாளர்களுக்கு, தொழில் கருவிகள்
வாங்கவும், பொருளாதாரத் தரம் உயரவும் கூட்டுறவுச் சங்கங்கள்
அமைத்துக் கொடுப்பதாக சொன்னார்கள். தொழில் துறை
அமைச்சர் அவர்கள் 3 லட்சம் ரூபாய் கொடுத்து 13 ஜில்லாக்
களிலேயும் கூட்டுறவு சங்கத்தை அமைத்துக் கொடுத்து இருக்கிறார்
கள். ஒவ்வொரு சங்கத்துக்கும் 100 மெம்பர்கள் என்றுதான்
கடன் வசதி கொடுத்தார்களே தவிர, 2, 3 ஆண்டுகளாகியும் மேலும்
அதிகமான வசதி செய்து கொடுக்கவில்லை. இதைப்பற்றி கூட்டுறவு
ரிஜிஸ்ட்ராரைக் கேட்டால் இவ்வளவு தான் கொடுக்க முடிந்தது
என்கிறார்கள். இதற்கு மேல் கொடுக்க முடியாது என்று
சொல்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவிலேயும் 20, 30
ஆயிரம் பேர்கள் சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
100 பேர்களுக்குத்தான் சொசைட்டி இருக்கிறது. மேலும்
கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு இட்டாலும்,
ரிஜிஸ்ட்ரார் கவனிப்பதில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்
திலாவது ஒவ்வொரு சொசைட்டிக்கும் 100 பேர் என்று இருப்பதை
விட்டு, வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக்கிக்
கொடுக்கும்படி ரிஜிஸ்ட்ராருக்கு உத்தரவு இடும்படி கேட்டுக்
கொண்டு இந்த நேரத்தை எனக்கு ஒதுக்கியதற்கு நன்றி
தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. வி. ராமசாமி** : கனம் உதவித் தலைவர் அவர்களே, 5-20
இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்துப் பேச p.m
விரும்புகிறேன். "திட்டமிட்டுச் சட்டமியற்று, சட்டப்படி
நடந்துகொள்" என்ற முறை மகத்தானது. ஒவ்வொரு
ஐந்தாண்டுத் திட்டமும் நல்ல முறையில் நிறைவேறியுள்ளன.
இதுவரையிலும் சிற்சில காரியங்களைச் செய்து கொண்டுவந்தோம்.
குழந்தை பிறந்த பிறகு அது கவிழ்ந்து, நகர்ந்து, தவழ ஆரம்பிக்
கிறது. அதற்குப் பின் அதற்கு நடை பழக்குகிறோம். பிறகு
அதன் உடம்பை நல்ல முறையில் போஷித்து பள்ளிக்கு அனுப்பி,
அதன் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறோம். அதற்குப் பிறகு
திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து—அதாவது சின்னப் பள்ளிக்
கூடத்திலிருந்து—காலேஜுக்கு அனுப்பி, அதன் பின் அவனை ஆண்
மகனாக ஆக்கி உலகிற்கு சேவை செய்வதற்கு அனுப்புகிறோம்.
அந்த முறையிலேயே நாட்டையும் நன்றாக உருவாக்க அரசாங்கத்
தார் பல நல்ல காரியங்களை செய்து வருகிறார்கள் என்பது எல்லோ
ருக்கும் தெரிந்த உண்மை. சில திட்டங்களில் சில சிறு சிறு
குறைகள் இருக்கத்தான் செய்யும். எவ்வளவு நிறைய நன்றாகச்
சாப்பிட்டாலும் உணவில் ஒரு ரோமமோ நூலோ இருந்து அது
தொண்டையில் சிக்கிக் கொண்டால் சாப்பிடுவது கஷ்டமாகி
விடுகிறது. எனவே கஷ்டங்கள் ஏற்படுவது சகஜமே. அதனால்
திட்டங்களைக் கைவிட முடியாது. திட்டங்களில் கோளாறுகள்

[திரு. கே. வி. ராமசாமி] [5th August 1965

இருந்தாலும் அவைகளை நீக்கி பல நல்ல காரியங்களை நம் சர்க்கார் செய்து வருகிறது. நாடு சுதந்திரம் பெற்று 17, 18 ஆண்டுகள் ஆகின்றன. சுதந்திரத்திற்கு முன்பு இருந்த நிலையுடன் இன்றுள்ள நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் புலனாகும். சுதந்திரத்திற்கு முன் எத்தனை கிராமங்களில் பள்ளிகள் இருந்தன என்று பார்க்க வேண்டும். நான் படித்த காலத்தில் எங்கள் கிராமத்திலிருந்து 12 மைல்களுக்கு அப்பால் ஒரு ஹைஸ்கூல் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல 12 மைல்கள் நடக்க வேண்டும்; அல்லது மூன்று நான்கு மைல்கள் நடந்து சென்று அதற்குப் பிறகு ஜட்கா வண்டியில் செல்ல வேண்டும். இப்போது நிலைமை அப்படி அல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் இப்போது ஹைஸ்கூல் இருக்கிறது. இரண்டு, மூன்று மைல்களுக்கிடையில் இப்போது பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சரியானபடித் திட்டமிட்டு திட்டங்களை நன்றாக நிறைவேற்றியதால் இவ்வளவு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பள்ளிகள் நிறைய இருந்தாலும், பள்ளிப் பிள்ளைகளின் அறிவு எப்படி இருக்கிறது என்று சிலர் பரிகாசம் செய்கிறார்கள். அந்தக் காலத்தில் ஆசிரியர்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. எல்லோரும் ஆசிரியர்களை நன்றாக மதித்தார்கள். அன்று பிள்ளைகள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருந்தார்கள். இன்று பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்? 2-ம் தேதி என் சம்பந்தமாக உரிமைக் கமிட்டியின் ரிப்போர்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. பள்ளி மாணவர்கள் அந்த நிலையில் இன்று இருக்கிறார்கள். அவர்கள் சட்ட சபை மெம்பர்களைக்கூட சபைக்கு வரும்போது உபத்திரவம் செய்கிறார்கள் என்பது குறித்து நாம் வருத்தப்படாமல் இருக்க முடியாது. சிகரெட்டுக் குடிப்பவர்கள் தான் மாணவர்கள், பூட்ஸும் பாண்டும் போட்டுக்கொள்பவர்கள்தான் மாணவர்கள் என்று இந்தக் காலத்து மாணவர்கள் நினைக்கிறார்கள். அந்தக் காலத்தில் அப்படி அல்ல. அன்று காந்திஜி மாதிரி மாணவர்கள் துண்டைக் கட்டிக்கொள்வார்கள். அவர்கள் உபாத்தியாயர்களிடம் பயபக்தியுடன் இருப்பார்கள். உபாத்தியாயர் வந்தால், பெற்றோர்கள் 'ஐயர் வந்துவிட்டார்' என்று சொல்வார்களே தவிர உபாத்தியாயர் வந்துவிட்டார் என்று சொல்ல மாட்டார்கள். அரிசி, பருப்பு, மிளகாய், காய்கறி ஆகிய எது கேட்டாலும மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து உபாத்தியாயருக்குக் கொண்டு போய்க் கொடுப்பார்கள். மாணவனின் வீடு உபாத்தியாயர்களுடைய சொந்த வீடு போல இருந்தது நகரங்களில் எப்படி இருந்ததோ, எனக்குத் தெரியாது. கிராமங்களில் குடியானவர்கள் உபாத்தியாயர் எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள். 'உபாத்தியாயருக்குக் கொடுத்தேன்' என்று பையன் சொன்னால் தாய்மார்களும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். உபாத்தியாயர்களும் நன்றாக பாடம் சொல்லிக்கொடுப்பார்கள். ஒரு உபாத்தியாயரிடம் நான் படித்தேன். அவர் ஒரு நாள் சொல்லிக்கொடுத்ததை மறு நாள் தலைகீழாக ஒப்பிக்க வேண்டும். ஏதேதோ கணக்குகள் படிக்க வேண்டியிருந்தது. இந்தக் காலத்து மாணவர்களுக்கு அவை தெரியுமோ என்னமோ தெரியவில்லை. இன்று எஸ்.எஸ்.எல்.சி. படிப்பவனிடம் 16 × 9 என்ன என்றால் உடனே பதில் சொல்ல

5th August 1965] *[திரு. கே. வி. ராமசாமி]*

மாட்டான். அதற்கு அவன் பதில் சொல்ல நேரம் ஆகும். அந்தக் காலத்தில் படிப்பிற்கு அதிகச் செலவும் ஏற்படவில்லை. அன்று ஓலைச் சுவடியில் படித்தோம். இன்று பையன்கள் தூக்கிச் செல்லும் புஸ்தகங்களைப் பார்த்தால் முதுகு ஒடிந்துவிடும் போல் இருக்கிறது. இவ்வளவு புஸ்தகங்கள் இருந்தும் அறிவு வளரவில்லை. இவ்வளவு படிப்புப் படித்தால் பனை மர உயரத்திற்கு அறிவு வேண்டுமே; அப்படி வரவில்லையே என்று நான் வருத்தப்படுவது உண்டு. இத்தனை புத்தகங்களில் அத்தியாவசிய அறிவுக்கான புத்தகங்கள் மிகக் குறைவு.

மாணவர்களுக்கு சிறு வயதிலிருந்தே தேசிய ஆர்வம் வளர வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சொன்னார். அவர் ஆசிரியராதலால் குழந்தைக்கு எப்போது எதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். இதையெல்லாம் ஆசிரியர்களுக்கு விட்டுவிடுகிறேன். ஐந்து வயது ஆன பிறகு படிப்பிற்குப் பணம் வேண்டியபோது பையன் வந்து அழுவான். அது தான் நமக்குத் தெரியும். மற்றவைகளை ஆசிரியர்கள் கவனிக்கட்டும். ஆசிரியர்களின் நலனை கவனிக்க வேண்டியது நம் முக்கிய கடமை. சுதந்திரம் அடைந்துள்ள நாட்டை மாணவர்கள் காத்துப் பரிபாலிப்பதற்கான நல்லறிவைத் தரக்கூடிய நல்ல பாடப் புத்தகங்களை அவர்கள் படிப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்ய வேண்டும். சுதந்திரம் பெற்ற இந்த பாரத நாட்டைப் பரிபாலிக்க வேண்டிய கடமை இனிமேல் இளைஞர்களைச் சேர்ந்தது. 5–30 p.m.
ஆகையால் தேசிய வீரர்களுடைய சரித்திரத்தை, சுதந்திரம் பெறுவதற்கு அவர்கள் செய்த தியாகங்களை, பட்ட கஷ்டங்களை இளைஞர் தெரிந்துகொள்ளும்படி பாடத்திட்டம் அமையவேண்டும். எப்படி அடிமைத் தளையிலிருந்து விடுபட்டோம் என்பதையெல்லாம் சந்ததிகள் உணரச்செய்யவேண்டும். அப்படிப்பட்ட சுதந்திரத்திற்காக தங்களுடைய சம்பாத்தியம், தொழில், மனைவி, மக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு போராடியவர்கள், கஷ்டத்தை அனுபவித்தவர்கள் இன்றைக்கு தெருத்தெருவாக பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சாப்பாட்டுக்குக் கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்றால் சோஷலிச மயமாகக்கூடிய இந்த நேரத்தில் இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகள் கஷ்டப்படுவதை உயிரோடு இருந்து கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாடமாளிகை, கூட கோபுரங்களில் சிலர் வாழவும், சபாட்டுக்குக்கூட இல்லாமல் கால்போய், கை இழந்து, கண்ணைப்பறிகொடுத்து விடுதலைக்குப் பாடுபட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிச்சை எடுப்பது அகவுரவம் என்று மானத்தோடு வாழ்வதற்காக பட்டினியோடு இஞ்ச்இஞ்சாக உயிரை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் அவர்களுக்காக ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அதற்காக கவலைப்படாமல் இருக்கமுடியவில்லை. அவற்றை முதலில் செய்யவேண்டும். இல்லாவிட்டால் துரோகிகள் என்றுதான் நம்

மைச் சொல்வார்கள். அவர்கள் அப்படிக் கஷ்டப்படாமல் சம்பாத்தியத்தில் ஈடுபட்டிருந்தால், கள்ளமார்க்கெட்டில் தொழில் நடத்தியிருந்தால் இப்போது எவ்வளவோ சேர்த்து வைத்திருக்க முடியும். தேசம் பெரிது என்று அதற்காக தியாகம் செய்ததால் அவர்கள் இன்று கஷ்டப்படுகிறார்கள். அதைக் கவனிக்கவேண்டுமென்று மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கார் ஏதோ செய்கிறார்கள். ஆனால் சரிவர அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் குழந்தைகளுக்கு சலுகை காட்டப்படுகின்றன. சிலருக்கு பூமி கொடுக்கிறார்கள் அந்த நிலத்தை வாங்குவதற்கும் அவர்கள் கையில் உள்ளதை செம்புதவலை எல்லாவற்றையும் விற்று கணக்குபிள்ளையைப் பார்த்து ஏதாவது கொடுத்துத்தான் பெறவேண்டியிருக்கிறது. முதலில் பத்து ஏக்கர் என்றார்கள். பிறகு பாசன வசதி வந்ததும் ஐந்து ஏக்கர்தான் என்றார்கள். அதையும் சிலருக்குத்தான் கொடுத்தார்கள். அதையும் வாங்கி அனுபவிக்க முடியாமல் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த நிலத்தின் பட்டாவை பிறகு உத்தியோகஸ்தர்களுக்கு மாற்றிவிட்டார்கள். அந்த ஏழைகள் எல்லாம் சென்னைக்கு வந்து மந்திரிகள் வீட்டுக்கு நேரடியாகச் சொல்லமுடியாது. அவர்கள் வாழ்வை குடும்பங்களை வாழச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவின் தியாகிகள் சங்கத்திற்கு தலைவனாகவும், மாகாண தியாகிகள் சங்கத்திற்கு உபதலைவனாகவும் நான் இருப்பதால் இந்தக் குறைகள் நன்றாகத் தெரிகின்றன. இந்த இடத்தில் அந்தகுறைகளை நான் தெரிவிக்காவிட்டால் என்னை அவர்கள் பழிகாரன், மோசக்காரன் என்று சொன்னாலும் அது குறைவு இல்லை.

அடுத்தபடியாக விவசாயிகளுடைய நிலைமைக்காக நாம் ரொம்ப நல்ல காரியங்களைக் செய்திருக்கிறோம். அதைப்பற்றி யாரும் குறை சொல்லமுடியாது. நல்ல காரியங்களைச் செய்கிறோம் என்றால், பாராமல் கெட்டது பயிர், ஏறாமல் கெட்டது குதிரை என்று சொல்வது போல நல்ல காரியங்களுக்காக சட்டம் போட்டுவிட்டால் மட்டும் போதாது. அது அவர்களை அடைகிறதா என்று பார்க்கவேண்டும். குறுக்கே நுழைந்து அவற்றைக் கெடுக்கும் பெருச்சாளிகளைப் பற்றிப் பேசிவருகிறோம். ஆகவே எந்த உதவியும் விவசாயிகளுக்கு நேரடியாகப் போய் சேரும்படி செய்வது சர்க்காரின் கடமை. கிணறு வெட்ட கடன் மானியங்களைக் கொடுக்கிறோம். அவையெல்லாம் உடனே போய் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. வெளியிடங்களில் அதிக வட்டிக்கு வாங்குவதைவிட சர்க்கார் சலுகைபெற்று கடன் வாங்கவேண்டுமென்றால் அதற்கு அதிகமாக செலவாகிறது. அதை நீக்கவேண்டும். எங்கள் ஜில்லா ரொம்ப வரண்ட பிரதேசம். சாதாரணமாக சிறிய கிணறுகள், ஆழமில்லாத கிணறுகள் என்றால் அதனுடைய ஆழம் அறுபது அடி. ஆழமுள்ள கிணறு என்பதற்கு அளவே இல்லை. அது அமெரிக்காவைக் கூட பிடிக்கும் ஆழத்திற்குப் போய்விடும். மேலேயிருந்து பார்த்தால் தண்ணீர் இருக்கிறதே தெரியாது. இரண்டு மூன்று மோட்டார்களை வைத்து தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கும் ஜில்லா எங்கள் ஜில்லா. வெள்ளைக்காரன் காலத்தில்

அங்கு மேல்பவானித் திட்டம் போடுவதற்காக கல் எல்லாம் போட்டு அளந்து வைக்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்குக் கூட எங்கள் ஜில்லாவிலிருந்து சிலர் அமைச்சர்களைப் பார்ப்பதற்காக அந்த மேல்பவானித் திட்ட சம்பந்தமாக வந்திருந்தார்கள். ஒவ்வொரு தாலுகா வாரியாக வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். மந்திரிகள் அங்கே வரும்போது சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். அவர்களும் இஞ்சினியர்களைக் கூப்பிட்டு சொல்கிறார்கள். அவர்கள் பிறகு பார்க்கலாம் என்று கடத்திக்கொண்டே போகிறார்கள். நாங்கள் ஊருக்குப் போகும்போது எங்களைப் பார்த்து மக்கள் என்ன மந்திரியைக் கேட்டீர்களா பார்த்தீர்களா என்று கேட்பார்கள். ஆகட்டும் என்றார்கள் என்போம். அதற்கு அவர்களும் ஆகட்டும், ஆகட்டும், இந்த 1967 வரட்டும், பிறகு ஆகட்டும், என்று ஒரு போடு போடுவார்கள். அவர்களை சமாதானமாக சிரிக்க சிரிக்க ஏதாவது சொல்லி சமாளிக்கிறோம். 'பார்த்தோம், அவசியம் செய்யப் போவதாக சொன்னார்கள், இப்போது சிறிய வேலைகளைச் செய்து வருகிறார்கள், இனிமேல் இதுபோன்ற பெரிய வேலைகளை எடுத்து செய்வார்கள். வந்து விடும் கவலைவேண்டாமென்று' ஏதோ சாக்குபோக்குகளை சொல்லி கடத்திவருகிறோம். ஆகையால் மேல்பவானித் திட்டம் எங்கள் ஜில்லாவுக்கு மிகவும் அவசியம். பாசனம்கூட அவர்கள் கேட்கவில்லை. ஆங்காங்கே குளங்கள், 5-40 p.m. குட்டைகள் வெட்டி தண்ணீர் வரும்போது அவற்றை நிரப்பி வைத்துக்கொள்ள வசதியிருந்தால் போதும். அதுதான் எங்கள் கோரிக்கை. இன்னொன்று: விவசாயிகளுடைய குழந்தைகளைப் படிக்க வைக்கிறது ரொம்ப கஷ்டம். முக்கியமாக எங்கள் ஜில்லாவிலுள்ள கவுண்டர்கள்—வேளாளர்களுக்கு கொடுத்திருக்கிற பட்டம் முன்னேற்ற சமூகம் பார்வார்டு கம்யூனிட்டி. இது எப்படி ஆயிற்று என்று தெரியவில்லை. இவன் விவசாயத்தைக் கவனிப்பானா, பிள்ளைகளுக்கு புத்தகம் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருப்பானா? வருவாய் இல்லை என்ற சமயத்தில், பள்ளிக்கூடத்துக்கு சம்பளம் கொடுக்க வேண்டும், புத்தகம் வாங்கவேண்டும் என்று வந்தால் என்ன செய்வான்? பயணம் போகிறதற்கு எக்ஸ்ட்ரா பீஸ் எல்லாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. படித்து விட்டு தாசில்தார், கலெக்டர் வேலையா பார்க்கப் போகிறாய், போதும் படிப்பு என்று கோபத்தில் சொல்வான். இவனுக்கு உயர்ந்த சமூகப் பட்டம். நான் தான் தற்குறியாகப் போனேன், 3 பேனா ஸ்டீல் முறிந்து போய் 4-வது பேனாவில் கையெழுத்துப் போட முடிந்தது என்று பெருமையாகப் பேசிக் கொள்ளுவான், நம் பையனையாவது கையெழுத்துப் போடுகிற மாதிரி படிக்க வைப்போம் என்று படிக்கவைத்தால், காலேஜில் கொண்டு வந்து சேர்க்கலாம் என்று வந்தால், இடம் இல்லை. எங்களிடம் வருகிறார்கள் சிபாரிசு பண்ணுங்கள் என்று. மந்திரிகளிடம் போனால், பார்வார்டு கம்யூனிட்டி, நாங்கள் என்ன பண்ணுவது என்கிறார்கள். இந்த மாதிரி யார் பண்ணினார்கள்? நாம் தானே நிர்ணயித்தோம். ஜாதி மதங்களைப் பாரோம் என்று பாரதியார் சொல்லிய பிறகு ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில்லை என்று கூறி, நாம் தான் ஸோஷலிஸ சமுதாயத்தை

[திரு. கே. வி. ராமசாமி] [5th August 1965

ஏற்படுத்தி உள்ளோம். இந்த நேரத்தில் ஏழை, பணக்காரன் என்று பார்த்துச் செய்தால் அது பரவாயில்லை. இதை விட்டு விட்டு, நாம் இந்த மாதிரி திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு போனால், அதை ரொம்ப ஜனங்கள் வெறுக்கிறார்கள். கீழே இருந்து வந்து படித்து விட்டு, இடம் கிடைக்காமல் கஷ்டப்படக் கூடிய ஒருவன் என்ன நினைப்பான். மனதில் உருகி உருகி சாக வேண்டிய நிலைமையில் இருக்கிறான். ஆகவே இந்த மார்க்குக்கு கீழேயுள்ள பிற்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒருவர் கூட, இரண்டு குழந்தைகள் படிக்கின்றன, ஒன்று நல்ல மார்க்கு, ஒன்று குறைவான மார்க்கு, ஒன்றுக்கு காலேஜில் இடம் கொடுத்து விட்டு, அதிக மார்க் வாங்கிய மற்றவனுக்கு இடம் கொடுக்கவில்லை என்றால், படித்த குழந்தையின் எண்ணம் எவ்வாறு இருக்கும்? இது சோஷலிஸத்துக்கு ஒப்பாகுமா என்பது தான் என் கேள்வி? ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை அடியோடு எடுத்து விட்டு, ஏழை பணக்காரன் என்று வைத்தாலும் பரவாயில்லை. அது கூட படிக்கிற பசங்களுக்கு, ஏழை, பிச்சைக்காரன் என்று தெரியுமா? அதனால் நல்ல மார்க்கு வாங்குகிறவனுக்கு நல்ல வாய்ப்பு இருக்க வேண்டும். நமக்கு ஜாதி, மத பேதம் இல்லை என்று சொல்லிக் கொண்டு போனால், அது சரியில்லை என்று மீண்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, அடுத்தபடியாக, பயிர் இன்ஷூரன்ஸ் விஷயத்தைப் பற்றி பல தடவை பேசியிருக்கிறேன். விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், எவ்வளவு நஷ்டப்படுகிறார்கள் என்று பார்க்கும்போது, அதெல்லாம் பட்டுக்கொண்டு பயிர்த் தொழில் செய்தாக வேண்டும் என்று கடவுள் அவன் தலையில் எழுதியிருக்கிறானா? எதற்காக அவன் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டும்? சர்க்கார் ஏன் அதற்காக மானியம் கொடுக்கக் கூடாது? நமக்கு உணவு இல்லாமல் போனால், உலகம் அழிந்து போகும். அப்படியிருக்கும் நிலையில், அந்த விவசாயத்தைச் செய்கிற ஒருவனுக்கு உற்சாகம் அளிக்கக் கூடாதா? பயிர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏன் கொண்டு வரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. விளையாட்டுக்காகப் பேசுவதா? உண்மைக் கருத்துக்களைத் தெரிந்து இந்தச் சட்ட மன்றத்தில் பேசிக் கொண்டிருக்கிறேனா அல்லது சட்டமன்றத்தின் நேரத்தை வீணாக்க வேண்டுமென்று அலட்சியம் செய்து பேசிக்கொண்டிருக்கிறேனா என்று கூட எனக்கு அச்சமாக இருக்கிறது. விவசாய உற்பத்தி அதிகமாக வேண்டும் என்றால், விவசாயிக்கு தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வரும் ஆபத்துக்களைத் தடுத்து, ஆதாவு கொடுத்து, சலுகைகள் கொடுத்து, மானியத்தைக் கொடுத்து, நல்ல காரியங்கள் செய்தாலொழிய, விவசாயிகள் முன்னேற முடியாது, முடியாது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் கால்நடைகளை எடுத்துக் கொள்ளுங்கள். என்ன விலை ஆகிறது தெரியுமா? ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்குகிறான். ஒரு சின்ன நோய் வந்தால் மாண்டு போகிறது. திரும்ப வாங்க வேண்டும் என்றால், பணத்துக்கு என்ன செய்வது? ஒரு ஆயிரம் ரூபாய் என்றால் பெரிய காரியம். நமக்கு வேண்டுமானால் அலட்சியமாக இருக்கலாம். சம்பாத்தியம் பண்ணினவர்களுக்கு. நமக்கு 250 ரூபாய்

யிருக்கும் ஜில்லா எங்கள் ஜில்லா. வெள்ளைக்காரன் காலத்தில்

5th August] [திரு. கே. வி. ராமசாமி]

மாதம் கொடுக்கிறார்கள், நான்கு மாத சம்பளத்தை வைத்து, கஷ்டப்பட்டு ஒரு வேளை கஞ்சியைக் குடித்துக் கொண்டு, சமாளிக்கலாம். நான் அப்படித்தான் செய்து கொண்டு இருக்கிறேன். இப்படியே வந்தால் என்ன செய்வது? சோளம் பூச்சி விழுந்து கெட்டுப் போய் விட்டது. பருத்திக்கு அடிக்கிற மருந்துக்கு ஆகிற செலவுக்குக் கூட பருத்தி விளைகிறதில்லை. எனக்குத்தான் அப்படி கஷ்டம் ஏற்படுகிறதோ என்னவோ. என்பேரில்தான் கடவுளுக்கு கோபமோ என்னவோ ? கஷ்டமான சூழ்நிலையில் விவசாயிக்கு உதவி செய்யாமல், உணவு உற்பத்தியைப் பெருக்கு என்றால், எப்படி முடியும்? விலை ஏறிப் போய்விட்டது, இறங்க வேண்டும் என்றால், எப்படி இறங்கும் ? உணவு உற்பத்தியை அதிகப் படுத்தினாலொழிய, விலைவாசியை இறக்க முடியாது. ஆகவே விவசாயிகளுக்கு தகுந்த ஆர்வத்தை ஊட்டி உணர்ச்சியைக் கொடுத்து நல்ல விதத்தில், நான்காவது திட்டத்தில் விவசாயிகளுக்கும் தியாகிகளுக்கும் நல்ல முறையில் செய்து, படித்த மாணாக்கர்களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்கு வேண்டுவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனை ஆயிரம் கொடுத்தாலும் பரவாயில்லை, இடம் கிடைத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு மாணவனுக்கும் 10, 15 பேர்கள் சிபாரிசு பண்ணுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்கு வேண்டுமானாலும் ரெடி. அந்தக் குறைகள் எல்லாம் இல்லாமல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நல்ல முறையில் நாடு முன்னேற்றம் அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிந்து, அமைச்சர்களும் வேண்டுவன செய்து, விவசாயிகள், தியாகிகளை மனதில் வைத்து, முக்கியமான அவர்களை மறந்து விடாமல், வேண்டுவன செய்ய வேண்டுமென்று அடிப்பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow. 5-47 p.m.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

*171. *Notification issued with G.O. Ms. No.* 2023, *Home, ment and Local Administration, dated* 13*th March* 1965 *making amendmens to the rules relating to restriction and control to regulate the use of porambokes in ryotwari tracts by panchayats* [*Laid on th Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* 35 *of* 1958).]

* Laid on the Table of the House on 30th July 1965.

[5th August 1965

* 171. *Notification issued with G.O. Ms. No. 2023, Home, dated 9th June 1965 exempting from payment of tax for the vehicle bearing registration No. MDE. 8585 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to Sri Avanashilingam Home Science College, Coimbatore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act 1931 (Madras Act III of 1931).]*

B. Reports, Notifications and other papers.

* 27. *Notification issued with G.O. Ms. No. 2834, Industries, Labour and Co-operation (Labour), dated 1st June 1965 making amendment to the Minimum Wages (Madras) Rules, 1953.*

* 28. *Short review of the activities of the Public Works Department during the first half of the year 1963-64 in so far as they relate to Major Building Schemes.*

* Laid on the Table of the House on 31st July 1965.

யிருக்கும் ஜில்லா எங்கள் ஜில்லா, வெள்ளைக்காரன் காலத்தில

5th August]

APPENDIX.

[*Vide* answer to Starred Question No. 51 on page 267-267]

(*a*) Yes.

(*b*) (i) The following steps have been taken by the Government to relieve the difficulties of the weavers in the co-operative sector :—

(1) The Government have sanctioned a temporary advance of Rs. 50 lakhs to the Tamilnadu Handloom Weavers' Co-operative Society for the purose of increased procurement of handloom cloth produced by the primary weavers' co-operative societies including silk, artsilk and other non-cotton and mixed fabrics.

(2) Government have increased the rate of rebate on wholesale sales of handloom cloth made by Weavers' Co-operative Production Societies from 3 Paise to 5 Paise for the period from 1st June 1965 to 31st July 1965.

(3) Consumers' Co-operatives are also given reimbursement of rebate of 5 Paise in the rupee in respect of the sales of handloom cloth procured by them from Weavers' Co-operative Societies for the period from 1st June 1965 to 31st July 1965.

(4) Sale of silk and artsilk, mixed, non-cotton fabrics made by Weavers' co-operative production societies are also made eligible for the rebate of 5 Paise in the rupee for the period from 1st June 1965 to 31st July 1965.

(ii) No.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Friday, the 6th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman THE HON. SRI M. A MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. CHAIRMAN : It is rather regrettable that to-day also a few questions have to be postponed. They are questions 62 to 64.

Small-scale cement factory

* 61 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government of Madras to start a small-scale cement factory;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether the Government's assistance will be forthcoming to start such a factory under private sector?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have purchased a small-scale pilot cement plant designed by the Defence Ministry and intend to set it up near Dalmiapuram. After the results of the working of the pilot plant are known, it is proposed to set up a commercial plant in Reddipalayam with a capacity of 75 to 80 tons per day.

(*c*) Yes.

SRI S. K. SAMBANDHAN : What will be the cost of setting up a small-scale cement factory with a capacity of 70 to 80 tons?

THE HON. SRI R. VENKATARAMAN : Roughly about Rs. 30 to Rs. 35 lakhs.

திரு. க. அன்பழகன் : *தலைவர் அவர்களே, சிறிய சிமின்டு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு தனியார்கள் எத்தனை பேருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது? எத்தனை பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள்?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *இரண்டு பேர்களுக்கு தனியார்துறையில் அனுமதி மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கோவில்பட்டியில் உள்ளது. மற்றது வள்ளியூரில் உள்ளது.*

[6th August 1965

DR. H. V. HANDE : How many such small-scale cement plants are working in the State now?

THE HON. SRI R. VENKATARAMAN : Not anywhere in India. I have seen such plants abroad. Therefore, we thought of trying the experiment in this State.

SRI S. K. SAMBANDHAN : Is it necessary to import any machinery from foreign countries for this purpose?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir. This is a plant which does not require any foreign exchange and no machinery need be imported. The whole thing is expected to be fabricated in our own country.

SRI K. S. ABDUL WAHAB : How long will it take to commence work at Dalmiapuram and how long will it take to start production?

THE HON. SRI R. VENKATARAMAN : We have dismantled the equipment, and we have brought it to Madras. Now we have to transfer it to Dalmiapuram. Actually we have got an expert from the Defence Ministry who originally designed it. He is now engaged in making the preliminary arrangements for setting it up.

(Many hon. Members rose)

THE HON. SRI R. VENKATARAMAN : This is an important question, Mr. Chairman. I request you, Sir, to give more time, and I shall answer all questions.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இத்தகைய சிறிய சிமிண்டு தொழிற்சாலைகளை அதற்கான மூலப்பொருள்கள் கிடைக்கிற பகுதிகளில் ஏற்படுத்தவேண்டிய நிலைமை இருக்கிறதா? சென்னை போன்ற மற்ற நகரங்களில் அதை ஏற்படுத்த வாய்ப்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த தொழிற்சாலையை குறைவாக மூலப்பொருள்கள் இருக்கும் இடத்திலும் வைக்க முடியும். பெரியதாக அமைக்கவேண்டுமென்றால் குறைந்தது இரண்டு கோடி டன் அல்லது 50 லட்சம் என்ற முறையில் செய்யும் அளவில்தான் வைக்கமுடியும். சிறிய தொழிற்சாலைகளை இரண்டு லட்சம் டன் மூலப்பொருள்கள் லைம் ஸ்டோன் இருக்குமிடங்களில் கூட வைக்கமுடியும். அதனால்தான் ஜியாலர்ஜிகல் ரிபோர்ட்டிலும் மினரல் வெல்த் ஆஃப் மெட்ருஸ் ஸ்டேட் என்பதிலும் கூறப்பட்டிருக்கிறது. அதன்படி பல இடங்களில் பரவலாக சிறு சிறு தொழிற்சாலைகளை அமைக்கலாம். பல இடங்களில் மூலப்பொருள்கள் சிதறிக்கிடக்கின்றன என்பதனால்தான் அவற்றையும் உபயோகிக்கும் அளவில் இதை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

6th August 1965]

DR. H. V. HANDE : What is the total quantity of cement our State is producing? Are we having enough cement or are we in short supply?

THE HON. SRI R. VENKATARAMAN : Roughly 16 lakhs of tons of cement. I do not think this is enough for our State.

SRI S. K. SAMBANDHAN : The Hon. Minister stated that the setting up of a small-scale cement factory would cost Rs. 4 to 5 lakhs . . . .

THE HON. SRI R. VENKATARAMAN : I said, "Rs. 30 to 35 lakhs."

SRI M. RAJAH IYER : Has the recent cyclone affected the Rameswaram Cement Plant proposal?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot say that. I think there is some little difficulty in pushing through that scheme.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அங்கு ஏற்படுத்தும் வகையில் வசதி செய்து தரப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வள்ளியூர் பகுதியில் வைப்பதற்கு விண்ணப்பம் வந்து அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரிக்கு அருகாமையில் அது இருக்கிறதென்று நினைக்கிறேன்.

SRI M. SUBBIAH CHETTIAR : What is the capacity of the small-scale plant for manufacture of cement? Is it economic? Can the price of cement compete with that produced by other factories?

THE HON. SRI R. VENKATARAMAN : In respect of the small-scale sugar factory, that is, the Kandasari sugar factory, the Government of India have not imposed any control over price or distribution. If the same thing is done, I am quite positive that the small-scale cement plant also will be successful and profitable. But that is a matter which we will have to take up with the Government of India. I think this is one of the best ways of utilizing small resources. To-day we are wasting a great deal of these resources which cannot be used except on a large scale. Attempt should be made, therefore, to utilize the scattered small resources and that is a matter which will have to be taken up with the Government of India.

DR. H. V. HANDE : What is the quantity of cement consumed in the public sector and in the private sector?

THE HON. SRI R. VENKATARAMAN : To-day there is no public sector cement factory.

[6th August 1965

DR. H. V. HANDE: My question is this. What is the quantity of cement consumed in the private sector and in the public sector?

THE HON. SRI R. VENKATARAMAN: We have no information.

SRI M. SUBBIAH CHETTIAR: For small-scale Kandasari sugar factories, Government have given certain facilities like charging of nominal excise duties. Will the Government give the same facilities to this factory also because the Government are now taking more than the cost of the cement as taxes? Will it be possible for the small-scale cement factory to compete with the other bigger factories under such conditions?

THE HON. SRI R. VENKATARAMAN: The experts who are now working on the scheme consider that the small factory will be able to bear all the present taxes and yet prove successful. I was saying we should take it up with the Government of India to show some concession, as otherwise the resources would be wasted and would not be utilized.

SRI K. KAMALAKKANNAN: Will the Government think of starting factories wherever raw materials are available?

THE HON. SRI R. VENKATARAMAN: Wherever raw materials are available sufficient to cater to the 30 tons or 35 tons or 80 or 100 tons capacity, it should be possible to establish.

திரு. க. அன்பழகன்: *தலைவர் அவர்களே, சிமிண்டு உற்பத்திக்கு இதுவரையில் தேவைப்படுகிற மூலப்பொருள்களாகக் கொள்ளப்படுவன தவிர வேறு ஏதாவது பொருள்களைக் கொண்டு மாற்று முறையில் செய்ய வழி உண்டா? அப்படிச் செய்யலாமென்று கருத்து நிலவுகிறதே அதுகுறித்து அமைச்சர் விளக்குவாரா?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *சிமிண்டுக்கு அடிப்படையான மூலப்பொருள் மென் ஸ்டோன்தான். அது இல்லாமல் எந்தவிதமான சிமிண்டும் செய்யமுடியாது.* flyash. slag *போன்ற பொருள்களை வைத்து கலந்து ஓரளவு செய்யமுடிகிறது. ஆனால் அதில் இருக்கிற கஷ்டம் என்னவென்றால் அந்த சிமிண்டு சீக்கிரம் 'செட் ஆகாது'.* It is not quick setting. It takes some time for setting. Only important things like bridges may not be built on this possolana cement *வீடுகள் கட்டுவதற்கு சாதாரணமாக உபயோகிக்கலாம்.* Beyond that I have no further information.

SRI M. SUBBIAH CHETTIAR: Are the Government aware that bogus cement has been manufactured in several places as in Tiruchirappalli and other districts? What action have the Government taken to prevent these malpractices?

THE HON. SRI R. VENKATARAMAN: We have instructed the Director of Industries to check up all those places where they pretend to manufacture cement and we will take appropriate action in this behalf.

6th August 1965]

SRI S. K. SAMBANDHAN: Since these factories do not require any foreign components, will this Government entertain all the applications coming forth from the residents of this State and see that they get licences from the Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN: First we have already got licences for two people. It is still in a state of experiment so far as this country is concerned. We thought of putting up a first pilot plant so that others may benefit by the experience. Government should, after all, take some promotional activity and this is one of the promotional activities that we have thought of engaging in.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: *தலைவர் அவர்களே, கோட்ட* 3-10 p.m.
யத்தில் வெள்ளை சிமிண்டு செய்வதாகவும் அதை பம்பாய் முதலிய இடங்களுக்கு அனுப்புவதாகவும் அதில் லாபம் வருவதாகவும் அறிகிறோம். அப்படி ஏதாவது நம்முடைய மாகாணத்தில் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: *அந்த விதமான சிமிண்டு தொழிற்சாலை இங்கு இல்லை.*

SRI M. SUBBIAH CHETTIAR: Is there any possibility of cement being sold freely to the ordinary consumers? To get a bag of cement is a great problem for the ordinary man in spite of increased production of cement. Therefore will the Government think of decontrolling cement?

THE HON. SRI R. VENKATARAMAN: It is the view of the Government that if it is decontrolled, the poorer sections of the people will not be able to buy even this little quantity which they are now getting, and the prices also will sky-rocket.

DR. H. V. HANDE: What is the price at which it is sold by the State Trading Corporation and what is the cost price at which it is sold by the companies?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, a separate question may be put.

SRI S. K. SAMBANDHAN: There is a feeling among the public that most of the cement produced is consumed by the Government and quasi-Government departments and the public do not get anything at all. Will the Government see that the public get a little more than what they get at the present time?

THE HON. SRI R. VENKATARAMAN: What is the Government doing to-day? It is doing all the constructions for the public welfare, such as hospitals, schools, etc. All thes are welfare measures, and I do not see why we should deprive all these public institutions and give cement only to private people to build palaces and theatres?

[6th August 1965

Cashew cultivation

* 65 *Q.*—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the extent of cashew cultivation in Madras State under the forest department;

(*b*) the expenditure incurred during 1963–64; and

(*c*) the income realised therefrom?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : (அ) 1963-64 ஆண்டு வரை, ஐம்பத்தையாயிரத்து தொளாயிரத்து எட்டு ஏக்கரா (55,908).

(ஆ) ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து மூன்று ஆயிரம். (ரூ. 1,23,000).

(இ) 1963-64 ஆண்டில், ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரத்தி தொளாயிரத்து முப்பத்தி ஏழு (ரூ. 2,10,937).

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த முந்திரி சாகுபடி மாவட்டவாரியாக எவ்வளவு செய்யப்படுகிறது என்று சொல்லப்படுமா?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : சார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருநெல்வேலி, ராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இதுவரையில் அதன்மூலம் உற்பத்தியான முந்திரி பருப்பு cashew nut எவ்வளவு?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : என்னிடத்தில் அந்தக் கணக்கில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அரசாங்கம் அறுவடை செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா? எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இப்போது என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த முந்திரி சாகுபடிக்கு தட்ப வெப்ப நிலைகள் தனிப்பட்ட முறையில் எதாவது தேவைப்படுகிறதா? இதற்கு முன்பு அந்த மாவட்டங்களில் அந்த சாகுபடி நடைபெற்றதா?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இப்போது நான் சொல்லியதுபோல ஆறு மாவட்டங்களில்தான் காட்டு இலாகா மூலமாக இதைச் செய்துவருகிறேன். மற்றும் அவர்கள் கேட்கிற கேள்விக்கு தனியாகக் கேள்வி போடவேண்டும்.

6th August 1965]

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : முந்திரி உற்பத்தி செய்வதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தரிசாக கிடக்கிற செம்மண் பகுதி நிலங்களில் அரசாங்கம் நேரடியாக ஏதாவது முந்திரி பயிர் செய்யமுடியுமா?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : இதைப்போன்று அடுத்த ஜில்லாக்களிலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிரிடவேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறோம். எங்கெங்கு செய்யப்படுமென்று இப்போது சொல்வதற்கில்லை.

Agricultural Co-operative Banks and Co-operative Credit Societies

* 66 *Q.*—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the rate of interest on which loans were granted to Agricultural Co-operative Banks and Co-operative Credit Societies during 1961–62;

(*b*) the rate of interest at present; and

(*c*) the reason for converting the short-term loan to a shorter term loan?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : (அ) 1961-62-ல் வேளாண்மைக் கூட்டுறவு பாங்குகளுக்கும், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களுக்கும் வழங்கிய குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களுக்கு முறையே 5 சத விதமும், 6 சத விதமும் கூட்டுறவு மத்திய பாங்குகள் வட்டி வாங்கி வந்தது.

(இ) வேளாண்மைக் கூட்டுறவுப் பாங்குகளுக்கும், கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்களுக்கும் இப்போது வழங்குகிற குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களுக்கு முறையே 6.7 சத விதமும், 7.95 சத விதமும் கூட்டுறவு மத்திய பாங்குகள் வட்டி வாங்குகின்றன.

(உ) இச் சங்கங்கள் தமது அங்கத்தினர்களுக்கு வேளாண்மை உற்பத்திச் செலவுக்காகக் குறுகிய காலக் கடன்கள் வழங்குகின்றன. இந்தக் குறுகிய காலக் கடன்கள் ஓராண்டுக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். இப்போது "பயிர்ப் பட்டத்தில்" மட்டுமே இக் கடன் வழங்கப்பட்டு வசூலிக்கப் படுகிறது. இக் கடன்களை, மாசூல் விற்றுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதால், இவற்றைத் திருப்பிச் செலுத்தும் கால அளவு சாகுபடி செய்த பயிர்களின் கால அளவைப் பொறுத்து, அறுவடைக்குப் பின் மாசூலை விற்பதற்குச் சுமார் இரண்டு மாதம் தள்ளி நிச்சயிக்கப்படுகிறது. ஆகவே, பெரும்பான்மையான பயிர்களின் சாகுபடிச் செலவுக்காக வழங்கும் இவ் வகைக் கடன்கள் ஓராண்டுக்கும் குறைந்த காலக் கடன்களாகும்.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, are the Government aware that the policy of collecting the loan amounts, both the short and long term loans, after one year from the harvest, has been changed and the ryots are forced to pay the amount within two months of the harvest, even though they are not able to sell the produce within such a short time?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : சார், ஆரம்பக் கேள்விக்கு பதில் சொல்வதில் விளக்கம் கொடுக்கப்பட்டது. வேளாண்மையைப் பொறுத்துத்தான் கடன் கொடுக்கிறோம். வேளாண்மைக்கு நான்கைந்து மாதங்கள் என்று வைத்துக் கொண்டால் அதற்குப் பிறகு இரண்டு மூன்று மாதங்கள் அவற்றை விற்பனை செய்வதற்கு காலமளித்துத்தான் கேட்கப்படுகிறது. அதைப் பார்க்கும்போது ஒவ்வொரு ஆண்டுக்கும் குறைவாகத் தான் இருக்கும்.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, some three or four years ago the ryots paid the loan instalments after a year from the harvest, whether it was single crop, double crop or triple crop land. But now the Government insist that immediately after the harvest, the ryots must pay the amount. The ryots feel that it is impossible for them, and it will not be in their interest. So will the Government revise their policy and give them one-year loan?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் : நான் சொல்லியது போல குறுகிய காலக் கடன் என்று கேட்கும்போது பயிரைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பார்த்துவிட்டுத்தான் அந்த முறையில் செய்தார்கள். இப்போது விளைச்சலை அடிப்படையாக வைத்து கடன் கொடுக்கிற நிலைக்கு அதுதான் காரணம். விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு அவசியமாகக் கடன் கொடுக்க வேண்டும்.

There is a significant sentence here in the draft Fourth Five-year Plan. In the drainage schemes, it is stated that we will so arrange that the Cooum flavour, which we get, will be stopped for ever. That is what is written on page 116 of the plan. Sir, I put in this query, " What about the Buckingham canal ? ". The smell of it is much greater in many places. The Buckingham canal is all right on the other side of Kattupalli. This side of Ennore it is bad. The canal is defiled. The Buckingham canal is in a hopeless condition in our City. Something must be done to remove the odour. Otherwise, we in the metropolis cannot be happy about it and cannot be proud of our metropolis. Therefore, I put in this query, " What about the Buckingham canal? ". They completely forgot about the Buckingham canal.

Then, we are not at all satisfied with the milk supply. Sometimes we do not get proper milk. Toned milk is supplied sometimes. Cards are utilised for other purposes. Something must be done to see that the distribution of milk is properly done. However much in Madhavaram the Government have a beautiful colony and describe about it here in this plan, our people would not appreciate unless they get good and proper milk. In Bombay they are doing it very well. I recently went to Bombay. It is working all right there. We get proper milk at the proper time. There is no complaint about it. Bombay is also a big place. Therefore
4-20 p.m. I think we can solve it. We in Madras can never be behind Bombay. Our reputation is so great. Therefore, I think we should improve the situation as soon as possible.

Salvaging of dry cows is very important. There was one place here Adambakam, where they used to have those cows. Now they say, " Do not bring any cows ". (Interruption). If we keep the cows in our house, they never become pregnant. Family planning is most effective among cows. They became sterile. Therefore, we have to sell them at low prices. That is our experience. Therefore it is necessary to salvage dry cows so that in a big place they may roam about and go on with breeding bulls. Then they will be happy and become pregnant. Salvaging of dry cows is the most important thing.

There are some small points with which I would not like to trouble the House. But it is stated towards the end of Part I of the Plan, " The State has managed to finance the entire increase in Plan outlay from out of its own resources secured through additional taxation effort, curbing of tax evasion and strict economy in regard to non-Plan expenditure. To the extent we continue to enforce such economies and formulate measures for putting down evasion of tax, our task in regard to financing of the Fourth Plan will become far more manageable." They are very careful

6th August 1965] [Sri K. Balasubramanya Ayyar]

in their wording because the outlay is Rs. 750 crores. They had managed to raise the outlay from Rs. 291 crores to Rs. 340 crores. They were able to manage about Rs. 48 crores. But now the outlay is Rs. 750 crores. Therefore, I would suggest that the Plan can very well be postponed for another two years. I have been mentioning this in this House and in other places. I find other people also say like this. Even wiser men say like that. That is why I am happy. Long ago it was said that this man was an enemy of planning. What I say is the Planning Commission also see this truth. They established a cell to survey the things that had been done according to the Plan. The cell seems to be a cell only. It does not seem to improve. It must find out whether all the projects envisaged have been implemented effectively. Afterwards, it may be necessary to provide for anything over and above it in the Fourth Plan. That is the proper procedure. Somebody talked of a holiday to planning. Consolidation is necessary. Therefore, give respite for a year or two. Let the foreign exchange improve. Let foreign loans be reduced. Let prices also stabilise. After some satisfactory background is established, we shall have these plans again. That will be my appeal.

So far as this Plan is concerned, we need not have an ambitious plan for Rs. 750 crores. We should not be obvious of the circumstances in which this Plan is being prepared. This is something like a person, who is about to be hanged as Lord Chatham said, " Who sleeps on the stake ". Without knowing the difficulties let us not go on planning like Nero fiddling while Rome is burning. The Plan outlay may be reduced, priority being given to things which are absolutely necessary. Schemes which would require foreign exchange may be postponed.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I would like to make a few observations about this draft Fourth Five-Year Plan. Sri Balasubramania Ayyar has clearly stated enough about some of the important factors. I would add only a few points. So far as this Plan is concerned, I am also of the opinion that this is a very ambitious plan. The Planning Commission has become, as somebody put it, a super-Cabinet. Its members are not at all responsible people. The difficulties of implementing this Plan will be understood by the Chief Minister here and also by our Industries Minister. They know the practical difficulties of implementing this Plan. Sitting in a far-off place and without knowing the difficulties in each and every State, to draw up an ambitious Plan will bring disaster. Because of the Plan, we have resorted to heavy borrowings. On this account the foreign exchange position has become very critical and inflation has set in. Naturally we find skyrocketing of prices. The middle class people are hard hit. This is a very sorry state of affairs. I wish the Planning Commission would take into consideration all these factors before finalising the Plan very soon. The foreign exchange position is very deplorable and it is assuming alarming proportions. I

do not know where it will lead us to. The Prime Minister has said and also experienced economists have said that planning should proceed a little slowly. Then hon. the Deputy Leader of the
4-30 p.m. Opposition said that there should be a holiday for two years for these plans. I will go a step further and say that it shoud be postponed for at least five years. Otherwise, it will not be possible for us to carry on the existing things even. In the meantime, we will have to stabilise prices. We must depend on the resources available with us and see that the Plans that have gone before are implemented to the utmost extent possible.

Sir, with regard to industries, I find from the papers supplied to us and from the statement of the Hon. Minister this morning that so far as industries depending on indigenous materials are concerned, nobody's permission should be required for starting them. But I know a lot of delay is caused in starting such industries also. So far as these industries are concerned, where there is no question of foreign exchange involved, they should be enabled to come up without anybody's help. But so far as the industries which require foreign collaboration or import of foreign machinery, are concerned, they should be pulled up and tightened and they should be made to put forth all their efforts to produce more so that they could export as much as possible and earn more foreign exchange. That is a very important matter and should be taken into serious consideration by the Hon. the Minister for Industries. So far as the internal resources are concerned, they should be exploited to the fullest extent possible.

Sir, so many experts say that the currency should be devalued and so many others say that it should not be devalued. There is a difference of opinion among experts on this question. I am not here to talk on that subject with any authority. But my impression is that it has already been devalued because the purchasing power of the people has gone down considerably. The value of the rupee is only 40 per cent of its original value. That is the position to-day.

Sir, regarding the repayment of loans, we find from the statement furnished that the State Government have to pay Rs. 107 crores to the Government of India. I would request the Hon. Minister to see if we cannot ask for the postponement of the repayment of this amount. If we have to repay such a heavy amount, it will be a great drain on our resources. If the Central Government cannot postpone the collection of these loans, they must give us sufficient aid to carry out our plans. This is another submission of mine.

Of course, Sir, I know all steps are taken by the Government to check tax evasion to the extent it is possible. But the check exercised should be such that it would not affect or diminish the business. I should think, Sir, on account of the heavy taxation, there has been this tax evasion. The Government must take into

consideration the tax paying capacity of the industries or business and then only levy the taxes. If that is done, there may not be so much of evasion as is complained of by the Government, though there is bound to be some evasion.

Sir, with regard to agriculture, with a view to augmenting food production, it is essential that we should have an All-India irrigation grid, linking all rivers so that there could be a good control over irrigation potential and power potential also. That is my submission. We have known, Sir, that people like Sir C. P. Ramasami Ayyar were talking in terms of linking the Ganges with the Godavari and the Godavari with the Cauveri and all those things. There should be an all India grid to link all rivers. So far as our State is concerned, we have exhausted all our major irrigation sources, and we should now concentrate our attention on minor irrigation. Some of these works have been entrusted to the Panchayats and the work done by them is not up to the mark. The progress is very slow. Government should take this work away from these Panchayats and Unions and put it directly under the control of a Superintending Engineer if necessary and go ahead with all the speed, about improvement of irrigation tanks, desilting and other works. There must be a complete and thorough investigation and it should be done as quickly as possible. Otherwise, it would not be possible to step up food production.

Regarding sinking of wells, immediately after the last war, with a view to stepping up food production, Government came forward with the grant of heavy subsidy to agriculturists with the result that in the composite State of Madras they were able to sink nearly 10,000 wells in the year, especially in the dry areas. Even if one well could command an acre, these 10,000 wells brought under foodcrops 10,000 acres. So when we are faced with a food crisis, we must take up this grant of subsidy in all seriousness and earnestness and grant increased subsidy for sinking wells and see that as many wells as possible are sunk by the ryots. The subsidy that is now given is quite inadequate in view of the fact that the cost of sinking wells has gone up to a considerable extent. The Panchayats advertise and say they will give subsidy. But they do not give subsidy for more than two wells in about 40 panchayats. Government must look into this seriously and see that the well sinking programme is speeded up.

Sir, it is being said, and the hon. Member Sri Balasubramanya Ayyar also just now said, that something should be done for utilising the idle labour. I should say, Sir, in the agricultural sector only a small percentage of people are remaining idle. The farm labourers and others do have work throughout the year. They cannot leave the village immediately after the harvest and go to the industrial area to take up some other job. As it is, industries have come up to a large extent in some semi-urban areas and rural sectors. The cost of agricultural production has gone

[Sri V. K. Ramaswamy Mudaliar] [6th August 1965

to such high extent that it is not possible to make both ends meet. In the industries at least we find the hours of work are limited to eight hours. In the agricultural sector you cannot fix any minimum hours of work. This is another practical difficulty with regard to agricultural labourers. Labour has been boosted to such an extent that hereafter, if side by side, industries come up—I do not say industries should not come—the cost of production of agricultural produce will also go up and the consumer also will have to pay more.

Now, Sir, a lot of research has been made in agriculture and we are also sending our scientists abroad to get them better trained. But we do not make use of these researches and the scientists to the maximum extent possible. We have the Agricultural College and other research Institutes, and they have done wonderful research work. But these do not reach the common man. Take, for instance, soil testing, invention and use of pesticides, etc. They have carried out researches, which are really good. But these things do not reach the common man. So, my
4-40 p.m. submission is that in every district there should be a research station, and it should be possible for the Government to see that these things reach the common man in time, and the pesticides are also given them in the proper time, and the pests and controlled effectively at the proper time. Even now you will find that the latest strains of paddy are not available and fodder seeds are not available. Ryots experience so many difficulties.

Now, Sir, I would like to mention something about crop insurance. My hon. friend Sri Balasubramanya Ayyar also spoke about it. Crops insurance is very essential. In Amercica and other western countries, they have taken it up on a vast scale and production has considerably increased.

THE HON. SRI R. VENKATARAMAN : Voluntary or compulsory?

SRI V. K. RAMASWAMY MUDALIAR : It should be voluntary to start with. Unless there is crop insurance and an impetus is given to the agriculturist, you cannot increase production.

Now, Sir, we find there is terrible growth of population in India. The annual increase of population in India is as much as the total population of Australia, namely, 1,20,00,000 and with this growth of population, we have this expansion of industries. First class fertile lands are taken up by these industries. There is considerable switch over to cultivation of cash crops such as sugarcane and other crops. This has considerably reduced the land under food crops. Then again land is taken away for house building. I saw in some papers that nearly 15 to 20 lakhs of acres of fertile land have been taken over for raising commercial crops, for sugar factories, for putting up industrial estates or building houses. I do not mean to say that these things should not come up.

6th August 1965] [Sri V. K. Ramaswamy Mudaliar]

But the point is, these projects take away so much of fertile land and along with that if there is growth of population, the food situation will be considerably aggravated. Therefore, unless we give incentive to the farmers by introducing crop insurance, they cannot step up production. That is my submission.

Regarding Livestock improvement, I should say as a Member of the Livestock Development Board that the Alamadi farm is working well, and according to a recent circular of the Director of Animal Husbandry, cows which are dry should not be sent unless they become pregnant. I am taking up this matter with the Government, because it is not the correct policy to follow. Even now, I was talking about this with the Hon. the Minister for Co-operation, who is an authority on this. I will take up this matter in the meeting of the Board and see that Sri Balasubramanya Ayyar's suggestion is adopted, i.e., the dry cows should be admitted into the farm.

With regard to milk production, I have been repeatedly saying before this House that unless the Minister for Forests co-operates in this matter, it is not possible to run the milk project successfully. I have been saying on more than one occasion that it is neither possible nor correct to get milk from Erode, Ootacamund or other far off places—300 or 400 miles away from Madras for storage at Madras and for supply to people in the city. We do not have proper storage plant and therefore the milk that we get will deteriorate during transport or storage. We have vast areas of reserved forests near Vandalur and Guduvancheri in Chingleput district. A 1,200 acre cattle farm should be started on the model of Hosur Farm. You can maintain at least a 1,000 head of cattle in such a farm. Near Sriperumbudur also there are facilities for starting a large cattle farm. This is necessary with a view to augmenting the milk supply to Madras city. Unless this is done, the milk supply will become worse. I have seen the milk colonies in Bombay, Calcutta and other north Indian towns. They have handled the milk problem very efficiently. Our State, which is most advanced in many respects, should be in a position to tackle this milk supply problem. If we are not in a position to tackle it, it will be a disgrace to us.

I am proud of the fact, Sir, that in two of the departments, namely, industries and education, we have developed considerably. There has been considerable expansion in Education. Everybody can be proud of that. During my recent visit to America and other countries, I found that great attention is paid to agriculture and defence. First came defence and then agriculture. Here also, we must give great importance to agriculture and defence. We must give importance to other sectors for development also. But agriculture must be given the top priority.

As regards hospitals, my submission is that the headquarters hospitals must be upgraded and the bed strength should be increased with a view to relieving congestion in the General Hospital. Of

[Sri V. K. Ramaswamy Mudaliar] [6th August 1965

course, the Kodambakkam-Pudur Hospital is a very ambitious scheme. But, in addition to that we must have more hospitals. For that we must have technically qualified people. That is the difficulty there.

Another thing is protected water-supply. We should have protected water-supply in each and every village. That is a very essential thing. Especially in the Harijan colonies, we find people are still suffering for want of drinking water. Therefore, every village should have drinking water facilities besides having roads and other amenities. The existing village roads are not jeepable. If the people in the village want to take a pregnant lady to a hospital, they find it very difficult. Top priority should be given to the formation of roads without depending on the Panchayat Unions. They usually say that they have no money at all for this.

Sir, I am of the view that moral and religious instruction should be imparted in schools, whether in Christianity, Mohamedanism, or Hinduism. It is said that India is a secular State. (An hon. Member: Moral Instruction?) Moral instruction and also religious instruction must be given. Otherwise, our students, who are the future citizens, would not develop character and discipline. It is very unfortunate, Sir, that even in this plan, we see provincialism cropping up. One State is putting up serious obstacles in the path of development of another State. This is a sorry state of affairs. If we are a well developed State, am I to understand that we should not be given all the aid that we want and the other facilities. I hope that our Ministers will take up all these matters in all seriousness and do their best for the amelioration of our people.

திரு. என். வி. நடராசன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டத்தில் மிக முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று சிலர் இங்கு குறிப்பிட்டனர். ஐந்தாண்டுத் திட்டத்தையே இன்னும் இரண்டு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திப்போட்டு விடலாம் என்று வேறு சிலர் இங்கு குறிப்பிட்டனர். எக்காரணத்தைக் கொண்டும் திட்டங்களை ஒத்திப்போட எண்ணக்கூடாது என்று மிகவும் அழுத்தமாகவும் பணிவாகவும் சொல்லிக்கொள்கிறேன். திட்டத்தில் பெரிய கோளாறுகள் இருக்கக் கூடும். குறைகளே இல்லை என்று எதிர்க் கட்சியினராகிய நாங்கள் சொல்ல முடியாது. குறைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். இதை எடுத்துக் கூறுவதுதான் எதிர்க்கட்சியின் பணியாகும்.

நம் நாட்டின் பிரதமர் நேஷனல் ப்ரொடக்டிவிடி கௌன்சிலில் ஜுலை 17-ஆம் தேதி பேசியுள்ளதை பத்திரிகையில் பார்த்தேன். அவர் கூறியிருப்பதை இங்கே வாசிக்கிறேன்.

6th August 1965] *[திரு. என். வி. நடராசன்]*

Mr. Sastri said, "Sometimes I feel that one year we should completely devote to agriculture. Other things might continue as they are. Some allotments outside the allocation for the different sectors should continue. But whatever additional expenditure is to be made, should be made on agriculture."

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருக்கிறார். உணவு தானிய உற்பத்தியில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என்று நானும் அபிப்பிராயப்படுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதை யாரும் தவறாகக் கொள்ளக்கூடாது என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சர்க்காருக்கு விவசாயத் துறையில் நில வரி மூலம் ஏறக் குறைய ரூ. 5 கோடி வருவாய் வருகிறது என்று நினைக்கிறேன். (குறுக்கீடு.) அது ரூ. 6 கோடி என்று கனம் தொழில் அமைச்சர் கூறுகிறார். அதற்கு மிக்க நன்றி. ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் உள்ளவர்களுக்கு இந்த வரியினின்றும் விலக்கு அளித்தால், அது விவசாய உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். ஐந்து ஏக்கருக்கு மேற்படாத அளவு நிலம் உள்ளவர்களுக்கு இந்த வரியினின்று விலக்களித்துவிட்டு, அதனால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு வேறு துறையில் ஈடுசெய்ய வகை செய்யலாம். இந்த இழப்பைச் சரிக்கட்டுவதற்கு, பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கலாம். நமது சர்க்கார் பஸ் போக்குவரத்து லாபகரமாக நடக்கிறது. அதிலும், தொலை தூர பஸ் போக்குவரத்து தனியார் துறை பஸ் போக்குவரத்தை விடச் சிறப்பாக நடக்கிறது. இதை நான் அவ்வப்போது பிரயாணம் செய்யும்போது பார்த்திருக்கிறேன். அந்த பஸ்களில் பிரயாணம் செய்யும் மக்கள் அதைப் பாராட்டுவதை நான் காதாரக் கேட்டிருக்கிறேன். இவ்வாறு நாடு முழுவதும் சர்க்கார் பஸ் தொழில் நடத்தி லாபம் பெற முடியும். பஸ் தொழிலில் வரும் லாபம் சில பேரிடமே செல்வதை இவ்வாறு கட்டுப்படுத்தி, நில வரி விலக்கினால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய முடியும் என்பது என் அபிப்பிராயமாகும்.

அடுத்தபடியாக, பால் பண்ணையைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தற்போதைக்கு ஈரோடிலிருந்தும், நீலகிரிப் பகுதியிலிருந்தும் பால் கொண்டுவருவதும் மற்ற சாதனங்கள் செய்வதும் அவசிய 4-50 p.m.
மாகிறது. ஆனால் கனம் உறுப்பினர் வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் எடுத்துக் கூறியது போல் சென்னைக்கு அடுத்துள்ள பகுதிகளில் பால் பண்ணையை விரிவாக்கவும் அதற்கான மேய்ச்சல் நிலத்தைப் பெருக்கவும் முயற்சி எடுத்தால், நாளாவட்டத்தில் தொலைதூரத்திலிருந்து பால் தருவிப்பதை நிறுத்திவிட்டு செலவை ஓரளவுக்குக் குறைக்கலாம். தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஹொகனிகல் மின்சாரத் திட்டத்தைப் பற்றி உறுதி தெரிவித்தார்கள். ஆனால் நேற்றைய பத்திரிகைச் செய்திப்படி பார்த்தால், மைசூர் சர்க்காரும் நாமும் கூட்டாகச் சேர்ந்து அந்தத்

திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ஆட்சேபிப்பதாகவும், தனித்து சர்க்கார் அதிகாரி ஒருவர் பேசியிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே அந்த ஹொகனிகல் மின்சாரத் திட்டத்தை எவ்வகையிலேனும் செயல்படுத்த சர்க்கார் உறுதியாக முனைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே சேலம் இரும்பு உருக்காலையைப் பற்றி நாம் அனைவரும் பேசியிருக்கிறோம். இதிலே கட்சி வேறுபாடின்றி எல்லோரும் வலியுறுத்தி இருக்கிறோம். இந்த மன்றத்திலேயே நான் முன்பு கேள்வி கேட்டபோது கனம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் 'அந்தப் பிரச்சினை குறித்து, நாங்கள் என்ன சொல்லுகிறோமோ அதைத்தான் நீங்கள் நம்ப வேண்டுமே தவிர, மத்திய சர்க்காரில் உள்ளவர்கள் சொல்வதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லத் தயாராயில்லை' என்று சொன்னார்கள். அந்த நம்பிக்கை எந்த அளவுக்கு நிறைவேறுமோ என்ற ஐயப்பாடு இப்போது ஏற்பட்டு இருக்கிறது. நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வேன். மற்ற தொழில்கள் புதியதாக ஆரம்பிப்பதில் தாமதம் ஆனாலும் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு முடிந்து துவக்க வேண்டிய நிலையில் இருந்த சேலம் உருக்காலை இன்று தடைப்பட்டு நிற்கிறது. மறு பரிசீலனை பண்ணுகிற பேரால் அதைத் தள்ளிப் போடாமல், தமிழகத்தின் மற்ற துறைகளுக்கு நல்ல முறையில் பயன்படுவதற்கு, சேலம் உருக்காலையை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித்துறையைப் பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் எனது கருத்தை சொல்வதை யாரும் தவறாகக் கருதக்கூடாது. சமீபகாலமாக மாணவர்களிடத்திலே கட்டுப்பாடு இல்லை என்று சொல்வதே சிலருக்கு ஒரு பாஷனாக மேனியாவாக மாறிவிட்டது. நாம் மனதார எண்ணிப் பார்த்தால் இந்தியத் துணைக்கண்டத்திலேயே நம் மாநிலத்திலுள்ள மாணவர்களைப் போன்று கட்டுப்பாடாகவும் அதே போல் கல்வித்திறமையில் முன்னேறியும் வருகிறவர்கள் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என்பது திட்டவட்டமாகத் தெரியும். ஆனால் அப்படிப்பட்ட மாணவர்கள் எதனால் இன்றையதினம் கட்டுக்கோப்பு சிதறி விட்டார்கள் என்பதை யாரும் மூடி மறைத்துப் பேசுவதில் பயனில்லை. எதிர்பாராத விதமாக மொழிச் சிக்கலில் ஏற்பட்ட தகராறு காரணமாக பல்வேறு அசம்பாவிதங்கள் நாட்டில் ஏற்பட்டு விட்டன. அதை யாரும் மறுக்க முடியாது. அதை நான் ஆதரிக்கவும் இல்லை. அந்த ஒரு பிரச்சினையில் தான் மாணவர்கள் கட்டுப்பாட்டிலிருந்து சீர்குலைந்து விட்டார்கள் என்று சொல்லுகிறேன். மற்றப் பிரச்சினைகளில் அவர்கள் தலையிட்டதே கிடையாது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், அண்மையிலே கல்கத்தாவில் நடந்த . . .

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர்: நான் "மாரல் இன்ஸ்ட்ரக்ஷனைப்" பற்றிப் பேசும்போது, இதைப் பற்றி நினைக்கவில்லை. ஜனங்களுக்கு பொதுவாக Moral instruction வேண்டுமென்று தான் சொன்னேன்.

திரு. என். வி. நடராசன்: மதிப்பிற்குரிய எதிர் கட்சித் துணைத் தலைவர் ஸ்ரீ. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் சொல்லிய கருத்தை நான் மறுக்கவில்லை. மற்ற உறுப்பினர்கள் பேசிய கருத்திலிருந்து என் எண்ணத்தைத் தெரிவிக்கிறேன். அந்த கனம் உறுப்பினர்கள் அப்படிச் சொல்லவில்லை என்றால், நான் மகிழ்ச்சி அடைவேன். கல்கத்தாவில் டிராம்வே கட்டணம் உயர்த்தப்பட்டு பெரிய ரகளை ஏற்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள மாணவர்கள் அந்தக் கலவரத்தில் பங்கு கொண்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், அப்படிப்பட்ட பிரச்சினைகளில் மாணவர்கள் ஈடுபட்டதே இல்லை. ஆனால் இந்தி எதிர்ப்பு பிரச்சினையில் தான் கலவரம் ஏற்பட்டு, டிசிப்ளின் என்ற கட்டுப்பாடு சீர்குலைந்திருக்கிறது. அதற்கு கூட மாணவர்களை மட்டுமே குறை சொல்வது நியாயமாகாது. எனவே அதை நாம் எல்லோரும் யோசித்து, கல்வித் துறையில் பணியாற்றுகிற பெரியவர்களும் அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறி, ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. தேசபக்தி மற்றவைகள் எல்லாம் மாணவர்களுக்கு வேண்டும். ஆனால் தேசபக்தி என்றால் எது என்று கூட நாம் சிந்தித்துக் கொள்ள வேண்டும். இங்கே நான் சொல்லப் போவதைப் பற்றி ஆளுங்கட்சியினர் தவறாகக் கருதக்கூடாது. மதிப்பிற்குரிய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜரைப் பற்றி காங்கிரஸ் தோழர்கள் எவ்வளவு மதிப்பு அளிக்கிறார்களோ, அதில் துளியும் குறையாமல் அவருடைய பொதுப் பணியை நான் மதிக்கிறேன். அப்படிப்பட்ட தலைவரின் பிறந்த தின விழா கொண்டாடுகிற நேரத்தில், மாணவர்கள் அந்த ஜோதி கொண்டு போவது என்ற நிகழ்ச்சி நடக்கிறது. அதைப் பார்த்தவுடனே இன்னொரு கட்சித் தலைவருக்கு விழா கொண்டாடும்போது அவர்களும் அக்கட்சியின் ஆதரவான மாணவர்கள் அந்த மாதிரி ஒரு ஜோதி கொண்டுபோவார்கள். மாணவர்களை அரசியலில் பயன்படுத்தக் கூடாது என்று முன்பு இங்கே கல்வி அமைச்சராக இருந்த மதிப்புக்குரிய சி. சுப்ரமணியம் அவர்கள் சொன்னார்கள். அதை எல்லோருமே கடைப்பிடித்து வந்தோம். ஆனால் இடையிலே அந்தக் கட்டுப்பாடு அல்லது அப்படி பேசித் தீர்க்கப்பட்ட ஒப்பந்தம் என்று சொல்லாவிட்டாலும், அந்த முறை ஆளும் கட்சியினரால் இந்த வகையிலே பாழாக்கப்பட்டுவருகிறது. எதிர் காலத்தில் எந்தக் கட்சியாக இருந்தாலும் மாணவர்களை தங்கள் கட்சிப் பணிகளுக்கு அழைக்காமல், ஈடுபடுத்தாமல் இருந்தால், உள்ளபடியே மீண்டும் மாணவர் உலகம் நல்ல முறையில் கட்டுக்கோப்பாக வாழ்ந்து எதிர்காலத்தில் கனம் உறுப்பினர்கள் ஆசைப்பட்டதைப் போல் இந்த நாட்டை ஆளும் திறமையுடன் பதவி

[திரு. என். வி. நடராசன்] [6th August 1965

களில் அமரும் தகுதியைப் பெறுவார்கள் என்று நம்புகிறேன். கல்வித் துறையைப் பற்றி எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நல்ல முறையில் எடுத்துச் சொன்னார்கள். அதை விட அதிகமாக நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

பாலங்களை விரிவாக்குவதைப் பற்றி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்பு கூட இதே மன்றத்தில் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். பேசின் பிரிட்ஜ் ஸ்டேஷனுக்கு அடுத்தாற்போல் மூன்று பாலங்கள் இருக்கின்றன. அவைகள் எந்தெந்த ரோடுகளை எதிர் நோக்கி இருக்கின்றன என்றால், ஒரு பாலம் கல்கத்தா அதாவது நெல்லூருக்குப் போகும் டிரங்க் ரோட்டை எதிர்நோக்கி இருக்கிறது. மற்றொன்று பி அண்ட் சி. மில் பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர்கள் வேலை செய்யும் அந்த பகுதியை நோக்கி இருக்கிறது. மூன்றாவது பாதை அந்த பக்கிங் ஹாம் கால்வாய்க்கு பாலம் போல் இருக்கிறது. இந்த மூன்று பாலங்களிலும் காலை 4 மணிக்கு வந்து பார்த்தால், லாரிகளும், கைவண்டிகளும் மூட்டைதூக்கி வருபவர்களும் கொத்தவால் சாவடிக்கு வரும் சிறு கடைக்காரர்களும், வியாபாரிகளும், பெரம்பூர்; சூளைப் பகுதிக்கு போகிற திரும்புகிற தொழிலாளர்களும், படும் தொல்லை சகிக்க முடியாது. இந்த லட்சணத்தில் 5 மணிக்கு பஸ் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டால், நெருக்கடி முற்றி தொழிலாளர்கள் பாதையைக் கடந்து போக முடியாத அளவுக்கு நெரிசல் ஏற்பட்டு சில சமயங்களில் விபத்துகளும் உண்டாகின்றன. ஆகவே பாலங்களை விரிவுபடுத்தும் திட்டத்தில் அந்த மூன்று பாலங்களையும் உடனடியாக அகலப்படுத்த வேண்டும். அதே போல் தமிழ்நாட்டில் எங்கெங்கே அப்படிப்பட்ட நெரிசல் இருக்கிறதோ அங்கே எல்லாம் பாலங்களை விரிவு படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5-00 p.m. அடுத்து, ஸ்டாம்பு விற்பனை செய்யும் தோழர்களுக்கு கொடுத்து வந்த 6¼ சதவிகிதத்தை 2 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருப்பதால் ஏறத்தாழ 5,000 குடும்பங்கள் வருவாயில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது மக்களின் வறுமையை நீக்கவும் வாழ்வளிக்கவும் பயன் படவேண்டும். அந்த நோக்கத்தில் ஸ்டாம்பு விற்கிறவர்கள் பெற்று வந்த 6¼ சதவிகிதத்தை குறைக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல அணிகலத் தொழிலாளர்கள் தங்கக் கட்டுப்பாட்டினால் வாழ்விழந்து பாதிக்கப்பட்டிருப்பதை சர்க்கார் உணர்ந்து சிறு சிறு தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நல்லதொரு தொழில் வாய்ப்பினை அளிக்கும் பயிற்சிக் கூடங்களை இன்னும் அதிகப்படுத்தி அவர்களுடைய நெருக்கடியை நீக்க வகை செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

6th August 1965] [திரு. என் வி. நடராசன்]

நமது மாநிலத்தில் தொழில் துறை பெருமைப் படத்தக்க அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அரசியலில் உள்ள கருத்து வேறுபாடுகளினால் உண்மைகளை ஒப்புக்கொள்வதில் தயங்கியதில்லை. ஆனால் இப்போது இருக்கிற தொழில் துறையெல்லாம் தனியார் துறையில் அமைகிறதே தவிர சர்க்கார் துறையில் அதிகமாக அமையாமல் இருக்கிறது. நேற்று இங்கு பேசிய கனம் உறுப்பினர் திரு. கே. வி. ராமசாமி அவர்கள் கூட உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே மனம் வேதனைப்பட்டேன். நாட்டிற்காக உழைத்த எவ்வளவுபேர் உடைந்த உள்ளத்தோடு இருக்கிறார்கள் என்பதை விளக்கிச் சொன்னார்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கிடையே கட்சி வேறுபாடு இருந்தாலும் நாட்டிற்கு உழைத்தவர்களுக்கு நன்றி காட்டவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் வாழ்விழந்து வறுமையில் உழன்று கொண்டிருக்கும் நேரத்தில் சர்க்காரே தொழில் துறைகளை மேற்கொள்ளாமல் தனியார் துறையைப் பெருக்குவதில் யாருக்கு லாபம் என்று கேட்கிறேன். குறிப்பிட்ட இருபது முப்பது பேர்களுக்குமட்டும் ஏகபோகமாகப் போகக்கூடிய பெரும் லாபம் சர்க்காருக்குச் சொந்தமானால் உண்மையிலேயே வறுமையை ஓரளவாகிலும் நாட்டிலிருந்து விரட்ட முடியும். ஆதலால் தனியார் துறையைக் கொழுக்கவைக்கும் வேலையில் சர்க்கார் ஈடுபடக்கூடாது. நான்காவது திட்டம் நிறைவேறினால், திட்ட முடிவில் 18 அவுன்சு அளவில் வழங்கப்படுமென்று மதிப்பீட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் இது ஏட்டளவிலா நடைமுறையிலா என்று போகப்போகத் தெரியும். கேள்வி நேரத்தின் போது கூட நமது அமைச்சர் அவர்கள் சுற்றுலா பற்றி குறிப்பிட்டார்கள். ஏழைகள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்புற, குற்றாலம், ஊதகை, கோடைக்கானல் போன்ற பகுதிகளுக்குச் சென்று அனுபவிக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அதனால் ஏழைகள் காணும் அளவுக்கு ஏற்காட்டிலே அவ்விதமான அமைப்புகளை ஏற்படுத்தலாம். மதுரை மாவட்டத்திலே சுருளியிலும் அதை விரிவுபடுத்தலாம். அதன் மூலமாக ஏழை, நடுத்தர மக்கள் இயற்கை வனப்பை அனுபவிக்கும்படி செய்தவர்களாவோம். இறுதியாக நான் வலியுறுத்துகிறேன். சர்க்கார் இன்றைய நிலைமையில் எவ்விதமான எதிர்ப்பு வந்தாலும் திட்டத்தை கைவிடக்கூடாது. திட்டமில்லாத செயல் உருப்படாது, திட்டம் வேண்டாமென்று, கனம் எஸ். கே. பட்டீல் சொல்கிறார் என்றும் அங்கே அவர் சொல்கிறார், இவர் கூறுகிறார் என்று சொல்லப்பட்டாலும் சர்க்கார் இந்தத் திட்டங்களைக் கைவிடாமல் நிறைவேற்ற முனையவேண்டும். முதலில் செய்வது என்ன? இரண்டாவது செய்வது என்ன? என்பதில் வேண்டுமானால் சில மாற்றங்களைச் செய்யலாமே ஒழிய திட்டத்தை அடியோடு நிறுத்துவது கூடாது. ஆனால் அப்படி நிறைவேற்றும் திட்டம் மக்களின் வறுமை நீங்கி, அவர்கள் நல்வாழ்வு பெற்று, எதிர்கால

சந்ததியினர் தலைநிமிர்ந்து வாழ வேண்டியதற்கான அடிப்படையில் குறைவின்றி அமையவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தில் பங்குகொள்வதில் பெருமகிழ்வு கொள்கிறேன். சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தை ஆராய முற்பட்டதில் தேசிய அடிப்படையில் 22,600 கோடி ரூபாய் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் பொதுத் துறையில் 15,620 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எஞ்சி இருக்கிற 6,980 கோடி பிரைவேட் செக்டாருக்கு ஒதுக்கப்பட்டிருப்பது புலனாகிறது. பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 15,620 கோடியில் 8,095 கோடி மாகாணங்கள் திட்டம் வகுக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் நமது மாகாண பங்குக்கு 750 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை நமக்கு விகிதாசாரப்படி பொருத்தமானதா என்பதை நாம் ஆராய வேண்டும். நம் மாகாணத்தின் ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் உத்தேசமாக பத்தில் ஒரு பங்கு வர வேண்டும். பத்து என்று வைத்துக் கணக்குப் பார்த்தால் நமக்கு 809½ கோடி ஒதுக்கப்படவேண்டும். அப்படியென்றால் 59 கோடி குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பொருள்படுகிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரயில்வே எல்லாம் சேர்ந்திருக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அமைச்சர் அவர்கள் மொத்தமாக சென்ட்ரல் பிராஜக்டையும் சேர்த்துக் கணக்கு போடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ட்ரல் பிராஜெக்டில் 65½ கோடி இந்த மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்தப்படி கணக்கு பார்த்தால் நமக்கு மொத்தத்தில் இரண்டையும் சேர்த்து விகிதாசாரப்படி 45 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது கூடுதல் என்றால் நான் மற்றொரு புள்ளி விவரத்தைச் சொன்னால் உண்மையில் இது குறைவாக இருப்பதை காணலாம். மொத்த திட்ட அளவில் 15,620 கோடி பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகை 7,515 கோடி இருக்கிறது. இது சென்ட்ரல் கவர்ண்மெண்ட் சார்பில் அமுல்படுத்தப்படும் திட்டங்களுக்கு செலவிடப்படும் என்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை பல மாகாணங்களுக்கு திட்டங்கள் வகுத்து செலவிடுகிறார்கள். அதில் நம் மாகாணத்திலும் ஒரு பங்கு செலவிடத்தான் செய்கிறார்கள். விகிதாசாரக் கணக்குப்படி இதிலும் நமக்கு ஒரு உரிமை உண்டு.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கணக்கு சரியில்லை. மொத்தம் ஸ்டேட்டும் சென்ட்ரலும் 8,095 கோடி நம்முடைய ஜனத்தொகை மொத்தத்தில் 8 சதவிகிதம். அதனால் நமக்கு வரவேண்

டியது 647.6 கோடி. ஆனால் 750 கோடி ஒதுக்கியதற்குக் காரணம் முன்னைய திட்டத்தில் 291 கோடி கொடுக்கப்பட்டு 340 கோடி செலவு செய்திருக்கிறோம். அதை அடிப்படையாக வைத்து கொடுத்திருக்கிறார்கள்.

(Sri S. K. Sambandhan—Vice-Chairman in the Chair). 5-10 p.m.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எட்டு சத விகிதம் என்று கணக்கு வைத்துக் கொண்டாலும், சென்ட்ரல் ப்ரொஜெக்டிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். சென்ட்ரல் ப்ராஜெக்ட் நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதற்கு விவரம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. சில புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன சேலம் உருக்காலை Tele-Communication cable industry, heavy plates and vessels, petroleum oil refinery ஆகியவை போன்ற சில பெரிய தொழில்கள்தான் நான்காவது திட்டத்தில் இங்கே மத்திய அரசாங்கத்தின் சார்பில் செயல்படுத்தப்படும் என்று தெரிகிறது. இவைகளில் சேலம் உருக்காலை மட்டும் தான் பெரிய தொழில், மற்றவை சிறிய தொழில்கள். இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கபட்டுள்ள தொகை எவ்வளவு என்று குறிப்பிடப்படாவிட்டாலும் மொத்தம் 325 கோடி ரூபாய் செலவிடப்படலாம் என்று உத்தேசமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையும் நம் ராஜ்யத்திற்கு வர வேண்டிய விகிதத்திற்குக் குறைவான விகிதத்தில் இருக்கிறது. எனவே இந்த மாநிலத்தில் மத்திய அரசாங்கம் செயல் படுத்தும் திட்டங்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான பணம் ஒதுக்க வேண்டும் என்று நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும்.

சேலம் உருக்காலை பற்றி இங்கே பெரும் விவாதங்கள் நடந்தன. அப்போது பல மாறுபட்ட கருத்துக்கள் நிலவின. இந்த மாறுபட்ட கருத்துக்கள் சென்ற சில வருஷங்களாக தொடர்ந்து இருந்துவருகின்றன. சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பொருத்த வரையில், முன்பு இருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசமாக இருக்கிறது. சேலம் உருக்காலைக்கு எவ்வளவு தொகை எஸ்டிமேட்டில் இருக்கிறது என்று நான் ஒரு தடவை கேட்டபோது 300 கோடி ரூபாய் என்று கனம் அமைச்சர் பதில் சொன்னார் என்று நினைக்கிறேன். அந்த 300 கோடி ரூபாய் இப்போது 100 கோடி ரூபாயாக மாறியிருப்பதைக் காண்கிறோம். இது விரும்பத்தகாத நிலை. இப்போது உருக்காலைத் திட்டம் விசாகப்பட்டிணத்திற்கு மாற்றப்பட்டு விட்டது என்று அறிகிறோம். விசாகப்பட்டிணத்தில் உருக்காலை நிறுவப்படுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சேலம் உருக்காலைத் திட்டத்தை முன்பு எந்த அளவில் உருவாக்கினோமோ அதே அளவில் செயல்படுத்த அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். அதைக் குறைந்த அளவில் குறைந்த அடிப்படையில் இல்லாமல் விரிவான அளவில் நிறைவேற்ற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [6th August 1965

விவசாயத் துறைக்கு 93 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு நிறையப் பணம் ஒதுக்கப்பட்டாலும், நாம் இந்தத் துறையில் தக்க பலனைப் பெற முடியவில்லை என்பதை இந்த அறிக்கையின் மூலமே நாம் அறிய முடிகிறது. இவ்வறிக்கையின் 7-வது பக்கத்தில் 15-வது பாராவில் "The rate of growth considered feasible for agricultural sector is somewhat lower than that assumed for the country as a whole in the memorandum on the Fourth Plan" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பாகக் கவனிக்க வேண்டிய வார்த்தைகள் "is somewhat lower than that assumed for the country as a whole". என்பவை ஆகும். அதாவது, நம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி, நம் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைவிடக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அபிவிருத்திக் குறைவுக்கு என்ன காரணம் என்று நாம் பார்க்க வேண்டும். இந்தப் போக்கு திருப்தியளிக்கக் கூடியது அல்ல. இந்தப் புத்தகத்தில் 17-வது பக்கத்தில் average yield per acre in lb. என்ற புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 1950-51-ஆம் வருஷத்தில் average yield of rice per acre 1,016 பவுண்டுகள். இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்த நிலை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இது 1,213 பவுண்டுகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 200 பவுண்டு அபிவிருத்தியை நாம் காண முடிகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இது 1,261 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இரண்டாவது திட்ட முடிவில் 200 பவுண்டு அதிகரிப்பைக் காண்கிறோம். மூன்றாவது திட்ட முடிவில் இதில் காணக்கூடிய அபிவிருத்தி 48 பவுண்டுகள்தான். இந்த அபிவிருத்திக் குறைவுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று நாம் ஆராயவேண்டும். நம் திட்டத்தில் ஏதோ கோளாறு இருப்பதால் தான் எவ்வளவு பெரிய தொகை செலவழித்தாலும் தக்க பலன் பெற முடியவில்லை. இந்த அறிக்கையின் 6-ஆவது பக்கத்தில் "The state has reached the limit of utilisation of all its water resources and further expansion of irrigation facilities has become increasingly difficult" என்று குறிப்பிட்டிருக்கிறது. அதாவது, நமக்குக் கிடைக்கக்கூடிய எல்லாத் தண்ணீரையும் நாம் பெற்றுவிட்டோம், இனி மேல் தண்ணீர் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு இனிமேல் உள்ள ஒரே வழி உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவது தான் என்று தோன்றுகிறது. 'மான்யூர்' சம்பந்தமாக ஒரு குறிப்பில் "The experience in the current plan has shown that ryots are reluctant to apply for chemical fertilisers in respect of dry crops, as they are not sure of the returns" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது உரங்களை உபயோகித்தால் அதிகமான பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை விவசாய மக்களுக்கு இல்லாததால் அதை அதிகமாகப் பயன்படுத்த அவர்கள் முற்படுவதில்லை என்று சொல்லப்பட்டிருக்

6th August 1965] *[திரு. கே. எஸ். அப்துல் வகாப்]*

கிறது. இந்த நிலையில் விவசாயத்திற்காக 93 கோடி ரூபாய் செல வழித்தால் என்ன பலனைக் காணப்போகிறோம்? சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கம் விவசாயத்திற்காக 56 கோடி ரூபாய் ஒதுக்கியது. இவ்வளவு ரூபாய் செலவழித்ததில் நமக்கு திருப்திகரமான பலன் கிடைக்கவில்லை. இப்போது விவசாயத்திற் காக ஒதுக்கும் ரூ. 93 கோடியில் 59 கோடி ரூபாயைக் கழித்தால் மீதி ரூ 37 கோடி வருகிறது. விவசாயிகளுக்கு முன்பு அளித்த சௌகரியங்கள் அப்படியே இருக்கட்டும், அதற்கு செலவழிப்பது போக பாக்கி 37 கோடி ரூபாயில் அரசாங்கம் தன் சொந்தப் பொறுப்பிலேயே விவசாயத்தை துவக்க வேண்டும். அரசாங்கம் தரிசு நிலங்கள் உள்ள இடங்களில் வாய்க்கால்கள் மூலம் தண்ணீர் பாய்ச்ச வசதி செய்து, டிராக்டர்கள் மூலமும் மற்ற இயந்திரங்கள் மூலமும் பரந்த அளவில் விவசாயம் செய்ய வேண்டும், ஒன்றிரண்டு ஏக்கர்கள் அளவில் இல்லாமல் 200, 300 ஏக்கர்கள் அளவில், விரிவான அடிப்படையில், அரசாங்கம் விவசாயத் தொழிலை மேற்கொள்ள வேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய தேசங்களுக்கு நம் கனம் தொழில் அமைச்சர் சென்று வந்திருக்கிறார். அந்த தேசங்களில் விவசாயம் இந்த முறையில் தான் நடக்கிறது. அதே மாதிரி, நாம் அரசாங்கப் பொறுப்பில் ஆட்களை நியமித்து விவசாயத் தொழிலை நடத்தினால் நாம் நல்ல பலனைக் காண முடியும்.

அடுத்து நான் சொல்ல முற்படுவது என்னவென்றால், தண்ணீர் நமக்கு போதிய அளவு இருக்க முடியாது என்ற கருத்துப்படச் சொன்னேன். அதைப் பார்க்கும் போது, தண்ணீருக்கு எப்படி வகை செய்வது என்று யோசிக்க வேண்டும். மழை பெய்து வெள்ளம் வரும்போது, அதிகத் தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது. நம் வசத்திலுள்ள டாம்களை இன்னும் உயரப்படுத்தி கூடுதலாக தண்ணீர் ஸ்டாக் செய்வதற்கு வகை செய்வதால் வருங் காலத்தில் நமக்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 5-20 p.m.

அடுத்து இந்த அறிக்கையிலே 9-வது பக்கத்திலே உள்ள ஒரு விஷயத்தை நான் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். ". . . . . . it will also be our endeavour in the Fourth Plan to increase the sense of opportunity of the relatively weaker sections of the population, particularly in rural areas" பிற்பட்ட வகுப்பார்களை உயர்த்துவதிலே அரசாங்கம் தனிப்பட்ட கவனம் செலுத்தும் என்ற வாசகம் கண்டு நான் மகிழ்வு அடைகிறேன். இந்த அடிப்படையிலே ஹரிஜனங்களுக்கு நல்ல உதவிகள் செய்து அவர்கள் முன்னேற்றம் அடைய வகை செய்வதைப் பற்றி நான் முன்பும் பாராட்டியிருக்கிறேன். மறுபடியும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொருத்தமட்டில் ஹரிஜனங்கள் நல்ல நிலைக்கு முன்னேறி விட்டார்கள். தமிழ் நாட்டில் இன்றைக்கு பிற்பட்டவர்களாக பின் தங்கியிருக்கக் கூடியவர்களாக, பொருளாதார

அடிப்படையிலே பின் தங்கியிருக்கிற சமுதாயம், முஸ்லீம்கள் சமுதாயம். அவர்களுக்கு தனிச் சலுகைகள் கொடுத்து உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, அவர்களில் உருது பேசுகிறவர்கள் உருது பேசாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல், எல்லா முஸ்லீம்களுக்கும், "most backward community' என்று அறிவித்து, ஹரிஜனங்களுக்கு எந்தெந்த சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அந்தச் சலுகைகள் எல்லாமே முஸ்லீம்களுக்கும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக இந்தத் திட்டத்திலே மூன்று மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவக் கல்லூரிகளிலே ஒன்று திருச்சியிலேயும், மற்றொன்று கோயமுத்தூரிலேயும், மற்றொன்று சேலத்திலேயும் அமைத்தால், அது பொருத்தமாக இருக்கும் என்ற என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டு, திருச்சி மாவட்டத்தில் முசிரிக்கும் குளித்தலைக்கும் நடுவில் ஒரு பாலம் கட்டுவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அதை அமுல் படுத்த முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** கனம் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதல் குறிப்பு நம் முன் **ஆராய** வைக்கப் பட்டுள்ளது. அதனுள் நுழைந்து ஆராய்வதற்கு முன்னால், இன்றிருக்கக்கூடிய நெருக்கடியின் காரணமாக இந்தத் திட்டத்துக்கே ஓய்வு ஒரு ஆண்டு அல்லது ஒரு சில ஆண்டுகள் கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுவதை அறிகிறோம். ஆனால், என்னைப் பொறுத்த அளவில் அதற்கு ஓய்வு கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஏனென்றால், முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலேயும் நாம் எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்து, செய்ய முடியாததை மறு ஐந்தாண்டுகளில் கொண்டு வந்தது போல், நம் நாட்டுக்கு இன்றியமையாத அபிவிருத்தி திட்டங்கள் இவை, வருவாய் நிலை இது, இன்னும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிதிநிலை இவ்வாறு, என்று திட்டம் அமைக்கிறோம். அன்றைய சூழ்நிலைக்கேற்ப முன் செய்ய வேண்டியதை முன் செய்து, மற்ற திட்டங்களுக்கு மாற்ற வேண்டியதை மாற்றி வந்திருக்கிறோம். அந்த அளவிலே இந்தத் திட்டம் விரைந்து செயல் படவேண்டியது இன்றியமையாத நிலை என்று கூறுகிறேன். இந்தத் திட்டத்திலே நிதியைப் பற்றிக் கூறும்போது, பெரும் அளவு நம் நிதியில் செய்ய வேண்டுமென்ற நிலை வற்புறுத்தப்பட்டு இருப்பதால், தற்கு சிறு சேமிப்பு திட்டங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த சிறு சேமிப்பு திட்டங்களில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கெல்லாம் அதிகத் தொல்லை கொடுக்காமல் நிரம்ப வருவாய் உள்ளவர்கள், முதலாளிகள், பக்கத்தில் திரும்பி நிற்க வேண்டு மென்று நான் அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன். குறைந்த வருவாய் என்று கூறும்போது, மாதம் 200 ரூபாய்க்குள்ளாக, அலவன்ஸ் எல்லாம் சேர்த்து, வருவாய் உள்ளவர்களுக்கு சிறு சேமிப்புத் திட்டம் மூலமாக திட்டத்துக்கு அதிக பணம் சேர்க்கிற நிலையில் தொல்லை இல்லாமல் செய்ய வேண்டும். அவர்களுடைய பிராவி

டெண்ட் பண்டு, மற்ற பல சிறு சேமிப்புகளை எல்லாம் திட்டத்துக்காக பயன்படுத்துகிறோம். இப்போது தேசீய நெருக்கடியின் காரணமாக அடிஷனல் பிராவிடண்ட் பண்டு என்று கூடுதல் நிதி பிடித்து வருகிறோம். ரூபாய் 200-க்கு குறைந்த மாத வருவாய் உள்ளவர்களுக்கு, அதிலிருந்து ஓரளவுக்கு விதிவிலக்கு அளித்து, அவர்களுக்குத் தொல்லை இல்லாமல் செய்து, பெரும் வருவாய் உள்ளவர்கள் பக்கத்தில் நாம் திரும்ப வேண்டுமென்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல நமது திட்டத்தில் வேளாண்மைக்கு முதல் இடம் கொடுத்து உணவு உற்பத்தி முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று திட்டங்களிலேயும் அதற்கு முதன்மை கொடுத்திருக்கிறோம். ஆனாலும் இன்று வேளாண்மைத் துறையில், நாம் எதிர்பார்த்த அளவு, அல்லது முன்னேறி இருக்க வேண்டிய அளவு, முன்னேறவில்லை என்பது தெளிவு. வேளாண்மையில் முன்னேறியிருக்கலாம்; ஆனால், உணவு உற்பத்தியில் முன்னேறவில்லை என்று உறுதியாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், இன்று நம் நாட்டில் இருக்கிற உணவு நிலை அதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதற்கான காரணத்தைப் பற்றி ஆராயும்போது, இந்த மன்றத்தில் மதிப்புக்குரிய உறுப்பினர்களில் சிலர் நிலச் சீர்திருத்தச் சட்டம் அதற்குக் காரணமாயிருக்கிறது என்று கூறினார்கள். என்னுடைய கருத்து அதற்கு நேர்மாறானது. நிலச் சீர்திருத்தம் செய்து, உச்ச வரம்பை நிர்ணயம் செய்ததால் அல்ல, அதை அமுல் நடத்துவதில் காலம் தாழ்த்துவதால் தான் ஏற்படுகிறது என்று கருதுகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் அமுல் நடத்தப் பட்டு, 30 ஏக்கருக்கு மேல் அதிகமாக இருந்தால், அந்த நிலங்களை எடுத்து பயிர் செய்கிறவர்களுக்கு, உண்மையில் நிலத்தில் உழுகிறவர்களுக்கு அளித்து, உரிமைப்படுத்திக் கொடுத்து வாய்ப்பு அளித்தால், உற்பத்தி பெருகியிருக்கும் என்பது என் திட்டம். ஆனால் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1960-ல் அமுலுக்கு வருகிறது என்று முன்னாலேயே சொல்லி, பெரும் நிலச்சுவான்தார்கள் தங்கள் நெல் விவசாய நிலத்தை வேறு பல விவசாயங்களுக்கு மாற்றி, கரும்பு சாகுபடி, மேய்ச்சல் தரை என்று மாற்றி, அந்தச் சட்டத்திலே இருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்பு அளித்து விட்டோம் என்ற எண்ணம் தான் என்னைப் பற்றிக் கொள்கிறது. எனவே நிலச் சீர்திருத்தத்தை மிக விரைவில் அமுல் நடத்த வேண்டும், உச்ச வரம்பு போக, மிச்சம் இருக்கிற நிலத்தை விவசாயிகளுக்கு அளிப்பதிலே காலதாமதம் செய்யலாகாது என்று நம் அரசினரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக நம்முடைய இன்றைய நில உச்ச வரம்பு சட்டம் எப்படி அமைந்திருக்கிறது என்றால், எஞ்சிய நிலங்கள் என்று எடுத்ததை எந்த விதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று அதில் சொல்லப் படவில்லை. மிஞ்சியிருக்கிற நிலங்கள் பற்றி அறிவிக்கப்படுகிறது அரசாங்கப்பதிவேட்டில் அல்லது கெஜட்டில். அது விவசாயிகளுக்கு உரிமையாக்கிக் கொடுக்கப்படுமா, இந்த அரசாங்கம் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கிற நஷ்ட ஈட்டை பல தவணைகளாக விவசாயிகளிடமிருந்து வாங்கிக் கொண்டு நிலத்தை அவர்களுக்கு

சொந்தமாக்குமா என்றெல்லாம் சொல்லவில்லை. பயிரிடுகிறவர் 5 ஏக்கராவுக்கு மேல் வைக்கக்கூடாது என்று உச்ச வரம்பு வைத்தி
5-30 p.m. ருக்கிறோம். நில சொந்தக்காரன் 30 ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற உச்ச வரம்பின் படி மிஞ்சிய நிலம் எவ்வளவு என்று அறிவித்துவிட்டோம். அந்த நிலத்தை பயிரிடும் விவசாயிக்கு அது சொந்தமாக நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கிற நஷ்ட ஈட்டை அந்தந்த விவசாயிகளிடமிருந்து பல தவணைகளாக வாங்கி கொடுத்து, விவசாயிக்கு நிலத்தை உரிமைப்படுத்திவிட்டால் ஊக்கமாக உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. பல நிலங்கள் கரும்பு சாகுபடிக்கும் மேய்ச்சல் தரைக்கும் மாற்றப்பட்டிருக்கின்றன. 1950-க்கு பின்னால் அவை மாறியதால் சட்டத்தில் இதற்கு விலக்கு அளிக்காமல் அதுவும் நெல் சாகுபடி நிலம் என்று கருதி உச்ச வரம்புக்கு உட்படுத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் நெல் விவசாயம்தான் மிக முக்கியமானது. வேளாண்மையை நாம் முக்கியமாகக் கருதுகிறோம். உணவு உற்பத்திக்கு முக்கிய இடம் கொடுக்கவேண்டிய நேரம் இது. மண்வள ஆராய்ச்சியில் மிகவும் ஈடுபட்டு ஒவ்வொரு தாலூகா வாரியாக அரசினர் ஆட்களை அனுப்பி மண் வளத்தை ஆராய்ந்து கரும்புக்கு ஏற்றது, நெல்லுக்கு ஏற்றது எது எது என்று பகுத்து விவசாயிகளுக்கு வழிகாட்டவேண்டும். 'சாயில் கன்சர்வேஷன்' எல்லாம் வைத்திருக்கிறார்கள். நாம் மண்ணை எடுத்து அனுப்பினால் அவர்கள் பார்ப்பார்கள். எல்லா விவசாயிகளும் இந்த நடைமுறை தெரிந்தவர்கள் அல்ல. ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள விவசாய விஸ்தரிப்பு அதிகாரி எதை விஸ்தரிக்கிறாரோ, தெரியவில்லை. ஆனால் விவசாயத்தை அல்ல. ஆகையால் அரசினர் முதல் கடமையாக நெல் விவசாயத்திற்கு ஏற்ற இடம் எது என்று பரிசோதனை செய்யவேண்டும். நெல் விவசாயத்தில் நானும் ஈடுபட்டிருப்பதால் அதைப்பற்றி என்னால் உணரமுடிகிறது. இப்போது நெல் விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் வியாபாரப் பொருள்களை விவசாயம் செய்யப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதில்தான் அவனுக்கு அதிகமான பொருள் கிடைக்கிறது. அதனால் வாழ முடிகிறது. நாட்டுக்கு நெல் கொடுக்கவேண்டுமென்ற உணர்ச்சியில் அவன் நெல் விவசாயம் செய்தால் வாழ முடியாத நிலை இன்று இருக்கிறது. அதை தடை செய்யவேண்டும். நெல் விவசாயத்திற்கான இடங்களை ஆராய்ந்து எந்த இடத்தில் நெல் பயிர் செய்ய முடியுமோ அந்த இடங்களில் நெல்லைத் தவிர எந்த வியாபாரப் பொருள்களையும் விவசாயம் செய்வது தடை செய்யப்படவேண்டும். அப்படிச் செய்யும்போது விவசாயிகள் வாழ்வதா, வேண்டாமா என்ற பிரச்னை வருகிறது. நெல் விவசாயம்தான் செய்ய வேண்டுமென்றால் அதைச் செய்பவன் பிச்சைக்காரனாகும் நிலைதான் ஏற்படுகிறது. வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றால் வியாபாரப் பொருள் விவசாயம் தான் செய்ய வேண்டும். அதனால் நெல் விவசாயத்திற்கு அதிக ஊக்கமும் சலுகையும் அளிக்கவேண்டியது அவசியமாகிறது. ஆனால் அரசாங்கத்தில் நெல் விவசாயத்திற்குத்தான் ஃபைன் போட்டுக்

கொண்டிருக்கிறோம். ஏக்கருக்கு 15 ரூபாய்க்கு மேல் வரிபோடுகிறோம், மற்ற விவசாயத்திற்கு அப்படியில்லை. சோளம், புகையிலை, கரும்பு, காப்பி இவைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு எந்த வரி இருக்கிறதோ அந்த அளவுக்கு குறைந்த வரியில்லை நெல் விவசாயத்திற்கு என்று சொல்ல ஆசைப்படுகிறேன். உடலுழைப்பால், வாழவேண்டுமென்ற எண்ணத்தில், எல்லோருக்கும் உணவளிக்க வேண்டுமென்ற தொண்டினுக்காக பரம்பரையாக செய்து வரும் தொழில் என்ற முறையில்தான் நெல் விவசாயத்தில் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். வியாபாரப் பொருள்களைப் பயிர் செய்வதற்கு நிறைய பொருள் தேவை. நெல் விவசாயம் என்றால் சாகப்போகிற மாட்டைக் கட்டி உழுது, யாரிடமாவது விதை கடன் வாங்கி நெல்லை விவசாயம் செய்யத் தொடங்கிவிடலாம். அந்த ஒன்றுதான் நெல் விவசாயத்தை செய்யத் தூண்டுகிறது. ஆனால் அந்த விவசாயி வாழ்கிறான் என்று சொல்வதற்கில்லை. நெல் விவசாயத்திற்கு விதித்திருக்கும் அதிக வரியை ரத்து செய்து அடிப்படை வரியாக அதை மாற்றவேண்டும். ஒரு ஏக்கருக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல சுப்ரீம் கோர்ட்டில் இவ்வாறு வரி விதிப்பதை தடை செய்யப்பட்டிருக்கிறது. நிலத்திற்கு நிலம் வேற்றுமை பாராட்டாமல் நாம் ஒன்று போல வரி விதிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரப்பர் தோட்டத்திற்கு குறைந்த வரியிருக்கிறது. அதேபோல் புகையிலை, காப்பிக்கு குறைந்த வரி இருக்கிறது. அதைப்போன்று நெல்லுக்கும் குறைக்கவேண்டும். ஒரே அடிப்படையாக நாடு முழுமைக்கும் தீர்மான வரியாக இரண்டு ரூபாயாக வைக்கமுடியாதே தவிர வேறில்லை. வருவாய்க்குத் தக்க வித்தியாசம் இருக்கலாம். எனவே வியாபாரப் பொருள் விவசாயத்திற்கு கூடுதலும், நெல் விவசாயத்துக்கு குறைவாயும் வரி விதிக்க வேண்டும். அப்படியும் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றால் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் முன்னுக்கு நின்று இதில் முனையவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கமே ரப்பர் எஸ்டேட் எடுத்திருக்கிறார்கள். அதற்காக பல தரிசு நிலங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். அதை ஆரம்பிக்க பல நாட்களாகும். அது வரையில் குத்தகைக்குக் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் விவசாயிகளிடத்தில் நான்கில் ஒரு பகுதியைப் பருத்தி பயிர் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பருத்தி பயிர் செய்தால் என்னவாகும்? மழை மிகுதியான இடம். மண்ணும் அதற்கேற்ப இல்லை. பருத்திக்கு பதிலாக மரச்சீனி பயிர்செய்தால் உணவு உற்பத்தி பெருகும் அல்லது மற்ற பொருத்தமான விவசாயத்தை போடுங்கள் என்றால் சட்டம் அப்படியில்லை என்று சொல்கிறார்கள். சூழ்நிலைகளுக்கேற்ப விவசாயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் பல விவசாயக் கல்லூரிகள் ஏற்படுத்தவேண்டும். கன்னியாகுமரியில் நெல் பயிர் உற்பத்தி அதிகமாகச் செய்கிறோம். 60, 70 ஆயிரம் ஏக்கர் அங்கு

நெல் பயிர் செய்யப்படுகிறது. மிகுந்த பணச் செலவில்லாமல் கல்லூரி ஏற்படுத்த வசதியிருக்கிறது. முன்னாள் திருவாங்கூர் அரசு விட்டுச்சென்ற, பத்மநாபபுரத்தில், உதயகிரி கோட்டை இருக்கிறது. நான்கு பக்கமும் சுவர்களால் கட்டப்பட்டு 140 ஏக்கர் விணைக் கிடக்கிறது. அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது. இரண்டு அரசாங்கத்திற்கும் அதுபற்றி சிறு வழக்கு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதைத் தீர்த்துக்கொள்ளலாம். அந்த இடத்தை எடுத்து அதில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாநிலத் துறையைப் பற்றிச் சொன்னேன். மத்தியத் துறையைப்பற்றி என்னென்ன செய்யப்படுகிறது என்பது நமக்கு அறிவிக்கப்படவில்லை. மாநில அரசாங்கம் மத்தியத் துறையிலே என்னென்ன நமக்கு செய்யவேண்டுமோ அதை வன்மையோடு எடுத்துச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரையில் ரயில் இல்லை. தமிழ் மாநிலத்திலேயே ஒரு மாவட்டம் ஒரு இஞ்சு கூட ரயில்பாதை இல்லாத மாவட்டம் கன்னியாகுமரிதான். ரயில் பார்ப்பதற்கென்று பள்ளிப் பிள்ளைகளை திருநெல்வேலி வரையில் கொண்டு சென்று காட்டக்கூடிய நிலையில் அந்த மாவட்டம் இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீலத்திரைக்கடல் ஓரத்தில் அமைந்த குமரிமுனையிலிருந்து இமயம் வரையில் யாரும் சென்று வர ரயில்பாதை அமைத்தாகவேண்டும். அங்கு அமைப்பதால் பணம் வருமா என்று பார்க்காமல் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் பாதை அமைக்கவேண்டுமென்று சொல்கிறோம். ஆகையால் அந்த மாவட்டத்திற்கு ரயில் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிமிண்டு உற்பத்தி பற்றி பேசினார்கள். எங்கள் பகுதிகளில் சிமிண்டு உற்பத்திக்கான சுண்ணாம்புக் கற்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. வட்டக் கோட்டையில் சுண்ணாம்பு மிகுதியாக இருக்கிறது. திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு அரசியல் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ கன்னியாகுமரி மாவட்டத்தில் சிமிண்டு தொழிற்சாலையை அரசினர் அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு இன்றியமையாத ஒன்று. பலருக்கு அது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர்கள்கூட சொன்னார்கள், குடும்பக் கட்டுப்பாடு 60 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தால் நான் வந்திருக்கமாட்டேன் என்று இருக்கலாம். இன்றைய நிலையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டுவராவிட்டால் மக்கள் மிகுந்த துன்பம் அனுபவிக்க வேண்டி வரும் என்பதில் ஐயமில்லை. முதலில் பணம் கொடுத்து பிறரை அழைத்து அறுவை சிகிச்சை செய்வதோடுகூட தெருவிலே அலைந்து திரியும் பிச்சைக்காரர்களை அழைத்து கட்டாயமாக இருபாலர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கையில் இருபது ரூபாயையும்

கொடுத்து அனுப்பவேண்டும். அப்படிச் செய்தால் தான் இனி வருகின்ற பிச்சைக்கார பரம்பரை குறையும். பிச்சைக்காரன் மகன் பிச்சைக்காரனாக பிறக்காமல் இருப்பான். கொடுக்கின்ற பணமும் அவனுக்கு இருபது நாள் பிச்சை எடுக்காமல் காலம் கழிக்க உதவும். ஆகையால் அந்த செயலுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தாரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது சிறு மாவட்டம். அங்கே 60,000 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. சர்க்கார் பல மாவட்டங்களில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தைக் கொண்டுவந்தால் விவசாய உற்பத்தி பெருக அது மிகவும் உதவும். திட்டங்களை நிறைவேற்றத் தேவையான பணத்தை பெறும் விஷயத்தில் மக்களை அதிகத் தொல்லைக்கு உட்படுத்தாதபடி சர்க்கார் செயலாற்ற வேண்டும். சக்தியுள்ளவர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கிக்கொள்ளலாம். பணம் அதிகமாக இல்லாதவர்கள் கஷ்டப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தார் செலவழிக்கும் பணம் பாழாகாமல் இருப்பதற்கு மக்களும் அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்க வேண்டும். என்ஜினியர் தப்பு செய்தால் அவருக்கு கனம் அங்கத்தினர்கள் ஆதரவு அளிக்கக் கூடாது. என்ஜினியர் தப்பு செய்தால் அதை அரசினரும் மறைத்துவிடக்கூடாது. அவர்கள் நம் உறவினர்களாக இருந்தாலும் நாமும் அவர்களுக்கு துணை நிற்கக் கூடாது. அப்படி எல்லோரும் ஒத்துழைத்தால் திட்டம் நல்ல முறையில் நிறைவேறும், நாம் வெற்றி பெறுவோம். திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

5-40 p.m.

திரு. கே. கமலக்கண்ணன்: கனம் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரில் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம் அரசாங்கம் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை, சுகாதாரம், கல்வி, தொழில், மின்சாரம், சமூகப் பணிகள் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமதர்ம சமுதாய அடிப்படையில் மக்கள் வாழ்க்கை நிலை உயர கணிசமான தொகை ஒதுக்கி, பணத்தை சிக்கனமாகச் செலவழித்தது. நாம் இன்று மகிழ்ச்சியுடன் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம். "சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்தொரு பாற் கோடாமை சான்றோர்க்கணி" என்பது திருவள்ளுவரின் திருவாக்கு. நம் அரசாங்கம் இக்குறளுக்கிணங்க மக்களுக்கு பாரபட்சமின்றி சேவை செய்தாலும்கூட மக்களுக்கு சில குறைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சர்க்காருக்கு 45 சத விகித வருவாய் விவசாயத் துறையிலிருந்தே வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நம் நாட்டில் உள்ள நிலத்தில் ஒவ்வொருவருக்கும் சராசரியாக 0.98 சதவிகித நிலம் இருக்கிறது; நம் தமிழ்நாட்டில்

அதை விடக் குறைவாக, 0.61 சதவிகிதம் இருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய அரிசி விளைச்சல் 1950-51-ல் ஏக்கருக்கு 1,016 பவுண்டு, 1955-56-ல் ஏக்கருக்கு 1,213 பவுண்டு, 1960-61-ல் ஏக்கருக்கு 1,261 பவுண்டு. அமெரிக்காவில் ஒரு சாதாரண, சிறு குடும்பத்தை எடுத்துக்கொண்டால், அக்குடும்பத்திலுள்ள நான்கு, ஐந்து பேர் விஞ்ஞான முறையில், நவீன முறையில், 300 அல்ல 400 ஏக்கர் விவசாயம் செய்து ஒரு பட்டணத்திற்கே உணவுப் பொருள்கள் ஸப்ளை செய்கிறார்கள். அமெரிக்காவில் ஏக்கருக்கு 5,000 முதல் 6,000 பவுண்டு வரை விளைகிறது. இன்று தமிழ் நாட்டில் உழவர்களின் அன்றாடக் கூலியானது, இந்தியாவில் உள்ள சராசரிக் கூலியைவிட மிகக் குறைவாக இருக்கிறது. இந்த ராஜ்யத்தில் சாதாரணமாக 10 பேர் உள்ள, அரை அல்லது ஒரு ஏக்கர் நிலம் உடைய குடும்பத்தினர் தினத்திற்கு ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய கூலி தினத்திற்கு 12 அணா அல்லது ஒரு ரூபாய்க்கு மேற்பட்டதாக இல்லை. அவர்கள் விவசாயத்தில் நல்ல அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் வயிறும் முதுகும் ஒட்டியிருப்பதால் நகரத்திற்கு வந்துவிடுகிறார்கள்; வேறு தொழில்களுக்கு வந்துவிடுகிறார்கள். இப்பேர்பட்டவர்களுடைய கூலிகளை உயர்த்த அரசாங்கம் ஆவன செய்தால் நன்றாக இருக்கும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். சிறு டிராக்டர்களை உற்பத்தி செய்து, ஒன்று அல்லது அரை ஏக்கராக இல்லாமல் 10 அல்லது 15 ஏக்கர் நிலங்கள் உடைய விவசாயிகளில் ஏராளமான விவசாயிகளுக்கு அவைகளைக் கொடுத்தால் விவசாய உற்பத்தி பெருகும். பட்டணங்களிலுள்ள டாக்டர்கள், எஞ்ஜினியர்கள் முதலியவர்களும் மற்றவர்களும் கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் சொன்னார். நாம் ஓரளவு அந்த முறையில் செயலாற்ற வேண்டும்.

விவசாயத்தில் அனுபவமில்லாத ஒருவர் ஒரு கிராமத்திற்குச் சென்றார். அங்கே ஒரு விளம்பர போர்டில் "விவசாயத்தில் ஒன்றுக்கு ஒன்பது லாபம்" என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தார். உடனே அவர் ஒரு சூபர்வைஸரை நியமித்து 50,000 ரூபாய் செலவழித்து விவசாயம் செய்தார். கடைசியில் அவருக்கு 10,000 ரூபாய்க்குத் தான் பலன் கிடைத்தது. 40,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. உடனே அவர் மறுபடியும் அந்த போர்டைப் பார்க்கச் சென்றார். "நேரிடையாகப் பார்த்தால் விவசாயத்தில் ஒன்றுக்கு ஒன்பது லாபம்" என்று அந்த போர்டில் கீழே எழுதியிருந்தது. அதே போல, இன்று நேரிடையாக விவசாயம் செய்பவர்களுக்குத்தான் லாபம் வருகிறது. இதை நான் அனுபவ பூர்வமாக அறிந்திருக்கிறேன். எனவே விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசாங்கம் பல துறைகளில் தனிச் சலுகைகள் கொடுக்கவேண்டும்.

இப்போது பூமிக்குள் இருக்கும் தண்ணீரை விஞ்ஞான முறையில் வெளியே கொண்டுவந்து விவசாயத்திற்கும் மற்றக் காரியங்களுக்கும் உபயோகிக்கிறோம். இன்னும் 56 ஆண்டுகளுக்குப் பிறகு

இந்தத் தண்ணீர் வற்றிவிடும் என்று ஒரு விஞ்ஞானி கூறியிருப்பதாக ஏதோ ஒரு அறிக்கையில் பார்த்தேன். அவ்வாறு அந்தத் தண்ணீர் வற்றிவிடும்போது உலகத்தில் தண்ணீரில்லாப் பஞ்சம் ஏற்படும் என்று அந்த விஞ்ஞானி கூறியிருக்கிறார். எனவே, குடிப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும், மற்ற காரியங்களுக்கும் சமுத்திர நீரை தகுதியுள்ளதாக ஆக்குவதில் ஆராய்ச்சி செய்தால் நலமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், தொத்துநோய்களைக் கட்டுப்படுத்த இப்போது பல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக மக்களிடையே நல்ல சுகாதார நிலை இருந்து வருகிறது. 1941-ஆம் ஆண்டில் பிறப்பு 34.7 சதவிகிதமாகவும், இறப்பு 23 சதவிகிதமாகவும், சராசரி வயது 35 ஆகவும் இருந்தன. 1961-ஆம் ஆண்டில் பிறப்பு 26 சதவிகிதமாகவும், இறப்பு 13.3 சதவிகிதமாகவும், சராசரி வயது 41 ஆகவும் 5-50 p.m.
ஆகியிருக்கிறது. நாம் எல்லாத் துறைகளிலும் நன்றாக முன்னேறியிருக்கிறோம் என்பதை இதன் வாயிலாக அறிகிறோம்.

முதியோர் பென்ஷன் திட்டத்தில் அரசாங்கம் எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிறது. இப்போது சில கிராமங்களில், சில பெரியவர்கள் திக்கற்றவர்களாகவும் எந்த விதமான வருமானமும் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் 50, 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டத்தைச் விஸ்தரித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்

குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் காணுகிறபோது நம்முடைய தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஒரு ஸ்குயர் மைலுக்கு 661 மக்கள் இருக்கிறதாகவும், இந்திய நாட்டின் சராசரியை எடுத்துக் கொண்டால், 373 பேர்கள் ஒரு ஸ்குயர் மைலுக்கு இருப்பதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக இப்போது குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்கிறவர்கள் எல்லாம் படித்தவர்கள், உயர்ந்த பண்பாடு உடையவர்கள்தானே தவிர, இந்து மதத்தைத் தவிர இதர மதத்தினர்—முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், தங்கள் மதம் அனுமதி தரவில்லை என்ற காரணத்தால் அனுசரிப்பதில்லை. அதோடுகூட, கிராமத்திலே இருக்கிற ஏழைகள் அனுசரிப்பதாகத் தெரியவில்லை. அந்த அளவுக்கு விளம்பரம் நம் நாட்டில் இல்லை. ஆகையினாலே, இந்து மதம் அல்லாத பிற மதத்தினர், கிராமத்திலே இருக்கிற ஏழைகள், இவர்களுடைய ஜனத்தொகை தான் அதிகரித்து வருகிறதே தவிர, நல்ல உயர்ந்த பண்பாடு உள்ள குடும்பங்கள் எல்லாம் குறைந்து கொண்டு வருமோ என்ற சந்தேகம்கூட எனக்கு இருக்கிறது. சென்னை நகரை எடுத்துக் கொண்டால், தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. ஜனத்தொகை அதிகரித்து வருகிற நிலையிலே, அது 22 லட்சமாகியிருக்கிறது. காவிரி நீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தால் மிக நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். வேண்டாத சில

ஸ்தாபனங்கள் சிறைச்சாலை, மிருகக் காட்சிசாலை, மெண்டல் ஹாஸ்பிடல் இப்படிப்பட்ட டிபார்ட்மெண்டுகள் எல்லாம் சென்னை நகர எல்லைக்கு அப்பால் கொண்டு போகப்பட்டால்கூட நல்லது, ஓரளவு ஜனநெருக்கடியைக் குறைக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு சென்னையிலே இருக்கிற பல ரோடுகளில் ஆக்ஸிடெண்டுகள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆடு மாடுகளும் லைசென்சு இல்லாத வாகனங்களும் குறுக்கே நெடுக்கே போவதுதான் இதற்குக் காரணம். பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் ஆறு முதலியவைகளில் வெயில் காலத்தில் நாற்றம் ஜாஸ்தியாக இருக்கிறது. அதற்கும் ஏதாவது வழிவகை செய்யவேண்டும். நகரில் பிச்சைக்காரர்கள், வியாதியஸ்தர்கள் தொல்லைகள் நிறைய இருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் சொல்லிய மாதிரி அதற்கு ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, இத்தோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே இப்போது நம் முன் இருக்கும் நான்காவது திட்ட நகலை அனுசரித்து சில வார்த்தைகள் சொல்ல அனுமதி வேண்டுகிறேன். முதல் மந்திரி அவர்கள் படித்த அறிக்கையில்,

" The difficulties which we have had to face in the current Plan period, such as rise in prices and shortage of foreign exchange have naturally tended to dominate the debate on the Fourth Plan in its preparatory stage—The difficulties are real and cannot be slurred over ". என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை அனுசரித்து பல பிரமுகர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, சில அபிப்பிராயங்களை எல்லாம் இந்த சபையில் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதற்காக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். முதன்முதலாக ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மூன்று ஐந்தாண்டு திட்டங்களின் வாயிலாக, விவசாயம், தொழில் மற்ற பல துறைகளிலேயும் தமிழ் நாட்டுக்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ததற்காக தமிழ்நாடு அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இருப்பினும், அதனால் ஏற்படுகிற அடிப்படைத் தீமைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்கு, ஆரம்பிக்கும் முன்பு மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் சொன்னார்கள். செயல் படக் கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தைப் போட வேண்டும். நாம் எவ்வளவு தூரம் அதைச் சாதிக்க முடியும்; நம் மக்கள் அதை எவ்வளவு தூரம் அனுசரித்து பங்கு கொள்ள முடியும், மக்களுக்கு எவ்வளவு தூரம் பாரம் இல்லாமல் திட்டம் போட வேண்டுமென்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள்.

னார்கள். இதைப் பற்றி தவறுதலாக திட்டமே தேவையில்லை என்று சொல்வதாகப் பிரசாரம் நடந்து வருகிறது. இன்று நாட்டின் நிலைமை எப்படி இருக்க வேண்டும்?

" Writing under the caption ' The Fading Rupee ', the Eastern Economist (July 2) observed :

' It is, of course, just not true that the economy has collapsed or is due to do so. But it is certainly true that it is neither running smoothly, nor growing steadily. Its continued progress, in other words, cannot be taken for granted. This is not a subjective notion, but an objective assessment '.

Such is the state of our economy after near completion of three five-year plans; this is mainly because our plans are based on doctrinaire thinking and not on pragmatic considerations ". அதாவது பயன் தரும் செயல் முறையில் திட்டங்களை வகுக்காத குறை, தத்துவார்த்த ரீதியில், ருஷ்யா, சீனா போன்ற அரசாங்கங்கள் செய்யும் திட்டங்கள் போல் போட்டு, மக்களுக்கு பலவித இன்னல்களை ஏற்படுத்தி இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு மாறாக ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் சென்ற மகாயுத்தத்தில் கொடுமைகளுக்கு உள்ளான நாட்டு அரசாங்கங்களில் என்ன செய்திருக்கிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

" The myth that totalitarian methods are more effective in producing a higher and faster rate of economic growth than democratic process has been exploded by the economic miracle achieved by West Germany and the amazingly rapid economic recovery of Japan after the war. The gradual acceptance of Liberman's formula for the profit motive by Soviet Russia and other East European countries unmistakably indicates the superiority of liberalism over Marxism. Increased production can be brought about only by encouraging the enlightened self-interest among the idividual workers and the entrepreneurs.

இது தான் இன்றைக்கு இருக்கக்கூடிய சிந்தித்துப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமாக இருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரே ஒரு வித்தியாசம் தான். அதெல்லாம் industrial revolution வந்தபோது develop ஆன Countries அது வந்த போது, நாம் தூங்கிக் கொண்டு இருந்தோம். அதனால் தான் அந்த analogy ஒத்துக் கொள்கிறதில்லை ரொம்பப் பேர்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : கனம் தொழில் துறை அமைச்சர் அவர்கள், ஜப்பானியர்கள், ஜெர்மனிக்காரர்கள் செய்த காரியம் நம் நாட்டுக்கு அவ்வளவு ஒத்துக் கொள்ளாது என்று சொல்கிறார்கள். ஆனால் நடந்த பெரிய யுத்தத்தில் ஜப்பானும்

அழிந்து விட்டது, ஜெர்மனியும் அழிந்து விட்டது. அந்த நிலைமையில் தான். அவர்கள் இந்த முறையைக் கையாண்டு முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்பது, நேரில் போய்ப் பார்த்திருக்கிற, கனம் தொழில் துறை மந்திரி அவர்களுக்கு, என்னைவிட நன்றாகத் தெரியும். எதற்காகச் சொல்ல ஆரம்பித்தேன் என்றால், மனிதன் மனிதனாக வாழவேண்டும், அரசாங்கத்தின் அடிமையாகக் கூடாது
-00 .m. என்பதற்காக. 1917-ல் சோவியத் அரசாங்கம் கம்யூனிச தத்துவத்தில் அரசாங்கம் நடத்துவதற்கு முன்னால் தங்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து மிச்சமிருந்ததை அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்ததை உலகம் அறியும். 1917-க்கு பின்னால் கம்யூனிஸ்ட் அரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து இன்றுவரையில் அந்த நாட்டில் மக்களுக்குத் தேவையான உணவை அவர்கள் உற்பத்தி செய்யவில்லை. அமெரிக்காவையோ பாக்கி நாடுகளையோ நம்பித்தான் உணவு இறக்குமதி செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அதனால் மக்களுக்கு எந்த முறையில் நன்மை ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டுமென்றுதான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொள்கிறேன். திட்டங்களைப் போடும்போது அவையெல்லாம் நிதானமாகச் செய்யலாமே என்று சொன்னோமே தவிர திட்டமே வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் பொய்ப் பிரசாரத்திற்காக சுதந்திர கட்சிக்காரர்கள் திட்டமே வேண்டாமென்று எதிர்க்கிறார்கள் என்று பேசிவருகிறார்கள். அதைப்பற்றி கவலைப்படவில்லை. இப்போது சந்தோஷமான செய்தி என்னவென்றால் அன்று ராஜாஜி போன்ற சுதந்திராக்கட்சிக் காரர்கள் சொல்லியதை இன்று அரசாங்கம் உணரும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது எல்லோரும் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். திட்டம் தேவைதான். ஆனால் அரசாங்கத்தின் மூலமாகத் தான் சகலமும் நடக்க வேண்டுமா? மக்கள் முன்னேற்றத்திற்கு வேண்டியதைச் செய்ய வேண்டாமா? மக்கள் ஏற்று செய்தால் அதை பிரைவேட் செக்டர் என்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு விட்டோம். அதைப்பற்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. இருந்தாலும், பேப்பர்களில் அதைப்பற்றி வந்திருக்கிறது.

We have now come to the paradoxical situation and often wonder where our plans have taken the country to. We are in blind lanes. இங்கிருக்கிறவர்கள் இதைப் புரிந்துகொள்வார்களாதலால் அதை தமிழ்ப்படுத்தி சொல்ல விரும்பவில்லை. மூன்று திட்டங்களால் யாருக்கு நன்மை ஏற்பட்டது? தெருத்தெருவாகச் சென்று பிரசாரம் செய்கிறோம். ஏழைகளுக்காகவே நாம் திட்டங்களைப் போட்டோம், அவர்களுக்கே நன்மை செய்கிறோம், அவர்களுக்காகவே அரசாங்கத்தை நடத்துகிறோம், என்றெல்லாம் சொல்கிறார்கள். வாஸ்தவம் தான். ஏழைகள் எந்த நாட்டில் இல்லை? இருந்தாலும் ஏழைகள் பணக்காரர்களாக ஆவதற்காகத்தான் திட்டம் போடுவார்கள். இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏழைகள் மேலும் பரம ஏழைகளாக போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை, முக்கிய தலைவர்கள் சொல்வதை அரசாங்கம் புரிந்துகொள்ள

வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். மூன்றாவது திட்டத்தினால் இதுவரையில் மத்திய அரசாங்கத்தில் நாடு பூராவுக்கும் கிட்டத் தட்ட 14,060 கோடி செலவு செய்து இருக்கிறோம். இப்போது நாம் 750 கோடி செலவு செய்யப் போகிறோம். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும் இன்றைய நிலைமை என்ன? யாராவது தன்னிறைவு கொண்ட வாழ்வு வாழ முடிகிறதா? சிரமம் இல்லாத ஏழைகள் பற்றி, பணக்காரர்கள் பற்றி சொல்லவில்லை. யாராவது நிம்மதியாக வாழ இந்த நாட்டில் இடம் இருக்கிறதா? பொதுவாக தமிழ் நாட்டில் எவ்வளவு தூரம் நம்மால் கொடுக்கமுடியுமோ அதை சிரமப்பட்டு வரியாகக் கொடுக்கிறோம். ஏமாற்றுகிறார்கள் என்றும் சொல்கிறார்கள். ஏமாற்றுதல் ஏன் ஏற்படுகிறது? அதிக வரி போட்டால் ஏமாற்றுதல் ஏற்படும் என்பது உலகம் அறிந்த உண்மை. இப்போது ரூபாயின் மதிப்பு கீழே போய்விட்டது. பத்து பதினைந்து வருஷங்களுக்கு முன் ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு ஒரு மனிதன் வாங்குகின்ற அளவு சாமான்களை இப்போது வாங்கமுடியவில்லை. இன்று ரூபாயின் மதிப்பு எவ்வளவு இருக்கிறது? வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லை. வட்டிக் கொடுக்கவே திண்டாடுகிறோம். உள்நாட்டில் வாங்கிய கடன் வேறு இருக்கிறது. இந்த நிலையில் மேலும் வரிபோட்டு கடன் வாங்கி திட்டம் போட்டுக் கொண்டு போனால் என்ன நிலைமையாகும் என்று அரசாங்கம் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். நம்மால் நமது பொருளாதாரத்தைக் கொண்டு சுமக்கக் கூடிய அளவில் இந்தத் திட்டத்தை சீர்திருத்தம் செய்து எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி எந்தெந்த திட்டத்தை ஒதுக்கிவைத்து எந்தெந்த திட்டங்களை மக்களுக்கு உடனடியாகச் செய்யவேண்டுமென்று யோசித்து மறு பரிசீலனை செய்தால் நாட்டு மக்களுக்கு நல்லது. திட்டங்களினால் மக்கள் தொகைதான் அதிகமாகிக்கொண்டு போகிறது. அதைத் தடுக்க கட்டுப்பாடு திட்டங்களை அரசாங்கம் செய்துவருகிறது. ஒப்புக்கொள்கிறேன். இதனால் எல்லாம் நாம் எதிர்பார்க்கும் நன்மை ஏற்பட்டுவிடாது. மூன்றாவது திட்டத்தில் 15 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து நாம் கண்ட பலன் என்ன? மருத்துவம் சரியாகக் கிடைக்கிறதா? கிராம நகரங்களில் சுகாதாரம் சரியாக இருக்கிறதா? கல்விக்கு இவ்வளவு கோடிக்கணக்காக செலவு செய்கிறோமே, அதில் தரம் இருக்கிறதா? படித்தவர்கள் மேல் படிப்புக்குப் போகவேண்டுமென்றால் முடிகிறதா? ஹைஸ்கூல் எலிமெண்டரி ஸ்கூல், காலேஜுகளில் இடம் சாதாரணமாகக் கிடைக்கிறதா? நிறையப் பணம்தான் செலவழிக்கிறோம். மக்கள் அதிகமாகப் பிறக்கிறார்கள், என்ன செய்வது என்று சொல்வார்கள். சிரமம் வரத்தான் செய்யும். இதைவிட்டு விவசாயத்தைப் பார்த்தால் அதில் தன்னிறைவு கண்டோமா? முதல் திட்டம் முடிந்தவுடனேயே உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும் என்று சொன்னார்கள். இரண்டாவது திட்டம் ஆரம்பிக்கும்போது இப்போது அவசியம்

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [6th August 1965

பஞ்சம் போய்விடும் என்று சொன்னார்கள். மூன்றாவது திட்டமும் முடிந்துவிடப் போகிறது. இன்றாவது அந்த பஞ்ச நிலை தீர்ந்ததா என்றால் தீரவில்லை. காரணம் கேட்டால் திட்டம் நல்லவிதமாக நிறைவேற வேண்டுமென்றால் இந்த நாட்டில் ரேஷன் கட்டாயமாக வரவேண்டுமென்கிறார்கள். நாங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் ரேஷன் கொண்டுவரத்தான் போகிறார்கள். நமது மாநில முதன் மந்திரி அவர்களுடைய பேச்சை, உணவு ரேஷன் கண்ட்ரோலைப் பற்றி அவர்கள் அவ்வப்போது பேசிய பேச்சை ஒரு 'வெள்ளை அறிக்கை' யாக அச்சிட்டு இந்த மன்றத்தில் அரசாங்கம் வைக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநில அரசாங்கம் அந்த நிலைமையில் இருக்கிறது. முதல் மந்திரி நினைப்பதை அவர்களால் செய்யமுடிகிறதா ? எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கம் சொல்வதைச் செய்யும் நிலைமை இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் ஜில்லா போர்டு முனிசிபாலிடிகளுக்கு இருந்த அதிகாரம் கூட இன்றைக்கு நமக்கு இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. முதல் மந்திரி அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள், உணவு ரேஷன் தேவையில்லை என்று. தமிழ்நாட்டில் உணவு கண்ட்ரோல் எதற்காக? நாம் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்கிறோம். அதைப்பற்றியெல்லாம் இன்னும் இரண்டு நாட்கள் கழித்து பேசலாமென்று இருக்கிறேன். படிக்கு நான்கணா அரசாங்கம் சர்சார்ஜ் என்றும் விற்பனை வரி என்றும் பலமுறையில் வசூலிக்கிறார்கள். இவ்வளவு தூரம் வசூலித்துக் கொண்டு பொதுமக்களுக்கும் ஏழைகளுக்கும் குறைந்த விலையில் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். கனம் திரு. பாலசுப்ரமணிய அய்யர் அவர்களும் விவசாயத்தைப் பற்றி சொன்னார்கள். விவசாயிகளுக்கு வரி வஜா கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். உணவு தானியத்திற்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளை அத்தனையையும் எடுத்தால்தான் மக்கள் கொஞ்சமாவது ஒழுங்காக வாழும் நிலைமை ஏற்படும். இப்போது உற்பத்தியாகிற உணவுப் பொருள்களில் எத்தனை சதவிகிதம் சேதமாகிறது என்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். அதையெல்லாம் கண்காணித்துத் திட்டத்தை போடுவதில் ஆட்சேபனையில்லை. அதற்காக ஒத்துழைக்கக் காத்திருக்கிறோம். மக்கள் அழிவிற்கு திட்டம் போடாமல் சுக வாழ்வுக்கு திட்டமிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இப்போது அதிகம் பேச சந்தர்ப்பமில்லாததால் மற்றொரு சமயத்தில் மற்றவை பற்றி பேச ஆசைப்படுகிறேன். திட்டம் என்பது முன்னேற்றத்திற்காக நல்வாழ்விற்காக இருக்கவேண்டும்.

The plans are for our prosperity and not plans for our perishing.

அரசாங்கத்துறை வேண்டுமா மக்கள் துறை வேண்டுமா ? அரசாங்கத்துறை வேண்டுமென்றால் ரஷ்யா மாதிரி, சீனா மாதிரி ஒரே முடிவுக்கு வந்துவிடலாம். அரசாங்கத்துறைக்கு ஆதரவும் கிடைக்கலாம். அதுவுமில்லாமல், மக்கள் துறையும் இல்லாத இரண்டும் கெட்டான் நிலையில் எதையும் செய்யவேண்டாமென்று சொல்லிக்கொண்டு, மக்களுக்கு அனுகூலம் செய்யும் வகையில்

6th August 1965] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

திட்டங்களை மறுபரிசீலனை செய்து குறைந்த அளவில் சுமக்கும்படியான திட்டம் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

VICE-CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow. 6-11 a.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 172. *Notification issued with G.O. Ms. No. 759, Home, dated 3rd March 1965 making amendment to the Home Department Notification II-1, No. 2740 of 1964, dated the 20th June 1964. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* 173. *Notification issued with G.O. Ms. No. 1311, Home, dated 9th April 1965, directing the tax payable in respect of lorry bearing registration No. MDJ 1358 belonging to the St. Mary's High School and Orphanage, Vellore, be fixed at Rs. 180 per quarter so long as the said lorry is used exclusively for the transport of materials, etc., for the said educational institution and orphanage. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* 174. *Notification issued with G.O. P. No. 1909, Revenue, dated 23rd June 1965, making amendment to the First Schedule to the Madras General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax, Act 1959 (Madras Act I of 1959).]*

* 175. *Notification issued with G.O. Ms. No. 697, Rural Development and Local Administration, dated 22nd March 1965, making amendments to the rules for the regulation of the use of quarry right in lands vested in the panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 176. ***Notification issued with G.O. Ms. No. 1201, Rural Development and Local Administration, dated 25th May 1965, regarding inclusion of certain areas within the limits of the Kodai-***

[6th August 1965

kanal Township. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 177. *Notification issued with G.O. Ms. No.* 933, *Rural Development and Local Administration, dated 21st April* 1965, *regarding rules relating to qualifications for Park Superintendents and Surveyors and to regulate grant of leave and leave allowances to officers and servants of Panchayat Union Councils for undergoing antirabic treatment.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

† 178. *Notification issued with G.O. P. No.* 1711, *Revenue dated 3rd June* 1965, *making amendment to the Revenue Department Notification S.R.O. No. A*-1966 *of* 1959, *dated the* 28*th March* 1959. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act I of* 1959).]

† 179. *Notification issued with G.O. Ms. No.* 1399, *Home dated 20th April* 1965, *directing that the tax payable in respect of the trailer bearing registration No. MDJ* 1314 *belonging to Christian Medical College Hospital, Vellore, be fixed at Rs.* 12 *per quarter so long as the trailer is used only on eye camp operational duties.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

† 180. *Notification issued with G.O. Ms. No.* 750, *Public* (*Services*), *dated 12th April* 1965, *making amendment to the Madras Public Service Commission Regulations* 1954. [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).]

† 181. *Notification issued with G.O. Ms. No.* 1366, *Rural Development and Local Administration, dated 14th June* 1965, *G.O. Ms. No.* 1375, *Rural Development and Local Administration, dated 16th June* 1965, *G.O. Ms. No.* 1431, *Rural Development and Local Administration, dated 22nd June* 1965, *G.O. Ms.* 1343, *Rural Development and Local Administration, dated 22nd June* 1965 *and G.O. Ms. No.* 1435, *Rural Development and Local Administration, dated 22nd June* 1965, *declaring Manickampatti, Naickenpatti village, Kunnuthupatti, Ramanathapuram and Kumaralingapuram of Madurai district as Gramdan Villages respectively.* [*Laid on the Table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act*, 1958 (*Madras Act XV of* 1958).]

† 182. *Notification issued with G.O. Ms. No.* 368, *Rural Development and Local Administration, dated 19th February* 1965, *making rules relating to the construction or alteration of bridges, culverts, etc., near railway lines.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* 35 *of* 1958).]

6th August 1965]

B. Reports, Notifications and other papers.

‡ 29. *Notification issued with G.O. Ms. No.* 2986, *Revenue, dated 18th December* 1964, *making rules for the Defence of India Act*, 1962

‡ 30. *Report of the Committee of Privileges on 'Obstruction Case'.*

* Placed on the Table of the House on 31st July 1965.

† Placed on the Table of the House on 4th August 1965.

‡ Laid on the Table of the House on 2nd August 1965.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Saturday, the 7th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Special Tahsildars in Kanyakumari district.

a * 48 Q.—SRI M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of persons who were promoted as Special Tahsildars in Kanyakumari district from 1st January 1964; and

(b) the number of Special Tahsildars appointed for the procurement of foodgrains in this district, and among them the number of Special Tahsildars belonging to the Kanyakumari district?

THE HON. SRI V. RAMAIAH: (a) Out of seven persons promoted temporarily and posted as Tahsildars and Special Tahsildars in Kanyakumari district from 1st January 1964, five persons were posted as Special Tahsildars.

(b) Five Special Tahsildars were appointed for the procurement of foodgrains in Kanyakumari district. Among them one belongs to Kanyakumari district.

SRI M. SUBBIAH CHETTIAR: What is the duty and specific purpose for which these officers are appointed?

THE HON. SRI V. RAMAIAH: These officers are for the special purpose of procurement.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, what is the total quota allotted for the Kanyakumari district, and to what extent the Government have effected procurement?

THE HON. SRI V. RAMAIAH: A separate question may be put.

Distribution of sugar

a* 49 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food be pleased to state with reference to the answer given to the Legislative Council question No. 159, dated the 12th March 1965—

(a) the total quantity of sugar distributed throughout the State during 1963-64; and

(b) the quantity distributed to each district?

---

a Questions postponed from the list of questions for 4th August 1965

[7th August 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்தக் குறிப்பில் கண்டபடி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சமமாக விகிதாசாரப்படி பங்கிடப்படுகிறதா? அல்லது வேறு முறையில் பங்கிடப்படுகிறது என்று திட்டம் இருந்தால் அது இந்த சபைமுன் வைக்கப்படுமா?

கனம் திரு. வி. ராமய்யா : முக்கியமாக ஜனத்தொகை அடிப்படையில்தான் தரப்படுகிறது. அதற்கடுத்தபடியாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிற விஷயம் அங்கு இருக்கக்கூடிய சர்க்கரை உபயோகிக்கும் தொழிற்சாலை, ஹாண்டல், குவார்ட்டர்கள், இது போன்றவைகளை அனுசரித்துக் கொடுக்கப்படுகிறது கோட்டா.

SRI S. K. SAMBANDHAN : Will the Hon. Minister tell us the mode of distribution to individual families in the different towns?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : புதிதாக உற்பத்தி செய்யப்படும் கன்ட்சாரி சர்க்கரை எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது? எவ்வளவு வினியோகிக்கப்படுகிறது?

கனம் திரு. வி. ராமய்யா : தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI S. K. SAMBANDAN : Sir, was there any complaint that the distribution was not proper in the City of Madras, and, if so, what action was taken by the Government.

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டில் சர்க்கரை எவ்வாறு வினியோகிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI V. RAMAIAH : Through the retailers basing the requirement on the demand of the particular town or village.

SRI S. K. SAMBANDHAN : Was there any complaint about the distribution of sugar in that area from the district people ?

THE HON. SRI V. RAMAIAH : I do not have the information.

DR. H. V. HANDE : Will the Hon. Minister tell us, Sir, who procured the sugar, what was the quantity procured, and where was the sugar stocked by the Government of Madras or the Government of India ?

THE HON. SRI V. RAMAIAH : It is allotted from the production centre to the agents.

[a] Printed as Appendix I on page 54.

7th August 1965]

SRI S. K. SAMBANDHAN : Was any sugar imported from other States for distribution in this State, and was the sugar produced here itself distributed to the people of the State in 1963-64?

THE HON. SRI V. RAMAIAH : I do not have the information.

Construction of bridge at the North spill-way of Chingleput lake.

[a] * 54 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any bridge is under construction at the north spill-way of Chingleput lake; and

(b) if so, the estimated cost thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Rs. 4.06 lakhs.

SRI S. K. SAMBANDHAN : What is the need for a bridge at such a high cost at that place?

THE HON. SRI V. RAMAIAH : To meet the requirements and standards of a national highway.

SRI S. K. SAMBANDHAN : There was no necessity at all. Even the present road is quite all right and can take any kind of load or any kind of traffic just at that place. What is the special importance for this bridge, when other important bridges like the Vidur bridge, which collapsed a year before, were negelected and the bridge in Chingleput given more importance?

THE HON. SRI V. RAMAIAH : There is no comparison between the collapsed bridge and this work. This work on the highway was planned and carried out according to the priority fixed. The repair to the Vidur bridge, which the hon. Member referred to and which collapsed, is also being attended to.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, will the Hon. Minister tell us whether the Government are aware of the fact that traffic has been stopped on many occasions on account of the surplus water flowing down the spill-way near Chingleput ?

THE HON. SRI V. RAMAIAH : That is the reason.

Tanks within the municipal limits of Madurai City

[a] * 55 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of tanks within the Municipal limits of Madurai City;

(b) the number of unutilized tanks among them;

(c) whether attempts were made to have the tanks assigned; and

[a] Questions postponed from the list of questions for 5th August 1965.

[7th August 1965

(*d*) whether there is any proposal to level up these tanks and construct house therein?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Six.

(*b*) Two.

(*c*) About 500 persons have encroached upon the tank bed of one of these tanks (Anuppandi tank) and put up houses. The encroachers have applied for assignment and it is under the consideration of the Collector of Madurai.

(*d*) No.

Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.

[a] * 56 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the extent of lands taken over by Government after the implementation of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961;

(*b*) the places where and the persons from whom they have been taken over;

(*c*) the amount of compensation to be paid for those lands; and

(*d*) how the Government propose to utilize these lands?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The process of taking over surplus lands from persons holding lands in excess of the ceiling area is in various stages. In one case only, the final stage has been reached and the lands have been taken over by the Government. The extent taken over in this case is 128.25 ordinary acres (equivalent to 42.35 standard acres).

(*b*) The lands taken over by the Government were held by Sri T. M. Jambulinga Mudaliar of Neyveli, South Arcot district, and they lie in Neyveli, Melpappanapattu, Kathalai, Manakuthi and Veppankurichi villages, South Arcot district.

(*c*) Compensation for the lands taken over has not yet been determined.

(*d*) The question is under consideration.

DR. H. V. HANDE : Sri, have the Government any assessment of the extent of land that they are likely to take over from this fixation?

THE HON. SRI V. RAMAIAH : I do not have the acreage.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, what are the Government going to do with these acres taken over by them? Are they going to distribute them to the poor people or the landless people?

[a] Questions postponed from the list of questions for 5th August 1965.

7th August 1965]

THE HON. SRI V. RAMAIAH : It will be distributed to the landless people if there is no other demand for it. But in this particular case, which I have just mentioned, most of the land will be required by the Neyveli Lignite Corporation, Limited.

SRI K. S. ABDUL WAHAB : May I know, Sir, the reason why less number of acres are taken over under this Act ?

THE HON. SRI V. RAMAIAH : It is not a question of acquisition. The various stages of the implementation of the Act are in progress, and we expect substantial work to be done at the beginning of the next year.

SRI K. BALASUBRAMANYA AYYAR : In view of the great need for stepping up food production, will the Government think of the proposal to suspend this operation for some time and taking it up after two or three years?

THE HON. SRI V. RAMAIAH : The implementation of the Act is in progress and the work will be completed soon.

திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, எந்த நோக்கத்திற்காக நில உச்சவரம்பு சட்டம் கொண்டுவரப்பட்டதோ அதை தீவிரப்படுத்தும் வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வி. ராமய்யா : சர்க்காருடைய நடவடிக்கை தீவிரமாகத்தான் இருக்கிறது. சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் தக்கபடி அனுசரித்து செய்யவேண்டும். பெரும்பகுதியான நிலம் அடுத்த வருஷ ஆரம்பத்தில் இந்த சட்ட அடிப்படையில் அரசாங்கத்திற்கு வரும்.

DR. H. V. HANDE : Have the Government any proposal to start a model farm after taking over these lands? 3-10 p.m.

THE HON. SRI V. RAMAIAH : It has no relation to this action.

Leave rules applicable to teachers in Aided Secondary Schools

* 71 *Q.*—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to lay on the Table of the House a copy of the leave Rules applicable to teachers in Aided Secondary Schools from 1st April 1964?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is open to the managements to frame their own leave rules for teachers and others working in their institutions. The Government have not framed any set of leave rules for teachers in Aided Secondary Schools.

SRI G. KRISHNAMOORTHY : Are the Government prepared to admit for purposes of salary the leave taken by the teachers as per the rules of the management ?

[7th August 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Teachers in Aided Elementary and Secondary Schools for purposes of reckoning grant are eligible for one year's leave apart from the usual casual leave. Such leave is granted up to one year in the whole service of a teacher if the leave is granted on account of illness, the period of leave admitted for purposes of grant being restricted to four months at a time.

SRI G. KRISHNAMOORTHY : Is the teacher eligible for any other leave, that is, besides casual leave and the sick leave on half pay?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is for the management to consider.

SRI G. KRISHNAMOORTHY : My question is this. Are the Government prepared to admit for purposes of pay which they are just assessing now after the 1st of April 1964, the leave taken by the teachers as per the rules framed by the management, though they may be liberal enough?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

SRI G. KRISHNAMOORTHY : Are the Government aware that because the position was fluid when the Government had not intimated the managements that they could grant the leave as per the leave rules already in force before 1st April 1964, teachers are not able to get leave and many of them are suffering like anything for want of definite rules?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think Government have had any such representation. If the hon. Member will write to me, I shall look into it.

Non-teaching staff of Aided Secondary Schools

*72 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to treat gardeners, watchmen, sweepers, scavengers and watermen in Aided Secondary Schools as regular servants of the institution payable through acquittance roll; and

(b) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Menials such as gardeners, watchmen, sweepers, scavengers and watermen working in Aided Secondary Schools are already treated as regular servants of the institution and paid through acquittance roll.

(b) Does not arise.

SRI G. KRISHNAMOORTHY : Is it a fact that these menials are getting only fixed dearness allowance and the increase in dearness allowance does not apply to them?

7th August 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI G. KRISHNAMOORTHY : If this is so, what is the difficulty in Government considering their case for purposes of increase in dearness allowance?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot answer a hypothetical question.

Training schools

*73 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of training schools that are proposed to be started during 1965-66 for the training of teachers; and

(b) the location of such training schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) One.

(b) At Okkur in Ramanathapuram district.

SRI S. K. SAMBANDHAN : There is need for more trained teachers. Will the Government start some more training schools during the current year itself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government have now and then been assessing the need for more trained teachers and having assessed that way, we thought there was need for one school and that school is being organised at Okkur.

SRI S. K. SAMBANDHAN : Is it not a fact that a number of applications are being rejected by these training schools for want of accommodation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not a question of admitting all the applicants. It is a question of the need for trained teachers.

Disturbances between 9th and 13th February 1965

*74 Q.—SRI M. SUBBIAH CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the causes for the disturbances between 9th and 13th February 1965;

(b) what steps did the Government take to prevent the same;

(c) what is the loss of life both to the police and to the public as a result of the disturbances and the firing thereon; and

(d) what is the loss caused by such disturbances to public and private properties and to the railways?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) All possible steps were taken by the Government to meet the law and order situation and also to remove the causes for the trouble.

[7th August 1965

(c) Four police officials and fifty others died.

(d) The loss is estimated at over one crore of rupees.

SRI M. SUBBIAH CHETTIAR: The Hon. the Chief Minister said that the Government were aware of the causes. What are the causes, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I presume the hon. Member wants to know the causes of the trouble that arose. The causes were that there were certain people who wanted to create all this trouble.

DR. H. V. HANDE: How many died in the district of Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not have separate figures.

SRI M. SUBBIAH CHETTIAR: Is it a fact that the disturbances arose on account of the fact that the students felt that their future was not safe on account of the Hindi imposition?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not so.

DR. H. V. HANDE: Were the troops put into action?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Troops were called in and they were in action in only one place in the State.

SRI K. S. ABDUL WAHAB: In how many cases was compensation for loss of life given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have no information with me. The hon. Member may put a separate question.

Visit of pilgrims to Srirangam and Tiruvanaikoil

* 75 Q.—SRI M. SUBBIAH CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the fact that a very large number of pilgrims visit Srirangam and Tiruvanaikoil; and

(b) if so, the facilities provided for those pilgrims such as accommodation, etc., by the temple authorities or the Hindu Religious and Charitable Endowments Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) Generally, the pilgrims are not used to stay at night times at these places and they go away to the other pilgrim centres by night trains. It is reported that Srirangam Devasthanam is running a Guest House from 1st June 1964 and it is proposed to convert this building into a pilgrim choultry soon. The Devasthanam has also proposed to construct a pilgrim shed in South Uthira Street, Srirangam and also to construct cottages for

7th August 1965]

the stay of pilgrims. It is reported that the authorities of Tiruvanaikoil temple are not able to provide amenities for the accommodation of pilgrims, as the temple is not financially in a position to construct and maintain choultries for pilgrims.

SRI M. SUBBIAH CHETTIAR: In view of the policy of the Hindu Religious Endowments Department that if the financial position of a temple is not sound, funds and other resources may be diverted to it, will the Government decide the question of building a chatram or a Tourist House at Tiruvanaikoil also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not the policy of the Endowments Department that funds from certain institutions should be diverted to other institutions for ordinary maintenance. There is no doubt need for choultries. I would suggest to the hon. Member to take some interest, and raise some contributions. Then the Devasthanam would take interest and construct a choultry.

SRI M. SUBBIAH CHETTIAR: Is it not a fact that from various temples moneys are given even for sundry items to several temples? Why not have a Tourist Home at Tiruvanaikoil? I understand it is the duty of the public. Why not the Government also do something by giving gracious grants and see that some choultries are built in Tiruvanaikoil?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Contributions from certain other institutions which can afford are permitted for renovation of the temple, and for this very Tiruvanaikoil temple, there is an estimate for about Rs. 10 lakhs and renovation work is in progress, as the hon. Member is aware. For this purpose contributions have been permitted from certain other religious institutions.

SRI G. KRISHNAMOORTHY: Are the collections from the new ticket system for worship in the Srirangam temple being utilized for providing amenities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not any new ticket system. During certain hours for a certain method of worship, there is some levy. Otherwise, there is free worship every day. There are hours—longer hours—when free worship is allowed for all pilgrims.

SRI K. S. ABDUL WAHAB: Will the Government consider the question of constructing a '*Suttrula*' at Srirangam?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Government have no such idea.

Electrical sub-station at Kurinjibadi.

* 76 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the Electrical Sub-station No. 3 at Kurinjibadi was put up.

[7th August 1965

(b) the number of applications pending on that date for service connections for agricultural purposes; and

(c) how many service connections have been given after installation of this sub-station?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 16th December 1964.

(b) & (c) There were no applications pending. I wish to add that subsequent to 16th December 1964, eight applications have been received, and a scheme is being worked out.

Demurrage for not taking delivery of foodgrains

MR. CHAIRMAN : The hon. Member Sri M. Sankaralingam Pillai is not in his seat. So, question No. 77 and the answer thereto will be printed in the Official Report of the proceedings.

* 77 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the amount paid by the Government by way of demurrage for not taking delivery of the foodgrains intended for Kanyakumari district after food rationing was introduced; and

(b) the reasons for the loss?

THE HON. SRI V. RAMAIAH : (a) An amount of Rs. 9,784.60 has been paid towards demurrage and wharfage due to delay in lifting the stocks intended for Kanyakumari district.

(b) As the whole of the Kanyakumari district is not connected by rail, the stocks had to be transported by lorries. Lorries were not readily available as they were engaged by the Police for maintenance of law and order due to widespread disturbances in connection with the anti-Hindi agitation. Further, the Railway authorities insisted on lifting the stocks then and there from the goodsyard, as, according to them, the stocks had to be cleared from the wagons within five hours after the arrival of the wagons.

Government buildings

* 78 Q.—SRI M. RAJAH IYER : Will the Hon. the Minister for Food be pleased to state—

steadily, the persons who are to be given the direct contact of education at the higher levels will not be forthcoming. It is true that at times there is any amount of rush. I was not able to come to the Council because telegrams, letters, petitions, copies of which always are sent to the Education Minister also—I am glad because he is kept aware of what is going on—pour in spite of the fact that we have increased the number by 9,000 seats in the Pre-University class. We have opened with the help of the Government fourteen more new colleges. The rush is so great. I have 4-20 p.m. got 3,000 applicants. I can get statistics of colleges where there are plenty of seats vacant and I do not see any reason why these candidates cannot go to these centres and take up those vacancies. Madras, Tiruchi, Madurai and Coimbatore are very good centres. There is enough of social amenities—what the teachers will say the visual-audio methods of teaching in our cinemas (Laughter). I entirely agree. But is that a reason why I should yield to pressure? I have yielded as far as possible consistent with what can be done. I would appeal to members here to see that boys and girls go to such institutions where facilities are available and where hostel facilities are available. Why do we put up these hostels if they are not needed by these boys and girls? But a Central Government official comes and wants his boy or girl to be transferred to the degree class, not only to the degree class but wants to be fitted in the particular year. If he was reading in the second year, he has to be admitted in that class or if he was reading in the third year, he wants to be admitted into the third year without any consideration of the difference in the syllabus, in the text books and in everything. Immediately there is a great sensation. I realise, Sir, that there are to-day VIPs of different forms. The Hon. the Leader of the House the other day said that the members of the House were all VIPs. I beg to differ from him slightly. The real members of the VIP are the Central Government employees of all categories and grades. Their dearness allowance must be compensated whatever it may be and the State Government has to follow suit and then persons and bodies in the unfortunate position of having no taxable resources at their disposal have to do the same. Would the House be surprised or the Government be surprised to hear that following the lead of the Government, the University had to pay Rs. 2 lakhs towards increase in dearness allowance for its employees, and the letter came only the other day from a Professor that all the Professors, Lecturers and others must be paid the dearness allowance which the Government are paying? I may tell you, the University Professors in my opinion are not exactly starving. They are getting Rs. 400 and Rs. 800. There are some whose scale of pay is Rs. 700—1,150 and Rs. 1,000—1,500. I said ' We will be very glad to pay this to you—and this was in reply to their representation—provided the amount was reimbursed to us by the Government '. There is no meaning in such demands. I have always stated that it is not a good precedent to set up, where the increase of the dearness allowance is

[Dr. A. Lakshmanaswami Mudaliar] [7th August 1965

placed on an automatic rate for all these people simply because they are in the Central Government or in the State Government service. A certain amount of care should be taken to see how this is to be met; whether the State Government is in a position to meet it or not. On the question of their deserving it or not, I do not want to say anything. It is entirely a different matter. I think they deserve it under the present conditions.

Sir, a good deal has been said about medical relief and rural health centres. My hon. Friend Sri Sambandhan was annoyed that there was no doctor in some village with a population of 5,000. I too am annoyed because that village should have a different method from the so-called rural medical relief or rural health centre. That village should really have a method by which it may be visited three times a week by a doctor. You have got good roads connecting all villages and also telephonic communications. A doctor can go there thrice a week. There is no necessity to have a highly qualified doctor sitting there all the 24 hours cooling his feet, where little or nothing is available to him. It is for this reason that I venture to suggest that if you can have medical colleges established in every district centre, not to produce more doctors—that is not my object and inevitably you have to produce more doctors—but to attend to the needs—public health and curative—of that district, and make this institution the centre of the district, you will save more money, far more money instead of scattering away your resources on opening rural health centres. That is my opinion and that is also my firm conviction. I hope it will be proved by the establishment of the two medical colleges and those colleges that may shortly be opened.

Sir, the establishment of more medical colleges at once brings us to the question, how are the colleges to be staffed ? Unless the colleges are properly staffed and there are specialists who can take different subjects, the quality of medical education will suffer. Sir, whatever may be said of the centrally-sponsored colleges, our medical graduates are not very far behind any. I know them and I can tell you this that to say that a particular institution is a higher institute of technology in medical science does not at once confer on the particular institute a higher status that they demand, if it has not the staff, if it has not that method of teaching and the general supervision that has to be exercised. I am connected with more than one institution, medical, technical and so on. I repeat again that so far as our study is concerned within limits we have got the material which will prove its worth. Most of our doctors are going out of our State. I am sorry to have to say that. And most of the teachers in our University are also going out. That is the unfortunate position in which we are now. We utilize these institutions more like labour colonies to train people for particular avocations and then to send them out to other States. The question of proper emoluments is worth studying on a full time basis. It is for that reason that I am glad to state that the Government have fully co-operated with the University

7th August 1965] [Dr. A. Lakshmanaswami Mudaliar]

in trying to set up a Post-Graduate Institute of Medical Science. The University will set up the Basic Medical Sciences Institute with the help of the Government : The scheme may cost something like Rs. 5 to 6 crores and it may come up within a period of 6 to 8 years. This is time and money well worth spending. We shall train here the specialists required for all our medical colleges and we shall also send specialists to the other parts of the country.

Sir, I do not want to take any more of the time of the House. So far as housing is concerned that is a thing that we cannot solve. The Hon. the Leader of the House himself has said that he cannot solve it and therefore I must leave it at that. But let us see how best we can prevent this large inflow of people into the city from the districts and the villages by providing the necessary amenites in the villages themselves. This is a question which deserves the serious consideration of the Government.

Sir, on the whole we can adopt all the things that have been stated in the Draft of the Fourth Five-Year Plan and accomplish them provided the Centre is able to give the grants that they have promised, which is I think about Rs. 820 crores. It is there that my tongue goes a little dry when I think of possibilities. We have achieved something worth mentioning. I congratulate the Government on their achievements. They have not only accomplished the Third Plan targets but they have exceeded them. This is, perhaps, the only State that has done so. And we do not go Micawbar-like always begging for alms. If we can get help, let us get it. If not, let us gird up our loins and face the task firmly and squarely for the welfare of the people of the State.

Thank you, Sir.

* திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்தில் அரிசி விலை என்ன? இப்போது என்னவாகியிருக்கிறது ? இந்த மாதிரி அரிசி முதல் விறகுவரை எல்லாப் பொருள்களும் நூற்றுக்கு நூறு சதவிகிதம் அதிகமாகிவிட்டது. ஏழைகளுக்காகப் போடப்படுகிற திட்டம் என்கிறார்கள். ஆனால் இத்திட்டத்தால் ஏழைகள் நன்மை அடையவில்லை. 15 வருஷமாகப் பார்த்துவிட்டோம். இதனால் முதலாளிகளுக்குத்தான் லாபம். ஏழை நடுத்தர மக்களுக்கு ஒன்றும் லாபமில்லை. ஏதோ குமாஸ்தாக்களுக்குக் கொஞ்சம் டி.ஏ. என்று கொடுக்கிறோம். எவ்வளவு கொடுத்தாலும் கட்டவில்லை. பசி ஜாஸ்தியாகி இருக்கிறது. திட்டத்தில் லாபம் வருகிறது. வியாபாரிகளுக்கு லாபம் வருகிறது. வேலை செய்கிறவர்களுக்கு குறிப்பிட்ட அளவுதான் வருகிறது. அவர்கள் உணவுக்கு வேண்டுமென்று சாமான்களுக்கு ஒரு கட்டுப்பாடான விலை வைத்திருந்தால் நன்றாக இருக்கும். இப்போது உணவுப் பொருள்களின் அளவு எவ்வளவு அபிவிருத்தி 4-30 p.m.

யாகியிருக்கிறதோ அந்த அளவுக்கு விலையும் கூடுதலாகிக் கொண்டே போகிறது. அதற்கு ஏதாவது கேட்டால் ரொம்ப ஜாஸ்தியாக குழந்தை பிறக்கிறது என்கிறார்கள். பழைய காலத்தில் சில்லரை வியாபாரிகள் சிலர் சில சாமான்களை வைத்துக்கொண்டு எதையெடுத்தாலும் ஒன்றரை அணா இரண்டரை அணா என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதே மாதிரி எதைக் கேட்டாலும் அதிகமாகக் குழந்தை பெற்றுவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். திட்டங்கள் போடக்கூடிய அளவுக்கு எங்கே அபிவிருத்தி ஆகிறது? ஏன் விலை மட்டும் ஏறுகிறது? ஸ்டாண்டர்டு விலை ஒன்று வேண்டாமா? சாமான்களுக்கும் பஞ்சம் வந்துவிடுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 7,49,99,37,000 ஒதுக்கியிருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்தைக் காட்டிலும் நிறைய சதவிகித அதிகமாகிறது. இப்போது கூட அதே மாதிரிதான் விலை ஏறப்போகிறது. இவ்வளவு நாளாக குறைக்கமுடியவில்லை. இனி எப்படிக் குறைக்கப் போகிறார்கள். நம்முடைய தலை முறையில் பார்க்கப்போவதில்லை. எதற்காகத் திட்டம், கொஞ்சம் நிறுத்துங்கள் என்றால் கேட்கிறார்களா? மேலும் மேலும் போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். நாம் மாட்டிக் கொண்டேயிருக்கிறோம். பெரிய புலிகள் திட்டம் போடுகிற இடத்தில் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டு நாம் பயப்படுகிறோம். ஏன் நம் நாட்டில் இப்படியிருக்கிறது என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. திருக்குறளில் நாயனார் சொல்கிறார். மந்திரிகளுக்குத்தான் சொல்கிறார். "எனைத் திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்வேண்டாரை வேண்டாது உலகு", என்றார். திட்டம் சரியாக நடக்கவில்லை என்றால் வினைத்திட்பம் இல்லை என்றுதான் அர்த்தம். இவ்வளவும் அந்தக் காலத்து மந்திரிகளுக்குச் சொல்லியிருக்கிறார். எனக்குத் தெரிந்தவரையில் சுதந்திரம் வந்த முதல் இந்த நாட்டு மண்ணில் ஜனநாயகம் வளராது. தென்னம்பிள்ளை வைக்கவேண்டுமென்றால் அதற்கு ஏற்ற மண்ணில் அதை வைக்கவேண்டும். பொறுப்புணர்ச்சி ஜனநாயகத்தில் வேண்டும். அது இங்கு இல்லை. சுதந்திரம் வந்த பிறகு பொறுப்புணர்ச்சி இல்லை. பயிர்கள் நன்றாக வளர்வதற்கு மண் வளம் அவசியம். அது போல ஜனநாயகம் நன்றாக இருக்க, அரசாங்கத்தாரின் மனது நன்றாக இருக்க வேண்டும். ஜனநாயகம் வேண்டும் என்று தலைவர்கள் சொன்னார்கள். இப்போது தலைவர்கள் சோஷலிஸம் வர வேண்டும் என்று சொல்கிறார்கள். சோஷலிஸத்தில்தான் எல்லோரும் சுகமாகச் சாப்பிடலாம் என்று தலைவர்கள் சொல்கிறார்கள். அதிலும் ஒன்றும் நடக்கவில்லை என்றால் கம்யூனிஸம் வரவேண்டும் என்று இவர்கள் சொல்வார்கள் போல் இருக்கிறது. இப்போது சோஷலிஸ ஜனநாயகம் வர வேண்டும், என்று இவர்கள் சொல்கிறார்கள். சோஷலிஸ ஜனநாயகம் வர வேண்டும், எல்லோரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று தலைவர்கள் சொல்லுகிறார்கள். இது, ஏமாற்றும் காரியம். இது பித்தலாட்டத்தைத் தவிர வேறொன்றுமில்லை. எல்லோருக்கும் பொறுப்புணர்ச்சி வேண்டும்.

கூவம் ஆற்றின் துர்நாற்றம் போகவில்லை என்று ஒருவர் சொன்னார். நிபுணர்கள் ஏதாவது அபிப்பிராயம் சொல்கிறார்கள். ஃபீஸ் வாங்கிக் கொண்ட வக்கீல்கள் பேசுவது போல அவர்கள் ஏதாவது சொல்கிறார்கள். எதிர்க் கட்சிக்கு அனுகூலமாகப் பேசுவதை விடப் பேசாமலே இருக்கலாம். நாம் 15 வருஷங்களாகத் திட்டம் போட்டும் ஏன் கூவம் துர்நாற்றம் போகவில்லை? காரணம் திட்டம் போடுகிறவர்கள் இங்கே இல்லை. இந்த மாதிரியான சங்கடங்கள் இருக்கின்றன.

இனிமேல் சர்க்கார் ஏழைகளிடம் "உங்களுக்கு சோறு போடுகிறோம், வேலை செய்" என்று சொல்லலாம். பணக்காரர்கள் நிறையப் பணம் சேர்த்து விட்டார்கள். இந்த அரசாங்கத்தார் "எல்லோரையும் காப்பாற்றுவோம், எல்லோரையும், காப்பாற்றுகிறோம்" என்று சொல்லிச் சொல்லி எல்லாப் பொறுப்புகளையும் தங்கள் தலையில் ஏற்றுக்கொள்கிறார்கள்; இவர்கள் இதன் காரணமாக ஒன்றும் செய்ய முடியவில்லை, ரொம்ப பளுவைத் தூக்கினால் கழுத்து ஒடிந்துவிடும். அப்புறம் மற்றவர்கள் வந்து பளுவைத் தூக்க வேண்டியிருக்கும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் தூக்கட்டும். நாங்கள் என்ன பண்ணுவது?

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : ஆட்சியாளர்கள் பளுவைத் தூக்க தங்களுக்கு பலம் இல்லை என்று சொல்வதில்லை. "நாங்கள் மனிதனா, மாடா?" என்று அவர்கள் சொல்ல வேண்டும். (சிரிப்பு) அவர்கள்தான் நாங்கள் சொல்வதைக் கேட்பதே இல்லையே, அவர்கள் அறிஞர்களாகிவிட்டார்கள்.

ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏழைகள் சம்பாதிக்கும் பணம் எங்கே போகிறது. அந்தப் பணமெல்லாம் என் போன்ற வியாபாரிகளிடம் வருகிறது. வியாபாரிகள் ஜாஸ்தி கொள்ளை அடிக்கிறார்கள். வியாபாரிகள்தான் கொழிக்கிறார்கள். ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டு, அவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

காஞ்சிபுரம் ஒரு பெரிய நகரம். அந்த ஊரில் வைஸ்ணவக் கோயிலும் இருக்கிறது, சிவன் கோயிலும் இருக்கிறது. அந்த ஊரில் கோயில் உற்சவங்கள் நடக்கும்போது, அங்கே லட்சக்கணக்கான மக்கள் வருவார்கள். அப்போது, அங்கே சுகாதார நிலைமை கெட்டுப்போகிறது. அந்த ஊரில் சுகாதார வசதிக்காக பூமிக்குள் சாக்கடை அமைக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். தார் ரோடு உள்ள சென்னையில் தெருவை அசுத்தம் செய்தால், அசுத்தம் அப்படியே ரோடின் மேலே தங்கியிருக்கிறது. எங்கள் ஊரில் தார் ரோடு இல்லை; அங்கே தெருவை அசுத்தம் செய்தால், அந்த அசுத்தத்தை மண் இழுத்துக்கொள்கிறது. மக்கள் சுகமாக வாழ வேண்டும், சுகமாக வாழ வேண்டும் என்று சொல்லிவிட்டு, சுகாதார வசதி கூடச் செய்யவில்லை என்றால் அது சரியல்ல.

[திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்] [7th August 1965

காஞ்சிபுரத்தில் இப்போது ஜனநெருக்கம் அதிகம். எனவே "காஞ்சிபுரம் நியூ டவ்ன்"-க்கு ஏற்பாடு பண்ண வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் தொழிற் பேட்டை அமைக்க வேண்டும் என்று சொன்னேன். இதுவரையில் அங்கே தொழிற்பேட்டை அமைக்கப்படவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்காவது திட்டத்தில் அங்கே தொழிற்பேட்டை அமைத்துவிடுவோம்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : அதை அங்கே நான்காவது திட்டத்தில் அமைத்துவிட வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த செங்கற்பட்டு ஜில்லா தலைநகர் பற்றி எடுத்துக் கொண்டால், காஞ்சிபுரம் தான் சென்டர். திருத்தணி தாலூகாவும் சேர்ந்து விட்டது செங்கற்பட்டில். காஞ்சிபுரத்தை ஜில்லா
4-40 p.m. சென்டராக ஆக்க வேண்டும். தலைவர் அவர்களே இதை ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். டெல்லிக்குப் போய் வந்த பிறகு அதை விட்டு விட்டார்கள். இதையும் எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும்.

நமக்கு கடற்கரையோரம் சுமார் 500 மைல் இருக்கிறது என்று இந்த ஐந்தாண்டு திட்ட புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். மீன் வளத்தைப் பற்றியும் எழுதி வைத்திருக்கிறது. ஆனால் மீன் உரம் செய்வதைப் பற்றி எழுதவில்லை. கன்று பின்றுவென்று உரம், ஸல்பேட் எல்லாம் போட்டு நிலத்தை பாழ்படுத்துகிறார்கள். மீன் உரத்தில் எல்லாம் இருக்கிறது. காரமாக இருக்கிற பூமியைக் குளிரச் செய்யும். அதில் உப்பு, காரம், கொழுப்பு மூன்றும் இருக்கிறது. மீன் உரம் இப்போது கேரளாவிலிருந்து வருகிறது. நாம் ஒன்றும் அதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. மூன்று தடவைகள் இந்த சபையில் பேசியிருக்கிறேன். இதை எழுதும் போது அது ஞாபகத்துக்குக் கூட வரவில்லை போல் இருக்கிறது. வெளியே ஒருவனிடம் வாங்கிக் கஷ்டப்பட வேண்டாம். நாம் செய்யலாம். தலைவர் ஐயா கூட, மீன் சாப்பிடுகிறதற்கே இல்லையே' என்று சொன்னார்கள். ஆனால் இதற்கு அசல் மீன் போடுகிறதில்லை, கழிவடை மீன்களைத் தான் போட வேண்டும். கேரளாவிலிருந்து மீனைக் கொண்டு வந்து, கோயமுத்தூரில் மீன் எண்ணெய் தயார் செய்கிறார்கள். திப்பியை எல்லாம் சேர்த்து உரத்துக்கு கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு சீப்பாகக் கிடைக்கிறது. அவர்களுக்கும் நிறைய லாபம் வருகிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கிற எதையாவது விட்டு விட்டு, இந்த மீன் உரம் செய்யும் திட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

7th August 1965]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இங்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் அபிப்பிராயம் சொல்லும் வகையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முன் வருகிறேன். இந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லுவதென்றால், சாதாரணமான அறிவு படைத்தவர்கள் இதைப் பற்றி அபிப்பிராயம் சொல்வது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தச் சபையிலானாலும் அல்லது மற்ற இடங்களிலானாலும், இந்த விவாதம் பட்ஜெட் கூட்டத்தில் நடக்கும் விவாதம் போல் பெரும்பாலும் இருக்கிறது என்று சம்பந்தப்பட்டவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று கூட நான் கேள்விப்பட்டேன். எந்த இடத்திலிருந்து எந்த விவாதம் வந்தாலும் கூட, அவரவர்கள் சுயநல நோக்குடன் தான் இந்தச் சபையின் முன் வாதங்களை சமர்ப்பித்திருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன். இப்படி மகத்தானதொரு திட்டம் 22,500 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறோம், சென்ற மூன்று திட்டங்களில் 20,000 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறோம், அந்தத் திட்டங்களால் ஏற்பட்ட பலன்கள் என்ன, அதற்குப் பிறகு, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நீங்கள் என்ன பலன்களை எதிர்பார்க்கிறீர்கள் என்று அபிப்பிராயம் சொல்லுங்கள் என்றால், என் போன்றவர்கள் சொல்லுவதற்கான நிலையில் இல்லை என்று ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். கனம் எதிர் கட்சித் தலைவர் ஏ. எல். முதலியார் சொல்லலாம். பாங்கு முதலிய பெரிய ஸ்தாபனங்களில் ஈடுபட்டு, பொருளாதார ரீதியில் நாட்டில் நிலவி வரும் கருத்துக்களை நன்றாகத் தெரிந்திருக்கும் எதிர்கட்சி உப தலைவர் கனம் பால சுப்பிரமணிய அய்யர் அவர்கள், கவனத்தோடு ஆராய்ந்து, விளக்கமாக சில விஷயங்களைச் சொல்லி என் மனதில் தோன்றிய பல சந்தேகங்களை விளக்குவார்கள்என்று எதிர்பார்த்தேன். அவர்கள் விரிவாக ஒன்றும் சொல்லவில்லை, என்று நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது, சாதாரணமாக கிராமங்களில் இருந்து வருகிற என் போன்றவர்களிடம் சீரிய கருத்துக்களை, சார தம்பியங்களை எதிர்பார்ப்பது சிரமமாக இருக்கும் என்று தாழ்மையோடு தெரியப்படுத்திக் கொண்டு என் கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நாம் இப்போது முதல் மூன்று திட்டங்களிலேயும், முறையே 86 கோடி, 188 கோடி, 340 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டம் யிட்டு, இரண்டு திட்டங்கள் முடிவடைந்து. மூன்றாவது திட்டத்தின் கடைசி ஆண்டில் இருக்கிறோம். இதிலே கல்வியைப் பற்றி, அதிலே நிபுணர்கள் கனம் முதலியார், கனம் ராஜா அய்யர் போன்றவர்கள் பேசி விட்டார்கள். என் குலத் தொழிலான விவசாயத்தைப் பற்றித்தான் நான் பேச ஆசைப்படுகிறேன். கிராமாந்திரங்களில் உள்ளவர்கள் நிலைமை இந்தத் திட்டத்தினால் மேலோங்கி இருக்கிறதா. அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்ற விஷயத்தைத்தான் விவசாயி என்ற அடிப்படையில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [7th August 1965

சென்ற மூன்று திட்டங்களிலேயும் சேர்த்து, இந்தத் திட்டத்தின் கடைசியில், 65 லட்சம் டன் உணவு உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். நம் மாகாணத்தில் இந்தத் திட்டங்களில் தொழில் அபிவிருத்தி காரணமாக பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தொழில் பேட்டைகள் எல்லாம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. ஆனால், உணவு சம்பந்தப்பட்ட வரையில், நம் சர்க்காரின் அறிக்கையிலேயே, அது அவ்வளவு தூரம் நன்றாக இல்லை என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். In spite of all these, the general standard of living is very low ". என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்காமல், மற்ற விஷயங்களில் ஈடுபடுவதால், கனம் தங்கவேல் முதலியார் அவர்கள் சொல்லியது போல், மக்களிடையே அதிருப்தி இருந்து வருகிறது. உணவுப் பொருள் சரிவரக் கிடைக்கவில்லை என்றால், அது மக்களிடையே அதிருப்தியை உண்டுபண்ணுகிறது. பத்து தினங்களுக்கு முன்னால் பங்களூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் இரண்டே இரண்டு கருத்துக்களைத்தான் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராசர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் இரண்டே நிமிஷம் தான் பேசினார்கள் முகவுரையில். ஒன்று உணவு வேண்டும். இரண்டாவது, வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் மூலம் உணவு உடை பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உறங்குவதற்கு சிறு வீடாவது இருக்க வழி செய்ய வேண்டும்.
4-50 p.m. வேலை வாய்ப்பு கொடுத்து அதன் மூலம் அவர்கள் வருவாய் உயர்ந்து வசதிகள் பெற வழி செய்ய வேண்டும். நம் பொருளாதாரத்தை அந்த முறையில் மாற்றியமைக்க வேண்டும், அகில இந்திய ரீதியில் இந்த மாதிரி திட்டமிட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த முறையில் நோக்குங்கால், இந்தத் திட்டம் உணவு சம்பந்தப்பட்ட மட்டில், நம் முயற்சி எல்லாம் பலன் அளிக்கவில்லை என்று தெரிகிறது. பெரிய டவுன்களில் ஸ்டேட்யுடரி ரேஷனிங் கொண்டு வர ஏற்பாடு செய்வோம் என்று முதலமைச்சர்கள் மாநாட்டில் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார்கள். 15 வருஷங்கள் திட்டமிட்டு வேலை செய்த பிறகு, ரேஷனிங் கூட இல்லாமல் செய்ய முடியவில்லை என்றால், நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். சாதாரண மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள். எங்கள் ஊரில் போனால், அங்கே சாதாரண மக்களுக்கு நல்ல விலைக்கு அரிசி கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. கனம் உபதலைவர் அவர்கள் கூட, விவசாயம் கட்டுப்படி ஆகிறது என்று சொல்கிறாயே என்று கேட்பார்கள். கட்டுப்படியாகிறது என்று ஒப்புக் கொள்கிறேன். மானவாரியாக இருக்கிற காடுகளில் கூட கிணறுகள் தோண்டி எலக்ட்ரிசிடியும் கொடுத்தால், நல்ல நீர்ப்பாசனம் உள்ள ஏரியாவில் இருக்கிறவர்களை விட செழிப்பாக இருக்க முடியும். விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் நிலையில்தான் இருக்கிறது என்று உணர்ந்து தான் சொல்லுகிறேன். பத்து வருஷத்துக்கு முன்னால், 2 ரூபாய்க்கு நிலக்கடலை விற்றது என்றால், இப்போது 30 ரூபாய்க்கு விற்கிறது. நான் இங்கேயிருந்து பி.எ. படித்துவிட்டு

7th August 1965] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

1930-ல் போகும் போது ஒரு பொதி பருத்தியை 19½ ரூபாய்க்கு விலைக்கு கேட்டார்கள். 3½ வருஷம் கொடுக்காமல் வைத்திருந்து, பிறகு 19 ரூபாய்க்கு விற்றேன். இப்போது பொதி 210 ரூபாய்க்கு நானே வாங்குகிறேன் வியாபாரி என்ற முறையில், 10½ பங்கு அதிகமாகி இருக்கிறது விலை. விவசாயி கட்டவில்லை என்று சொல்கிறான். எந்த முறையில் கட்டவில்லை. பஸ்ஸில் ஏறுகிறாய், சினிமாவுக்குப் போகிறாய், டீ குடிக்கிறாய் என்றால் நாங்கள் சினிமாவுக்குப் போகக் கூடாதா, டீ குடிக்கக் கூடாதா என்று கேட்பார்கள். அந்த மாதிரி சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் விவசாயிக்கு கட்டுப்படியாகத் தான் செய்கிறது. சைனாவில் ஒரு காப்பி, டீ கூட கிடைக்காமல் இருந்தது. அந்த மாதிரி நிலைமை வரக்கூடாது. நம் பொருளாதாரம் சரியாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் நம் மாகாணத்தில் வரிகள் புதிதாகப் போடாத படி இந்த நிலைமையைச் சமாளிக்கலாம் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் அதை ஊர்ஜிதம் செய்தார்களா என்று சந்தேகிக்கிறேன். நில வரியை இன்னும் கொஞ்சம் கூட்டலாம் நம் சர்க்காரில் என்று தெரிகிறது. அதைக் கட்டுவதற்கு ஆட்சேபணை இல்லை, மொத்தத்தில் வருமானத்தைப் பெருக்குவதில் உள்ள சிக்கலை நீக்கவேண்டும். எந்தெந்த இடத்தில் பணம் குவிந்திருக்கிறதோ அங்கு வாங்க வேண்டும். விவசாயிகளிடத்தில் இருக்கிற வரி பளுவை அதிகமாக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 750 கோடி நாம் செலவு செய்யப்போகிறோம். அதில் 82 லட்சம் டன் உற்பத்தியை எதிர்பார்க்கிறோம். கிட்டதட்ட 100 கோடி ரூபாய் ஸ்டேட் இண்டஸ்ட்ரிஸ்களுக்காக செலவழிக்கத் திட்டமிருக்கிறது. கிட்டதட்ட 22,500 கோடி செலவழிக்கிறபோது வருஷத்திற்கு 4,500 கோடி என்று செலவாகும் போது அந்த நிலையில் விலைவாசி இன்னும் கூடுமென்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி. பொருளாதார நிபுணர்கள் சொல்ல வேண்டும். ஆனால் ஒரே ஒரு விஷயம் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக என்ன செலவானாலும் அதற்காக நோட்டு அடிக்காமல் மாத்திரம் இருக்க வேண்டும். கள்ளமார்க்கெட் பணத்தை எடுத்து செய்யவேண்டும். அப்போது ஒரு ஸ்திரமான பொருளாதாரம் இருக்குமென்பது என்னுடைய ஒரு குருட்டு நம்பிக்கை. சர்க்காரில் வரி முதலானவற்றைப் போட்டு மற்ற ஏற்பாடுகளை செய்து "பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்" செய்யலாமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இல்லாவிட்டால் என்ன செய்வது? எப்படியிருந்தாலும் நோட்டு அடிக்கக்கூடாது என்பது எனது அபிப்பிராயம். திரு. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்களோ இல்லையோ? நோட்டு அடித்தால் பண வீக்கம் ஜாஸ்தியாகி பொருள்கள் விலை அதிகமாகும். இப்போதே ரூபாயின் மதிப்பு 15 பைசா வென்றும் 17 என்றும் சொல்கிறார்கள். அதைப்பற்றி கவலையில்லை. மொத்தத்தில் விலை ஏறிப்போகிறது. ரொம்பவும் மதிப்பு குறைந்தால் மிகவும் கஷ்டமாகிவிடும். கிராம மக்களுக்கு செய்யவேண்டிய காரியங்களில் முக்கியமாக மின்சாரம் தருவதில் சர்க்கார் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும். விவசாயிகள் சம்பந்தப்பட்ட

வரையில் இந்த மின்சாரத்தை சர்வரோக நிவாரணி என்று சொல்லத் தயாராக இருக்கிறார்கள். வட ஆர்க்காடு ஜில்லா இப்போது சர்ப்ளஸ் ஜில்லாவாக இருக்கிறது என்றால் அங்கு விவசாயிகள் பூராவும் லிஃப்ட் இர்ரிகேஷன் வைத்து எங்கு பார்த்தாலும் கிணறுகளை வெட்டி பயிர் செய்கிறார்கள். அதனால்தான் அங்கே அதிக உற்பத்தி ஏற்படுகிறது. பாசனம் மூலம் செய்வதை விட கிணற்றின் மூலம் இறைத்து செய்யப்படுகிற விவசாயத்தில் அதிக உபரி கிடைக்கிறது என்பது தெரிகிறது. காவேரி பாசனம் என்றால் அதிலும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. வடிகால் இருப்பதில்லை. கிணற்றுப்பாசனப் பயிர்களுக்கு அதிக விலையும் கிடைக்கிறது. சாத்தூர், சேலம் பகுதிகளில் மூட்டைக்கு பத்து ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது. அந்த அரிசி கனமாக இருக்கிறது என்கிறார்கள். ஆகையால் தரிசாகக் கிடக்கும் இடங்களில் எல்லாம் கீழே உள்ள தண்ணீரை உபயோகத்திற்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். வேஸ்ட் நிலத்தில் தோட்டம் போட்டு விவசாயம் செய்திருக்கிறார்கள். கோயம்புத்தூரில் கரடாகக் கிடந்த 300 ஏக்கரில் பம்பு வைத்து விவசாயம் செய்ததில் லாபகரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு வேண்டிய ஊக்கம் கொடுக்கவேண்டும். சப்சிடி கொடுக்கிறார்கள். காடு பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு அது போதவில்லை. காடு பிரதேசத்தில் உள்ளவர்கள் கிணறு வெட்டவேண்டுமென்றால் ஏழாயிரம், எட்டாயிரம் என்று செலவு ஆகிறது. அப்படி செலவு செய்து வெட்டி அதில் தண்ணீர் இல்லாவிட்டால் அவன் கடனாளியாகவேண்டியிருக்கிறது. அப்படிக் கடன் கொடுப்பதோடு, வாட்டர் டிவைனரை வைத்து—ஹாரஸ்கோப்பில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ—எந்த இடத்தில் தோண்டினால் தண்ணீர் கிடைக்குமென்று தெரிந்து, இதைச் செய்யச் சொல்லவேண்டும். இரண்டு விவசாயிகள் இப்படித் தோண்டி தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. லோன் வாங்கி வெட்டினார்கள். தண்ணீர் இல்லாததால் நஷ்டமாகிவிட்டது. கடனைக் கொடுப்பதற்கும் வழியில்லை. ஆர்.டி.ஓ. கடனுக்காக ஜப்திக்கு அனுப்பிவிட்டார். அவனுடைய நிலத்தை விற்று அதைக் கொடுப்பதற்காக என்னிடம் வந்தார்கள். இதை நான் பிரத்தியட்சமாகக் கண்டேன். ஆகையால் டிவைனரை வைத்து செய்தால் நல்லது. என்னுடைய கேணிக்கு பழைய டைரக்டராக இருந்த ஸ்ரீ. சிவராமன் அவர்கள் டிவைன் செய்து கொடுத்தார்கள். பத்து பனிரெண்டு வருஷங்களுக்கு முன் அவர்கள் வந்தபோது அவரிடம் கேணி வெட்ட வேண்டுமென்றேன். அவர்கள் கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு சுற்றினார்கள். அப்படிப் பார்த்து ஒரு இடத்தைக் காட்டி அதில் வெட்டும்படி சொன்னார்கள். அந்த முறையில் வெட்டினேன். முப்பது ஆயிரம் செலவழித்தேன். இப்போது வருஷத்திற்கு அதன் மூலமாக பத்து இருபதாயிரம் குறையாமல் லாபம் வந்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிணற்று விவசாயத்தில் பணம் வருகிறது. எங்கள் ராமநாதபுரம் மேற்குபகுதியில் உகண்டா விவசாயம் செய்கிறார்கள்.

பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். அந்த மண்ணில் கால்ஷியம் சத்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கு பஞ்சு விளைகிறது.

கல்வியைப் பற்றி நிபுணர்கள் எல்லாம் சொல்லிவிட்டார்கள். நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். வரவர கல்வி எல்லாமே தொழில் மயமாக்வே போய்விடுமோ என்ற எண்ணம் உண்டாகிவிட்டது. அந்தக் காலத்தில் பி.ஏ. பெரிதாக இருந்தது. இப்போது மெடிகல், இஞ்சினியரிங் காலேஜுக்கு டிமாண்டாக இருக்கிறது. நமது ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தக் கல்வியைப் பற்றி சொல்லும்போது, நமது தேசமானது எங்கோ பேய் மாதிரி போய்க்கொண்டிருக்கிறது என்றார்கள். மனிதாபிமானம், மனிதத் தன்மை இப்போது சர்வகலாசாலைகளில் குறைந்து வருகிறது என்று சொன்னார். மனிதனோடு மனிதன் சேர்ந்து சமுதாயத்தில் வாழுவதற்கு தார்மீக முறையில் நடப்பதற்கு ஆரம்ப காலத்திலிருந்து போதிக்கப்படவேண்டும். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திரு. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் எல்லாம் இவற்றில் நீண்ட அனுபவம் பெற்றவர்கள். இது விஷயமாக தரமான கல்வி எதிர்காலத்தில் வளரவும் தரமான பிள்ளைகள் மற்றவர்களுடைய எண்ணத்தை மனதில் கொண்டு லாபநஷ்டங்களை ஆராய்ந்து அதற்குத் தக்கபடி சேவை செய்யக்கூடிய அளவுக்கு கல்வியின் தரம் உயர்த்தப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பையனுக்கு நான் 'ஸ்காலர்ஷிப்' வாங்கிக் கொடுத்தேன். இரண்டு மாதங்களுக்கு 5-00 p.m.
முன்பு அந்த மாணவன் என்னிடம் வந்து மறுபடியும் பணம் வேண்டும் என்று சொன்னான். "முன்பு வந்த பணத்தில் நைலான் சட்டை வாங்கிவிட்டேன், ஆகையால் இப்போது பணம் வேண்டும்" என்று அவன் சொன்னான். இன்னொரு பையன் நைலான் சட்டை போட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் இவனும் நைலான் சட்டை வாங்கிவிட்டான். நைலான் சட்டையின் விலை 46 ரூபாய் என்று சொன்னான். கல்லூரி மாணவர்கள் 'விஸில்' அடிக்கிறார்கள். ஸ்ரீ. காமராஜும், நானும் ஒரு பாலிடெக்னிக் திறப்புவிழாவிற்குச் சென்றோம். அங்கே மாணவர்கள் 'விஸில்' அடித்தார்கள், ஊளையிட்டார்கள். மாணவர்களுக்கு நல்ல நடத்தை வரச் செய்வதற்கு ஸர்வகலாசாலைகள் முயற்சிக்க வேண்டும்.

விவசாயத்தில் அதிகமாக உற்பத்தி செய்யும் விஷயமாக சில கருத்துக்கள் அடிக்கடி சொல்லப்படுகின்றன. ஏன் விவசாய உற்பத்தி கணிசமாக அதிகரிக்கவில்லை என்று தெரியவில்லை. நமது அமைச்சர்கள் அமெரிக்காவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் செல்கிறார்கள். நமக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. மேல் நாட்டிற்குச் சென்று திரும்பியவர்கள் எல்லோரும் "அங்கே விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு உரங்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு டிராக்டர்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலத்தவர்கள் சிக்கனமாகத் திட்டங்களை நிறைவேற்ற மாட்டார்கள் போல் தோன்றுகிறது. நம் மாநிலத்திற்கு இன்னும் 'ஆடானமி'

கொடுத்தால் நாம் இன்னும் அதிகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். நாம் சிக்கனமானவர்கள். வடநாட்டினர் நம்மைப்போல் சிக்கனமாக இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : கனம் அங்கத்தினர் அங்கே சென்று நிலைமையைச் சரிப்படுத்தலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : நம் திட்டங்களில் ஏற்பட்டுள்ள பலனைப் பார்க்கும்போது வடநாட்டினரைப் பற்றி அவ்வாறு நினைக்கத் தோன்றுகிறது. அவ்வளவு தான். நான் கூறியதை தயவுசெய்து வேறுவிதத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்களுக்கு டாக்டர்கள் வரத் தயங்குகிறார்கள். கனம் அமைச்சர், எத்தனை ஸெண்டர்களில் டாக்டர்கள் இல்லை என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், இரண்டு இடங்கள் தவிர மற்ற இடங்களில் டாக்டர்கள் இருப்பதாகச் சொன்னார். உண்மை நிலை தெரிந்து தான் அவர் அப்படிச் சொன்னாரா அல்லது உண்மை நிலை தெரியாமல் அப்படிச் சொன்னாரா என்று எனக்குத் தெரியவில்லை. இதுபற்றி நானும் ஸ்ரீ ராஜா ஐயரும் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் டாக்டர்கள் இல்லை. காரணம், டாக்டர்கள் ஊரில் வந்து இருப்பதற்கு போதிய வசதிகள் இல்லை. எனவே குடியிருப்பு வசதிகள் செய்துவிட்டு ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்களைத் திறந்து வைத்தால் டாக்டர்கள் பிள்ளை குட்டிகளுடன் அங்கே செல்வார்கள். திருவாடனைத் தாலூகாவில் ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர் திறக்கப்பட்டது. அந்த ஆஸ்பத்திரிக்கு வந்த டாக்டர் திரும்பிச் சென்றுவிட்டார். காரணம் அங்கே வசதிகள் இல்லை. அங்கே கருவாடு தான் கிடைக்கும்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : ஆகையால் திட்டங்கள் எதுவும் சரியாக இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. திட்டமிட வேண்டியது தான். நல்ல காரியங்கள் செய்வதற்கு ஏதாவது ஒரு ' ஐடியா ' அவசியம்.

பல ஊர்களில் பள்ளிக்கூடங்கள் 'லாபரடரி' இல்லாமல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் லாபரடரிகள் திறக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தை சர்க்கார் நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும். விலைவாசிகள் உயராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை வரவேற்று, என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. சி. பி. சிற்றரசு** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி இந்த சபை விவாதித்துக்கொண்டிருக்கும்போது, வெளியேயுள்ள பொது

மக்கள் இதுபற்றிய குறிப்புக்களையோ, புள்ளி விவரங்களையோ, விவாதத்தையோ பற்றிக் கவலைப்படுவதாக நான் நினைக்கவில்லை. வாழ்க்கையில் ஏதாவது சந்தோஷம் ஏற்படுமா, 12 அவுன்ஸ் அரிசி கிடைக்குமா, வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமா என்பது தான் இன்று பொதுமக்களின் சிந்தனையாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒத்திப்போட வேண்டுமா அல்லது அதை அறவே கைவிட்டுவிட வேண்டுமா என்ற சர்ச்சை இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் நடந்ததாகத் தெரிகிறது. மூன்றாவது திட்டம் சரியாக இல்லை என்றால், அதைச் சரிப்படுத்தத் தான் நான்காவது திட்டம் என்று சொல்லக் கூடும். மூன்றாவது திட்டம் சரியானதுதான் என்று சொன்னால், அப்படியானால் ஏன் நான்காவது திட்டம் தேவையில்லை என்று கூற வேண்டும் என்று சொல்லக்கூடும்.

நமக்குள்ளே நீண்ட நாட்களாக இருக்கும் ஒரு சந்தேகம் தீரவில்லை. சேலம் உருக்காலைத் திட்டம் பற்றி நம் சர்க்கார் இன்னும் முடிவிற்கு வந்ததாகத் தெரியவில்லை. இதுபோன்ற விஷயங்களில் மந்திரிகளுக்குத் தகுந்தபடி முடிவுகள் ஏற்படுகின்றன. மந்திரிகள் இடம் மாறும்போது திட்டங்களும் மாறிவிடுகின்றன. இந்தத் திட்டத்தைப் போன்றவைதான், கல்பாக்கம் திட்டமும், ஹொகேனக்கல் திட்டமும். இந்தத் திட்டங்களால் வசதி பெறலாம் என்று நினைப்பவர்கள், இவைபற்றி நம் சர்க்கார் ஒரு திடமான முடிவிற்கு வராமல் இருப்பதைப் பார்க்கும்போது, அந்த வசதிகள் தங்களுக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்று சந்தேகப்படுவது இயற்கையே.

எண்ணூரில் கப்பலை ஓட்டுவதற்கான இயந்திரம் செய்வதற்கான ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. எண்ணூர்--எண்ணூர் ரெயில்வே ஸ்டேஷனை நான் குறிப்பிடவில்லை—ஒரு தீவு போல இருக்கிறது. எண்ணூரிலுள்ளவர்கள் இரவு எட்டு மணிக்கு மேல் வெளியே நகரத்திற்கு வர முடியாது; அந்த நேரத்தில் வெளியே உள்ளவர்கள் அங்கே போக முடியாது. படகின் மூலம் ஒரு வாய்க்காலைக் கடந்து அந்த ஊருக்குப் போக வேண்டும். அந்த வாய்க்காலில் இரு கதவுகள் இருக்கின்றன. அந்தக் கதவுகள் இரவு எட்டு மணிக்கு மூடப்படுகின்றன. இரவு எட்டு மணிக்குப் பிறகு அந்த ஊரில், அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களையோ, கர்ப்பிணிகளையோ வெளியே கொண்டுவர முடியாது. எனவே அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று அங்குள்ள மக்கள் வெகு நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த எட்டு மாதங்களில் சென்னை நகரிலேயே எட்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஏராளமான பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் வீடிழந்தவர்களுக்கு வீடுகள் கட்டித்தரவோ, இனிமேல் இம்மாதிரியான தீ விபத்துக்கள் நிகழாமல் தடுக்க ஏற்பாடு செய்யவோ இந்த சர்க்கார் முயற்சித்ததாகத் தெரியவில்லை.

5-10 p.m. அடுத்து சர்க்கரை பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், முன்பு ஜாவா, சுமத்திராவிலிருந்து சர்க்கரை வருகிற போது, எல்லோருக்கும் சர்க்கரை கிடைத்தது. ஆனால் நான் எல்லோரும் என்று குறிப்பிடுகிறபோது, எல்லோரும் அப்போது சர்க்கரை பயன்படுத்தினார்களா என்பது வேறு விஷயம். இப்போது மாவட்டங்கள் தோறும் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்துக்கு பட்டாளம் சர்க்கரை ஆலை; தென்னாற்காடு மாவட்டத்துக்கு நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை; தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ஆரூரான் சர்க்கரை மில்; திருச்சி மாவட்டத்துக்கு பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலை; சேலம் மாவட்டத்துக்கு புகலூர் சர்க்கரை ஆலை; மதுரை மாவட்டத்துக்கு பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலை; கோயமுத்தூர் மாவட்டத்துக்கு அமராவதி, கவுந்தம்பாளையம் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இருந்தாலும் நமக்கு சர்க்கரை கிடைக்கிற அளவுக்கு, கிராமங்களிலே இருக்கிறவர்களுக்கு சர்க்கரை கிடைக்கவில்லையே என்பதுதான் குறையாக இருக்கிறது. வயதாக ஆக சர்க்கரை வியாதி வருவதால், அதைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் பலர் இருக்கிறார்கள் என்றும் நாம் அறிவோம்.

மற்றப்படி இந்த பஸ்ஸை எடுத்துக் கொண்டால், தனியார் விடுகிற எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு இருக்கிற கட்டணத்தை விட சர்க்கார் நடத்துகிற எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது. நேரம் கூட அப்படித்தான். வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள வேலூருக்கும் சென்னைக்கும் 86 மைல், பஸ்கள் 3 மணி 45 நிமிஷத்தில் போகின்றன. மதுரையில் உள்ள பஸ்கள் 86 மைல் போக 5 மணி 45 நிமிஷம் ஆகிறது. இது ஏன் மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது என்று நமக்குப் புரியவில்லை. மேலும் தனியார் நடத்துகிற பஸ்களில், அவர்கள் பஸ்ஸை விற்கும் போது ரூட்டையும் சேர்த்து விற்கிறார்கள். பஸ் 40 ஆயிரம் ரூபாய் கூடத் தாளாது என்றால், ரூட்டையும் சேர்த்து ஒரு லட்சம், லட்சத்தி ஐம்பதாயிரம் என்று விற்கிறார்கள், அந்த ரூட்டைக் கொடுப்பது சர்க்கார், ஆனால் விற்பது தனியார்கள். அதைத் தடைப்படுத்தினால் கூட சர்க்காருக்கு ஏராளமான பணம் வரும் என்று நான் கருதுகிறேன். அதே மாதிரி பார்க்கும்போது, சர்க்கார் பஸ் நிற்கிற இடங்கள், சர்க்கார் பஸ் தங்குகிற இடங்கள் எல்லாம் அருமையாகவும் அழகாகவும் இருக்கின்றன. தனியார் பஸ்கள் நிற்கிற இடங்கள் அப்படியில்லை. குறிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், பிராட்வே பஸ் ஸ்டாண்டு. ஏதாவது நெருக்கடியான நேரத்தில், திருமண காலத்தில், தனியாகத் தாய்மார்கள் போகவேண்டுமென்றால், சுலபமாகப் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு ஏற முடியாது. பெரும்பாலும் கடைகளே அடைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த பஸ் ஸ்டாண்டுக்கு அவ்வளவு கடைகள் தேவையா? தேவையான கடைகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளைக் காலி செய்தால், ஒரு புக்கிங் ஆபீஸ் வைத்து, முன்னே பின்னே வருகிறவர்களுக்கு முறையாக டிக்கட் கொடுக்க முடியும். முன்பு ஒரு முறை தொழில் அமைச்சர் அவர்கள் இந்த

பஸ் ஸ்டாண்டு வேறொரு பக்கத்துக்குப் போகிறது என்று சொல்லியதால், அங்கேயாவது இந்த மாதிரி ஒரு முறையை ஏற்படுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்.

மற்றப்படி கோழி வளர்க்கிறார்கள், பரவாயில்லை. ஆடு கூட வளர்க்கிறார்கள். மாடு வளர்க்கிறார்கள். பஞ்சாயத்துக்களில் பழமரம் நடுகிறார்கள். திரும்பிப் பார்த்தால், ஒரு பனை மரம் தான் இருக்கிறது. பனம் பழம் இருப்பதால் அதுவும் பழ மரம் தானே என்பார்கள். ஆனால் பன்றி வளர்க்கிறது என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை. பன்றிக்கு தீனி நாம் போட முடியாது. இது வரை வளர்த்தவர்கள் ஒரு கூண்டைக் கட்டி வளர்த்ததாகத் தெரியவில்லை. அடிக்கடி அது சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்துக் கொள்வார்கள். நேற்று ஒரு சம்பவம். தண்டையார் பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் நான்கு போலீஸ்காரர்களை பன்றி கடித்திருக்கிறது. ஒரு 15 வயது வாலிபனைக் கடித்திருக்கிறது. ஒரு 25 வயது பெண்ணைக் கடித்திருக்கிறது. இதை வழக்கு சொல்வதற்கு 25 வயதுடைய ஒரு அம்மையார் போனார்கள். அந்த அம்மையாரையும் கடித்து விட்டது. பன்றியை விரட்டிய போலீஸ்காரர் நான்கு பேர்களையும் கடித்திருக்கிறது. ஒரே பன்றி இவ்வளவு பேர்களைக் கடித்தால், 100 பன்றிகளை வளர்த்து ஊரில் விட்டால் என்னவாகும்? பன்றியைப் போல் வேறு எதற்கும் கொழுப்பு ஏறாது. அதனால் மனிதன் கூட தனக்கு அடங்கிய ஆடு, மாடு, கோழி போன்ற பிராணிகளைத்தான் பலியிடுகிறான். சிங்கம், புலி போன்றவைகளைப் பலியிட்டதாகத் தெரியவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால், சர்க்கார் மக்களை வாழ வைக்க விரும்பவில்லை. உள்ளபடியே மக்கள் பெருக்கம் அதிகம் தான். கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், நான் எட்டாவது பிள்ளை, புத்திசாலியாக இருக்கிறேன் என்று. அவருடைய தகப்பனாருக்கு முதல் ஏழு பிள்ளைகளும் புத்திசாலியாக இல்லை, எட்டாவது பிள்ளை தான் புத்திசாலி. திருதராஷ்டிரனுக்கு 100 பிள்ளைகள், ஒருவன் கூட புத்திசாலி இல்லை, எந்தப் பிள்ளை புத்திசாலி என்ற கேள்வி இல்லை. முதல் பிள்ளையே புத்திசாலியாக இருந்தால் தந்தைக்கு கஷ்டமில்லை. கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திறமையில் சந்தேகம் இல்லை. குழந்தைகள் பிறப்பது எப்படி இருக்கிறது என்றால், கல்யாணம் ஆகி 8 வருஷம், குழந்தைகள் எத்தனை என்றால், அதுவும் எட்டு. ஏன் என்றால், என் செயலா? பின் யார் செயல் என்றால், ஆண்டவன் செயல். அப்படியானால் இவன் ஏன் வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறான்? கபாலீஸ்வரருக்குப் பிறக்கிறது என்றால், அந்தக் கோயிலில் கொண்டுபோய் போட வேண்டியது தானே. இதனால் தாய்மார்களின் பால் குழந்தைகளுக்கு கிடைப்பதில்லை. ஒரு நான்கு ஆண்டு இடைவெளி இருந்தால் தான், குழந்தை தாய்ப்பாலை உண்டு சுகமாக இருக்க முடியும். புட்டிபாலை வாங்கி, வென்னீரில் கலக்கி, அதைப் பாட்டிலில் விட்டு, அதில் ரப்பரைச் செருகி, அதைக் குழந்தையின் வாயில் செருகி விடுகிறார்கள். அதனால் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் நான் உள்ளபடியே சர்க்காருக்கு அனுசரனை

யாகவே இருக்கிறேன். குழந்தைகளை அதிகமாகப் பெற்றுக் கொண்டு அவைகளைக் காப்பாற்றும் பொறுப்பு குடும்பத் தலைவனின் மீது விழும்போது சர்க்காரைக் குறை சொல்லிப் பயனில்லை.

5-20 p.m. கல்வியைப் பற்றிச் சொல்ல வந்தால், பள்ளிக்கூட நேரம் சரியில்லை. 10¼ மணிக்குப் பள்ளிக்கூடம் என்றால், பையன் 8½ மணி வரை தூங்குகிறான். மேலும் நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்கு 10¼ மணிக்கு பள்ளிகூடம் துவக்க வேண்டியதில்லை. சட்டமன்றம் காலை 8½ மணிக்கு ஆரம்பிக்கப்படவில்லையா? அதனால் பள்ளிக்கூடம் 8½ மணிக்கு ஆரம்பித்து, 4 மணி நேரத்துக்குப் பிறகு 12½-க்கு விட்டு மறுபடியும் 2 மணிக்கு ஆரம்பித்து 4½ மணிக்கு விட்டு விடலாம். இப்போதிருக்கிறபடி 1¼ மணிக்கு விட்டு, 1 மணி நேரத்துக்குள் ½ மைல் அல்லது ¼ மைல் தூரத்திலுள்ள வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வருவதற்குள் பையன் களைத்து விடுகிறான். அதனால் பிற்பகல் பாடத்தில் சரியாகக் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. இங்கே மிகப் பெரிய கல்வித் தலைவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இதைப் பற்றி சிந்தித்து ஆவன செய்தால் நன்றாக இருக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவது என்றால் மகிழ்ச்சிக்குரிய செய்திதான். அதிலே வெற்றி பெற்றால் சந்தோஷப்படுகிறவர்கள் மற்ற எவரையும் விட நாங்கள்தான். அதிலே உள்ள குற்றம் குறைகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். சொந்தக்காரர்களுக்கு வேலை, லைசென்சு கொடுப்பது, லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது என்ற நிலைமை எங்கேயும் இருக்கிறது. உள்ளபடியே இவைகளை எல்லாம் போக்குவதற்கு நம் மாகாணம் மற்ற மாநிலங்களை விட அதிக முயற்சி எடுக்குமானால் சந்தோஷப்படுவோம். அகில இந்திய ஒற்றுமை என்று சொல்லுகிறார்கள். அது நீடூழி வாழட்டும். ஆனால் அந்த ஒற்றுமைக்கு ஏதாவது பொருள் இருக்கிறதா? ஹொகனிகல் தகராறு தீரவில்லை. சென்னைக்கு குடி தண்ணீர் கொடுக்கக்கூட தயங்குகிறது ஆந்திர அரசாங்கம். கடல் நீரை நல்ல தண்ணீராக மாற்ற அதிகச் செலவாகும் என்ற நிலைமை இருக்கிறது. கடல் நீரை நல்ல நீராக மாற்றுவது எந்தக் காலம் என்ற ஒரு அறிக்கையில் "ஹிந்து" வில் படித்தேன். பிளேட்டோ காலத்தில், ஜூலியஸ் சீஸர் காலத்தில், கடல் நீரை நல்ல தண்ணீராக ஆக்கியிருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையில் கூறுகிறது. அப்போது ஒரு சமயம் சுலபமாக இருந்திருக்கலாம். ஆனால் அதைச் செய்து தான் தீரவேண்டுமென்ற கட்டாயம் வரும்போது அதில் பின்தங்கிய பயன் இல்லை. இதையும் கவனித்துச் செயல் படவேண்டியது அவசியம். பொதுவாக இளைஞர்களுக்கு கல்வியையும் கல்விக்கு மேலாக ஒழுக்கத்தையும் அதற்கு மேலாக எளிமையாக வாழ வேண்டும் என்பதையும் நாம் மாணவர்களுக்கு சொல்லுகிறோமா? அப்படிச் சொல்கிற சந்தர்ப்பத்தை உண்டாக்கியிருக்கிறோமா? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதன் மந்திரியாக இருந்த கிளாட்சன் என்பவன் ஒருசமயம் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்தான். அவனை ஏன் நீங்கள் மூன்றாம் வகுப்பில் போகிறீர்கள் என்று கேட்டதற்கு,

நான்காவது வகுப்பு இல்லாததால் மூன்றாவதில் போகிறேன் என்று சொன்னான். சீனா நாட்டுக்குப் போகலாம். இப்போதிருக்கிற சீனாவைக் குறிக்கவில்லை. 1925 சீனாவைக் குறிப்பிடுகிறேன். அப்போதுதான் சீனாவில் குடியரசு நிறுவப்பட்டது. அதன் முதல் தலைவன் சன்யாட்சன். அவன் இறக்கும்போது அவனிடம் இரண்டு அங்கிகள் இருந்தன. இறக்கும் தருவாயில் மனைவியை அழைத்துச் சொல்கிறான். இந்த இரண்டு அங்கிகள்தான் நினைவுப் பொருளாக நான் வைத்திருக்கிறேன். அதையும் பொதுமக்களுக்காக வைத்திருக்கிறேன் என்றான். கன்பியூஷஸ், புத்தர் மாதிரி. நம்முடைய சகாப்தத்திலேயே வாழ்ந்த காந்தி எப்படி வாழ்ந்தார்? மதுரை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்துவிட்டு களைத்துப்போய் வருகிறபோது அங்கே அரை ஆடையில் இருந்த ஆதிதிராவிட மக்களைப் பார்த்து ஏன் இப்படி இவர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டார். கட்டிக்கொள்ள வேஷ்டியும் போட்டுக்கொள்ள சட்டையும் இல்லாததால் அப்படியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதைக் கேட்டதும், இந்த நாட்டில் பிறந்த இந்த மக்கள் சட்டை இல்லாமல் அரை உடையுடன் வாழும்போது எனக்கு எதற்கு அவை என்று காந்தி தன் சட்டையைக் கழற்றி எறிந்த வரலாற்றைப் படிக்கிறோம். சட்டையைக் கழற்றி எறியாவிட்டாலும் எளிமையாக, ஏதுவும் இல்லாமல் முடியாது என்று இல்லாமல் இருப்பதை வைத்து வாழ்க்கை வாழ முடியும் என்ற எண்ணத்தை பிஞ்சு உள்ளங்களில் என்னென்ன விதத்தில் போதித்தால் அவர்கள் மனதில் படுமோ அந்த விதமாக போதிக்கவேண்டும். கல்வி பயின்று வரும் போதுதான் அவன் எப்படி வாழவேண்டுமென்று சிந்திக்கிறான். செடியிலிருந்துதான் மரம் வளரும். மரத்திலிருந்து செடிக்கு வரமுடியாது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தைப் பார்க்கும்போது மரத்திலிருந்து செடி வரும் திட்டங்களைப் பார்க்கிறோம். பெரியவர்களாக இருந்து பையனாக ஆகிவிடும் நிலையை பார்க்கிறோம். திட்டங்களை தைரியமாக செய்யுங்கள். நல்ல காரியங்களுக்கு நல்ல மனம் உள்ளவர்கள் உங்கள் பக்கம் இருப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். டி. சுந்தரம் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, மகத்தான மக்கள் திட்டத்தைப் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் நம்முடைய சமுதாயத்தின் மேல் நிலையில் கட்டப்பட்ட மேல் தளங்களாகும். அவை மேல் தளங்கள் என்றால் அடித்தளம் என்னவென்று நாம் அறியவேண்டும். அந்த அடித் தளம்தான் நம்முடைய மகத்தான விடுதலை. அந்த விடுதலை ஐந்தாண்டுத் திட்டங்களால் வந்ததல்ல. நூற்றாண்டுத் திட்டங்களால் வந்த மகத்தான பரிசு. சுதந்திரம் என்ற அடித்தளத்தில் மூன்று மேல் தளங்களைக் கட்டிவிட்டோம். நான்காவது தளத்தைக் கட்டி மக்களுக்குப் புதிய சமுதாயக் கோயிலாக மக்கள் வழிபடுகிற திருக்கோயிலாக ஆக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். பெரியவர்கள் கண்ட கனவை நனவாக்கும் உருவமாக நமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிளான்-திட்டம் என்றவுடனே கோபப்படுகிறவர்களும் இருக்கிறார்கள்,

[திரு. எஸ். டி. சுந்தரம்] [7th August 1965

ஆனால் பிளான் என்ற அந்த வார்த்தைக்கு ஒரு பெரிய ஜப்பானிய அறிஞர் விளக்கம் கொடுத்திருக்கிறார். யுவாசா **(Dr. I was a)** என்ற அவர் பெரிய பொருளாதார நிபுணர். அவர், "The word **'plan' denotes aneconomic projection"**. இவர் ஜப்பான் ப்யூஜி பேங்கின் சேர்மன். பொருளாதார முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒரு வார்த்தைத்தான் அது என்று சொல்லியிருக்கிறார். சமீப காலத்தில் இந்த பிளான்களுக்கு விடுதலை கொடுக்கவேண்டுமென்று தீவிரமான பழமொழியைக் கேட்கிறோம். நடுக்கடலிலே படகில் செல்லும்போது படகை செலுத்தாமல் துடுப்புகளுக்கு ஓய்வு கொடுக்கச் சொன்னால் அந்த நிலை எப்படி இருக்குமோ அந்த நிலைதான் பிளானை நிறுத்தி அதற்கு விடுமுறை கொடுக்கச் சொல்வதும். நம்முடைய முன்னோர்கள் நூற்றாண்டுத் திட்டங்களுக்கு ஓய்வு கொடுத்திருந்தால் நாம் இன்று சுதந்திர மனிதர்களாக இருக்க முடியாது. அவர்கள் தியாகத்தின் சின்னம்தான் இந்த சுதந்திரம். தத்துவ ரீதியாகக் கூறவேண்டுமென்றால் இந்தத் திட்டம் நமக்கல்ல. இந்த தலைமுறைக்கு அல்ல என்ற திடமான உறுதியைக் கொள்ளவேண்டும். இந்தத் திட்டமெல்லாம் வருங்கால குழந்தைகளுக்கு, வருங்கால சந்ததிகளுக்கு, என்று துணிச்சலோடு உணர வேண்டும். நமது வருங்கால சந்ததிகள் வாழையடி வாழையாக வாழ்வளிக்க நாம் சில தியாகம் செய்யத்தான் வேண்டுமென்று அமரர் நேருஜி அடிக்கடி கூறுவார். இந்தத் திட்டத்தின் வெற்றிக்காக நம்உயிர்களை கேட்கவில்லை, மற்ற மற்ற பொருள்களைக் கேட்கவில்லை சர்க்கார். கொஞ்சம் உழைப்பைக் கொடுங்கள், சம்பாதித்ததிலிருந்து கொஞ்சம் வரியாகக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஒரு அறிஞர் கருத்து இது "The plan demands 'haves' to give and havenots to work". இருப்பவனிடம் கேட்கிறது. இல்லாதவனை எடுத்துக்கொள் என்று அழைக்கிறது. எல்லோரையும் உழைக்க உந்துகிறது. பயந்து தொண்டோ, அதிகாரம் போய்விடும் என்று அஞ்சியோ இதைச் செய்யவில்லை. கோடிக்கணக்கான ஏழை மக்கள் சமாதானமாக நல்வாழ்வு வாழவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நாம் தீட்டியிருக்கும் இந்தச் சித்திரத்தைப் பார்வையாளராக இருக்கும் பிற நாட்டார், பெரிய அறிஞர்களும் விமர்சனம் செய்திருக்கிறார்கள். அதில் ஒரு பெரியவர் கருத்து இதுதான். "கடந்த பதினேழு ஆண்டுகளாக இந்தியாவில் மிகப் பெரிய முன்னேற்றச்சாதனைகள் நிறைவேறி இருக்கின்றன. 170 ஆண்டுகளாக அடிமை இந்தியாவில் நடக்காத புதுமைகள் விடுதலை பெற்ற இந்தியாவில் நடந்திருக்கின்றன". இப்படி சொன்னவர் சாதாரண மனிதர் அல்ல. இந்தியாவில் அமெரிக்கா நண்பரான செஸ்டர் பவுல்ஸ் என்ற அமெரிக்கப் போரறிஞரில் ஒருவர். பொருளாதார நிபுணர். இங்கும் தூதுவராக இருந்திருக்கிறார். அவர் அண்மையில் அமெரிக்கா பிரஸ்ஸுக்கு கொடுத்த ஒரு வாக்குமூலம்தான் இது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் பெற்ற இந்த லட்சிய வெற்றியை வைத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பெரிய அளவில் பொருளாதார நிபுணர்கள் தீட்டியிருக்கிறார்கள். இது குறைவற்ற முழுமையான

7th August 1965] [திரு. எஸ். டி. சுந்தரம்]

திட்டமென்று யாரும் குறிப்பிட்டுவிட முடியாது. மிக வேகமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுதான் மக்களின் விருப்பம். முதலாவதாக இந்தத் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் ஆதார நிதியாக நமது ராஜ்யம் தரவேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யம் கொடுக்க வேண்டிய நிதியின் பங்கும் இருக்கிறது. பலகோடி கொடுக்கக் கடமைப்பட்டுள்ள அரசாங்கம் வரி விதிக்கவும் கடமைப்பட்டிருக்கிறது. மக்களுக்கு தேவைப்பட்டிருப்பதால் புதிய வரி விதிக்கும்போது இன்று வருவாயாக வந்து கொண்டிருக்கும் வரிகளை சில கொள்கை நிமித்தமாக நாம் இழக்கவேண்டியிருக்கும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது அரசாங்கத்திற்கு தமாஷா வரியாக வரும் சுமார் 4 கோடி ரூபாயில் சுமார் 2 கோடி ரூபாயை நாம் அடுத்த ஆண்டில் இழக்கக்கூடிய நெருக்கடி நிலை ஏற்பட்டு இருக்கிறது. இரண்டு கோடி ரூபாய் என்பது தமாஷா வரி மாத்திரம் தான். அதைத் தொடர்ந்து ஷோ டாக்ஸ், வருமான வரியின் பங்கு முதலியவை இருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்து சுமார் 2½ கோடி ரூபாயை நாம் இழக்கும் நெருக்கடி இருக்கிறது. அதற்குக் காரணம் சமீபத்தி வந்த மத்திய சர்க்கார் கச்சா பிலிம் வெட்டினை (raw film cut) விதித்திருக்கிறார்கள். எதனால் இந்தக் கட்டுப்பாடும் வெட்டுப்பாடும் செய்தார்கள் என்றால் சுமார் 50 லட்சம் ரூபாயுக்கு அன்னிய செலாவணி அதிகமாகிறது என்கிறார்கள். அந்த 50 லட்சமும் மலேயா, சிங்கப்பூர், சிலோனிலிருந்து வந்துகொண்டிருக்கும் அன்னிய செலாவணியில் வரவாக வருகிறது. இழக்கப்படும் வரித்தொகை 2½ கோடி ரூபாய். அது பெரிதல்ல. இந்தத் துறையில் 40 ஆயிரம் பேர் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பத்து ஆட்களை காப்பாற்றக்கூடிய தரமுள்ள மனிதர்கள், ஒருவருக்கு பத்து ஆட்கள் என்றால் நான்கு லட்சம் பேர் இதனால் தவிக்கப்போகிறார்கள். நாற்பதினாயிரம் பேர்களில் சுமார் இருபதினாயிரம் பேர் இந்தக் கட்டுப்பாட்டினால் வேலை இழக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இது மத்திய சர்க்காரின் விஷயமாக இருந்தாலும், நம் மாநில சர்க்காருக்கு இதில் பெரும் பங்கு உள்ளது. பொறுப்பும் நிறைய இருக்கிறது. இதனால் வேலையின்மையும் வரி இழப்பும் ஏற்படுவதை தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். இன்று 'வேளாண்மை' என்ற சொல் மதிக்கப்படாத சொல்லாக இருப்பதாக அவர்கள் குறை கூறினார்கள். இப்போது "இண்டஸ்ட்ரி" என்ற வார்த்தைக்கு இருக்கும் மதிப்பு 'அக்ரிகல்ச்சர்' என்ற வார்த்தைக்கு இல்லை. காரணம்--தொழில் பணமுள்ளது. உழவு உழைப்புள்ளது. The word "Agriculture", does not attract the people as the word "Industry" a ts. அதனால் நம் மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் 'அக்ரோ-இண்டஸ்ட்ரி' என்ற வார்த்தையினாலும் அதனால் விளையும் பயன் கருதியும் ஆறுதல் கூறுகிறார்கள். கூட்டுறவு முறையில் விவசாய

[திரு. எஸ். டி. சுந்தரம்] [7th August 1965

'எஸ்டேட்ஸ்'-களை அமைத்தால் தான் விவசாயிகள் உற்சாகமடைய முடியும். விவசாயத்தில் உற்பத்தியும் புள்ளிவிவரங்களும் ஒரு புறம் இருக்கட்டும்.

விவசாயிகள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் உணவு தானியங்களை விநியோகிப்பவர்கள் மிகக் கருணையுள்ள வியாபாரிகள். விற்கப்படும் அரிசியில் கல்லும், கடுகில் கருமண்ணும், சர்க்கரையில் மணலும், உளுந்தில் களிமண்ணும் இருக்கின்றன. வியாபாரிகள் 'ஆர்ட்டிஃபிஷியல்' உளுந்தை மிகத் திறமையாக உற்பத்தி செய்கிறார்கள். இவர்கள் கற்களைச் செய்து அவைகளை துவரம்பருப்பில் கலக்கிறார்கள். இப்படிப்பட்ட பொருள்களை அசல் பொருள்களில் 3 சதவிகிதம் கலக்கலாம் என்று அரசாங்கமே விதி செய்திருக்கிறதாம். சர்க்கார் மூட்டைகள் விகிதத்தில் 10 சதவிகிதம் என்று விதி செய்திருந்தால், இவர்கள் 10 படிக்கு 3 படி வீதம் கற்கள் கலக்கிறார்கள். இந்தக் கலப்படம் அரசியல்வாதிகளை பாதிப்பதில்லை. இது அடுப்பங்கரையிலுள்ள தாய்மார்களை பாதிக்கிறது. இதன் காரணமாக அன்னைகள் கொடுக்கும் சாபத்திற்கு இன்னும் கொஞ்சம் உயிர் வந்தால் கலப்படம் செய்பவர்கள் பாழாய்ப் போயிருப்பார்கள். சில வியாபாரிகள் குழந்தை உணவில்கூட கலப்படம் செய்கிறார்கள். என்ன பேசியும் பயம் இல்லை. ப்ரொபஸர் கால்ப்ரெய்த் என்பவர் முன்னிலையில் திருவனந்தபுரத்தில் ஒருவர் ஒன்று கூறினார் "இந்த நாட்டில் குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறது. அந்த உணவு விற்பனைக்கு உகந்ததல்ல. அது விற்கப்படக் கூடாதது. வியாபாரிகள் அந்த உணவில் 4 பங்கு தவிடு கலந்து நாலு பங்கு அதிக விலைக்கு விற்பதால், குழந்தைகளுக்கு வயிற்று வலியும் நெஞ்சு வலியும் மற்ற வலிகளும் வருகின்றன" என்று அவர் கூறினார். நாம் ஜனநாயகம், ஸோஷலிஸம் என்றெல்லாம் பேசுகிறோம். இந்தக் கலப்படம் செய்யும் வழக்கம் இன்னும் நிற்கவில்லை. கலப்படத்தை வாங்கிச் சாப்பிடுவதைக் காட்டிலும், பட்டினி கிடப்பது மேல் என்று தோன்றுகிறது.

மாணவர்கள் தாம் பற்றிப் பேசப்பட்டது. "வைகறைத் துயிலெழு" "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்றெல்லாம் படிக்கிறோம். இன்று நம் மக்கள் கறுப்பு மையில் எழுதப்பட்டுள்ள காகிதச் சூரியனைப் பார்க்கிறார்களே தவிர உண்மையான உதய சூரியனைப் பார்ப்பதில்லை. உதய சூரியனைப் பார்த்தால் தான் அறிவு வளரும் என்பதால், காலையில் படிப்பு வேண்டும். அதே போல அலுவலகங்களும் காலையில் 9 மணிக்குத் துவங்க வேண்டும். இந்த நாட்டில் இப்போது கேளிக்கை மனப்பான்மை மக்களிடையே அதிகமாகிவிட்டது. மக்கள் இரவில் 2 மணி வரையில் சினிமா போன்ற கேளிக்கைகளில் பொழுதைக் கழிக்கின்றனர். இரவில் இரண்டு மணி வரையில் கேளிக்கைகளில் பொழுதைக் கழிப்பவன் எவ்வாறு காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருக்க முடியும் ? அவன் இரவில் தீய கனவுகள் கண்டுவிட்டு,
5-30 p.m. நரம்பு தளர்ச்சியடைந்து காலையில் 8 மணிக்கு எழுந்திருப்பான். எனவே மக்கள் காலையில் 7 மணிக்கு எழுந்திருக்கிறார்கள்.

7th August 1965] [திரு. எஸ். டி. சுந்தரம்]

மக்கள் காலையில் சீக்கிரம் எழுந்திருப்பதற்கு வழி கண்டுபிடித்தால், அது சுகாதாரம், பொருளாதாரம், அறிவாதாரம் ஆகிய எல்லா ஆதாரங்களும் நாட்டில் பெருக உதவும்.

சர்க்காரின் திட்டங்கள் நிறைவேற எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை; நிர்வாகத்திலுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை. அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில், 'நாங்கள் அப்படித் தான் செய்வோம்' என்று சொல்கிறார்கள். இது 5–30 p.m.
நிர்வாகத்தில் நெடுங்காலமாக இருந்து வந்துள்ள பேச்சு. இந்த வார்த்தைகள் நமக்கே கேட்கப் பிடிக்கவில்லை. இவைகளைக் கேட்க ஜனங்களுக்குக் காது கூசுகிறது. எனவே அரசாங்க 'ஸர்குலர்'-களில் இப்போதுள்ள "நாங்கள் அல்லது இந்த சர்க்கார்" என்ற முறையை மாற்றி "நம் அரசாங்கம் இவ்வாறு ஆணையிடுகிறது" என்ற சொற்களைக் கையாண்டால்கூட நன்றாக இருக்கும். மக்கள் ஆட்சியில் மக்களை மகிழ்விக்கும் மிக நல்லமுறையாக அமையும்.

இந்தத் திட்டம் நிறைவை நோக்கி வெற்றி நடை போட வேண்டும். இதனால் ஸோஷலிஸம் என்ற வார்த்தை நமது 'கான்ஸ்டிட்யூஷன்'-இல் அரசியலமைப்பில் பொறிக்கப்படும் நாள் வர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. கே. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திட்டம் தாங்கக் கூடிய திட்டமா, இதன் பளுவை மக்களால் சுமக்க முடியுமா என்றெல்லாம் மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பேசினார்கள். அறிஞர்களின் கருத்துக்கள் பல விதமாக இருக்கக்கூடும். இரண்டு தரப்பிலுள்ள கருத்துக்களையும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஸ்ரீ ஜயராம ரெட்டியார் குறிப்பிட்டது போல, பெரிய வல்லுனர்கள் இதுபற்றி முடிவு செய்ய வேண்டும். இருப்பினும், நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டம் பளுவானது அல்ல, தூக்க முடியாதது அல்ல என்பதை சாதாரண அனுபவமுள்ளவர்கள் கூட அறிய முடியும். நம் மாநில அரசாங்கம் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை மற்ற மாநிலங்களை விட வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது. திறம்படச் செயலாற்றியிருக்கிறது. இருநூற்றுத் தொண்ணூறு கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கையில் 340 கோடி ரூபாய் அளவிற்குக் காரியங்கள் சாதித்து வெற்றியும் கண்டுள்ளது நம் அரசாங்கம். எனவே மதிப்பிற்குரிய சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல ஓட்டுப் பெறுவதற்காக அல்ல இந்தத் திட்டங்கள். மக்களின் வாழ்வை மலரச் செய்யத்தான் இந்தத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பது இவற்றை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே தெரியும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன்களை அனுபவிக்க வேண்டிய நேரத்தில் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

விவசாயத் துறை பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தால் விவசாயத்தில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காண முடியும் என்று ஸ்ரீ ஜயராம ரெட்டியார் கூறினார். இது உண்மை. விவசாயத்தில் அனுபவமுள்ள யாரும் அறிந்த உண்மை, இது. இறைப்புப் பாசனத்தில் ஒரு நஞ்சை நிலத்தில் காவிரி நீர்ப் பாசனத்தில் உற்பத்தி செய்வதைவிட அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறது என்பது தெரிந்த உண்மை.

(Sri G. Krishnamoorthy, Vice-Chairman, in the Chair.)

அதை நமது அரசாங்கம் மறுக்கவில்லை. தங்கள் அறிக்கையில் 22-வது பக்கத்தில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஒன்பது லட்சம் கிணறுகளில் பாதியளவுக்கு ஏறத்தாழ 4½ லட்சம் கிணறுகளுக்கு மின் சக்தி இணைப்பு கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அது அதீதமான ஆசையல்ல என்று அறிவோம். நிச்சயம் 4½ லட்சம் கிணறுகளுக்கு பூர்த்தி செய்யத்தான் போகிறோம். இன்னும் 4½ லட்சம் கிணறுகள் மின் இணைப்பு இல்லாமல் இருக்குமா, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும்போது என்ற நினைப்பும் தோன்றுகிறது. இருபத்தி மூன்று சதவீதம் விவசாய காரியங்களுக்கு இணைப்பு கொடுக்கிற அரசாங்கம் அடுத்த திட்டத்தில் இன்னும் மிகப் பெரிய அளவில் அதற்கு ஒதுக்கியிருக்கலாம். மேலும் கிணறு வெட்டவும் குழாய்க் கிணறு இறக்கவும் ஏராளமான தொகையை ஒதுக்கியிருக்கிறோம். முன்பு பேசிய எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போல், செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறபடியால் கஷ்டமும் அதிகமாக இருக்கிறது நம் தேவை மிக அதிகமாகியிருக்கிறது. அதற்கு எவ்வளவு திட்டங்கள் தீட்டினாலும் போதாது என்று இருக்கும்போது, இதை மிக அதீதமான திட்டம் என்று கூறுவது அறிவுடைமை ஆகாது என்று கூறிக் கொள்கிறேன். அறுபத்தி ஐந்து லட்சம் டன் உணவு தானியத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெற இருக்கிறோம். அதையே 82 லட்சம் டன் சுமார் 17 லட்சம் மெட்ரிக் டன் தானியம் அதிகம் உற்பத்தி செய்ய வேண்டியதாய் **இருக்கிறது**. இந்த நிலையில் அரசாங்க அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் 1.3 லட்சம் டன் மட்டும்தான் நடுத்தர பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் இப்பாசன வசதி அதிகரிப்பு மூலம் உற்பத்தியாகக் கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள். பதினேழு லட்சம் டன்னில் 13 லட்சம் டன்னைக் கழித்தால், சுமார் 16 லட்சம் டன் தானியத்தை இப்போதிருக்கிற பாசன வசதிகளைக் கொண்டு உயர்த்த வேண்டும் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அது கடினமான காரியம் எதிர் கட்சியில் இருக்கிறவர்கள் பலர் கேட்கிறார்கள், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றினீர்களே, மீண்டும் ஸ்டேடுடரி ரேஷனிங் கொண்டு வருகிறீர்களே என்று. நாமும் பதில் சொல்கிறோம், உற்பத்தி அதிகம் தான் என்று. மதிப்புக்குரிய அங்கத்தினர் ஒருவர் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்கள். ஜனப்பெருக்கம் காரணம் என்று. அதோடு 17 ஆண்டுகளாக இயற்கை நமக்கு ஒத்து வாராததும் ஒரு காரணம், அந்தக்

காலத்தில் காடுகளில், கிணற்றுப்பாசனம் அல்ல, வாய்க்கால் பாசனம் அல்ல, புஞ்சை தானியங்கள் பயிர் செய்ய, காலாகாலத்தில் மழைபெய்து, வெள்ளாமை வளர்ந்து கொண்டு இருந்தது. 5-40 p.m. இந்த 17 ஆண்டுகளில், காட்டு வெள்ளாமை அறவே போய் விட்டது. காலத்தில் மழை பெய்யவில்லை. பயிர்களை வளர்க்க மழை உதவி செய்யவில்லை. காட்டு வெள்ளாமை சரியாக இருந்தால் உணவு நெருக்கடி வந்திருக்காது. பதினேழு ஆண்டுகளாக நமக்கு இயற்கையின் கோளாறு அதிகமாக இருந்திருக்கிறது. எங்கள் ஜில்லாவில் தாராபுரம் தாலுகாவில் 17, 20 ஆண்டுகளாக கிணறுகளில் தண்ணீர் இல்லை. பழைய சரித்திரத்தைப் பார்த்தால் 5, 6, 7 வருஷம் கூட பஞ்சம் நீடித்து வந்திருக்கிறது. மறுபடியும் 10 வருஷம் செழிப்பு இருந்திருக்கிறது. சுமார் 150 வருஷ சரித்திரத்தில், 10 வருஷத்துக்கு ஒரு முறையாவது செழிப்பு ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் தடவை 20 ஆண்டுகளாக மழை சரியாகப் பெய்யவில்லை. அதைப்போல் அவிருஷ்டி, அனுவிருஷ்டி என்று சொல்வார்களே, ஒரு பக்கம் மழை இல்லாமலும். இன்னொரு பக்கம் அதிக மழை பெய்தும் கெடுத்திருக்கிறது இயற்கை. இந்த நிலைமையில் திட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் மேற்கொண்ட பணிகளில் யாதொரு குறையும் இல்லை. குறிப்பிட்ட காலத்துக்கு முன்னாலேயே, அணைக்கட்டுகள், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதைப் போல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் மிகச் சிறப்பாக எவ்வளவுக்கெவ்வளவு அதிக பட்சமாக இந்த சக்திகளை எல்லாம் உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவு பயன்படுத்தி இருப்பதைப் பார்க்கும்போது பெருமகிழ்வு ஏற்படுகிறது. அதே சமயத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய 16 லட்சம் டன்களை எப்படி உற்பத்தி செய்வது? அதற்கு விவசாயிகளின் பூரண ஒத்துழைப்பு வேண்டும். உழுவோர் உலகத்தாருக்கு ஆணி என்றார் வள்ளுவர். அந்த விவசாயிகள் மனம்நோகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் நோக்கமும் அதுவாகத்தான் இருக்கும். எனக்கு முன் பேசிய மதிப்புக்குரிய அங்கத்தினர் ஒருவர் கூட சொன்னார்—விவசாயிகள் இரண்டாவது பட்சமாகக் கருதப்படுகிறார்கள் என்று. விவசாயத்தை முதல் பட்சமாகக் கருதுவதாக எத்தனையோ ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. அப்படிச் சொல்லப்படுகிற நிலையை உண்மையாகக் கொண்டுவர அரசாங்கம் பாடுபட வேண்டும். அவர்களுக்கு தொல்லைகள் தரக்கூடாது. கிராமங்களில் வாழும் விவசாயிகளில் பலர் கல்வி அறிவில்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு தொந்தரவு அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த பல திட்டங்கள் தந்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றியும் வருகிறார்கள். அதிலே அடிப்படையான ஒரு கோளாறை அடிக்கடி இந்தப் பெருமன்றத்தில் நான் சொல்லி வந்திருக்கிறேன். மேலேயிருந்து திட்டங்கள் தீட்டி அதை 373 பஞ்சாயத்துகளும்

நிறைவேற்ற வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பித்து, அதை எங்கள் மீது திணிக்கிறார்கள் என்று சொல்லி வந்திருக்கிறேன். இப்போது ஒரு மாறுதல் செய்து, கிராம சேவக் மூலம் அந்தந்த பஞ்சாயத்து உணவு உற்பத்தியை இரண்டு அல்லது மூன்று மடங்காக்க வேண்டுமென்ற திட்டத்தை அவர்கள் போட்டு, அதை கிராம சேவக் மூலம் செய்து வருகிறார்கள். கிராம சேவக் மிக அவசரமான முறையில் பஞ்சாயத்து தலைவரை அணுகி, எப்படியோ புள்ளி விவரத்தைப் போட்டு, அதற்கு பஞ்சாயத்து தலைவரின் கையொப்பத்தை வாங்கி அவசரமாக அனுப்பி, இத்தனை நாட்களுக்குள் ஜில்லா தலைநகருக்கும், மாநில சர்க்காருக்கும் வரவேண்டும் என்ற வேகத்தில் இருக்கிறது. அப்படியில்லாமல், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், தாங்களாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, அந்த இடத்தில் விளைகிற பொருள் என்ன, நெல் கம்பு சோளம் விளைகிறதா, அதன் உற்பத்தி நிலை என்ன, அதை இரண்டு மடங்காக உற்பத்தி செய்ய என்ன வழி என்று திட்டம் போட்டு, அங்கே இருக்கிற விவசாய அதிகாரி முழுப் பயன் உள்ள அதிகாரியாக பஞ்சாயத்து யூனியனுக்கு சென்று அதை நிறைவேற்ற பஞ்சாயத்து யூனியன் பொறுப்பு ஏற்கச் செய்ய வேண்டும். அவர்களையே கேட்க வேண்டும். எவ்வளவு உரம், உதவி வேண்டும் என்று கேட்டு, அவைகளைக் கொடுத்து அந்தப் பொறுப்பை அவர்கள் வசம் ஒப்படைத்தால் சாலச் சிறப்புடையதாக இருக்கும். விவசாயிகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொறுப்பு உண்டாகும். அந்த வகையில் இந்தப் பெரு மன்றத்திலேயும் முன்னாலே குறிப்பிட்டது போல், அந்த விஸ்தரிப்பு அதிகாரி—விவசாய
5-50 p.m. விஸ்தரிப்பு அதிகாரியை உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு பொறுப்பான ஒரு அதிகாரியை ஏற்படுத்தி, அவர் அதைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்கச் செய்து, அந்த இரண்டு மடங்கு உற்பத்திக்கு பொறுப்பாளியாக்க வேண்டும். இப்போது அவர் நிலை ஒரு கிளார்க், ஒரு யு.டி.ஸி. மேல் பகுதியில் இருக்கிற ஒரு ஊழியர் செய்கிற பணியைத்தான், பி.எஸ்ஸி. படித்து விட்டுச் செய்து கொண்டு வருகிறார் என்று பல மாநாடுகளிலேயும், சேர்மன்கள் கருத்தரங்குகளிலேயும் எடுத்துக் கூறப்பட்டது. இன்னும் அந்த நிலையிலேயே அந்தப் பணியையே ஆற்றிக் கொண்டு வருகிறார். அவருக்கு விவசாயிகளிடத்தில் நேரடியான தொடர்பில்லை. அவர் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்கு அப்போதைக்கப்போது யோசனை சொல்லும் முறையைக் கொண்டு வர வேண்டும். தனியாக உணவு உற்பத்தி அதிகரிப்பு பிரிவை ஏற்படுத்த வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை அந்த கணக்கெடுப்பு நடக்க வேண்டும். அதோடு கூட, அமைச்சர் அவர்களிடத்தில் பணிவோடு கூறிக்கொள்கிறேன்—மாநில ரீதியில், திறமையும் அனுபவமும் உள்ள விவசாயிகளோடு—இரண்டு மூன்று பேர்களோடு, கூட்டுறவு இலாகா அமைச்சர், விவசாயத்துறை அமைச்சர், மின்சார இலாகா அமைச்சர் இந்த மூன்று பேர்களும் சேர்ந்து கொண்டு திறம்படச் செயலாற்றினால் தான் இந்தத் திட்டத்தை ஒரு மனதோடு நிறைவேற்ற வாய்ப்பிருக்கும். அந்த உயர் மட்ட மேல்நிலையில் குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழு திட்டத்தின் முன்னேற்றத்தையும் எந்தெந்த வகையில் சர்க்கார் பணி

யாற்றி வருகிறதென்பதையும் ஆராயவேண்டும். அது கிராம விவசாயிகளுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்து இந்தத் திட்டம் எப்படி நிறைவேறுகிறது என்று ஆராய வாய்ப்புள்ளதாக இருக்கும். விவசாய அபிவிருத்தியை பெருக்கவேண்டுமென்றால் மேற்கொண்டு திட்டங்களை பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்புவித்து நல்ல முறையில் செயலாற்ற வேண்டியது அவசியம். அது நம் கடமை என்று கூறிக்கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை மக்களிடத்தில் நல்ல முறையில் எடுத்துச் சொல்லி அதை ஆற்றுகிற பணியை சிறப்பாக செய்ய அனைவரும் ஒத்துழைத்து நாட்டு வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டுமென்று கூறி இங்கு பேசுவதற்கு இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

VICE-CHAIRMAN (Sri G. Krishnamoorthy) : The House 5-55 p.m.
will now adjourn and meet again at 3 p.m. on Monday, August 9, 1965.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 183. *Notification issued with Memorandum No. 169635/P3/64-5, Rural Development and Local Administration, dated 15th March 1965, making amendment to the Madras Panchayats and Panchayat Unions (Preparation of Plans and Estimates, etc.) Rules, 1963 [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act 35 of 1958)].*

† 184. *Notification issued with G.O. Ms. No. 1574, Food and Agriculture, dated 23rd April 1965, regarding declaration of market area at Gandarvakottai in Thanjavur district [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959)]*

B. Reports Notifications and other papers.

* 31. *List of unstarred questions and answers, dated 4th August 1965.*

† 32. *Fourteenth report of the Committee on Government Assurances.*

* Laid on the table of the House on 4th August 1965.
† Laid on the table of the House on 5th August 1965.

Appendix I

[*Vide* answer to starred question No. 49 on page 2]

(*a*) One lakh twenty-five thousand and seventy-seven tonnes and four hundred and sixty kilograms (125,077.46 tonnes.)

(*b*) *Statement of quanity of sugar distributed to each disrict (figures in tonnes) during the years* 1963–64.

Serial number.	*District.*	*Total for the period from April* 1963 *to November* 1964.
		KGS.
1	Madras	33,923·46
2	Chingleput	4,484·00
3	North Arcot	6,162·00
4	South Arcot	7,864·00
5	Thanjavur	11,477·00
6	Tiruchirappalli	11,912·00
7	Madurai	12,503·00
8	Tirunelveli	6,798·00
9	Kanyakumari	2,268·00
10	Salem	7,870·00
11	Coimbatore	11,897·00
12	Ramanathapuram	5,651·00
13	Niligris	2,268·00
		125,077·46

(One lakh twenty-five thousand and seventy-seven tonnes and four hundred and sixty kilograms.)

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Monday, the 9th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

New Well Subsidy Scheme.

a* 62. Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of applications received in 1962 under New Well Subsidy Scheme from the ryots in Gingee Taluk, South Arcot District, as per G.O. Ms. No. 3552, Food and Agriculture, dated 24th October 1958; and

(*b*) the number of applicants who were given subsidy ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Sixty-three applications were received during 1962–63 under New Well Subsidy Scheme. Out of these sixty-three applications, first instalment of loan was sanctioned in twenty-eight cases and the remaining thirty-five cases were rejected.

(அ) புதிய கிணறுகள் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 1962–63-ல் அறுபத்து மூன்று விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த அறுபத்து மூன்று விண்ணப்பங்களில், இருபத்து எட்டு விண்ணப்பங்களில் கடனின் முதல் தவணை வழங்கப்பட்டது. எஞ்சிய முப்பத்தைந்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

(*b*) Out of the twenty-eight cases in which first instalment was sanctioned, thirteen wells were completed and subsidy adjusted. In one case, the well has since been completed and the subsidy is pending adjustment. In nine cases, summary recovery was ordered as the wells were not completed by the grantees. The remaining five wells have yet to be inspected.

(இ) முதல் தவணை வழங்கப்பட்ட இருபத்து எட்டு விண்ணப் பங்களில், பதின்மூன்று கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டு அவற் றிற்கான உதவித்தொகை சரிக்கட்டப்பட்டது. ஒரு விண்ணப் பத்தில் கிணறு வெட்டும் வேலை இப்போது முடிக்கப்பட்டு விட்டது. உதவித் தொகை இன்னும் சரிக்கட்டப்படவில்லை. ஒன்பது விஷயங்களில் கடன் உதவி பெற்றவர்கள் கிணறு வெட்டும் வேலையை முடிக்காததனால், வழங்கப்பட்ட கடன் தொகையை மொத்தமாக வசூல் செய்யுமாறு ஆணையிடப்பட்டது. எஞ்சிய ஐந்து கிணறுகள் பார்வையிடப்படவேண்டிய நிலையில் உள்ளன.

* Question postponed from the List of Questions for 6th August 1965.

[9th August 1965

திரு. எஸ். கே. சம்பந்தன்: நிராகரிக்கப்பட்ட 35 அப்ளிகேஷன்கள் எந்தக் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : Applications withdrawn by the applicants are 15. The number of applications not sufficiently solvent and *bona fide*, is 20.

MR. CHAIRMAN : As the hon. Member Sri N. R. Thiagarajan is not present, Questions 63 and 64 and the answers thereto will be printed in the Official Report of the proceedings.

Dam in Anaikaraipatti

a * 63 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to provide irrigation facilities to the old ayacutdars by repairing the breached dam in Anaikaraipatti, near Kandamanaickanur, Periakulam taluk, Madurai district;

(b) if so, the estimated cost of the above scheme; and

(c) when will it be implemented?

THE HON. SRI P. KAKKAN : (a) There is no such proposal.

(b) and (c) Do not arise.

Distribution of insecticides, sprayers, etc., to agriculturists

a * 64 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to distribute the insecticides, sprayers, etc., to the agriculturists through the Agricultural Co-operative Banks ?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal for distribution of either pesticides or sprayers through Agricultural Co-operative Banks. The Government have, however, permitted only pesticides of less poisonous nature to be distributed by Co-operatives which have godown facilities. The sale of sprayers and dusters at concessional rates to the co-operatives (as in the case of individual ryots) has been allowed with the object of enabling the co-operatives to own and hire the equipment to needy ryots in the area.

Free Education Policy.

* 81 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state the number of management high school teachers in the State whose pay has been reduced on account of the recent Free Education Policy and in how many cases, the pay has been restored so far ?

a Question postponed from the list of Questions for 6th August 1965.

9th August 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In no case has the pay of teachers, employed in aided secondary schools under private managements, been reduced, on account of the Free Education Policy.

DR. H. V. HANDE : Is it a fact that about a year ago the Hon. the Chief Minister made a statement in Ootacamund that, whatever be the cases, if they were brought to the notice of the Director of Public Instruction, the deficiency in salary would be made good ? I tabled this question nearly 14 months ago. It is answered now only. Every time the Legislature session was prorogued, I was renewing this question again and again.

MR. CHAIRMAN : The hon. Member will please put the question straightway and not make a speech.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is very clear, perfect, complete and unequivocal, and if the hon. Member had any information about the grievances of teachers, when he gave notice of the question, he would now see from the answer that they have been removed.

SRI G. KRISHNAMOORTHY : While the Government decided that no teacher should be affected on account of the free education policy, did they communicate this to the departmental authorities, Sir.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Government initially did not take any decision like that. But when certain representations were made by the managements as well as teachers, Government have taken this decision that teachers drawing salaries on particular scales should on no account be affected by this policy.

SRI G. KRISHNAMOORTHY : Are the Government aware that the department has not implemented this policy fully so much so that the increments due to teachers are being absorbed in salaries, and this amounts to a cut in the original salary?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member will remember—I do remember—the same point was raised by him in a non-official resolution, and we had a thorough discussion. My answer then was that the salaries drawn would not be reduced. It does not refer to increments. The hon. Member now raises a quite different issue about the increments. Now, under the decision taken by the Government, increments must be absorbed in the salaries.

DR. H. V. HANDE : Has the deficiency been made good with retrospective effect, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of retrospective effect arising here. Those who have been drawing a particular salary in a particular scale would not be affected. If I say they would not be affected, it means they would not be affected.

[9th August 1965

SRI G. KRISHNAMOORTHY: Does not the absorption of increment in the salary amount to this, namely, the free education policy is still affecting the salaries of teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is a question of interpretation and comment.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய இன்றைய ஊதிய நிலை அப்படியே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற காரணத்தால், பின்னுட்களில் பெறவேண்டிய அதிக ஊதிய உயர்வு என்பதை அரசாங்கம் இந்த ஊதிய உயர்வை முன்கூட்டியே ஏற்றுக்கொண்ட காரணத்தால் பின்னால் தர முடியாத நிலையில் இருக்கிறது என்பது உண்மையா? இந்த ஊதிய உயர்வு தடுக்கப்படுமானால் அவர்கள் பெறக்கூடிய பயன்கள் கிடைக்காமல் போய்விடுமல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தீர்மானமாகக் கொண்டுவந்து அதைப் பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது அரசாங்கத்தின் நிலை விளக்கப்பட்டது. அவர்கள் வாங்குகிற சம்பளம் குறைக்கப்பட மாட்டாது என்பது அரசாங்கத்தின் முடிவு. அதைத்தான் நான் சொன்னேன்.

Schemes executed under the Third Five-Year Plan

* 82 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the schemes executed so far during the Third Five-Year Plan that were not originally included in the Third Five-Year Plan; and

(b) the amount spent on each of these schemes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) A appear a containing the answer is placed on the table of the house.

SRI S. K. SAMBANDHAN: Sir, in the statement placed on the table of the House, the Hon. Minister has stated that "Significant part of this increase is due to the implementation of new schemes not originally contemplated". So, may I know from the Hon. the Chief Minister, Sir, how many schemes that were originally contemplated in the Third Five-Year Plan, have been left out?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not a question of leaving out any schemes. I do not know exactly whether any schemes have been left out. But the allotment for particular schemes provided for in the plan could not have been spent. So in lieu of that new and useful schemes that can be undertaken have been taken up.

SRI K. S. ABDUL WAHAB: From the statement placed on the table of the House, I observe that big schemes like Kundah costing about Rs. 29 crores and Mettur Tunnel Scheme costing

Printed as Appendix I on pages 68–72.

9th August 1965]

about Rs. 11 crores, were not anticipated in the Third Five-Year Plan. May I know the reason why such big items were not included in that plan itself and taken up?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Till the estimate is finalised, we cannot put it exactly as an item under the plan. But whenever it was finalised, it was added. There can be no objection to taking up Mettur Tunnel Scheme or Kundah Scheme under the Third Plan.

SRI G. KRISHNAMOORTHY: Is the excess due to the submission of further details by the various departments, and, if so, by whom are they scrutinised? Are they scrutinised at the Cabinet level or is there any Committee to do this planning work, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is the prescribed procedure for it, and if the hon. Member gives notice of a separate question, I will be able to answer it.

DR. H. V. HANDE: If there are items left out in the Third Plan, will they be straightway carried over to the Fourth Plan, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, they will be taken as a spill over.

Studios.

* 832 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) the number of studios which produce movie films;

(b) the number of workers employed in the industry;

(c) whether any minimum wage is fixed to them; and

(d) if so, the details thereof, with particular reference to the workers who do night duty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Twenty-one.

(b) About 7(314. This does not include the workers in the film distribution section, information regarding which is not available.

(c) No.

(d) Does not arise.

DR. H. V. HANDE: Are these workers included in the Factories Act, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Some of them are included in the Factories Act.

SRI K. S. ABDUL WAHAB: Is there any ceiling on the maximum amount that a film star can get, Sir? (Laughter).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think, Sir. So far as I know, there is no ceiling.

Defence Fund.

*84 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the names of Cinema artistes who have promised to donate a part of their income towards the Defence Fund;

(b) the names of persons who donate accordingly so far; and

(c) the amount donated so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No cinema artiste has promised to donate a part of his income towards the National Defence Fund.

(b) & (c): Do not arise.

Tractors

*85 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Home be pleased to state:—

(a) whether it is a fact that some tractors used exclusively for agricultural purposes in South Arcot district have been seized; and

(b) if so, the details thereof and the reasons therefor?

கனம் திரு. பி. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கே. சம்பந்தன் : சில டிராக்டர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தின் அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறது என்பது தெரியுமா? அவைகள் விவசாயத்திற்கு மாத்திரம் தான் உபயோகப் படுகின்றன, என்பது அரசாங்கத்திற்குத் தெரிய வந்திருக்கிறதா?

கனம் திரு. பி. கக்கன் : விவசாயத்திற்கு என்று டிராக்டர்கள் உபயோகப்படுமானால் அந்த டிராக்டர்களைப் பிடிக்கமாட்டார்கள். அதை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டால் அப்பேர்ப்பட்ட டிராக்டர்களை பிடிப்பார்கள்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : அவர்களுடைய சொந்த தானியத்தை நிலத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டுவருதலும், களத்திற்குக் கொண்டு போதலும், விற்பனைக்குக் கொண்டு செல்வதும், விவசாய ஆப்பரேஷனில் சேர்ந்ததா அல்லது வேறு இனத்தைச் சேர்ந்ததா?

கனம் திரு. பி. கக்கன் : சொந்தத்திற்கு நிலத்திலிருந்து நெல்லைக் கொண்டுபோனால் அது விவசாயத்தைச் சார்ந்ததுதான். டிராக்டர்களில் விற்பனைக்குக் கொண்டுபோனால் அது விவசாயத்திற்கு என்று சொல்லமுடியாது.

DR. H. V. HANDE: Is it a fact, Sir, that tractors are lying idle for want of spare parts and, if so, how many of them are lying idle?

THE HON. SRI P. KAKKAN: A separate question may be put.

Procurement of Paddy and Rice

*86 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food be pleased to state:—

(a) the quantity of paddy and rice procured by the State Government from 1st October 1964 to 10th May 1965;

(b) the working cost price and the price at which paddy and rice were sold;

(c) the quantity of paddy and rice received from the Food Trading Corporation up to 10th May 1965; and

(d) the price paid by the Madras Government to the Food Trading Corporation?

THE HON. SRI V. RAMAIAH: (a) Five lakhs fifty six thousand two hundred and forty-one (5,56,241) tonnes of rice were procured by the State Government during the period from 1st October 1964 to 10th May 1965;

(b) Paddy was purchased at the prices notified by the Government for 1964–65 season. The paddy was procured either at the support price fixed or at the maximum prices fixed by the Government. The release prices were fixed by the Collectors, after taking into account the cost price, hulling charges and other incidental charges. The release prices so arrived at by the Collectors were within the maximum notified prices, except in certain exceptional cases.

(c) Nil.

(d) Does not arise.

DR. H. V. HANDE: Sir, from the statement furnished by the Hon Minister, we do not have any information about the purchase price and sale price of paddy?

THE HON. SRI V. RAMAIAH: Sir, a few days ago, in reply to a question I have given categorically all the facts and figures.

DR. H. V. HANDE: Sir, will the Government explain the financial liability on the State Exchequer on account of this commitment of our Government to the Food Corporation?

THE HON. SRI V. RAMAIAH: I want notice of a separate question, Sir.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, is there any difference in the price of rice sold by the Food Corporation and the price at which it is sold by the authorised agents and co-operative stores?

THE HON. SRI V. RAMAIAH: Sir, the Food Corporation does not sell rice to the co-operative stores. As far as our State is concerned, the Food Corporation is in charge of moving Government stocks from Andhra to our State and handing over that stock to us.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, my question is different. Is there any difference between the price at which rice is sold to the Food Corporation and the price at which it is sold to the wholesalers and the retailers?

THE HON. SRI V. RAMAIAH: Sir, we do not sell rice to the Food Corporation as such. Whatever rice is to be moved to Kerala is handed over to the Food Corporation at a fixed price. I do not think there is any difference. If the hon. Member requires a specific answer, he may put a separate question.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: ஒரு விவசாயி இடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யும்போது தலைக்கு 22, 24 பைசா என்று வாங்கி விலைக்கு கொடுக்கும்போது 30 ரூபாய் வரை ஆகிறது. ஆகவே வியாபாரிகளுக்கு அதிக லாபம் வருவதால், கிராமப்பகுதிகளில் நெல்லை மக்களுக்கு விநியோகிப்பதற்கு உரிய முறையை அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. வி. ராமய்யா: இப்போதிருக்கிற நிலையில் அரிசியாகத்தான் கொடுத்துவருகிறோம். நெல்லாகக் கொடுப்பது என்றால் அது பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

SRI K. S. ABDUL WAHAB: Sir, what was the targeted quantity of rice or paddy for procurement during the period in question?

THE HON. SRI V. RAMAIAH: There is no target as such. The Government are buying whatever is the marketable surplus.

SRI S. K. SAMBANDHAN: Is there any difference between the price we pay to the Andhra Government for the rice supplied by them and the price at which we are selling rice to Kerala, and if so, what it is?

THE HON. SRI V. RAMAIAH: Sir, the prices vary according to the varieties.

Procurement of paddy.

*87 Q.—SRI M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government are aware of the fact that the agents appointed by the Government for the procurement of paddy are collecting 15 paise per bag on account of measurement charges from the ryots?

THE HON. SRI V. RAMAIAH: The agents appointed by the Collector for the procurement of paddy are not collecting measurement charges at 0.15 Paise per bag from the ryots, in any of the districts.

Assistant Surgeons.

*88 Q.—SRI S. K. SAMBANDHAN (on behalf of SRI V. K. Ramaswamy Mudaliar): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of Assistant Surgeons in service under the emergency provisions;

(b) the number of such Assistant Surgeons who have put in more than one year of service;

(c) the reasons for continuing them under the emergency provisions; and

(d) whether there is any proposal to regularise their services in the near future?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) 700 as on the 20th May 1965.

(b) 375.

(c) Vacancies in the posts of Assistant Surgeons are being filled in under the emergency provisions, as recruitment for regular appointment has been suspended. No recruitment was made as the Government decided to reserve all the vacancies in the cadre of Assistant Surgeons, which arose during National Emergency, for candidates who render military service.

(d) The Government have since decided to reserve only 50 per cent of the vacancies for candidates with military service. Recruitment to the unreserved vacancies will be made shortly through the Madras Public Service Commission.

DR. H. V. HANDE: Why were not the doctors transferred straightway to the Military?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, some of them offered for military service and later on they had some domestic reasons which stood against their joining the military service.

DR. H. V. HANDE: Were they not selected for service in the military under the emergency selection?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, they were. But later on they wrote back to the Director of Medical Services and said they were not willing to join the military service.

DR. H. V. HANDE: Were the doctors kept in the civil service?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, but the reserved vacancies will not apply to them.

Mosquito Control Oil

*89 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Panchayats and Municipalities have been supplied with the mosquito control oil under the National Filaria Control Programme free of cost;

(b) whether it is being continued now; and

(c) if not the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) National Filaria Control Programme is in operation in the endemic districts of Chingleput, North Arcot, South Arcot and Thanjavur in this State. The Panchayats and Municipalities in these districts are being supplied with the Moscuito larvicidal oil free subject to stocks being made available to the State by the Government of India.

(b) Yes.

(c) Does not arise.

DR. H. V. HANDE : Will the Hon. the Minister tell us why mosquitoes increased and why the Minister was not able to control them ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the Health Minister is not responsible for the increase in mosquitoes. All measures necessary are being taken to control them.

DR. H. V. HANDE : If so, why are they increasing ?

THE HON. SRI R. VENKATARAMAN : They are not amenable to discipline Laughter).

SRI G. KRISHNAMOORTHY : Is the oil imported into our country, or is it manufactured in our country ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : It is manufactured here.

SRI K. S. ABDUL WAHAB : Do the Government of India allot any amount for this or supply it free, or do we obtain the supplies from out of our funds ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A certain amount has been allotted by the Government of India for the eradication programmes and that amount is utilised for this purpose.

SRI K. S. ABDUL WAHAB : May I know the amount allotted for last year and the amount spent ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A separate question may be put.

SRI S. K. SAMBANDHAN : Is the oil distributed to the Panchayats in the whole State or only to panchayats in the particular districts ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Wherever it is in a epidemic form, it is distributed. In all Panchayat Unions it is distributed by the District Health Officer.

SRI M. SUBBIAH CHETTIAR : Are the Government aware that the mosquito nuisance has spread everywhere throughout the State ? Is there any difference between the malarial mosquito and the ordinary mosquito, and, if so, may I know why it is not given to other districts?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : I do not deny the fact that the mosquito nuisance is there, but these mosquitoes are not malarial mosquitoes.

SRI S. K. SAMBANDHAN : Is it not a fact that the eradication of malarial mosquito programme is confined to certain districts only and not to all districts ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, Malaria eradication programme has been completed now and our State is completely free from malaria.

Government Headquarters Hospital at Nagercoil

* 90 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Public Health be pleased to state— 3-20 p.m.

(a) the estimated expenditure for the Master Plan for expansion of the Government Headquarters Hospital in Nagercoil ;

(b) the extent to which the plan has been executed ; and

(c) if there is any shortfall, the reason for not executing the plan in full ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Rs. 19.40 lakhs.

(b) Rs. 7.692 lakhs.

(c) The Master Plan providing improvements to the Government Headquarters Hospital, Nagercoil, was prepared with a view to have, even from the beginning, a planned programme. The Master Plan was not given any administrative approval by the Government. Hence, the question of shortfall in executing the Plan does not arise.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த மாஸ்டர் பிளான்படி அரசாங்க மருத்துவமனையை விரிவுபடுத்த நிலம் எடுத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the following improvements, which form part of the Master Plan, have had the administrative approval of the Government :—

Remodelling the hospital, improvements to the existing buildings and the hospitals, construction of V.D. clinic, construction of public health laboratory and construction of dental clinic. These are going to cost us Rs. 7,69,200.

DR. H. V. HANDE : Are the funds to come from the Five-Year Plan provision or from the State Exchequer or from the Cental Exchequer?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The amount that has been sanctioned will go into the phased programme. It is from the State Government funds.

[9th August 1965

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இன்று கேள்வி நேரத்தில் நான் வருவதற்குத் தாமதமாகிவிட்டதால் கேள்விகள் 63, 64 பதில் சொல்லாமல் விடப்பட்டிருக்கின்றன. தயவு செய்து அவற்றிற்கு பதில் அளிக்கும்படி சொல்லக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : I thought the hon. Member wanted to put a supplementary question. The answers to questions 63 and 64 will be printed in the official report of the proceedings.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, in view of the huge congestion at the headquaters hospitals, is there any master plan for improving the district headquarters hospitals so that the people can get easy admission into them ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : There is no Master Pan at the moment for any of the district head quarters hospitals.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, எழு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இ.என்.டி. பிரிவிற்கான ஸ்பெஷல் டாக்டரோ, அதற்குரிய பிரிவுகளோ இல்லாமல் இருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதுமாதிரி தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT *RE.* MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965).

III.—CALLING ATTENTION TO THE STAGNATION OF HANDLOOM CLOTH IN THE CO-OPERATIVE AND PRIVATE SECTORS.

SRI S. K. SAMBANDHAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, namely, the stagnation of handloom cloth in the co-operative and private sector for a long time, which has resulted in the weavers losing their employment and so the necessity and the need on the part of the Government to take immediate steps to help the weavers by either procuring the whole stocks or by advancing them loans against their stocks.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I wish to make the following statement :—

The Government received reports of unusually heavy accumulations of handloom cloth with the producers particularly with the Apex and the Primary Weavers' Co-operative Societies in the

9th August 1965] [Sri R. Venkataraman]

State. It was estimated that the value of stocks held by the Apex and the primary weavers' co-operative societies was about Rs. 4.20 crores at the end of April 1965. The All India Handloom Week and Exhibitions were held in the State during April 1965 for a week in the first instance. The exhibition was extended by the Government for another week to push up sales. Even though the sales during the Handloom Week in April 1965 were to the extent of Rs. 158 lakhs which could be considered fairly satisfactory, the Government reviewed the situation and took further remedial measures to help to liquidate the accumulation of handloom cloth.

The Government sanctioned in May 1965 a temporary advance of Rs. 50 lakhs to the Tamil Nadu Handloom Weavers' Co-operative Society for the purpose of increased procurement of handloom cloth produced by the primary weavers' co-operative societies including silk and art silk and other non-cotton or mixed fabrics. Government have also guaranteed the loan, if any, incurred by the society in the course of its business up to a specified limit.

To provide incentives for buyers, Government have modified the scheme for payment of rebate on the sale of handloom cloth for a period of two months from 1st June to 31st July 1965 in the first instance and have since extended it up to 31st October 1965.

With the implementation of the modified scheme of rebate with effect from 1st June 1965, sales of handloom cloth to the extent of Rs. 171 lakhs were effected in June 1965 whereas the sales for the corresponding period during the last year was to the value of Rs. 128 lakhs.

With a view to enable the Apex Society to intensify its marketing activities during the current year, a recommendation was made to the Reserve Bank of India to increase the credit limit. The total credit limits recommended and given guarantee by the Government to the Reserve Bank of India, which was to the tune of Rs. 300 lakhs in 1964–65, has been enhanced to Rs. 335 lakhs in 1965–66.

The position in regard to procurement of handloom cloth made by the State Society has also improved. As against the average monthly procurement of the handloom cloth to the extent of Rs. 30 lakhs, the society procured handloom cloth worth Rs. 57 lakhs during the period from 1st June to 15th July 1965.

The position regarding marketing of handloom cloth is expected to improve from August 1965 onwards when procurement for the Pooja and Deepavali seasons commences. The question of extending the modified scheme of rebate beyond 31st October 1965 will be considered after watching the trend of sales.

As the Government do not provide any direct assistance to handloom cloth manufacturers in the private sector, the Madras Handloom Finance Corporation has been set up to give financial assistance to this sector. It is not a trading body and therefore cannot procure cloth. However, the financial accommodation given by the Madras Handloom Finance Corporation will enable

[Sri R. Venkataraman] [9th August 1965

the producers in the private sector to market their goods at favourable rates. This Corporation has granted loans to the tune of Rs. 20 lakhs till 31st July 1965. It will be granting loan totaling about Rs. 40 lakhs by 30th September 1965.

IV.—DISCUSSION ON THE DRAFT OUTLINE OF THE FOURTH FIVE-YEAR PLAN—*cont.*

MR. CHAIRMAN : Before the Hon. the Minister for Industries replies to the debate, Sri K. Anbazhagan will speak. He will limit his speech to half an hour.

*** திரு. க. அன்பழகன்:** சட்ட மன்ற தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நகல்மீது சில கருத்துக்களை கூறுவதற்கான நல்ல வாய்ப்பு கிடைத்ததற்கான நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். பேசுகின்ற காலத்தை அறுதியிட்டு 30 நிமிடம் எனத் தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே குறிப்பிட்ட இலக்கை மீறியும் அத்திட்டம் போயிருக்கிறது. சில இடங்களிலே தொடாமலும் நின்றிருக்கிறது. இலக்கை மீறுவதும் தொடாமல் இருப்பதுமான நிலைமைகள் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளை எண்ணிப் பார்த்து அந்த அடிப்படையிலேதான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை ஊகிக்க முடியும். அது குறித்து அமைச்சர் அவர்களேகூட மூன்றாவது திட்டத்தினுடைய முடிவை ஒட்டித் தான் நான்காவது திட்டத்தைக் காணவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கிறபோது, அந்தப் புள்ளிவிவரங்கள் பெருகிப் பெருகித் தோன்றுகிறபோது அந்தப் புள்ளிகள் நமக்கு மகிழ்ச்சி அளித்தால்கூட அந்தப் புள்ளி விரைங்களுக்கு ஒப்ப கிடைக்கக்கூடிய பலன் முழுவதும் மக்களுக்குச் சரியான முறையிலே கிடைக்காத போது குறைபாடு தோன்றத்தான் செய்கிறது. அதன் காரணமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரவேண்டிய நேரத்தில் இந்த திட்டத்தையே கொண்டு வருவது நல்லதல்ல என்ற கருத்து ஒரு சிலருக்கும், அதை ஒத்திப்போடவேண்டும் என்ற எண்ணம் வேறு சிலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மூன்று திட்டங்களும் முழுமையுடைய திட்டங்களாக முடிந்திருந்தாலாவது இன்று ஓய்வு கொள்ள முடியும். இந்த திட்டங்களெல்லாம் ஓரளவு நல்ல முறையிலே நிறைவேறி ஓரளவு நிறைவேறாத கட்டத்திலே இருக்கிற காரணத்தாலே இடை நிலையிலே நிறுத்தப்பட்டால் அதனால் பல திட்டங்களுக்கு குந்தகம் வருவது மட்டுமல்ல, அதன் காரணமாக ஏற்பட்ட சில வகை முன்னேற்றத்தையுங்கூடத் தடுத்துவிடக் கூடும். விரைந்து ஓடிக்கொண்டிருக்கிற மோட்டாரை நிறுத்துகிறபோது விரைந்து ஓடுகின்ற மோட்டார் நிற்பதற்குப் பதில் கவிழ்வதுபோல் ஒரு இக்கட்டான நிலைமை தோன்றக்கூடும். ஆகவே இதை எண்ணிப் பார்த்து நான்காவது திட்டத்தை முறையோடு நிறைவேற்றுவது அவசியம் என்ற கருத்தையே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

அமைச்சர் அவர்கள் இந்த நகலைத் தந்தபோது பல புள்ளி விவரங்களை தந்து இருக்கின்றார்கள். அந்தப் புள்ளி விவரங்களிலே பல மூன்றாவது திட்டத்திலே ஏற்பட்ட குறைபாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. சில அந்தக் குறைபாடுகளைத் தெளிவாகக் காட்டவில்லை.

உணவு உற்பத்தியைப் பொருத்தவரையில் இன்றைய தினம் நாட்டு மக்கள் மிகப் பெரிய கவலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அதிலும் 'ரேஷனிங்' என்ற சொல் காதிலே விழுந்தவுடனேயே பலருக்கு கலக்கம் ஏற்படுகிறது. இந்த 'ரேஷன்' அளவுக்கு நிலைமை பாதகமாக ஆகிவிட்டிருக்கிறது என்றால் இதற்குப் பின்னர் இன்னும் பெரிய பஞ்சம் வரக்கூடுமோ என்ற சந்தேகம் வருகிறது. பஞ்சம் வராது என்று நம்ப இடம் இருந்தால்கூட, மக்கள் இந்த உணவுப் பிரச்சினையிலே பல தொல்லைக்கு உள்ளாவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களேகூடத் தமது உரையிலே

" These difficulties are real and cannot be slurred over. But we should not let these difficulties overwhelm us and bring the process of development to a halt. The difficulties which our National economy is currently faced with are due largely to the failure of agricultural production to come up to the earlier expectations "

என்று குறிப்பிட்டிருக்கிறார். எதிர்பார்த்த இலக்கைத் தொடாத காரணத்தாலே இந்த நிலைமை ஏற்பட்டது என்று முதலமைச்சர் அவர்கள் தனது உரையிலே தெரிவிக்கிறார்கள். ஆனால் எதிர் 3-30 p.m. பார்த்த இலக்கை தெடாததற்கு என்ன என்ன காரணம் என்பது சரியாக ஆராயப்பட்டிருக்கிறதா என்று நாம் பார்க்கிறபோது முழு அளவுக்கு ஆராயப்படவில்லை என்று நான் உண்மையாகவே வருத்தப்படுகிறேன். மூன்றாவது திட்டத்தில் குறிப்பாக ஒவ்வொரு எக்கரிலேயும் விளைகின்ற தானியங்களின் அளவைப் பல்வேறு வகையான தானியங்களைப்பற்றிய புள்ளி விரைங்கள் காட்டுவது இது. அரிசி விளைச்சல் 1951-ல் 1,016 ராத்தல், 1955-56-ல் 1,213 ராத்தலாக, 200 ராத்தல் அளவுக்கு, 20 சத விகிதம் உயர்ந்து இருக்கிறது. ஆனால் அந்த உயர்வு 1960-61-லே வெறும் 1,261 ராத்தலாகத்தான் இருக்கிறது. அதில் வளர்ச்சி கிட்டவில்லை. வேண்டுமானால் போதுமான உரம் கிடைக்கவில்லை என்று காரணம் சொல்லக்கூடும். ஆனால் அதுமட்டுந்தான் காரணமா என்று ஆராய்ந்தால், வேறு பல காரணங்களும் இருக்கக்கூடும்.

அதே போல இன்னொரு பயிரைப்பற்றி பார்க்கிறபோது கம்பு 1950–51-ல் 400 ராத்தலாக இருந்தது. பல திட்டங்கள் போட்டதற்குப் பிறகு 1955–56-ல் 372 ராத்தலாக குறைந்து திடீரென்று 1960-61ல் 550 ராத்தலாக உயர்ந்து இருக்கிறது. அதே போல இன்னொரு பயிரைப் பார்க்கிறபோதும், பருத்தி 1950–51-ல் 120 ராத்தலாக இருந்தது. 1955–56-ல் 110 ராத்தலாகக் குறைந்து 1960-61-ல் 149 ராத்தலாக உயர்ந்து இருக்கிறது. எனவே இது புள்ளிவிவரங்களை சேகரிப்பதிலே இருக்கிற குறைபாடுகளின் விளைவாக இருக்குமோ என்று கூட ஐயுறுகிறேன். இந்த புள்ளி விவரங்களை முழு அளவுக்கு நம்பி ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இல்லை என்பதை நான் குறிப்பிடுவது அவசியமாகிறது.

[திரு. க. அன்பழகன்] [9th August 1965

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது புதிய நிலங்களை பயிர்ச் செலவுக்குக் கொண்டுவருவதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று 7 லட்சம் ஏக்கர் நிலத்தைப் பயிர்ச் செலவுக்குக் கொண்டுவரப் பெரிய திட்டத்தை மேற்கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய அளவு நிலம் புதிய பயிர்ச் செலவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் தெரியவில்லை. அதற்கு ஊக்கம் அளிக்கப் போதிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படவுமில்லை. நீர்ப் பாசனத்துக்காக போதிய புதிய வாய்ப்பு இங்கே இல்லை என்று சொன்னாலும் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொது மக்கள் எந்த வகையில் பயன்படுத்திக்கொள்ள வழி வகுக்க வேண்டுமோ அப்படி வழி வகுக்கவும் தவறி இருக்கிறார்கள். பாம்பிக்குளம்-ஆளியாறு பல நோக்கு திட்டம் 1964 மார்ச்சிலே ஒரு லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் தர முடியும் என்று கூறப்பட்டது. அந்த இலக்கை அடையாததற்குக் காரணம் பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லை என்று சொல்வார்கள். பொது மக்களிடம் பல குறைபாடுகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் 50 விழுக்காடு அளவுக்குத்தான் அத்திட்டம் நிறைவேறி இருக்கிறது. மிச்சம் 100-க்கு 50 விழுக்காடு நீர்ப்பாசன வசதி அவர்களுக்கு ஒழுங்காக தரமுடியாத காரணத்தால் விளைபொருளை அதிகப்படுத்தக்கூடிய கடமை தவறிப்போய் இருக்கிறது.

அதேபோன்று பல்வேறுவிதமான புதிய விவசாயக் கருவிகளையெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாங்கள் விவசாயிகட்கு வழங்குவோம் என்று சொன்னார்கள். பிறகு கருவிகளை வழங்க முடியாத நிலைமையிலே நிறுத்தி இருக்கிறார்கள். அப்படி நிறுத்தப்பட்ட கருவிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு அந்தக் கருவியை உற்பத்தி செய்கிறவர்கள் நிறுத்தி விட்டதே காரணம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி சில கருவிகளும் தரப்படவில்லை.

அதேபோல மற்ற வகையில் எண்ணிப்பார்ப்போமானால் தழை உரத்தை உற்பத்திச் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட உற்பத்தி அளவை எட்டிப் பிடிக்க முடியவில்லை.

இப்படிப் பல்வேறு காரணங்களாலே—சிறு சிறு காரணங்களாக இருக்கலாம்,—அதனாலே விளைபொருள்கள் தேவையான அளவு உற்பத்தி செய்ய முடியாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை உண்மையாகவே நாம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். புதிய திட்டங்கள் போட்டுவிடுவதாலே மட்டும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாங்கள் இவ்வாறு திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று சொல்கிற காரணத்தாலே மட்டும், அந்தத் திட்டங்களை அப்படியே நிறைவேற்றப் போகிறார்கள் என்று எதிர்பார்க்க முடியும் என்று நம்புவதற்கு காரணம் இல்லை, பெரும் பகுதியை நிறைவேற்றுவார்கள் என்பதிலே ஐயமில்லை. ஆனால் சொல்லுகிற ஒவ்வொரு புள்ளி விவரமும் அப்படியே நிறைவேற்றப்படுமா, அல்லது ஏற்றுக்கொள்

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

ளப்பட்டிருக்கிற ஒவ்வொரு தனிப்பட்ட தலைப்பிலும் அந்தக் கடமைகள் அவ்வாறே நிறைவேற்றப்படுகின்றனவா, என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இப்போது கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் பதில் அளித்த போது சொல்லி இருக்கிறார்கள், ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் சில தலைப்புக்களிலே அதிகமாகவே புதிய தொகை ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் முன்னாலே சொன்ன திட்டங்கள் பல கைவிடப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்கிறபோது அவையெல்லாம் நியாயமான காரணங்களாலேதான் கைவிடப்பட்டன என்று சொல்ல முடியாது. போதுமான ஊக்கம் காட்டாத காரணத்தாலே கைவிடப்
போதுமான ஊக்கம் காட்டாத காரணத்தாலே கைவிடப்
ஜனநாயகத்தில் அரசாங்க அலுவலகங்களை அனுசரித்து ஸ்தல ஸ்தாபன அலுவலகங்கள் நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, மாநகராட்சியைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இது கொண்டுவரப்படவில்லை. இது முற்றிலும் நல்ல மசோதா. இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1919-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சென்னை மாநகராட்சிச் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்த மசோதாவைப் பொறுக்குக் குழுவின் ஆய்விற்கு விட வேண்டுமென்ற பிரேரணையை வற்புறுத்தி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவானது, 1919-வது ஆண்டிலிருந்து 1965-வது ஆண்டு வரையில்—அதாவது ஏறத்தாழ 45 ஆண்டுகள்—தொடர்ந்து இயங்கிவந்த சட்டம் போதாது என்று கருதப்பட்டு, திடீரென்று ஆளும் கட்சியினரின் ஆர்வத்தால் இங்கே கொண்டுவரப்படுகிறது. இத்தனை ஆண்டுகள் வரையில் மாநகராட்சி இயங்கப் போதுமானதாக இருந்த சட்டம் இப்போது தான் போதுமானதாக இல்லை என்ற முடிவிற்கு மதிப்பிற்குரிய அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், இப்போது மாநகராட்சி மன்றத்தின் மீது என்னென்ன குற்றங்களைச் சாட்ட ஆளும் கட்சியினர் விரும்புகின்றனரோ அவைகளைவிட அதிகமான குற்றங்கள் சாட்டப்படத்தக்க விதத்தில் இதற்கு முன்பு ஆளும் கட்சி மாநகராட்சியில் அதிகாரத்தில் இருந்தபோது அது நடந்து கொண்டிருந்தது என்று கூற விரும்புகிறேன். இன்று சாட்டப்படும் குற்றங்கள் உண்மையாக நடந்தவையாகக் கருதப்பட்டாலும், அவை முன்பு நடக்காதவை அல்ல என்பதை நான் வாதிட்டு நிலைநாட்ட முடியும்.

நிர்வாகத்திலுள்ள குறைகளைப் போக்க இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக மதிப்பிற்குரிய அமைச்சர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், அந்த வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். என்னென்ன நடவடிக்கைகள் தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட முடியாமல் கமிஷனர் மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமோ அதற்கான வழிகள் ஆராயப்பட வேண்டும். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சி நிர்வாகத் துறை மாற்றியமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு தான் மத்தியக் குழுவும் வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட்டன; பல்வேறு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். இப்போது மேயரும் மத்தியக் குழுத் தலைவரும் வட்டாரக் குழுக்களின் தலைவரும் பொறுப்பேற்றுத் தான் அந்த அந்த காரியங்கள் செய்யப்படுகின்றன. ஐந்து கோடி, ஆறு கோடி

ரூபாயை மூன்று பேர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள் என்று சொல்வது சரியாகாது. மாநகராட்சி அதற்கு நிச்சயம் இடம் தராது.

சிற்றுண்டி விடுதிகளை ஏறத்தாழ 16 ஆண்டுகளாக வாடகைக்கு விட்டதில் என்ன வாடகைக்கு அவை விடப்பட்டனவோ அதை விடச் சற்று அதிகமான தொகைக்கு வாடகைக்கு விட்டிருந்தால் ரூ. 1,15,000 அதிகமாக வசூலித்திருக்க முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் அங்கே ஊழல் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

அதிகாரிகள் தவறு செய்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு இப்போது போதிய உரிமைகளும் அதிகாரங்களும் இருக்கின்றன. மாநகராட்சி மன்றத்திலுள்ள கமிஷனரும் அங்குள்ள இலாகாக்களின் தலைவர்களான ஹெல்த் ஆபீசர், என்ஜினியர்கள் போன்றவர்களும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டும் என்றால், அதை நான் வரவேற்பேன். அவர்கள் அரசாங்க ஆலோசனையுடன் நியமிக்கப்பட வேண்டும் என்றால், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்த ஆட்சி தவறு செய்கிறது என்று ஆளுகிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கருதுகிற காரணத்திற்காக அதைக் கலைக்கிற அதிகாரம் வேண்டுமென்று கேட்பது நிச்சயமாக சொல்வேன் சட்டமன்றத்திலோ அல்லது சட்டசபையிலோ நிறைவேற்றப்பட்டாலும் அதற்கு ஆளும் கட்சி செல்வாக்கு வலிவு காரணமே தவிர நீதி காரணமாகாது. கலைக்க வேண்டுமென்று சொல்லும்போது அதிலிருக்கிற உள் நோக்கத்தை எதிர்க்கட்சியினர் எடுத்துக் காட்டினார்கள். இந்த மசோதாவில் என்ன நோக்கம் வற்புறுத்தப்படுகிறதோ அது முன்பே சொல்லப்பட்டுவிட்டது. 1963-ல் நடைபெற்ற மாநகராட்சி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான வெற்றி பெற்றவுடன் அதைக் கண்டிக்கும் வகையில் காங்கிரஸ் பேச்சாளர்களும் தலைவர்களும் மேடையிலே பேசியதைக் கேட்டோம். இவர்கள் எத்தனை நாளைக்கு கார்ப்பரேஷனிலே இருக்கமுடியும்? அப்படி இருக்கவிடுவோமா, கலைத்துக் காட்டுவோம், என்று மேடையில் சொன்னார்கள். இன்று கலைக்கச் சட்டம் கொண்டுவந்துவிட்டார்கள். காங்கிரஸ் பேச்சாளருக்கு அரசாங்கம் பெற்றிருக்கிற உரிமையில் அத்தனை துணிவு எப்படி ஏற்பட்டது? பெரும்பாலான வலிவு உங்களுக்கு இருப்பதால் எதையும் சட்டமாக நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. அதைத் தடுக்க என்ன வழி எங்களிடத்தில் இருக்கிறது? வேண்டுமானால் வாதிட முடியுமே தவிர வேறு என்ன செய்யமுடியும்? நீதி எப்படி அங்கே கிடைக்கும்? திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், திருநெல்வேலி நகரசபையில் மற்றொரு தலைவரின் படம் திறந்துவைக்கப்பட்டதன் காரணமாக எத்தனை அபிப்ராயம் பரிமாறப்பட்டது. அந்த நகராட்சி மக்கள் கண்காட்சி நடத்துவதற்கு எவ்வளவு குறுக்கீடுகள் இருந்தன? எவ்வளவு இடையூறுகள் செய்தார்கள் ஆளும் கட்சியினர்? படம் திறந்ததற்கு நகராட்சிப் பணம் செல 5-50 p.m.

வழிக்கப்பட்டிருந்தால் அதை ஈடுகட்டுங்கள் என்று கேட்கலாம். படத்தின் விலை ஐம்பது ரூபாய் என்றால் தனிப்பட்டவர்கள் அந்த விலையைக் கட்டவேண்டுமென்றும் நகரசபையின் பணத்தை அதற்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் சொல்லியிருக்கலாம். திருச்சி நகரசபையிலே காமராஜரை வரவேற்க 12,000 ரூபாய் செலவழித்து வளைவு கட்டும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது ? அது நகரசபை செய்யத்தக்க காரியமா என்று ஆளும் கட்சித் தலைவர்கள் இதுவரை கேட்டார்களா ? நடவடிக்கை எடுத்தார்களா ? அதைப் போலத்தான் இதில் கட்சி மனப்பான்மை இருக்கிறது என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. லோகல் பண்டு ஆடிட் முறை இருக்கிறது. அது நடப்பதற்கு மூன்றாண்டுகள் ஆகிறது. ஒரு வருஷத்திற்கொரு முறையோ ஆறு மாதத்திற்கொருமுறையோ, அதை நடத்தச் செய்யலாம். எப்போதும் நகரசபை தவறு செய்யுமானால் அதைக் கண்டிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைச் சொல்ல மேடை இருக்கிறது. கருத்துக்களை வெளியிட பத்திரிகைகள் இருக்கின்றன. அப்படியெல்லாம் பார்த்துவிட்டு கடைசியிலே தேர்தல் இருக்கிறது, அதிலும் பார்க்கலாம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் செய்திருந்தால் அவற்றைச் சொல்லி அந்தத் தேர்தலிலே தோற்கடிக்கலாம். அப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இந்தச் சட்டத்தைக்கொண்டு வருவது உண்மையில் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருப்பதைக் கலைப்பதற்காகத்தான் என்று தெளிவாகத் தெரிந்தாலும், அதைக் கலைப்பதற்காக வருத்தப்படவில்லை. ஒரு ஸ்தாபனத்திற்கு மேல் இருக்கிற அதிகாரம் பெற்றவர்கள் தங்கள் கீழுள்ள அதை அகற்றிவிட முடியும். டில்லியிலே உள்ளவர்களின் ஆட்சி காங்கிரஸ் கட்சியினுடையதாக இல்லாமல் மற்றவர்களிடம் இருந்தால், லோகியாவின் ஆட்சியாக இருந்தால் மற்றவர்களைப் பார்த்து 'நீங்கள் மந்திரியாக இருப்பது கண்ணுக்குப் பார்வையாக இல்லை, அதனால் கலைக்கிறேன்' என்றுகூட சொல்லிக் கலைக்க முடியும். அதிகாரம் உள்ளவர்கள், இல்லாதவர்களை மிரட்டவும், அகற்றவும் செய்வது இயற்கைதான். தவறுக்கு பரிகாரம் தேடவேண்டும். ஜனநாயகத்தில் பொதுமக்கள் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம். சட்ட மன்றத்தில் எப்படி மக்களின் வாக்குரிமை பெற்று வந்தார்களோ அதேமுறைதான் மாநகராட்சிக்கு வந்து ஆளுகிறவர்களும் தேர்தல் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். குறை இருந்தால் நடவடிக்கை எடுக்க சட்டத்தைத் திருத்துங்கள். அதைக் கலைப்போம் என்றால் அதிகார மனப்பான்மையைத்தான் அது காட்டும். நகரசபை கலைக்கப்பட்டவுடன் இரண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு அரசாங்கத்தின் மேற் பார்வையில் அதிகாரிகளை வைத்து நிர்வாகம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். அதிகாரிகளை வைத்து நடத்துவோம் என்ற முறையில் அதில் மட்டும் குறையிருக்காதா ? அதைப்பற்றி சட்டசபையில் பேசவில்லையா ? அதற்கெல்லாம் தக்க விசாரணை நடத்தி குற்றம் புரிந்தவர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்களா ? பஞ்சாயத்துக்கள் நடைபெறுகின்றன. அதைப்பற்றிக் கூறும்

போது அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. எத்தனை பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் காமராஜர் பெயரால் விழா நடத்துவதற்கென்று நிதி சேர்ப்பதற்காக அவர்களிடத்தில் ஆசிரியர் வேலைக்கு ஆட்கள் வரும்போது அவர்களிடம், இது ஒரு பொதுக் காரியம், இதற்கு நிதி தாருங்கள், வேலைக்கு வைக்கிறோம் என்று நூறு இருநூறு என்று கேட்டிருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாகச் சொல்வதில் பயன் இல்லை. குறிப்பாக விவரங்கள் சொன்னால் விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. அன்பழகன் : தென்னார்காடு மாவட்டத்தில் என்ற அளவில் கூறமுடியும். அப்படி அவர் கேட்டிருப்பது . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மன்றத்தில் பேசுகிறவர்கள் பொறுப்போடு பேசுகிறார்கள். குற்றம் சாட்டுவது என்றால், யார், எந்த ஊர், எப்படி வாங்கினார்கள் என்று கூறவேண்டும். அப்போது தான் அதை விசாரிக்கலாம். தவறு இருந்தால் ஒப்புக் கொள்ளலாம். வேறு பொறுப்பில்லாத வகையில் மெம்பர்கள் பேசாமல் குறிப்பாக எடுத்துச் சொல்லவேண்டும்.

திரு. க. அன்பழகன் : இந்த மசோதாவை சட்டசபை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்பது தான் பிரச்னை. அமைச்சர் அவர்கள் யார் என்று சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். ஆளும் கட்சியினுடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான ஒரு எடுத்துக்காட்டாக அது சொல்லப்பட்டதே தவிர அது குற்றச்சாட்டு ஆகாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேலைக்குச் சேர்க்கப்படுகிற ஆசிரியர்களிடம் நிதி கேட்பது தவறு இல்லை என்றால், அது அங்கத்தினர்களுடைய கொள்கை. நாங்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

திரு. க. அன்பழகன் : லஞ்சம் என்று அதைக் குறித்துச் சொல்லவில்லை. நிதி என்ற முறையில் கேட்கப்பட்டது. நிதி கேட்டார்கள் என்று சொல்லும்போது . . .

திரு. கே. ராமதாஸ் : Point of order, Sir. தலைவர் அவர்களே, நண்பர் அன்பழகன் அவர்கள் பேசும்போது ஆசிரியர் வேலை தேடி வருகிறவர்களிடத்தில் நிதி என்ற முறையில் நூறு இருநூறு கொடுக்கவேண்டுமென்று கேட்டதாகச் சொன்னார்கள். எந்த எந்த ஆசிரியர்களிடத்தில் கேட்கப்பட்டது என்று அது நிரூபிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் அவர் சொல்லியதை வாபஸ் பெற வேண்டும்.

MR. CHAIRMAN : That is what the Chief Minister said.

[9th August 1965]

திரு. க. அன்பழகன் : இதே மன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள், மாநகராட்சியில் உள்ளவர்கள், ஆறு கோடியை பங்கு போட்டுக்கொள்கிறார்கள் என்று சொன்னார். அப்படிப் பங்கு போட்டுக்கொள்பவர்கள் யார் என்றோ, எங்கே எப்படி என்றோ முதலமைச்சர் அவர்கள் கேட்கவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பங்கு போட்டுக்கொள்கிறார்கள் என்றால் ஒரே அர்த்தம்தான் அங்கத்தினருக்குப் புரிகிறது. நான் அப்படி எடுத்துக்கொள்ளவில்லை. செலவினங்களை பகிர்ந்து கொள்கிறார்கள் என்றுதான் எடுத்துக்கொண்டேன். அங்கத்தினர் குத்தலாகச் சொன்னார் என்றால் அதை அப்போதே எதிர் கட்சி அங்கத்தினர் கேட்டிருக்கவேண்டும். இப்போது சொல்வதில் அர்த்தமில்லை.

திரு. க. அன்பழகன் : அதைப்போன்ற நல்ல எண்ணம் என்னுடைய வார்த்தையிலேயும் எடுத்துக் கொள்ள இடமில்லையா? அதே முறையில்தான் . . .

திரு. கே. ராமதாஸ் : ஒரு Point of order Sir. குறிப்பாக குற்றம் சாட்டியதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதற்கு விளக்கமாக சொல்லவேண்டும் அல்லது அதை வாபஸ் பெறவேண்டும். ஆசிரியர்களிடம் வாங்கினார்கள் என்றால் அதை நிரூபிக்கவேண்டும்.

SRI S. K. SAMBANDAN : On a point of order, Mr. Chairman, the practice generally observed in this House is that no names outside the Members of the Government or outside the Members of the House should be mentioned on any account. I do not know why the members on the other side, should ask to specify the names.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குற்றம் சாட்டுவது என்றால் தவறுகளை சொல்லவேண்டுமென்று சொன்னோம். முடியாது என்றால் விட்டுவிடுங்கள். அது Points of order ஆகாது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் ஆளும் கட்சியினுடைய செல்வாக்கு எந்த எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது என்று வற்புறுத்துவதற்குத்தான் சொன்னேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு செல்வாக்கு இருக்கிற காரணத்தால் சட்டமன்றத்தில் தங்கள் கொள்கையை நிறைவேற்றுவதற்கும், நினைத்தவுடனே கலைத்துவிடுவோம் என்று சொல்வதற்கும் மட்டுமே அது பயன்படும். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பார்த்து, ‘என் கட்சியில் சேருங்கள், இல்லாவிட்டால் கலைத்துவிடுவோம்’ என்று சொல்வதற்கு இது பயன்படும். ‘சேருங்கள், இல்லாவிட்டால் பதவி போய்விடும்’ ஆகையால் காங்கிரஸ் பக்கம் திரும்புங்கள்’ என்று மிரட்டவும் இது பயன்படாதா? ஆகையால் நிச்சயமாக இந்தச் சட்டத்தில் அது நடக்குமோ என்று ஐயுறுகிறேன். இது ஒரு பொறுக்குக்

9th August 1965] [திரு. க. அன்பழகன்]

குழுவிற்கு அனுப்பப்படுமானால் அங்கே ஆராய வாய்ப்பு உண்டு. மேலும் சிந்திப்பதற்கான வாய்ப்பு உண்டு. கையில் துப்பாக்கியை கொடுத்துவிட்டு நினைத்தால் சுடலாம் என்றும் சொல்லிய பிறகு ஆனால் அவர் சுடமாட்டார், மிக நல்லவர் என்று சொல்வதைவிட இதை இன்றைய தினம் சட்டத்தில் ஏற்றிவிட்டால் அது பிறகு அந்த இடத்தை விட்டு நீங்காது. 1967-க்குப் பிறகும் 1972-க்கும் பிறகும் அது இருக்கும். அதை மாற்றுவது இனி கஷ்டம். இது ஜனநாயகத்துக்கு கேடு பயப்பதாகும். இன்று ஜனநாயக முறைப்படி பெரும்பான்மை வாக்கு காரணமாக சட்டமியற்ற எல்லா உரிமைகளும் எல்லா வாய்ப்பும், சந்தர்ப்பமும் ஆளும் கட்சிக்கு இருக்கிறது. நாங்கள் எதிர்ப்பக்கத்தில் உள்ளவர்கள் தடுத்து நிறுத்த முடியாது என்று தெரியும். ஆனால் ஆளும் கட்சிக்கு ஜனநாயகத்தை நடைமுறையில் கொண்டுவரும் நல்ல எண்ணம் இருக்குமானால் எதிர்க் கட்சியை அந்த இடத்தைவிட்டு அகற்றுவதுதான் உள் நோக்கம் என்ற எண்ணம் ஏற்படாமல் மக்கள் உரிமை என்று எப்படி பஞ்சாயத்துக்களை பற்றி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களோ அதைப்போல இதைத் திருத்தினால் இந்தச் சட்டத்திற்கு தேவையில்லை. அதிகாரம் காரணமாக இந்த சட்டத்தை நிறைவேற்றுவது கேடு பயக்கும் என்று உணர்வார்கள். நானோ எதிர்க்கட்சி நண்பர்களோ சொல்கிற காரணத்தால் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள இணங்க முடியாத நிலை இருந்தாலும் பொறுக்குக் குழுவுக்கு இதை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றி எதிர்க்கட்சியிலே எதிர்பக்கத்தில் வீற்றிருக்கின்ற கனம் தி. மு. க. அங்கத்தினர்கள் ஆத்திரப்படுவார்கள் என்பதை நான் எதிர்பாராமல் இல்லை. கனம் தி. மு. க. அங்கத்தினர்கள் மட்டுமல்ல, மற்ற எதிர்ப்பு கட்சியாரும் இந்த மசோதாவை பலமாக எதிர்ப்பார்கள் என்பதையும் நான் எதிர்பாராமல் இல்லை. அதற்காக நான் வருந்தவும் இல்லை. ஆனால் எனக்கு வருத்தம் ஒன்று உண்டு. வருத்தம் என்றால், எதிர்க்கட்சியாருக்கு இவ்வளவு தூரம் சங்கடம் ஏற்படுகின்றதே, கவலை ஏற்படுகின்றதே, என்னாலே இத்தகைய ஒரு கவலை ஏற்பட்டதே, என்பதிலே வருத்தம். அதைவிட முக்கியமான வருத்தம் இன்று இப்பேர்ப்பட்ட மசோதாவை நான் கொண்டு வந்திருக்கிறேனே என்று. இப்படி மசோதாவை கொண்டுவர இருக்கின்றதே என்றால், ‘யாரோ வற்புறுத்தினார்கள், யாரோ தொல்லை கொடுத்தார்கள், ஆகவே தவிர்க்க முடியாத வகையிலே இதைக் கொண்டுவந்து விட்டேன்’ என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. மனம் இல்லாமல் இதைக் கொண்டுவந்திருக்கிறேன் என்றும், யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. பொறுப்புணர்ச்சியோடு இந்த மசோதாவை இங்கே சமர்ப்பித்திருக்கிறேன். 6-0 p.m.

கனம் உறுப்பினர் திரு. ஹண்டே அவர்கள் சொன்னார்கள், ‘இப்பொழுதா இதைக் கொண்டுவருவது, in opportune’ ’என்று சொன்னார்கள். ‘opportune, in opportune ’என்பது அவசியத்தைப்

பொருத்ததாக இருக்கிறது. உண்மைதான். ஒரு சங்கடமான நிலைமைதான். நான் அதை மறுக்கவில்லை. ஆளுகின்ற கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருக்கின்ற தி. மு. க. வினர் நகர மன்றத்திலே பெரும்பாலான கட்சியாக இருந்து நகர மன்ற நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டு வருகின்றார்கள். அதுதான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், திருப்பித் திருப்பி, ஏதோ வேண்டுமென்றே ஒரு க்ஷாத்திரத்தோடு, அந்த நிர்வாகத்தை அகற்றவேண்டுமென்று, அந்த அதிகாரம் எடுத்துக் கொள்ளும் வகையிலே, இந்த மசோதாவை கொண்டுவந்ததாக குறிப்பிட்டார்கள். ஆனால் நிலை அது அல்ல. இன்றைக்கு இருக்கிற ஒரு நிலையிலே நகரமன்ற நிர்வாகத்தை சீர்படுத்த வேண்டும், அது மக்களுக்கு முற்றிலும் பயன் படவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திலே இருக்கிறது என்றால் அந்தப் பொறுப் புணர்ச்சியோடுதான், எதிர்க் கட்சியினருக்கு எவ்வளவு ஆத்திரம் வந்தாலும் சரி, எவ்வளவு தவறுதலாக அவர்கள் அதை எடுத்து திரித்துக் கூறினாலும் சரி, எங்கள் மீது க்ஷாத்திரத்தோடு கொண்டு வந்தார்கள் என்று கூறக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் சரி, அரசாங்கம் இந்த மசோதாவை இங்கே சமர்ப்பித்து இருக்கிறது. மேல் நாடுகளிலே போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் திரு. சம்பந்தன் அவர்கள். மேல் நாடுகளிலே இருக்கிற முனிசிபாலிடிகளையெல்லாம் சொன்னார்கள். அது விஷயம் வேறு. இது விஷயம் வேறு. மேல்நாடுகளிலே இருக்கிற முனிசிபாலிடிகள் அரசாங்கத்திடமிருந்து உதவி கேட்பதில்லை. அரசாங்கத்திடம் பணம் வாங்குவதில்லை. கடனோ மானியமோ வாங்குவதில்லை. அவர்கள் முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஏற்றுக்கொண்டு போலீஸ் முதற்கொண்டு வைத்து நடத்துகின்றார்கள். அதோடு ஒப்பிட்டுப் பயனில்லை. ஆனால் நம்முடைய நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களின் உரிமையை உணர்ந்திருக்கிறோம். லோகல் 'இனிஷியேடிவ்' வேண்டும். உள்ளூர் காரியங்களை நடத்துவதற்கு மக்களுடைய பிரதிநிதிகளே பொறுப்பு எடுத்துக்கொண்டு நடத்த 'இனிஷியேடிவ்' வேண்டும். எல்லாவற்றுக்கும் உத்தரவு போட்டு நடத்துவது இல்லை. அது தான் அரசாங்கத்தின் கொள்கை. ஸ்தல ஸ்தாபன ஆட்சியைப் பொருத்தமட்டில் அதிலே சிறிதுகூட மாறுதல் இல்லை. முன்பு ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றி பல சட்டங்கள் இருந்தன. சுதந்தரம் அடைந்ததற்கு முன்பும், சுதந்தரம் அடைந்த பிறகும், சட்டங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். அதன் அடிப்படை என்ன? பஞ்சாயத்தாக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும், முன்பிருந்த ஜில்லா போர்டாக இருந்தாலும், நகர மன்றமாக இருந்தாலும், நகர மாமன்றமாக சென்னைக் கார்ப்பரேஷனைப் போன்றதாக இருந்தாலும், சட்டத்தின் அடிப்படை என்ன? மக்களுக்கு வேண்டிய சேவை புரியவேண்டும். தவறுதல் கூடாது. தவறுதல் இல்லாமல் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசாங்கத்தின் தலையீடு இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன ஆட்சிதான். இருந்தாலும் அரசாங்கம் நாங்கள் இயற்றிய சட்டத்தில் சிற்சில அதிகாரங்களை

வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரங்களைப் பிரயோகித்து அவசியமானால் தலையிடவேண்டிய நிமித்தம் இருக்கிறது. ஆனால், 'தலையிடுகின்றார்கள், இது ஜனநாயகமா, என்ன ஜனநாயகம்' என்று பேசுவது யார் வேண்டுமானாலும் பேசலாம். சுதந்திரா கட்சி அங்கத்தினர்கள் சுதந்திரம் என்று பேசுவது மாதிரி, ஜனநாயகம் என்று பேசுவது மாதிரி, பெயரே சுதந்திரா கட்சி என்று வைத்துவிட்டார்கள். எல்லோருக்கும் சுதந்திரம், தனிப்பட்டவர்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம், தடி எடுத்தவன் தண்டல்காரனாக இருக்கலாம், பிறரை சுரண்டலாம், அதுதான் சுதந்திரா கட்சியின் கொள்கை.

DR. H. V. HANDE : On a point of order, Mr. Chairman, I request the Chief Minister not to cast appersions cn the name of the Swatantra Party.

திரு. எம். சுப்பையா செட்டியார்: ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். முதன் மந்திரி அவர்கள், 'சுதந்திரா கட்சிக்காரர்கள் கொள்கைகளால் நாட்டில் அராஜகம்தான் ஏற்படும் என்ற முறையில், சுதந்திரா கட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்' என்று ஆத்திரத்தில் சொன்னார்கள். ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் கடமை என்ன என்பதை முதன் மந்திரி அவர்கள் மறந்துவிட்டு பேசுகிறார்களோ என்று சந்தேகம் ஏற்படுகிறது. அரசாங்கத்தின் வேலை என்ன? எந்தக் கட்சி அரசாங்கமாக இருந்தாலும், அமைதியையும், நியாயத்தையும் காப்பாற்றவேண்டியதுதான். சுதந்திரா கட்சியின் கொள்கை மனிதனுடைய சுதந்திரத்தைப் பறிக்காமல், அப்படிப் பறிப்பதை எதிர்ப்பதுதான் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுதான் பாடுபட்டு பெற்ற நாட்டின் சுதந்திரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலே மனிதனின் சுதந்திரம்தான் பெரிது என்பது சுதந்திரா கட்சியின் கொள்கை. அதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

DR. H. V. HANDE : On a point of order, Sir. The Chief Minister wants to convert the entire country into a jail.

MR CHAIRMAN : The question is :

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவருக்கு உரிமை இருக்கிறது. சுதந்திரா கட்சியிலே நெருங்கி இருக்கிறார். அதனாலே அவருக்கு உரிமை இருக்கிறது. அதனால் சொல்லலாமே, தவிர அது ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' ஆகாது.

இப்பொழுது நகர மன்றம் மக்களுக்கு சேவை புரிவதற்காக, மக்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஸ்தல ஸ்தாபனத்துக்கு உரிமை அளிக்கப்பட்டு ஸ்தல சுயாட்சி உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. நமது சட்டங்களிலே எல்லாம் அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதுதான் இந்த சட்டத்தின் அடிப்படை. அந்த அதிகாரத்தை ஏன் செலுத்த

[திரு. எம். பக்தவத்சலம்] [9th August 1965

வேண்டி இருக்கிறது? அதிகார பித்தினாலே அல்ல. இந்த நகர மன்ற நிர்வாகம் ஒழுங்காக நடைபெற வேண்டும், மக்களுக்கு அது பயன்பட வேண்டும், சீராகப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அதிகாரங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதை உபயோகிப்பது பற்றி ஆராய்கின்றோம். ஆராய்ந்து அவசியமானால் ஒவ்வொரு சட்டத்துக்கும் திருத்தங்கள் கொண்டு வருகின்றோம். இந்த மன்றத்திலே நிறைவேறின சட்டங்களுக்கு அப்போதைக்கு அப்போது திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுத்தான் வருகின்றன. எந்தப் பார்லிமெண்டிலும் திருத்தங்கள் வாராமல் இருப்பதில்லை. அனுபவத்தை ஒட்டி திருத்தங்கள் வந்து கொண்டிருக்கும். இப்பொழுது தி.மு.க. வினர் நகர மன்ற ஆட்சியை ஏற்று நடத்துகின்றார்கள். அந்த க்ஷாத்திரத்தை வைத்துக் கொண்டுதான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம் என்றால், இன்றைக்குத்தானா ஏற்று நடத்துகின்றார்கள்? எத்தனையோ ஆண்டுகளாக ஏற்று நடத்துகின்றார்கள். இதற்கு முன்பே ஏன் இந்த அரசாங்கம் இத்தகைய மசோதாவைக் கொண்டு வரவில்லை. சமீபத்தில் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலிலே தி.மு.க.-வினர் வெற்றி பெற்றார்கள். அவர்கள் வெற்றி பெற்று ஆட்சியை ஏற்றுக் கொண்டார்கள். அதிலே இருந்து இப்பொழுது 1½ வருஷம் ஆகின்றதே, 1½ வருஷத்துக்கு முன்பே வேண்டுமென்றால், இந்த தி.மு.க. வினர் அங்கே இருக்கக்கூடாது என்ற குறுகிய நோக்கம், கெட்ட எண்ணம் இருந்திருந்தால், அப்பொழுதே இந்த அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்காதா, என்று கனம் அங்கத்தினர்கள் சிந்திக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு சில அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரங்கள் இன்னும் அதிகப்படுத்தப்பட்டால் அதை நாம் தவறுதலாகப் பயன்படுத்திக் கொள்வோம் என்பதாக சில எடுத்துக்காட்டுகள் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்தி எதிர்ப்பு தீர்மானத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். சென்னை நகர மன்றம் நிறைவேற்றிய இந்தி எதிர்ப்பு தீர்மானம் அரசியல் அமைப்பு சட்டத்தைக்கூட மாற்றி அமைக்க வேண்டும் என்ற வகையிலே இருந்தது. அந்த தீர்மானம் 'நீங்கள் நிறைவேற்றுவதற்கு உரியது அல்ல; அந்த தீர்மானத்தை நீங்கள் ஏன் ரத்து செய்யக்கூடாது' என்று அரசாங்கம் கேட்டது. அவர்கள் அதற்கு இணங்கவில்லை. அதற்குமேலே இந்த தீர்மானம் ரத்து செய்யப்பட்டது. அவ்வளவுதான். அதோடு தீர்ந்து விட்டது. கோவையில் காங்கிரசார் நகராட்சி மன்றத்தை நடத்துகிறார்கள். கோவை நகராட்சி மன்றத்திற்கும் இதே மாதிரி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரசார் நடத்தும் வேறு சில ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நகராட்சி மன்றங்கள் தங்கள் தீர்மானங்களை வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே இந்த விஷயத்தில் சர்க்கார் பாரபட்சம் காட்டவில்லை.

9th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

திருநெல்வேலி நகராட்சி மன்றத்தை எடுத்துக்கொண்டால், அங்கே வேறு கட்சித் தலைவர்களின் உருவப்படங்களை அந்த நகராட்சி மன்றத்தினர் வைத்தார்கள், என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை. அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் உருவப்படங்களை நகராட்சி மன்றங்கள் வைக்கவேண்டும். அது தான் நடைமுறை; விதி அப்படித்தான் இருக்கிறது. அந்த நகராட்சி மன்றத்தினர் அங்கே உருவப்படங்களை அரசாங்கத்தைக் கேட்காமல் வைத்தார்கள். அதற்கு அரசாங்கத்தின் அனுமதியை அவர்கள் ஏன் கோரவில்லை என்பதுபற்றித்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அந்த நகராட்சி மன்றத்தைக் கலைக்க வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் அனுமதியைக் கோராமல் அங்கே ஏன் உருவப்படங்களை அவர்கள் வைத்தார்கள் என்பதற்கு அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது.

6-10 p.m.

இப்போதுள்ள சட்டத்தின் சில பிரிவுகளில் நகர சபைகள் விஷயத்தில் அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. அந்த அதிகாரங்கள் போதுமே, இன்னும் அதிகாரங்கள் வேண்டுமானால் அதற்கான முறையில் சட்டத்தைத் திருத்திக்கொள்ளலாம் என்று கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். சட்டத்தின் பிரிவுகளை நன்றாக ஆராய்ந்ததில், தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் தொடர்ந்து தவறாகவே நடந்துகொண்டால் அதைத் தவிர்க்க முடியாது என்று தெரிந்ததால்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். வேறொரு மன்றத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், அந்த மன்றத்தில் இரண்டு நாட்களுக்குமுன் நான் குறிப்பிட்டதை 'நான் பாட்டி கதை' சொன்னதாக பொதுக்கூட்டத்தில் சர்வ சாதாரணமாகக் குறிப்பிட்டாராம். அவருக்கு அது பாட்டி கதையாகத்தான் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரசபையால் அரசாங்கத்தின் உதவியுடன் 50 வீடுகள் சென்னையில் கட்டப்பட்டன. வீடில்லாமல் கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு hire purchase முறையில் இவற்றை ஏதாவதொரு விலைக்குக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவை கட்டப்பட்டன "வீடில்லாதவர்களை 'லிஸ்ட்' எடுத்து, அவ[illegible] எத்தனை பேருக்குக் கொடுக்க முடியுமோ அத்தனை பேருக்குக் கொடுங்கள்" என்று நகராட்சி மன்றத்திடம் அரசாங்கம் சொன்னது. அதற்கு நகராட்சி மன்றம் ஒத்துக் கொள்ளவில்லை. "நாங்கள் கவுன்சிலர்கள் 100 பேர் இருக்கிறோம். இரண்டு கவுன்சிலர்களுக்கு ஒரு வீடு வீதம் இந்த 50 வீடுகள் கொடுக்கப்பட வேண்டும்" என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். இந்த விஷயம் எனக்கு ரொம்ப நாட்களாகத் தெரியாமல் இருந்தது. சில நாட்களுக்கு முன்பு நகராட்சி மன்ற அங்கத்தினர்களுடன் மேயர் என்னிடம் வந்தார். அப்போதுதான் எனக்கு இந்த விஷயம் தெரிந்தது. இந்தத் தகராறு காரணமாக இந்த வீடுகள் இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவில்லை. இரண்டு

[திரு. எம். பக்தவத்சலம்] [9th August 1965

வருஷமாக இவற்றிற்கு மேற்பார்வையும் இல்லை; இதன் காரண மாக இவைகளை ரிப்பேர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. என்னிடம் வந்த மேயரும், கவுன்சிலர்களும், கவுன்சில் சொல்கிற படி தங்களுக்கு அவைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றார்கள். இதற்குக்கூட தங்களுக்கு உரிமை இல்லையா என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று நான் பதில் சொன்னேன். சீட்டுப் போட்டுத்தான் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்தது. அதை நகராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வீடுகளை சீட்டுப் போட்டுத் தான் கொடுக்கவேண்டும் என்று இரண்டு நாட்களுக்குமுன் கமிஷனருக்கு அரசாங்கத்திடமிருந்து உத்தரவு அனுப்பப்பட்டது. இந்த உத்தரவை கமிஷனர் நிறைவேற்ற முடிகிறதா? இது மேயர் மூலமாக கமிஷனருக்குப் போனது. இந்த விஷயத்தை கவுன்சிலுக்குக் கொண்டு போகவேண்டும் என்று அங்கே சொல்லப் பட்டது. கார்ப்பொரேஷன் கவுன்சில், தான் முன்பு நிறைவேற்றிய தீர்மானத்தின்படியே இந்த வீடுகள் கொடுக்கப்படவேண்டும், அந்த முடிவை தான் மாற்றிக்கொள்வதாக இல்லை என்று சொன்னது. அந்தக் கவுன்சில், கமிஷனரிடம் "இந்தக் கவுன்சிலின் உத்தரவை நிறைவேற்ற வேண்டிய கடமையும் உனக்கு இருக்கிறது. நகராட்சி மன்றச் சட்டத்தில் ஒரு செக்ஷன் அதற்கான முறையில் அமைந்திருக்கிறது. எனவே நீ எப்படி இந்தக் கவுன்சிலின் தீர்மானத்திற்கு விரோதமாகச் செயலாற்றலாம்" என்றது. எனவே இந்த வீட்டுப் பிரச்னை பற்றி இன்னும் முடிவாகவில்லை. இதை ஒரு திருஷ்டாந்தமாக நான் சொன்னேன். இம்மாதிரி பல உதாரணங்கள் இருக்கின்றன. இம்மாதிரி பல பிரச்னைகள் இருக்கின்றன.

கல்கத்தா கார்ப்பொரேஷன் 1948-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டுவரை கலைக்கப்பட்டதாக இருந்தது. எனவே ஒரு நகர சபை கலைக்கப்படுவது என்பது இப்போதைய புதிய நிகழ்ச்சி அல்ல. இந்த மசோதா ஸ்தல சுயாட்சிக்கு பங்கம் விளைவிக்கவில்லை. நாகபுரி கார்ப்பொரேஷனை ஏன் கலைக்கக்கூடாது என்று அந்த நகராட்சி மன்றத்திற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும். இத்தகைய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்க சட்டத்தில் வகை செய்யாதது, சட்டத்தில் ஒரு குறைவு என்று இப்போது புலப் படுகிறது. இந்தக் குறைவை நீக்குவதற்காகத்தான் இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. சென்னை நகராட்சியில் இப்போது எதிர்க்கட்சியினர் அதிகாரத்தில் இருப் பதால் இந்த மசோதா கொண்டுவரப்படுவதாக எதிர்க் கட்சியினர் சொல்லக்கூடும் என்று அரசாங்கம் எதிர்பார்க்காமல் இல்லை. அரசாங்கம் நகர மக்கள்பால் தன் கடமையைச் செய்யவேண்டும். தான் சில கடமைகளைச் செய்யும்போது எதிர்க் கட்சியினர் தன்னைக் குறைகூறுவார்களே, தன் மீது பழி கூறுவார்களே என்று அரசாங்கம் அஞ்சினால், அது தன் கடமைகளைச் செய்ய முடியாது. அந்தப் பொறுப்புணர்ச்சியுடன் இந்த மசோதாவை நாங்கள்

9th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கொண்டுவந்திருக்கிறோம். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்ற சில தகராறுகள் வருவதால் இந்த மசோதாவைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் ஏற்கனவே கூறிய காரணங்களால், இந்த மசோதாவிற்கு ஒரு பொறுக்குக் கமிட்டி அவசியமில்லை. எனவே இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கோரும் பிரேரணையை எதிர்க்கிறேன். இந்த மசோதாவை மேலும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்று சபையினரைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

MR. CHAIRMAN: The question is:

"That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965) be referred to a Select Committee of the Legislative Council consisting of the following Members:—

1. The Hon. Sri S. M. A. Majid.
2. Sri K. Anbazhagan.
3. Sri M. Subbiah Chettiar.
4. Sri K. Rajaram.
5. Sri K. R. Ramasamy.
6. Dr. H. V. Hande and
7. The Hon. Sri M. Bhaktavatsalam (Mover of the Bill).

The amendment was put and declared lost.

6-20 p.m.

Sri K. Anbazhagan demanded a poll and the House divided thus:—

Ayes.

Dr. H. V. Hande	Sri S. K. Sambandam
Sri A. K. Thangavel Mudaliar	" G. Krishnamurthy
" J. P. Chitrarasu	" M. Subbiah Chettiar
" K. R. Ramasamy	" N. V. Natarajan
" K. S. Abdul Wahab	" K. Anbazhagan

Noes.

The Hon. Sri R. Venkataraman	Sri K. Ramakrishna Achari
Sri K. Rajaram	" S.P. K.A. Lakshmanan Chettiar
" K. Ramadass	" A. Sambasiva Reddiar
" V. K. Palaniswamy Gounder	" S. D. Sundaram
Srimathi Manjubashini	" E. Janakiram Mudaliar
" Saraswathi Pandurangam	" K. Kothandaraman
" T. L. Thirupurasundari	" V. Rengasamy.
Dr. T. V. Sivanandam	" M. Ethirajulu
Sri N. R. Thiagarajan	" K. Kamalakkannan
" Mohanlal M. Mehta	" A. Chidambara Mudaliar

Neutral.—Nil.

Ayes 10, Noes 20, Neutral Nil.

The amendment was lost.

[9th August 1965

MR. CHAIRMAN: I now put the main motion to the vote of the House. The question is:

"That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965), as passed by the Assembly, be taken into consideration".

The motion was put and carried.

6-22 p.m. MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

VII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

* 185. *Notification issued with G.O. Ms. No. 2994, Industries, Labour and Co-operation, dated 11th June 1965 making amendments to the Madras Co-operative Societies Rules, 1963 [Laid on the Table of the House under section 119(4) of the Madras Co-operative Societies Act, 1961 (Madras Act 53 of 1961).]*

* 186. *Notification issued with G.O. Ms. No. 1015, Education, dated 14th June 1965 approving the list of all the parks and play-fields set out in the area within the jurisdiction of the Walajapet Municipal Council in North Arcot district. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959)].*

* 187. *Notification issued with G.O. Ms. No. 919, Education, dated 1st June 1965 approving the list of all the parks, and play-fields set out in the area within the jurisdiction of the Kuzhithurai Municipal Council in Kanyakumari district. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959)].*

† 188. *Notification issued with G.O. Ms. No. 2707, Home, dated 25th August 1964 exempting from payment of tax leviable for the Russian Rotary Drill (D. D. 30R) with the Truck No. MAZ 200 belonging to Agriculture Department. [Laid on the Table of the House under Section 11(2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].*

‡ 189. *Notification issued with G.O. Ms. No. 977, Education, dated 9th June 1965 approving the list of all the parks and play-fields set out in the area within the jurisdiction of the Mannargudi Municipal Council in Thanjavur district. [Laid on the Table of the House under Section 14 (3) of the Madras Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959)].*

9th August 1965]

B.—Reports, Notifications and other papers.

‡ 33. *Report of the Public Accounts Committee of the Madras Legislative Assembly on the accounts of the State of Madras for the year* 1962–63.

‡ 34. *Report of the Estimate Committee of the Madras Legislative Assembly on Women's Welfare Department.*

* Laid on the Table of the House on 5th Agust 1965.
† Laid on the Table of the House on 6th August 1965.
‡ Laid on the Table of the House on 7th August 1965

[9th August 1965

APPENDIX I.

[*Vide* Answer to starred question No. 82 on page 4.]

Subject.—Third Five-Year Plan—Schemes executed so far that were not originally included in the plan and the amount spent on each of these schemes.

As against the original Third Plan outlay of Rs. 291 crores, the anticipated expenditure at the end of Third Plan period is Rs. 337 crores excluding the expenditure on Crash Programmes and Advance action for the Fourth Plan Schemes. Significant part of this increase is due to the implementation of new schemes not originally contemplated and enlargment of certain existing schemes apart from the rise in the cost of certain schemes. Important among such schemes with anticipated expenditure thereon at the end of the Third Plan period are indicated in the annexure.

A detailed account of the achievements during 1961–62 to 1964–65 and the programme for 1965-66 under Third Five-Year Plan on both the financial and physical side was placed on the Table of the House at the time of the presentation of the Budget Estimate for 1965–66 to the House.

ANNEXURE.

List of Important Schemes Executed in the Third Plan but which were not originally included in the Third Plan.

(Schemes costing over Rs. 10 lakhs.)

Name of Schemes. (1)	Anticipated expenditure in Third Plan. (2) (RUPEES IN LAKHS.)
Agriculture—	
1 Increasing the production of vegetables ..	10·39
2 Impact Programme	28·65
3 Scheme for Intensive cultivation in selected areas Chingleput, Coimbatore, Madurai and Tirunelveli	15·05
Fisheries—	
Construction of Boat building yards	11·09
Power Schemes—	
1 Madras Plant Extension, IV Stage	19·60
2 Mettur Tunnel Power House, II Stage	*1,127·84
3 Kodayar Hydro-Electric Scheme	257·40
4 Establishment of Thermal Power Station at Ennore and Tuticorin	25·60
Small-Scale Industries—	
Tool Room at Ambattur	13·04

* Includes provision in respect of Mettur Tunnel Power House, I Stage.

9th August 1965]

Name of Schemes. (1)	Anticipated expenditure in Third Plan. (2) (RUPEES IN LAKHS.)
General Education—	
Improvements to Emoluments of Teachers ..	316·75
Social Welfare—	
Care of pre-school children of age-groups 2 to 5.	11·87
(Centrally Sponsored Schemes.)	
Forest—	
Scheme for Planting quick growing species, bamboo plantation projects	14·02
Co-operation—	
1 Loans to Consumers' Co-operative Stores for stabilisation of prices	38·60
2 Grants for organisation of Consumers' Co-operatives	13·07
Health —	
Post-Graduate Medical Education and C.R.A. Course	13·39

List of important schemes in respect of which increased expenditure is expected to be incurred at the end of plan period.

(Schemes in respect of which the anticipated expenditure exceeds the original outlay by Rs. 20 lakhs and above.)

Name of Schemes. (1)	Third Plan Provision. (2)	Anticipated expenditure in Third Plan. (3)
	(RUPEES IN LAKHS.)	
Agriculture Production—		
1 Distribution of improved seeds.	70·00	101·36
2 Cotton Development including package scheme	25·00	52·42
3 Oil Seeds including package scheme	30·00	75·30
Land Development—		
1 Tractor Hiring	50·00	71·20
2 Tractor Hire Purchase	50·00	72·85
Minor irrigation—		
1 Special Minor Irrigation Programme	800·00	1,116·05
2 New Well Subsidy Scheme ..	100·00	460·67
3 Hire-Purchase scheme for pumpsets and electric motors ..	100·00	123·99

[9th August 1965

Name of Schemes. (1)	Third Plan Provision. (2)	Anticipated Expenditures in Third Plan. (3)
	(RUPEES IN LAKHS.)	
Soil Conservation—		
Soil Conservation in Agricultural Lands	143·50	241·90
Dairying and Milk Supply—		
1 Loans for purchase of Milch animals	69·50	178·74
2 New Milk Scheme	53·30	110·80
Forests—		
Rubber Plantation	26·00	62·94
Fisheries—		
Supply of improved fishing boats.	63·00	90·42
Co-operation—		
1 Credit-Credit Union	1·80	22·33
2 Construction of Godowns ..	109·00	130·54
3 Community Projects	20,36·00	2,317·14
Irrigation—		
1 Parambikulam-Aliyar Project ..	2,112·07	2,596·37
2 Sathanur projects ..	0·94	35·65
3 Neyyar II Stage Left Bank Canal	18·46	56·11
Power—		
1 Kundha, Stages I and II ..	277·00	556·58
2 Sandyallah Reservoir	30·00	56·23
3 Mettur Tunnel Power House Scheme	580·00	1,127·84
4 Kundha Hydro-Electric Scheme, Stage III ..	2,306·00	2,988·19
5 Anamalai Project	500·00	861·71
6 Kodayar Hydro-Electric Scheme ..	2,00·00	257·40
Handlooms—		
1 Research and Technique ..	50·00	79·83
2 Spinning Mills	50·00	108·50
Small-Scale Industries—		
1 Expansion of Leather Finishing Unit, Ambur	10·00	52·51
2 Financial Assistance Block Loans.	127·60	150·20
3 Raw material depots for Estates and Colonies at Coimbatore and Madurai	4·40	49·52

9th August 1965]

Name of Scheme. (1)	Third Plan Provision. (2)	Anticipated expenditure in Third Plan. (3)
	(RUPEES IN LAKHS.)	
Industrial Estates—		
a. Continuing scheme—		
Industrial estates and Colonies ..	20·00	68·62
b. New shemes—		
Worksheds and Developed plots, Industrial Estates and plots at Ambattur	243·00	395·15
Roads—		
1 State Highways	400·00	592·54
2 Security measures Road works	27·00	49·74
3. Construction of over/under bridges in lieu of existing level-crossing	40·00	82·50
Elementary Education—		
1 Enrolment of pupils under age Group 6–11 and 11–14 ..	1,388·00	1,701·52
2 Training of additional teachers.	30·00	74·43
Secondary Education—		
1 Enrolment of pupils of the age group 14–17	245·00	302·63
2 Free education for girls up to Standard X	100·00	228·40
3 Construction of buildings for Government secondary schools	15·00	63·82
Technical Education—		
1 Expansion and Development of Engineering Colleges at Guindy and Coimbatore ..	35·00	59·37
2 Grant-in-aid to private Engineering Colleges	9·00	49·31
3 Expansion and Development of existing Polytechnics, Madras, Coimbatore and Madurai, Regional School of Printing and Institute of Leather Technology	25·00	98·15
4 Establishment of Polytechnic at Vellore and Nagercoil ..	40·00	62·03
5 Grant-in-aid to Private Polytechnic	40·00	79·57

Name of Scheme. (1)	Third Plan Provision. (2)	Anticipated expenditure in Third Plan. (3)
	(RUPEES IN LAKHS.)	
Health—		
1 Improvement to Taluk Head-quarters hospitals including increase of bed strength by 1,500 beds	50·00	72·88
2 Improvement to District Headquarters Hospitals including increase by 1,000 beds in all District Head-quarters Hospitals	30·00	75·21
3 Medical Colleges ..	200·00	279·35
4 National Malaria Eradication Programme	100·00	500·07
5 Urban Water-supply and Drainage Schemes	200·00	556·04
Welfare of Backward Classes.		
Scheduled Castes—		
1 Scholarships, Schooling charges (pre-metric) ..	30·00	134·88
2 Construction and mainten-ance of Hostels	20·00	62·44
Other Backward Classes—		
Scholarships	30·00	115·72

APPENDIX II.

[*Vide* item VI on page 40.]

L.A. Bill No. 16 of 1965.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Madras City Municipal Corporation Act, 1919.

Be it enacted by the Legislature of the State of Madras in the Sixteenth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1965.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Substitution of new section for section* 8, *Madras Act IV of* 1919.—For section 8 of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919) (hereinafter referred to as the principal Act), the following section shall be substituted, namely :—

" 8. *Withdrawal of Commissioner from office.*—The State Government may, at any time, withdraw the Commissioner from office and shall do so if such withdrawal is recommended by a resolution of the council passed at a special meeting called for the purpose and supported by the votes of such number of councillors as shall constitute not less than three-fourths of the sanctioned strength of the council.".

3. *Omission of section* 14, *Madras Act IV of* 1949.—Section 14 of the principal Act shall be omitted.

4. *Amendment of section* 24, *Madras Act IV of* 1919.—In section 24 of the principal Act, in the proviso, for the words " within fifteen days of the passing of the resolution ", the words " within a period of thirty days of the passing of the resolution or such further period not exceeding fifteen days as the State Government may, by general or special order, specify from time to time " shall be substituted.

5. *Insertion of new section 44-A in Madras Act IV of* 1919.—In Chapter II of the principal Act, after section 44, the following section shall be inserted, namely :—

" 44-A. *State Government's power to dissolve or supersede the corporation.*—(1) If, in the opinion of the State Government, the corporation is not competent to perform or persistently makes default in performing the duties imposed on it by law, or exceeds or abuses its powers, the State Government may, by notification, direct that the corporation be dissolved and reconstituted on such dates as the State Government may fix in that behalf or they may, if they think necessary, supersede the corporation for a specified period not exceeding three years and the notification shall be laid before both Houses of the State Legislature :

Provided that for the purpose of completing the elections to the corporation when it is dissolved, the State Government may, from time to time, extend the time fixed by them under this sub-section for its reconstitution.

(2) Before publishing a notification under sub-section (1), the State Government shall communicate to the corporation the grounds on which they propose to do so, fix a period of not less than thirty days for the corporation to show cause against the proposal and consider its explanations or objections, if any.

(3) Nothing contained in sub-section (1) shall affect the office of the Commissioner.

[9th August 1965

(4) On the date fixed for the dissolution of the corporation under sub-section (1), all its members as well as the Mayor and the Deputy Mayor (including councillors who are members of committees established or constituted by or under this Act) shall forthwith be deemed to have vacated their Offices and fresh elections shall be held in accordance with the provisions of this Act. The newly elected councillors shall enter upon their offices on the date fixed for the reconstitution of the corporation.

(5) Supersession shall take effect from noon on the date of publication of notification, if no date is therein specified, and thereupon the following consquences shall ensue :—

(a) All the members of the corporation as well as the Mayor and the Deputy Mayor (including councillors who are members of committees established or constituted by or under this Act) shall forthwith be deemed to have vacated their offices.

(b) All or any of the functions of the corporation, of the Mayor and of the committees established or constituted by or under this Act except the Taxation Appeals Committee may, during the period of supersession, be exercised and performed, as far as may be, and to such extent as the State Government may determine, by such person as the State Government appoint in that behalf and any such person may, if the State Government so direct, receive payment for his services from the municipal fund; the State Government may determine the relations of such person with themselves and may direct the Commissioner to exercise and perform any powers and duties of the corporation and of the committees aforesaid except the taxation appeals Committee in addition to his own.

(c) All or any of the functions of the Taxation Appeals Committee may, during the period of supersession, be exercised and performed by the chairman of the said Committee.

(6) On or before the expiry of the period of supersession notified under sub-section (1) the State Government may, by notification, for reasons to be stated in the notification, postpone the reconstitution of the corporation for a further period not exceeding one year at any one time, but the total period of supersession shall not in any case exceed three years.

(7) The State Government may reconstitute the corporation before the expiry of the period notified under sub-section (1) or sub-section (6).

(8) When the corporation dissolved or superseded under this section, the State Government until the date of the reconstitution thereof and the reconstituted corporation thereafter shall be entitled to all the assets and be subject to all the liabilities of the corporation as on the date of the dissolution or supersession and on the date of the reconstitution respectively."

9th August 1965]

6. *Amendment of section 85, Madras Act IV of 1919.*—In section 85 of the principal Act, in sub-section (3)—

(1) for clause (a), the following clause shall be substituted, namely :—

"(a) Every appointment to any post included in Class I-A shall be made by the State Government."

(2) in clause (b), for the words, figure and letter "of any other officer included in Class I-A", the words "to any post included in" shall be substituted.

(3) for clause (c), the following clause shall be substituted, namely :—

"(c) Every appointment to any post included in Class III or Class IV shall be made by the authority specified in sub-section (2) of section 93.".

7. *Amendment of section 86, Madras Act IV of 1919.*—In section 86 of the principal Act—

(1) in sub-section (1)—

(a) in the first proviso, the word, figure and letter "Class I-A" shall be omitted;

(b) in the second proviso, in clause (i), after the words "leave and leave allowances", the words "allowances for house-rent carriage hire, travelling expenses or any other allowances" shall be inserted;

(2) after sub-section (1), the following sub-section shall be inserted, namely :—

"(1-A) The State Government may—

(a) recover from the corporation the whole or such proportion of the salary and allowances paid to any Class I-A officer and such contribution towards his leave allowances, pension and provident fund as the State Government may, by general or special order, determine;

(b) at any time, withdraw any Class I-A officer and appoint another in his place.".

8. *Amendment of section 87, Madras Act IV of 1919.*—In section 87 of the principal Act, in sub-section (1), the word, figure and letter "Class I-A" shall be omitted.

9. *Amendment of section 88, Madras Act IV of 1919.*—In section 88 of the principal Act—

(1) in sub-section (1), the word, figure and letter "Class I-A" shall be omitted;

(2) in clause (a) of the proviso, after the words "leave and leave allowances", the words "allowances for house-rent, carriage hire, travelling expenses or any other allowances" shall be inserted.

10. *Amendment of section 92, Madras Act IV of 1919.*—In section 92 of the principal Act, for the words " corporation establishment ", the words, brackets, figure and letter " officers and servants of the corporation (other than the assistant commissinoers, the personal assistant to the Commissioner and Class I-A officers) " shall be substituted.

11. *Insertion of new sections 94, 95, 96 and 97 in Madras Act IV of 1919.*—In Chapter IV of the principal Act, after section 93, the following sections shall be inserted, namely :—

" 94. *Consultation with the Madras Public Service Commission.*—No appointment to any post included in Class I-B, Class II or Class III shalll be made except after consultation with the Madras Public Service Commission (hereinafter in this section and in section 95 referred to as " the Commission ") :

Provided that no such consultation with the Commission shall be necessary in regard to the appointment—

(*a*) to any acting or temporary post for a period not execeeding one year ; or

(*b*) to such posts as may from time to time be specified by or the State Government in consultation with the Commissioner; or

(*c*) to a post when at the time of such appointment the person to be appointed thereto is in the service of the Central Government or any State Government ; or

(*d*) to a permanent or temporary post, if the person to be appointed is not likely to hold that post for more, than one year; or if such person is likely to hold the post for more than one year but not more than three years and the Commission advises that the appointment may be made without consulting the Commission.

95. *Power of the State Government to make regulations and reference to the State Government in case of difference between the Commission and the corporation.*—(1) The State Government may make regulations for the following matters, namely :—

(*a*) the procedure to be followed by the Commission in advertising posts, inviting applications, scrutinising the same, and selecting candidates for interview;

(*b*) the procedure to be followed by the Commission for selecting candidates for appointment and by the corporation for consultation with the Commission ;

(*c*) any other matter which is incidental to, or necessary for, the purpose of consultation with the Commission.

(2) In the case of any difference of opinion between the Commission and the corporation on any matter, the corporation shall refer the matter to the State Government and the decision of the State Governent thereon shall be final.

96. *Provincialisation of any class of officers or servants under the corporation.*—(1) Notwithstanding anything contained in this Act, the State Government may, by notification, constitute any class of officers or servants of the corporation into a corporation service.

(2) Upon the issue of a notification under sub-section (1), the State Government shall have power to make rules to regulate the classification, methods of recruitment, conditions of service, pay and allowances and discipline and conduct of the corporation service thereby constituted and such rules may vest jurisdiction in relation to such service in the State Government or in such other authority or authorities as may be specified therein.

97. *Power of State Government to transfer officers and servants of the corporation or municipalities.*—Notwithstanding anything contained in this Act or in the Madras District Municipalities Act 1920 (Madras Act V of 1920), the State Government shall have power—

(*a*) to transfer any officer or servant of the corporation to the service of any municipality constituted under the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) or to transfer any officer or servant of any such municipality to the service of the corporation.

(*b*) to issue such general or special directions as they may think necessary for the purpose of giving due effect to any transfer made under clause (*a*). ".

12. *Amendment of section 142, Madras Act IV of 1919.*—In clause (i) of the proviso to sub-section (1) of section 142 of the principal Act, the words and figures " or without previous publication of the application under the Local Authorities Loans Act, 1914 and the rules issued thereunder " shall be omitted.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Tuesday, the 10th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the colck, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Unemployment Relief Fund

*91 Q.—SRI K. S. ABDUL WAHAB: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to set up Unemployment Relief Fund?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

House Rent Allowance for lecturers

*92 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any grant is given to City Colleges towards the House Rent Allowance for lecturers employed in it;

(b) if so, the rate of House Rent Allowance granted to them; and

(c) whether there is any Government machinery to see that these grants reach the lecturers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No;

காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய இன்றைய அரசாங்கத்தார் நாங்கள் சொல்வதைக் கேட்காவிட்டாலும் கூட மகாத்மாஜி சொன்னதற்காவது செவி சாய்த்து அவர்கள் சொன்னது நமது நாட்டு மக்களுக்கு நன்மை என்று தோன்றினால் 1952-ல் உயர்திரு கித்வாய் அவர்களும் ராஜாஜி அவர்களும் எந்தத் துணிவோடு இந்த கண்ட்ரோலை எடுத்தார்களோ அந்த நிலைமையில் எடுத்தால்தான் நாட்டு மக்களுக்கு திரும்பவும் பயன்படுமே தவிர இன்னும் 100 வருஷங்களுக்கு இந்த கண்ட்ரோலை வைத்திருந்தால் கூட உணவு உற்பத்தியிலோ, ஜனங்களுக்கு உணவு கொடுப்பதிலோ முன்னேறவும் காண முடியாது. முடியவும் காணமுடியாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு உதாரணத்தை சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நாட்டுக்கு கண்ட்ரோல் கொண்டுவந்தது சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி. நூலுக்கு இருந்த கண்ட்ரோலை டிகண்ட்ரோல் செய்தார்கள். முதலில் கண்ட்ரோல் வந்தவுடன் நமது மாநிலத்தில் உள்ள அத்தனை மில்களிலும் பட்ட அவஸ்தை அடுத்த மாத சம்பளம்கூட கொடுக்கமுடியாத சிரமப்படவேண்டிய நிலைமை இருந்தது. அந்த நிலைமையில் நூல்களின் கண்ட்ரோலை எடுத்தார்கள். எடுத்தவுடன் ஏற்பட்ட நன்மையைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது அரசாங்கத்துக்கு ஒரு காதுதான் இருக்கிறது. ஒரு காதிலே சொன்னதை திருப்பிக் கேட்கலாம். இரண்டு காது இருந்தும் கேட்காத அரசாங்கத்தை என்ன சொல்வது? கண்ட்ரோலை எடுத்தால் நன்மை என்று கண்டபின்தான் . . .

Lifting of control had brought a sense of reality to the yarn trade, and that it had done good to every section of the industry. In days of control, considerable black-marketing existed in certain counts of yarn of good quality. Bogus deals were concluded and quotas supplied to non-existent parties. Good yarn invariably fetched premium values.

He said there were reports of stocks of yarn with mills being gradually reduced in the last weeks.

இதில் இருந்து கண்ட்ரோலினால் ஏற்படக்கூடிய தீமையையும் கண்ட்ரோல் எடுத்தவுடன் அதனால் ஏற்படக்கூடிய நன்மையையும் புரிந்துகொள்ளலாம்.

அடுத்தபடியாக நமது அரசாங்கத்துக்கு திருப்பித்திருப்பி சொல்லவேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதாவது நீங்கள் போட்ட திட்டமும், திட்டத்துக்கு அடிப்படையாகக் கொண்டிருக்கிற கொள்கைகள் எல்லாம் தவறுதல் என்று சுதந்திரா கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்று சொல்வதால் நான் திருப்பித் திருப்பி சொல்ல வருத்தப்படவில்லை. சொல்லவேண்டிய கடமையிலே இருக்கிறேன். ரஷ்யாவை காப்பி அடித்துப் போட்ட திட்டத்தால் நமது நாட்டுக்கு நன்மை இல்லை. ரஷ்ய நாட்டுத் திட்டம் அந்த நாட்டுக்காவது நன்மை செய்திருக்கிறதா என்று பாருங்கள். அந்த

திட்டத்தைப்பற்றி பட்ஜெட் விவாதத்தின்போதே சொன்னேன், ஐம்பது வருஷ கம்யூனிஸ்ட் ஆட்சியில் அதிகமான உற்பத்தி செய்யும் பிற நாடுகளை நம்பித்தான் உணவு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது என்றேன். இன்றைக்கும் அதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது

Communists import more and more wheat from the West.

The food-hungry Communist block has purchased 40,000,000 tons of wheat in the Western world since 1961, and every indication is that Communist food purchases will increase in the future. This is confirmed by official figures.

இந்த நிலைமையில் இன்று இருந்து கொண்டிருக்கிறது, ரஷ்யாவிலே. ஆனால் மேற்கத்திய நாடு **country** என்று சொல்லக்கூடிய அமெரிக்காவிலே உள்ள ஒரு சிறிய உதாரணத்தை சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே உணவைத் தேடிப் போக வேண்டும். தேடிப்போனாலும் கிடைக்காது. நாம் தேடினாலும் ஓடிப்போகிறது. ஆனால் அமெரிக்காவில் படுத்திருக்கிறவனைத் தேடி காலை உணவு வருகிறது என்று செய்தி வந்திருக்கிறது. . . .

Breakfast in bed, if they pay.

New Yorkers who like breakfast in bed can buy this service for £3 a week from an enterprising catering firm in the city.

Before going to bed, the customer telephones the firm and selects his breakfast menu and names the time he wants to be woken.

The next morning a girl arrives, lets herself into his home and deftly and quietly prepares the breakfast in the customer's own kitchen.

Then she takes in the tray, and wakes the customer at the right moment, fetching him his morning newspaper, and mail, at the same time. The girls who work on the service are handpicked for tact and charm.

இது நமது அரசாங்கத்துக்கு பிடிக்காத அமெரிக்க நாட்டில் இருக்கக் கூடிய கதை. இங்கே நாம் அடிக்கும் காபியில் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டாண்டுக்கு முன்னாலே 7½ மணிக்குக்கூட ஒரு கப் காபி கிடைக்கவில்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார் : இது இன்றைய நிலை, கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கேள்விப்பட்டேன். சொல்லக்கூடாது என்று யோசனை பண்ணிக்கொண்டு இருந்தேன். நம் இந்தியாக்காரர்களைக் கண்டாலே அன்னிய நாட்டிலே ஓடுகிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது ரொம்ப தவறு. கனம் அங்கத்தினர் அவர்கள் போகவில்லை. போய் பார்த்துவிட்டுப் பேச வேண்டும்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : அரசாங்கம் அனுப்பினால் போகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தைவிட அதிக பணம் இருக்கிறது. அங்கெல்லாம் ரொம்ப மரியாதை இருக்கிறது. இதை நாமே குறைத்து சொல்வதா ?

திரு. எம். சுப்பையா செட்டியார் : அந்த தப்பெண்ணத்தோடு சொல்லவில்லை. பத்திரிகைச் செய்தியைப் பற்றிச் சொன்னேன். நமது பிரதம மந்திரி அவர்கள் கனடாவுக்கு போனபோது அட்வர்டைஸ்மென்ட் அரசாங்கம் செய்தது என்ற செய்தி வந்தது. இது நல்லதோ கெட்டதோ, அதை மறந்துவிடுவோம்.

அடுத்தாற்போல அமெரிக்கா போய்விட்டு வந்த மந்திரி சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் இரண்டு வருஷத்துக்கு முன்பு போனபோது நிலைமை. இது இன்றைக்கு இருக்கிற நிலைமை. அதனாலே முதன் மந்திரி அவர்கள் இன்னொரு முறை இதற்காகவாவது அமெரிக்காவுக்குப் போய் இது உண்மையா இல்லையா என்று தெரிந்து வந்து நம் நாட்டிலேயும் இந்த நிலைமையை உண்டாக்குவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதற்கான ஒரு காரியத்தை செய்யவேண்டும்.

நேற்று முதன் மந்திரி அவர்கள் சொன்னதைப்பற்றி திரும்பி சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் என்று சொல்லக்கூடிய, சுதந்தரா கட்சி ஆட்சிக்கு வந்தால் தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆய்விடுவான் என்று சொன்னார்களே இன்றைக்கு இருக்கக்கூடிய மக்கள் படும் அவஸ்தையைவிட சுதந்தரா கட்சி வந்துவிட்டால் எந்தவித கேடும் வந்துவிடாது. இங்கே 3,000 கோடி ரூபாய் வரி விதிக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வரி விதிக்கப் போகிறார்கள். பக்கத்திலே உள்ள சிறிய சிலோன் நாட்டிலே வரியைக் குறைத்து இருக்கிறார்கள். இன்று காலை வந்த இந்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அமெரிக்காவிலே, பிரிட்டனிலே வரியைக் குறைத்தார்கள். இப்பொழுது சிலோனிலே வரியைக் குறைத்து இருக்கிறார்கள். ஆனால் இதே சிலோன் இப்பொழுது இருப்பவர்களுக்கு முன்பு இருந்த சிரிமாவோ அரசாங்கமாக இருந்தால் இந்த வரி இரண்டாகக்கூட போயிருக்கும். சிரிமாவோவின் வழியிலேதான் நீங்கள் போகிறீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்று சிலோன் நாட்டு அரசாங்கம் செய்த காரியத்தைப் பார்த்தாவது மக்களுக்கு வரியையும் குறைத்து இந்த தேவையில்லாத கண்ட்ரோல் முறையையும் எடுத்து நல்ல விதமாக யோசனை செய்து வேண்டுமென்றே அரசாங்கத்தால்

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [10th August 1965

ஏற்படக்கூடிய இன்னல்களையும் இடைஞ்சல்களையும் அரசாங்கம் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இந்த அரசாங்கம் பூரண ஆதரவு கொடுக்கும் என்று நம்பி தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Chairman,
4-10 p.m. Sir, I wish to say a few words on this resolution. There has been adequate supply of foodgrains and there has been no scarcity. The situation has completely changed and the position is far better now than what it was last year. Two months back we found that there was adequate supply and there was no clause for fear. But the only one thing which I wish to emphasise is that the Government have recently classified 3 varieties into two and put up the prices by nearly about Rs. 8 per bag. The argument that is adduced by the officials is that this is for the purpose of covering godown charges and interest. I request the Hon. Minister to examine whether the price which was put up so much was beneficial either to the consumer or to the grower. Do the Government require so much money by this enhancement to cover godown charges and incidental expenses? I request the Hon. Minister to see to the possibility of bringing it down, or at least to see that the benefit goes either to the consumer or to the producer.

DR. H. V. HANDE: Mr. Chairman, I want to say only a few words with regard to this resolution. The Government have taken quite a good share of the responsibility for distributing food to the public. It is a very heavy responsibility and there are a large number of risks involved in this responsibility. The position now is that after taking up this responsibility, large stocks of food are found to be in a very deteriorated condition right at the consumers' point, where we are taking food from the shops. We find the food in a very deteriorated condition—large quantities in clumps forming insects—and that there are a large number of stones, thus putting the families of the poor card-holders to extraordinary difficulties. It won't be an exaggeration, if I say that nearly half the day is required for the lady of the house to sort out the edible and non-edible portions. So much so, the entire household is wasting its precious time on sorting this out. After sorting it out, it is seen that only three-fourths of the quantity is edible. This is the position in almost all parts where the Government have taken up the responsibility of distributing food. It is true that the Government have done this with a good motive. I am not questioning the motive of the Government. It is true that there was a little amount of difficulty with regard to the distribution of food. There are lean months—September, October—when the kuruvai crops have yet to materialise. But then, the solution offered by the Government is far from satisfactory. The Government thought that by taking over these things, they could solve the

10th August 1965] [Dr. H. V. Hande]

problem. In fact they have been spoiling food. Not only they are spoiling food, but large chunks of money are wasted. In addition to the waste of food, the Government are involving themselves by maintaining a large army of officers and personnel at the Secretariat level. Let us imagine, at the Secretariat level, for the distribution of food, there is a secretary; he has got large staff; there is a room in which they sit and work. All these things must go into the calculation of the amount spent on procurement of food. The Secretary gets his pay and also the staff. Again, at the district level, at the procurement point, there are staff, and we have to find out the man-hours lost. Let us total all these amounts. It comes to a fantastic figure. Unfortunately the Government have not yet totalled the entire expenditure at every point. If this is done, we will realise what a huge amount is spent. The ordinary merchant used to employ his staff for procuring food from the miller. The miller used to procure it from the farmers. The entire process flowed smoothly from the farmer to the miller, from the miller to the wholesale merchant, from the wholesale merchant to the retail merchant, and from the retail merchant to the consumer. The entire thing has been smashed to pieces by one stroke of the pen, i.e., by price-fixation, which was brought about a year ago. Even in the Governor's address there was a reference that the price-fixation was the result of sudden disappearance of foodstuffs. Whatever the reason, the foodstuffs suddenly disappeared and the Government thought of taking up the whole thing. Now, the result is more tragic, food is getting wasted. What right have we to waste the food that ought to go into the stomachs of the hungry millions of our countrymen? We have absolutely no right to handle food and spoil it, and I am sure that large quantities of food are being spoiled. As Mr. Subbiah Chettiar wanted, I would like a small committee to go to the godowns and find out how many bags are completely clumped, how much food stuff is soaked under water, etc. If the Hon. the Chief Minister thinks it necessary, let us go out and inspect some of the godowns in Madras. In certain places one cannot even creep in. The bags are so much soaked and they are completely rotten. To a large extent the godowns are completely dark. Therefore, I request this Government to examine the position again, and when the Chief Minister goes to Delhi, I request him to tell the Central Food Minister, 'Look here, your policy is wrong, our policy is to take away the control.' By this process of decontrol we will be able to make the life of the ordinary poor man much happier. I am not saying that any part should be given to the merchants. I am not talking on behalf of the merchants. The poor man, the poor ordinary common man, the common voter, is the first and foremost person to be looked after. We must satisfy the poor man. Therefore, I request this Government (when the Chief Minister or the Food Minister goes to the Centre again) to tell the Central Food Minister, 'Your entire Food Corporation, statutory rationing and all these things are completely wrong.' The amount of foodstuff wasted should be brought home by the

[Dr. H. V. Hande] [10th August 1965

Chief Minister boldly. I have much of confidence in our Chief Minister, and if he goes there, he should tell them all these things, so that we can have our own way.

4-20 p.m. Then, Sir, a number of licences and permits have to be issued, for which the parties have to go to the Collector's Office or some other office and wait there. And there is a competition also among these people, who want licences. You can watch a regular crowd waiting and waiting at the Civil Supplies office and Collector's office. They are absolutely under the mercy of these officers and Collectors. The result is nepotism and corruption are rampant.

Sir, I am very grateful to the hon. Member who moved the resolution for giving a brilliant quotation from the greatest man of India, Mahatma Gandhiji. I missed it somehow. I am obliged to the hon. Member for having brought it to the notice of the House. I hope the Government will be able to do something to the common man by giving him good food. The Government should not take the prerogative of spoiling the food.

Sir, I would conclude with this sentence. When we have not enough food, when there is a tremendous food shortage, when we are getting food supply under PL 480, and when we are getting food supply by going about with a begging bowl and asking for deferred payments, what right have this Government to spoil the food? It is a crime of the first magnitude committed by the Government. I will excuse the Government for what they have done so far. Hereafter, the Government must absolve themselves from this kind of crime.

With these words, Sir, I wind up my speech.

* **திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி:** கனம் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். நமது சர்க்கார் அனுவசியமாகக் கவலைக்கொண்டு ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. சாதாரணமாக, உணவு தானியத்தைச் சேர்த்து வைத்து மக்களுக்குப் பங்கிட்டு கொடுப்பது என்பது இயற்கைக்கு விரோதமான ஒரு காரியம். அதனால்தான், கருணை மிக்க கடவுள், உணவுதானியங்களை பூமிக்கடியில் போடாமல் உணவு சத்தையே பூமிக்குள் போட்டிருக்கிறார். மண்ணையோ மற்ற பல பொருள்களையோ போன்று இல்லாமல் உணவு தானியங்களை பூமியில் போட்டால் அவை பெருகும்படி செய்திருக்கிறார். ஒரு நெல்லை பூமியில் போட்டால் பல நெற்கள் கள் கிடைக்கும். உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்க லட்சக்கணக்கான கிடங்குகளைக் கட்டி, பூச்சி மருந்துகளை உபயோகித்தாலும், உணவுப் பொருள்களை தரமான நிலையில் நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியாது. அது இயற்கைக்கு விரோதமான காரியம். கண்ட்ரோல் வந்தால் சர்க்காரின் பொறுப்பு ஜாஸ்தியாகும், ஜனங்களுக்கு ஒரு பொறுப்பும் இருக்காது; கார்டு கொண்டுவந்தால் 8 அவுன்ஸோ 6 அவுன்ஸோ அரிசி கிடைக்கும் என்று எண்ணும் அளவுக்கு மக்களுக்குப் பொறுப்புத் தளர்ச்சி ஏற்படும்; மேலும் சர்க்காரை மக்கள் குறை

10th August 1965] [திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி]

கூறக் கூடிய நிலைமை ஏற்படும். அரிசிக்கு கார்டை சர்க்கார் கொடுத்துவிட்டால், 16 அவுன்ஸ் அரிசி கொடுக்கவில்லை என்று மக்கள் சர்க்கார் மீது குறைகூறுவார்கள். மத்திய சர்க்கார் என்ன சொன்னாலும், நம் தமிழ்நாட்டைப் பொருத்தவரையில், இங்கே விளையும் நெல்லையும் மற்ற கம்பு போன்ற தானியங்களையும் வைத்துக்கொண்டு நாம் காலக்ஷேபம் பண்ணலாம் என்று சொல்ல விரும்புகிறேன். வெளி ராஜ்யங்களுக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பைப் பொருத்த வரையில், நம்மால் கொடுக்க இயன்றதை கொடுப்பதாகச் சொல்லிவிடலாம். நம் ராஜ்யத்தைச் சுற்றிலும் அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, இங்கிருந்த வெளி ராஜ்யங்களுக்கு அரிசி போன்ற உணவு தானியங்கள் போகாதபடி செய்யலாம். நமக்கு கோதுமை கிடைக்காவிட்டால், இந்த ராஜ்யத்திலுள்ளவர்களில் நீரிழிவு வியாதி உள்ளவர்கள் பாகற்காயையும் அதுபோன்ற வேறு பொருள்களையும் சாப்பிட்டுக் கொள்ளலாம். சாதாரணமாக, தானியங்களைச் சேகரித்து வைத்தால் அவை கெட்டுப்போகும். உணவு தானியங்களை சேகரித்து வைத்து விநியோகித்தால், உண்மையிலேயே மக்களுக்குத் தரம் குறைந்த தானியம்தான் கிடைக்கும்; அவைகளில் கல்லும் மண்ணும் இல்லாமல் இருந்தாலும் அவை மக்கள் கைக்குக் கெட்டுப்போய்த்தான் வரும். கெட்டுப்போன உணவுப் பொருள்களை மக்கள் சாப்பிட்டால் அதனால் பொது சுகாதாரம் பாதிக்கப்படும்.

எல்லை ஓரங்களில் பாதுகாப்புப் போடுவதைவிட இன்னொன்று செய்யலாம். ஆங்காங்கு எவ்வளவு விளைகிறது என்ற கணக்கு நம்மிடம் இருக்கிறது. பல வருஷங்களின் கணக்குகளைப் பார்த்தால் ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு தானியம் உபரியாக விளையும் என்று தெரியும். ஏற்கெனவே கொள்முதல் செய்தது பற்றிய கணக்குகள் நம்மிடம் இருக்கும். தானியங்கள் களத்துமேட்டிலேயே மொத்த வியாபாரிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு பண்ணலாம். தானியங்களை 'ஸ்டோர்' பண்ணும் வேலையை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ரேஷன் கார்டு கொடுக்க வேண்டாம். முன்பு (Statutory Rationing) இருந்த போது, கல்யாண வீடுகளில் எறியப்பட்ட எச்சில் இலைகளின் எண்ணிக்கை கவனிக்கப்பட்டு அபராதம் போடப்பட்டது. 'ஸ்டாகுடரி ரேஷனிங்' சட்டப் புத்தகத்தில் சரியாக இருந்தாலும் நடைமுறையில் அதனால் பல கஷ்டங்கள் ஏற்படும். எனவே, 'ஸ்டாகுடரி ரேஷனிங்' கொண்டுவர வேண்டாம் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். (regular supply) மூலம் (Trade channels வர வேண்டும். சர்க்கார் வியாபாரிகளாக ஆக முடியாது. பல வருஷங்களாக வியாபாரிகளாக இருந்து வந்துள்ளவர்கள் வியாபாரிகளுக்குரிய குணங்களுடன் இருந்து வருகிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு "substitutes ஆக முடியாது என்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறேன்.

[10th August 1965

திரு. எஸ். கே. சம்பந்தன் : கனம் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் நண்பர்கள் உணவு பிரச்னையைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இப்போது நம் நாட்டில் நிலவும் நிலைமையை விளக்கி உணவு விஷயத்தில் அரசாங்கம் செய்ய வேண்டியவைகளைக் குறிப்பிட்டார்கள். நாட்டு மக்களுக்கு உணவு தானியங்களையாவது தட்டுப்பாடின்றி கொடுத்துவர வேண்டியது அரசாங்கத்தின் முக்கியமான கடமை. அதைச் செய்தால்தான் எந்த ஒரு அரசாங்கத்தையும் நல்ல அரசாங்கம் என்று சொல்லலாம் என்று கூறினால் மிகையாகாது. அதைச் செய்யாமல் பொது மக்களை அன்றாடம்
4-30 அசாதாரணமான கஷ்டங்களுக்குள்ளாக்கி வருவது விவேகமான
p.m. செயலா என்று இந்த அரசாங்கம் பல முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுவரையில் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் உணவு உற்பத்திக்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தார் சொல்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அரசாங்கத்தின் கணக்குப்படி விவசாயத்திற்கும் அதற்கு மிகவும் உபயோகமாகவுள்ள மின்சாரம், கூட்டுறவு போன்ற துறைகளுக்குமான செலவு, சுமார் 150 கோடி ரூபாய். இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருந்தாலும் உணவுப் பிரச்னை தீரவில்லையே என்ற கவலை மக்களுக்கு இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. கனம் அமைச்சர் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாதத்திற்கு நேற்று பதிலளிக்கும்போது புதுப் பிரச்னைகள் எப்போதும் வந்துகொண்டேயிருக்கும் என்று சொன்னார். பிரச்னைகள் எந்த ரூபத்தில் வருகின்றன என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். எனவே பிரச்னைகள் எப்போதும் இருக்கத்தான் செய்யும் என்ற பதில் அவ்வளவு திருப்திகரமான பதில் என்று நான் கருதவில்லை. எவ்வளவோ பணம் செலவழித்தும் உணவுப் பிரச்னையை சர்க்கார் ஏன் தீர்க்க முடியவில்லை என்று பார்க்க வேண்டும். ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக வந்து உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதால் மக்கள் இவ்வளவு காலம் வரை சுகமாக இருந்து கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் சர்க்கார் மறுபடியும் ரேஷனைக் கொண்டுவருகிறார்கள் என்றால் மக்கள் அதுபற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் இந்த அரசாங்கத்தார் உணவுப் பிரச்னையைத் தீர்க்காவிட்டால் இவர்கள் செய்தவையெல்லாம் சாதனைகள் என்று எந்த காலத்திலும் சொல்ல முடியாது.

அரசாங்கம் நடத்தும் தானியக் கொள்முதல் பற்றியும், வினியோக முறை பற்றியும் கனம் நண்பர் ஸ்ரீ சுப்பையா செட்டியார் சொன்னார். கொள்முதல் கண்ணீர் இல்லாத கொள்முதலாக இருக்கவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஒருவேளை தஞ்சாவூரில் தானியம் கட்டாயம் இல்லாது கொள்முதல் செய்யப்படக்கூடும். மற்ற மாவட்டங்களில் தானியம்

10th August 1965] [திரு. எஸ். கே. சம்பந்தன்]

கட்டாயமில்லாது கொள்முதல் செய்யப்படுவதாகக் கூறுவது மிக மிகத் தவறான செய்தி என்று நான் கூறுவேன். இதை அரசாங்கம் கண்டிப்பாக நிரூபிக்கவே முடியாது. அப்படி தவறான கருத்தை தெரிவித்து தப்பித்துக்கொள்ள நினைப்பது அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். அதனால் கட்டாயக் கொள் முதல் எதற்காக வரவேண்டுமென்று புரிந்துகொள்ள முடியவில்லை. இதுவரையிலும் நமது மாநிலம், நண்பர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சொல்லியதுபோல் உபரி மாநிலமாக உணவு சம்பந்தப்பட்டவரையில் நாம் இருக்கின்றோம். ஆந்திராவிலிருந்து ஒரு லட்சம் டன் எதிர்பார்க்கிறோம். அந்த அளவுக்கு கேரளாவுக்கு கொடுக்கிறோம். கோதுமையோ மற்றவைகளோ வெளியிலிருந்து எதிர்பார்க்கிறோம். அந்த அளவுக்கு உபரியாக இருக்கும்போது ஏன் கட்டுப்பாட்டைக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கம் சிந்திக்கவேண்டும். இல்லையென்றால் அதைக் கொண்டுவராமல் இருப்பதற்கு அரசாங்கத்திற்கு விவேகமில்லையா, முடியவில்லையா ஏன் இதைக்கொண்டு வரவேண்டுமென்றெல்லாம் பொதுமக்களுக்கு சந்தேகம் வருவது சகஜமாக இருக்கிறது. சென்னைக்கு முதலாவது கட்டுப்பாடு வந்தாலும் பின்னால் மற்ற இடங்களுக்கு வரும் என்று நண்பர் சொன்னார். எதிர்பார்க்க வேண்டியதுதான். அரசாங்கத்திற்கு சில கொள்கைகள் இருக்கின்றன. சரியோ தவறோ அதை சரியான அளவில் அமுல் படுத்தாத குறைதான் இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுடைய கொள்கையை அவர்கள் ஏற்ற அளவில் அமுல்படுத்தவேண்டும். ஆர்மி ஆஃப் ஆபீசர்ஸ் (Army of Officers) என்று சொன்னார்கள். மக்கள் அலுவலர்களிடம் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுவது கொஞ்ச நஞ்சமல்ல. அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் ஒருசிலரை சந்தித்துப் பேசுகிறார்களே தவிர பொது மக்களை அணுகி உங்களுக்கு என்ன குறைபாடு இருக்கிறது என்பதை எந்த அமைச்சராவது கேட்டதாக நான் அறிந்தது கிடையாது. இருந்தாலும் பொதுமக்கள் பல இடங்களில் கஷ்டப்படுவதைப் பார்த்து சொல்கிறேன். எந்த அலுவலகமாக இருந்தாலும் கஷ்டம் இருக்கிறது பஞ்சாயத்து யூனியன், மக்களிடம் சென்று சேவை செய்ய ஏற்படுத்தப்பட்டது. அங்கிருக்கிற எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் செய்கிற கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. விதைகள் வேண்டுமென்று மனுப்போட்டு நான்கு தடவைகள் அலைந்தால் தான் விதை கிடைக்குமா கிடைக்காதா என்ற பதில் கிடைக்கும். இதையெல்லாம் கண்காணித்து--ஒழுங்காக நடைமுறையில் கொண்டுவருவதுதான் அரசாங்கத்தின் கடமை. கட்டுப்பாடு என்று சொல்லி இன்னும் பத்து அலுவலர்களை ஏற்படுத்தி அவர்கள் சொல்வதையெல்லாம் மக்கள் கேட்கவேண்டுமென்று சொல்வது விவேகமல்ல என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் --ஏற்று கொள்முதல் செய்து உணவு தானியங்களை பக்குவப்படுத்தி ஒரு இடத்தில் சேர்த்துவைத்து மக்களுக்கு வினியோகம் செய்கிற பொறுப்பு எவ்வளவு பெரிது என்பதை அறிவார்கள். வியாபாரிகள் பல காரியங்களில் கஷ்டப்படு

[திரு. எஸ். கே. சம்பந்தன்] [10th August 1965

கிறார்கள்—ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்கு சரக்குகளைக் கொண்டு வருவதற்கு கஷ்டப்படுகிறார்கள். தேக்கிவைக்கும் இடத்தில் கெட்டுப்போகிற அளவுக்கு வசதி குறைவாக இருப்பதாகக் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். பொறுப்பற்ற அலுவலர்களிடத்தில் இதைக் கொடுத்துச் செய்யுங்கள் என்றால் மக்கள் கடைசியில் எந்த அளவுக்குப் பெறுவார்கள் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். தனியார்களைவிட சிறந்த முறையில் அந்தக் குறைந்த மூலதனத்தை வைத்துக்கொண்டு தனியார் சம்பாதிக்கும் லாபத்தில் அரைப்பங்கோ அல்லது கால்பங்கோ லாபம் வருகிற வகையில் எந்தத்துறையிலாவது அரசாங்கம் நடத்தியிருக்கிறது என்று ஒன்றை எடுத்துக் காட்டிச் சொல்லமுடியுமா? அப்படி ஏதாவது இருந்திருந்தால் உணவு கார்ப்பரேஷன் இப்போது கொண்டு வந்தாலும் அதை மக்கள் சகித்துக்கொள்ளத் தயாராக இருப்பார்கள். அந்த நிலை நாட்டில் இல்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் நன்றாக உணர்வார்கள். அப்படியிருக்கும்போது, மேலும் மேலும் ஏன் அரசாங்கம் தானே எல்லாவற்றையும் செய்யவேண்டுமென்று நிற்கிறார்கள் என்று புரியவில்லை. முக்கியமாக அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இவ்வளவு கோடி பணம் ஒவ்வொரு ஆண்டும், செலவு செய்தாலும் முக்கியமாக விவசாயிக்கு வேண்டியதைக் கவனித்தார்களா? அவர்களுக்கு முக்கியமாக விதைகள் வேண்டும். உரம் வாங்குவதற்குக் கடன் வேண்டும். இவை காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கிடைத்தால் கண்டிப்பாக எவ்வளவு முடியுமோ அவ்வளவை உற்பத்தி செய்து மக்களுக்கு வினியோகிக்கத் தயாராக இருக்கிறார்கள் காலாகாலத்தில் கொடுக்காமல் இவ்வளவு கொடுக்கப்பட்டது என்றும் செலவாகியிருக்கிறது என்றும் கணக்குக் காட்டி புள்ளி விவரம் கொடுப்பதால் மக்களுக்கு அனுகூலமில்லை. அரசாங்கத்திற்கும் அனுகூலமில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது மாநிலத்தில் ஸ்டேட் சீட் ஃபார்ம் (State Seed Farm) கள் இருக்கின்றன. அவற்றில் எதிலிருந்தாவது தனிப்பட்ட விவசாயி நடத்துகிற மாதிரி கணக்கோடு லாபத்தோடு நடத்துகிறார்களா, அல்லது அதைவிட விதைகளை தயாரித்துக் கொடுக்கிறார்களா?

மிஸ்டர் சேர்மன்: தீர்மானம் உணவுப் பிரச்னை, கண்ட்ரோல் பற்றியது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விதையிலிருந்து உணவு வருகிறது. ஆகையால் கனம் உறுப்பினர் அதைப் பேசுகிறார் போலிருக்கிறது.

மிஸ்டர் சேர்மன்: இருந்தாலும் சுருக்கமாக பேச வேண்டும்.

திரு. எஸ். கே. சம்பந்தன்: பிரச்னை உணவுப் பிரச்னை. நம் நாட்டில் சராசரி 1,500 ராத்தல் உற்பத்தி செய்கிறார்கள். வெளி நாடுகளில் விவசாயிகள் ஏழாயிரம், எட்டாயிரம் ராத்தல் என்று

10th August 1965] [திரு. எஸ். கே. சம்பந்தன்]

உற்பத்தி செய்கிறார்கள். நாம் எந்தக் காலத்தில் அந்த அளவுக்கு வருவோம் என்று தெரியவில்லை. முதலமைச்சர் அவர்கள்தான் அதைச் சொல்லவேண்டும். உணவு ரேஷன், கட்டுப்பாடு என்பதையெல்லாம் விட்டு விட்டு விவசாயிகளுக்கு வேண்டியதை அக்கறையோடு செய்தால் உணவுப்பிரச்னை தீர்ந்துவிடும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக வினியோகத்தில் அடிக்கடி கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒருசில இடங்களிலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு போவதற்கு ரயில்வே வாகன்கள் கிடைப்பதில்லை. கிடைக்கவில்லை என்றால் சமயத்தில் ஓப்பன் வாகன்கள் open wagon கொடுக்கப்படுகின்றன. சரக்கை, அரிசியாக இருந்தாலும், கோதுமையாக இருந்தாலும் மக்கள் வாங்கித்தான் ஆகவேண்டுமென்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறார்கள் இந்த உணவு கார்ப்பரேஷன் என்பதை வைத்துக் கொண்டு. ஆகையால் நன்றாக சிந்தித்துப் பார்த்து இந்தத் தீர்மானத்தில் கண்டபடி மக்களுக்கு நியாயமான அளவில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நண்பர் சுப்பையா செட்டியார் அவர்கள் சொல்லியது போல ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் லாபம் வியாபாரிகள் வைத்தார்கள் என்பதற்காக கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஒரு மூட்டைக்கு எட்டு, பத்து ரூபாய் விலை வித்தியாசம் வைத்து விற்கிறார்கள் என்றால் அது நியாயமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

Sri K. BALASUBRAMANYA AYYAR: Mr. Chairman, Sir, I generally support the object of this recommendation to the Government. The chief object of the hon. Member Sri Subbiah Chettiar is that the distribution should be done properly and that all card-holders should get their quota of good rice. He adds that hotels, factory canteens, etc., should also get it. 4-40 p.m.

The first question is that there is a strong view generally held in our country that controls are bad and that is being frequently mentioned. The Government also in the years 1951, 1952 and 1953, when we had controls, came to the conclusion that controls were not necessary. Therefore, they decontrolled the whole thing. Therefore, they are also intellectually in agreement with the principle. It was also done to the satisfaction of our people. Therefore it is that those who advocated decontrol base their arguments chiefly on what the Government did, and which the then Chief Minister Sri C. Rajagopalachari and the Central Food Minister Sri Kidwai, did. But on account of various circumstances, the prices began to rise. The Government cannot look on with unconcern when prices are raised and foodgrains sold at very high prices especially to the consumers in the City and other places. Therefore, they had to step in. So far as I am concerned, I do not think we can blame the Government for having done

that. They cannot but do something. Therefore, they came in. The Agricultural Prices Commission, which considered this question, made its report, says that for the whole of India, it will not be possible to reach even a reasonable degree of self-sufficiency in foodgrains within a decade. Therefore, there can be no question of self-sufficiency for the whole of India in food for a number of years to come. Therefore, some kind of control so far as prices are concerned, seems to be necessary. Here in this Legislative Council, when I spoke some time back, I referred to the inexorable law of supply and demand and said that it could not be taken control of by the Government. It will be very difficult for them to do so. But still there is a tendency for prices to rise and for our people also to get more and more prices. In spite of what Sri Subbiah Chettiar said about the merchants, our experience is that merchants also raised the prices. That I must say in all fairness.

SRI M. SUBBIAH CHETTIAR : Not to the extent of what the Government do.

SRI K. BALASUBRAMANYA AYYAR : I am not supporting the Government in all they say and do. From my experience, I must say honestly, as a Member of the Legislative Council, that the merchants are going on raising the prices. Why they raise these prices, we do not know. Probably there are other reasons. At any rate, the consumer does not know why the prices are raising. Therefore, I do not think there is any use of blaming this man or that person. According to me, the consumers also are to blame. Why should they not refuse to take the goods, if they are sold at very high prices? I think they said so in the case of coffee in New Delhi. But here, you want coffee for any price. They are prepared to give Rs. 8, Rs. 10 or Rs. 12 per kilo. If there is a strong body of public opinion among the consumers to the extent of saying that they won't buy, then there will be a tendency for the prices to come down. These are some of the other factors to be taken into consideration. Therefore it is that the Government have stepped in and tried to control prices either by fair price shops or by the family card system.

About the statutory rationing system, I am not at all sure whether it will be sucessful. We have done it once and we were not successful. I do not know whether you will be successful now. It is a matter about which nothing can be said strongly on either side. It is a very doubtful matter. Even as regards the report of the Agricultural Prices Commission, no definite policy emanates from the whole report. I have not looked into the full report. "No monopoly purchase" they say at one place. It is a difficult question to determine. How much grain will go underground? There must be an open market side by side and there should be only a procurement. About procurement also, they are fairly convinced that it should be without causing any difficulty

to the farmer (Interruption) tears or no tears. That is the meaning we attach when we say that there should be no difficulty caused to the farmer in the matter of procurement. It is what we understand by these phrases. Therefore it is they say that some price has to be fixed for the purpose of procurement. So far as open market is concerned, the Agricultural Prices Commission say that no maximum need be fixed. These are some of the policies running on parallel lines in this procurement policy. How one will react on another, I think, is difficult to say. There will be procurement without difficulty to the farmer at a price fixed by the Government, and there will also be an open market with no maximum price. In regard to procurement, occasionally in some places, the entreating by the officers or Collectors becomes a command. That is the unfortunate thing about procurement. When the officer goes there to the village and wants the mirasdar to give immediately, the mirasdar, even though he will find it very difficult to surrender the quantity demanded of him, will give it. That is another factor to be taken into consideration. In Thanjavur and Tiruchirappalli districts, they had some quantity and were not willing to part with all.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Are there any specific cases which the hon. Member has come across where the mirasdars were asked to give the grain that they had kept for their own consumption?

SRI K. BALASUBRAMANYA AYYAR : So far as I know I cannot say whether they parted with the grain required for their consumption. They wanted to keep some grain for purposes of improving their lands or seed farms. That they wanted to do, but they were not able to do. I know some cases like that where on account of the presence of the officers, they had to give it up. Especially in marginal cases, if procurement officers are present on the spot, it always means some kind of excess. You cannot help it. The Government are not responsible for it. The Ministers also cannot be held responsible for that. When a whole army of officers, the Collectors, the Revenue Divisional Officers and others go to the mirasdars and press for more, there might be some excess. As I said the Government may not want to do that. In fact they have issued instructions to that effect, so far as I understand. Therefore, Sir, so far as procurement is concerned, I do not want to say more than that.

Coming next to the question whether we will be able to solve the distribution problem, so far as the family card-holders are concerned, to some extent, I must agree with what the hon. Member Dr. Hande said. The rice that is given is not very good. It is full of insects, small stones and all other things. In fact, the other day in my relative's house, it happened. The lady was complaining bitterly that she was not able to separate the good rice from the bad rice. She had to waste the whole day. Then, the quantity they give is not also proper. It is less than what they

[Sri K. Balasubramanya Ayyar] [10th August 1965

are entitled to get. On the part of our people also, there is a mischief. That also I must say. They do not use the cards properly. They sometimes take more than what is absolutely necessary for them. There is no discipline and co-operation among our people. That we must also accept. They talk about corruption among officers. There is corruption among our people also. Therefore, there must be discipline among our people also to make the thing successful. Otherwise, it cannot happen. This is what I wanted to point out. Procurement with a fixed price and also an open market with no fixed price, I do not think, will solve the problem of reducing the prices or distributing the foodgrains to the people properly. That is what I feel after a calm consideration and examination without criticising this party or that party or this Government or that Government. The Government cannot undertake this great responsibility of distributing food to the people. What a number of people, small retail dealers having small quantities of rice with competition among them to give good rice to the consumers did, the Government cannot do. There was choice for the people then to go to a good shop and get what they wanted. But nothing of that kind exists now. We have to take the rice given to us. There is no choice. That is the chief difficulty. My point is that the task of distribution of foodgrains is a very difficult task which cannot be undertaken by the Government.

4-50 p.m.

Then there is the great difficulty of transport and storage. Huge quantities of grains cannot be stored however much the godowns may be put up on the pattern of America or any other countries. We must take the climate into consideration and fix the godowns. Lakhs and lakhs of rupees may be spent by the Food Corporation on this, but I do not think it is possible. Each farmer, each miller and each trader, retail or wholesale, had his own way of storing foodgrains and he did it very well, observing even the minute details. He saw to it there was not much damage due to climate, or by insects or rats or by other persons equal to rats. (Laughter). All these things he took into consideration and did it successfully. But this big Government even with big godowns cannot do it. Even though they may undertake to do it in their enthusiasm to feed the people, it will not be possible for them to do it.

Then, there is the transport problem. I was told recently a consignment of 500 bags of rice was lying at a railway station and nobody knew who the owner was. Government finally sold it to some person. The railway authorities and the Government frequently refer to transport difficulties. The transport problem is another great problem.

Therefore, Sir, storage is a difficult problem, transport is a difficult problem and distribution is a very difficult problem. All these things the Government have to undertake at the same time. Can the Government do it satisfactorily, especially when there is not much co-operation from the people?

10th August 1965] [Sri K. Balasubramanya Ayyar]

Sir, I have thought over this matter very seriously. Whether this control, even the limited control with procurement at a fixed price and also an open market working at the same time, will solve the problem, is a matter of great doubt to me. And that is what I wanted to express in this connection.

Sir, I may be asked by the Hon. the Chief Minister: 'Have you any constructive suggestion to make to solve the problem?'. Others may also ask me the same question. Sir, it is a very difficult matter. People are talking about decontrol. Why not decontrol entirely and leave it to the dealers freely? But whether that will satisfactorily solve the problem especially when there is not sufficient food, is also a matter of serious doubt according to me. If the hon. Member Sri Subbiah Chettiar feels strongly convinced on that point, then he must give constructive suggestions to the Government. I cannot. I am not in full possession of facts. Personally I am convinced that it will not be possbile for us to supply all the food necessary to our people if there is decontrol today, at fairly good prices and not at the high prices which were in vogue sometime back. Therefore it is I am not prepared to give that constructive suggestion of absolute decontrol. But I must also say this. This policy of running these things all at the same time—as reported in the Agricultural Prices Commission, which I am sure would have been considered at the Chief Ministers' Conference—will not work properly entirely. It is one thing to say and quite another to do it. You are to have an open market and also procurement at a fixed price. The one thing will react on the other and prices will go up. Whether the Government could solve the problems of rising prices and fair distribution by this policy, seems to me, a very doubtful matter. Therefore it is I would say that it is not possible for me to give any very constructive suggestion. I wish only to bring to your notice the difficulties of the problems you have to solve, and the superhuman responsibilities you have to take when you start either on statutory rationing or informal rationing or the family cards system.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் உறுப்பினர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் தீர்மானத்தைப் பிரேரேபித்து பேசினார்கள். ஆனால் தீர்மானத்தின் வாசகத்தைப் பார்த்தால் கண்ட்ரோலை ஒப்புக்கொள்வதாகத்தான் இருக்கிறது. அதற்கு நேர் மாறாகத்தான் அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். ஆகையால் பொருத்தமாக இருக்கவேண்டுமென்றால் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கியே ஆகவேண்டும். இதை அவர் ஆதரிக்கவே முடியாது. அப்படி வாபஸ் வாங்கினால்தான், பேச்சு ஒன்று, செய்வது ஒன்று என்பதாக இருக்கக்கூடாது என்று சொல்கிற அவர்கள் அதற்கு வழிகாட்டியாக இருப்பார்கள். ஆனால் இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க ஆரம்பித்து 'China to Peru' என்ற முறையில் பேசப்பட்டது. கனம் அங்கத்தினர் பேராசிரியர் அவர்கள் இதோபதேசம் செய்தார்கள். நல்ல

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

எண்ணத்தோடு நாம் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். மற்றும் அரிசிக்கு வித்திடுவது என்பது பற்றி கனம் உறுப்பினர் சம்பந்தன் சொன்னார்கள். ஆனால் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த சுப்பையா செட்டியார் அவர்கள் நல்ல மனிதர்தான். ரொம்ப நயமாகவும் பேசக்கூடியவர். சில சமயத்தில் கண்டிப்பாகவும் பேசுவார். இன்றைக்கு இந்தத் தீர்மானத்தில் பேசும்போது ரொம்பக் காட்டமாகப் பேசினார்கள். ரொம்ப ஆத்திரத்தோடு பேசினார்கள். அவருடைய முகத்தைப் பார்த்தாலே தெரியும். அதற்கு முன்னே பார்க்கிறதுக்கும் பின்னாலே பார்க்கிறதுக்கும் நேர்மாறுதல். முகத்திலே அவ்வளவு கடுமை இருந்தது. அதே மாதிரி இந்த தீர்மானத்தைப் பற்றி ஆதரித்துப் பேசிய கனம் அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்கள் எப்பொழுதும் கடுமையாகப் பேசுவார். தாக்கியே பேசுவார். ஆனால் இன்றைக்கு ரொம்ப சுமுகமாக ' calm and cool என்று சொல்லும்படி **persuasive** ஆக ஒரு objective முறையிலே, எதற்கு இதையெல்லாம் தலையிலே போட்டுக்கொள்கிறீர்கள், கண்ட்ரோல் எல்லாம் எதற்கு, நீங்கள் எதற்கு ஏற்றுக் கொள்கிறீர்கள், நன்றாக யோசித்துப் பாருங்கள் என்று அவர்கள் பேசினார்கள். திரு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கு கண்ட்ரோல் எல்லாம் கூடாது. கண்ட்ரோலை நாம் கொண்டுவந்ததைத் தான் அவர் பலமாக ஆட்சேபிக்கிறார். அதனாலேதான் ஆத்திரப் படுகிறார். அரசாங்கம் கண்ட்ரோலைக் கொண்டுவந்தார்கள் என்றால் வியாபாரிகள் மீது ஒரு பாணத்தைத் தொடுத்துவிட்டார்கள் என்று தான் அவர் நினைக்கிறார். ஆனால் எங்களைப் பொருத்தமட்டில் வியாபாரிகள் எல்லாம் தவறுதல் செய்கிறார்கள் என்று ஒரு 5-00 p.m. காலும் கூறமாட்டோம். அப்படிக் கூறியது இல்லை. வியாபாரிகளுக்கு சமுதாயத்திலே ஒரு சிறந்த இடம் உண்டு. அவர்கள் மக்களுக்கு சிறந்த பணி புரிகிறவர்கள். மக்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக் கொண்டுவந்து அவர்களுக்கு வினியோகிக்கக்கூடியவர்கள். மக்களிடத்திலே இருக்கிற பண்டங்களை விற்று பணத்தைக் கொடுக்கிறவர்கள். அது மக்களுக்கு வேண்டிய ஒரு சிறந்த தொண்டு என்பதை எத்தனையோ முறை எடுத்துக் காட்டிக் கொண்டு வந்திருக்கிறேன். வியாபாரிகள்கூட கொஞ்சம் அனுபவப்பட்டவர்கள். நான் கனம் அங்கத்தினர் அவர்கள் அனுபவப்படாதவர் என்று சொல்லவில்லை. வியாபாரிகள் மக்களுக்கு எவ்வளவு திருப்தி அளிக்கின்றார்களோ, மக்களின் நலத்தை எவ்வளவு நாடுகின்றார்களோ அந்த அளவுக்குத்தான் தங்களுடைய வியாபாரம் பெருகும் என்ற அனுபவத்தைப் பெறுவார்கள். ஆனால் அந்த அனுபவத்திலே உள்ளவர்களுக்குக்கூட சில சமயம் சுயநலம் குறுக்கிடுகிறது. தற்காலம் லாபம் வந்தால் சரி, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். லாபத்துக்குத்தான் வியாபாரம் என்று இருக்கிறார்கள். ஆனால் கன்ஸ்யூமர்ஸ் இல்லாமல் வியாபாரம் கிடையாது கன்ஸ்யூமர்ஸ் எப்படி வேண்டுமானாலும் போகட்டும். நாம் எப்படி வேண்டுமானாலும் வியாபாரம் செய்வது என்றால் யாரிடத்திலே வியாபாரம் செய்வது? இந்த உண்மை நிலையை வியாபாரிகள் உணர்ந்தால் இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்காது. பல வியாபாரிகள் உணர்கின்றார்கள். வியாபாரிகளிலே பலர் நல்லவர்கள்

10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் காட்டுகின்ற வழியைப்போல் காட்டினால் தான் கெட்டுப்போகிறார்கள். வியாபாரிகள் கெடுவதற்கு அவர்கள் காரணமில்லை, நம்மைப் போன்ற தலைவர்கள்தான் காரணம். அதனால்தான் அவர்களை நாம் மேலும் திருந்தவேண்டுமே தவிர மேலும் கெடுக்க இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலே ஏற்பட்ட தொல்லைகளைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்களே குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிடுவதாக இருந்தேன். அவர்களே குறிப்பிட்டுவிட்டார்கள். சென்ற அக்டோபர், நவம்பர், டிசம்பரிலே என்ன நிலை ஏற்பட்டது? கனம் அங்கத்தினர்கள் யாரும் மறந்து இருக்க மாட்டார்கள். அவர்களே கண்டது. முன்னால் இரவு 9 மணி 10 மணிக்கே ஒவ்வொரு நியாய விலைக் கடைகள் இருந்த இடத்திலேயும் ஏராளமான மக்கள் அப்படியே படுத்து உறங்குவார்கள். காலையிலே கியூவிலே முன்னாலே இருக்க வேண்டும். முன்னாலே போய் இருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கிடைக்காது, கியூவிலே ஒரு அளவுக்குத் தான் கிடைக்கிறது அரிசி என்ற பரிதாபகரமான கலக்கமான நிலை சென்னையிலே இருந்தது. நாளைக்கு என்ன செய்வது? அரிசி கிடைக்குமா கடையிலே என்ற நிலை. முன்பு ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தைவிட கோரமான உணவுப் பஞ்சம் ஏற்பட்ட மாதிரி ஒரு நிலை ஏற்பட்டது. எப்படியாவது அரிசி கிடைக்க வேண்டும் என்று பரிதவித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில பேர் கியூவிலே முன்னாலே போய் நின்று, இரண்டு மூன்று கியூவிலே கூட போய் நின்று அரிசி வாங்கி இதிலே பணம் சம்பாதிப்போம் என்று வாங்கி விற்றவர்களும் உண்டு. கியூ அதனாலே பெருகி இருந்ததும் உண்டு. ஆனால் மொத்தத்தில் அரிசி கிடைக்காத நிலை மக்களுக்கெல்லாம் கவலை ஏற்பட்ட நிலை. அது எப்படி வந்தது என்று அங்கத்தினர் அவர்கள் என்னைக் கேட்கின்றார்கள். நான் அவர்களைக் கேட்கின்றேன். எப்படி வந்தது? எப்படி அரசாங்கம் அதற்கு பொறுப்பு என்று கூறுவார்கள்? விலை ஏறிக்கொண்டே போனால் அதை அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருப்பதா என்று நான் கேட்கிறேன். ஒரு படி விலை ரூ. 1, 1½, 2 என்று ஆகிவிட்டது. படிக்கு 3 ரூபாய், 4 ரூபாய் ஆகிறது என்றால் எப்படி வாங்குவார்கள்? இன்றைக்கு ஏதோ கொஞ்சம் கையிலே காசு இருக்கிறது, வாங்குகின்றார்கள். அதிக விலைக்கும் வாங்குகிறார்கள். அதற்கும் ஒரு அளவு இருக்கிறதே. இன்னும் இரண்டு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றினால் இன்னும் இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய தெம்பு இருக்கலாம். இன்றைக்கு அவ்வளவு இல்லை. ஓரளவு தெம்பு இருக்கிறது. அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் மூன்று ரூபாய், நான்கு ரூபாய் வைத்தால் என்ன நிலை ஏற்படும்? ஆண்டுதோறும் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. அதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. அதை அவ்வப்பொழுது ஆராய்ந்து கொண்டு வந்தோம். மத்திய அரசாங்கமும் ஆராய்ந்து

கொண்டு வந்தது. இதைத் தவிர்க்க என்ன செய்வது என்று பார்த்தோம். ரொம்ப ஏழைகளாக இருப்பவர்களுக்கு குறைந்த விலையிலே தானியங்களை கொள்முதல் செய்து நியாய விலைவைத்து கொடுத்தால் போதும், மற்றவைகளை வியாபாரிகளுக்கு விட்டுவிடுவோம். வேறு காரணத்தாலே விலை ஏறி இருந்தாலும் ரொம்ப ஏழைகளுக்கு நியாய விலையிலே கடைகளிலே நிவாரணம் அளிக்கும் வகையிலே கொடுப்போம், அது போதும் அதற்கு மேலே தலையிடவேண்டாம் என்ற முறையைத்தான் அனுசரித்து வந்தோம். ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சம் விலை ஏறிக்கொண்டே வந்தது. சென்ற ஜுலையிலே பார்த்தோம். அதற்கு முந்திய ஆண்டைவிட ரொம்ப ஏறிப்போய் விட்டது. இப்படியே ஏறுமுகமாகவே இருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் சரியில்லை. இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் யோசித்து விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று அப்பொழுது முடிவு செய்தோம். வேறு ஒன்றும் செய்யவில்லை. விலையையும் நியாய விலைக் கடைகள் வைத்தபோது குறைந்த விலைக்கு வாங்கினோம். ஆனால் இப்பொழுது விவசாயிகளுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை, அப்பொழுது என்ன விலை இருந்ததோ, ஜுலை மாதத்திலே என்ன விலை இருந்ததோ அந்த விலையையே வைத்து, அதைக் குறைக்கக்கூட இல்லை, பின்னாலே விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம், உடனடியாக குறைக்க வேண்டாம் என்று அன்று மார்க்கட்டிலே இருந்த விலையையே வைத்து, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கட்டாயம் இருக்கவேண்டும் என்று உறுதி கூறி இதற்குமேலே விலை ஏறக்கூடாது என்று போட்டாலும், வியாபாரிகள் இதை ஏற்று நடத்தட்டும், அவர்களுக்கு நியாயமான லாபத்துக்கும் இடம் கொடுப்போம் என்று நியாயமான லாபத்துக்கு இடம் கொடுத்து அந்த விலையை உயர்த்தி இதே விலையை ஏற்றுக் கொண்டு இதற்கு மேலே ஏறக்கூடாது என்றுதான் விலையைக் கண்ட்ரோல் செய்தோம். விவசாயிகளுக்கும் பாதகம் இல்லை. கன்ஸ்யூமர்களும் ஓரளவு பாதுகாக்கப்படவேண்டும், வியாபாரிகளுக்கும் இடம் உண்டு, அவர்கள் நியாயமான லாபத்தைப் பெற்று நடத்தட்டும் என்ற திட்டம்தான் அப்பொழுது ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் என்ன நடந்தது? வியாபாரிகளுக்கு அது போதவில்லை. இவர்கள் யார் இம்மாதிரி விலை சொல்வது; என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்போம், வாங்குவதற்கு வேறுவகை இல்லாமல் இருந்தால் என்ன விலை வேண்டுமானாலும் விற்கிறோம், வாங்கித்தான் தீரவேண்டும், இல்லாவிட்டால் பட்டினி இருக்க வேண்டும், கடனாவது வாங்கி வாங்க வேண்டும் என்ற எண்ணம் வியாபாரிகளுக்கு இருந்தது. கனம் அங்கத்தினர் சுப்பையா செட்டியார் அவர்கள் சொன்னார்களே, ஏதோ மழை பெய்தது, குடிசைகளிலே போய் பார்த்தால் இரண்டு நாள் மூன்று நாள் தேவை, 10 படி 15 படி சேர்த்து வைத்து இருந்தார்கள், மழை பெய்து கெட்டுப் போய் விட்டது என்று, அது எதைக் குறிக்கிறது? ஏழை மக்களுக்கு ஒரே கவலை. அன்ன விசாரம் அதுவே விசாரம் என்று சொல்வார்கள். அரிசி கிடைக்க வேண்டும், கிடைத்தவரைக்கும் எடுத்து

வைத்துக்கொள்வோம், நான்கு நாட்களுக்குப் பிறகு கிடைக்கா விட்டால் என்ன செய்வது? என்ற ஒரு கவலையோடுதான் மற்றவைகளுக்காக இருந்த பணத்தைக்கூட அரிசிக்குப்போட்டு வாங்கிக் கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அவர்களா பதுக்கி விட்டார்கள்? யாரோ பதுக்குகிறார்கள் என்றால், குடிசையிலே வாழ்கின்ற ஏழை மக்கள் 5 படி, 10 படி வைத்திருந்தால் இதையா பதுக்குதல் என்று சொல்வது? கனம் அங்கத்தினர் அவர்கள் பெரிய பதுக்கலை மறைக்க இதைச் சொல்வதா? அதனாலே பெரிய பதுக்கல் மறைந்து போய்விடுமா? அரசாங்கம்கூட வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்ததாகச் சொல்லவில்லை. எங்களுக்கு நிலைமை தெரியாதா? என்ன என்ன நடக்கிறது, எப்படி கோளாறு வருகிறது என்று உணர்ந்துதான் இருக்கிறோம். பதுக்கி வைத்துக்கொண்டிருப்பது ஒருவர் இரண்டு பேர் இருக்கலாம் எங்கேயாவது. அது அல்ல முக்கியம். அதைப் பெரிதாகக் குறிப்பிடவில்லை. நாங்கள் குறிப்பிட்டதெல்லாம் விலையைக் கண்ட்ரோல் செய்தபிறகு அந்த கண்ட்ரோல் விலைக்கு நாங்கள் ஒத்துழைக்க தயாராயில்லை என்று ஒத்துழைக்க மறுத்தார்கள். மறுத்துவிட்டு பேசாது இருந்தால் பரவாயில்லை. அப்பொழுது கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர் எல்லாம் ஒரே உணவு மண்டலமாக இருந்தது. இந்த மண்டலத்துக்குள்ளே தானிய போக்குவரத்துக்கு தடையில்லை. அதைப் பயன் படுத்திக் கொண்டு கேரளாவிலே விலை கண்ட்ரோல் இல்லை, எப்படியாவது அரிசி வந்தால் போதும் என்று அங்கே இருப்பவர்கள் நினைத்தார்கள். ஆகையினாலே இங்கே இருக்கிற அரிசியை எல்லாம் பிடித்து அதிக விலைக்கு வாங்கி, ஒரு ரூபாய், 1½ ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லி, அதிக விலை கொடுக்கிறோம் என்றால் விவசாயிகள் எல்லாம் கொடுப்பார்கள்; ஆகவே அப்படியே எடுத்துக்கொண்டு கேரளாவுக்கு அனுப்பினார்கள். சாதாரணமாக தமிழ்நாட்டிலேயிருந்து எவ்வளவு போகக்கூடுமோ அதைவிட இரட்டிப்பாக கேரளாவுக்கு போய்விட்டது. அதனாலேதான் அரிசி கிடைக்கவில்லை. அதனால்தான் திடீரென்று அரிசி கிடைக்காத பஞ்சம் ஏற்பட்டது. நியாய விலைக்கடைகள் வைக்க அப்போது அரிசி இல்லை. அப்போது சென்னை நகரத்தில் மட்டுமின்றி தமிழ்நாடு பூராவிலும் அரிசிப் பஞ்சம் இருந்தது; தஞ்சாவூரிலுள்ள நீடாமங்கலம், மன்னார்குடி ஆகிய இடங்களில் அரிசிப் பஞ்சம் இருந்தது; இது சிறு சிறு கிராமங்களிலும் பரவியது. இது எந்த ஜில்லாவையும் விடவில்லை. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய ஜில்லாக்களிலிருந்து அரிசி கேரளாவிற்குப் போயிற்று. வியாபாரிகள் அரிசியை கேரளாவிற்குக் கொண்டு போய் லாபம் சம்பாதித்தார்கள். நாங்கள் முதலில் விலைக் கண்ட்ரோல் கொண்டு வந்தோம். விலைக் கண்ட்ரோல் கூடாது என்றால், வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் நிலைமையைக் கவனிக்க வேண்டும். அதைக் கவனிக்காவிட்டால் விலை மக்களுக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு உயரக் கூடும். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதனால்தான் அரசாங்கம் விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது. உச்ச விலையை நிர்ணயித்து,

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

அதற்கு மேற்பட்ட விலைக்கு அரிசியை விற்கக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்தது. இப்படிப்பட்ட நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டிய நிலைமையை வியாபாரிகள் ஏற்படுத்திவிட்டு, அவர்கள் அரசாங்கத்தின்மீது குறை கூறு 5.10 p.m. கின்றனர். "நீங்கள்தான் தவறு செய்து விட்டீர்கள்' என்று அவர்கள் சர்க்காரைக் குறைகூறுகிறார்கள். அதைப் பிரதி பலிக்கும் விதத்தில்தான் இன்று பல கனம் அங்கத் தினர்கள் பேசினார்கள்; அவர்கள்மூலம் வியாபாரிகளின் குரலைக் கேட்டோம். அரசாங்கத்தார் தவறு செய்தார்கள், அரசாங்கத் தாருக்கு என்ன தண்டனை என்று அவர்கள் கேட்கிறார்கள். குற்றம் சாட்டுபவர்களே தண்டனை கொடுக்கட்டும்; அவர்களே தண்டனை கொடுக்கலாம். யார் தங்களைப் பாதுகாத்தார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். சென்ற அக்டோபர்--டிசம்பர் மாதங்களில் வியாபாரிகள் இப்படிப்பட்ட விபரீதமான நிலைமையை ஏற்படுத்தியபோது, நாங்கள் உடனடியாக அதிகாரிகளை நியமித்து தஞ்சாவூரிலிருந்து குறுவையைக் கொள்முதல் செய்து கொண்டு வந்தோம். அப்போது அரிசி ஆந்திராவிலிருந்து சரியாக வரவில்லை. அப்போது சென்னை நகருக்கும் மற்ற இடங்களுக்கும் தானியங்களை விநியோகித்து ஒருவாறு நிலைமையைச் சமாளித் தோம். அதிகாரிகளை இந்தக் காரியத்திற்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. அவர்களுக்கு வேறு வேலைகள் இருக்கின்றன; இந்தக் காரியத்திற்கு அவர்களை அனுப்ப வேண்டிய அவசியமில்லாத நிலைமையைத்தான் நான் வரவேற்கிறேன். அதிகாரிகள் மற்ற வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. இந்த விஷயத்தில் அதிகாரிகள் நிபுணர்கள் என்று நான் சொல்லவில்லை. வியாபாரிகளுக்கு இருக்கும் அனுப வம் எப்படி அதிகாரிகளுக்கு வரும்? அனுபவம் என்றால், நல்ல அனுபவமும் இருக்கிறது, கெட்ட அனுபவமும் இருக்கிறது. நல்ல அனுபவம் இருப்பது நல்லது. அரசாங்கம் 'ப்ராஃபிடீரிங்' உணர்ச்சியுடன் விலையை நிர்ணயித்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அரசாங்கம் ஏன் லாபம் சம்பாதிக்க வேண்டும்? இந்தக் காரியத்திற் காக பல சிப்பந்திகளை நியமிக்க வேண்டியிருப்பதால் சர்க்காரின் நிர்வாக இயந்திரத்திற்கான செலவு அதிகமாவதாகவும் சொல்லப் பட்டது. கூடியவரை அந்தச் செலவைக் குறைக்கவேண்டும்.

'பூல்-ப்ரைஸ்' ஏன் வந்தது என்று கேட்கப்பட்டது. இரண்டு, மூன்று ரக அரிசிகள் இருக்கின்றன. இன்னின்ன ரகத்திற்கு இன்னின்ன விலை என்று நிர்ணயித்திருந்தோம். சில இடங்களில் 1 ரூபாய்க்குரிய அரிசியை வியாபாரிகள் 1½ ரூபாய்க்குரிய ரகம் என்று சொல்லி 1½ ரூபாய்க்கு விற்றனர். அப்படிச் செய்தால் வாங்கிச் சாப்பிடுபவர்கள் என்ன ஆவது? இந்தத் தகவல் வந்த பிறகுதான், எல்லா ரகங்களுக்குமாக 'பூல்-ப்ரைஸ்' நிர்ணயிக்கத் தீர்மானித்தோம். 'பூல்-ப்ரைஸ்' அதிகமாக இருப்பதாக ஸ்ரீ ராம சாமி முதலியாரும் ஸ்ரீ சுப்பையா செட்டியாரும் சொன்னார்கள். 'பூல்-ப்ரைஸ்'-ஐ லாபத்திற்கு இடம் கொடுக்காமலும் அதே சமயத் தில் நஷ்டத்தைத் தவிர்க்கும் வகையிலும் நிர்ணயிக்க வேண்டும்; அதை அதற்கு மேல் நிர்ணயிக்க அரசாங்கத்திற்கு எண்ணம்

10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இல்லை. இப்போதுள்ள 'பூல்-ப்ரைஸ்' தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வரும். எனவே இதை அதிகப்படுத்தவோ குறைக்கவோ கூடும்.

கோதுமையின் விலைபற்றிப் பேசப்பட்டது. கோதுமை இறக்குமதியாகிறது. இறக்குமதியாகும் பொருளுக்கு விலை அதிக மாகும். எனவே இந்த விலையை 'ஸப்ஸிடைஸ்' பண்ண முடியாது. இதை ஒரு சிலருக்குக் கொடுப்பதானால் 'ஸப்ஸிடைஸ்' பண்ண லாம். முன்பு நியாய விலைக் கடைகளுக்குக் கொடுத்தபோது இதை 'ஸப்ஸிடைஸ்ட்' விலையில் கொடுத்தோம். இப்போது இதை எல்லோருக்கும் கொடுக்கும்போது இதன் விலையை 'ஸப்ஸிடைஸ்' பண்ணுவது நியாயமல்ல என்பதால், இதன் விலை இப்போது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

சென்ற அக்டோபர் மாதம் விபரீத நிலைமை ஏற்பட்டபோது, முதலில் தஞ்சாவூரில் கொள்முதல் செய்ய ஆரம்பித்தோம்; பிறகு மற்ற இடங்களிலும் கொள்முதல் செய்ய ஆரம்பித்தோம். கட்டாய மாகக் கொள்முதல் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. நாங்கள் எதைக் கொள்முதல் செய்கிறோம்? நாங்கள் 'மார்க் கெட்டபில் ஸர்ப்லஸ்'-ஐத் தான் கொள்முதல் செய்கிறோம். ஐந்து ஏக்கரோ, 20 ஏக்கரோ, 30 ஏக்கரோ நிலம் உடைய விவசாயியின் நிலத்தில் விளையும் தானியம் பூராவையும் அந்த விவசாயியின் குடும்பமே சாப்பிடுவதில்லை. சாப்பாடு போக மற்ற தேவைகளை, தானியத்தை விற்றே அவன் பூர்த்தி செய்து கொள்ள வேண்டி யிருக்கிறது. எல்லோருமே விவசாயம் தவிர வேறு தொழில் களிலும் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அல்ல. எத்தனையோ விவசாயி கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் விளைவிக்கும் தானியத்திலிருந்து, தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் பண்ணையில் வேலை செய்பவர்களுக்குமான சாப்பாட்டிற்கு வேண்டிய தானியங்கள் எடுத்துக்கொண்டு பாக்கி தானியத்தை விற்றுத்தான் தங்கள் மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. எனவே அவர்கள் தானியத்தை விற்கிறார்கள். அப்படி விற்பதில் விலைக் கண்ட்ரோல் இருக்கிறது. டெல்லியில் சில பேர் 'ஸப்போர்ட் ப்ரைஸ்' இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அதை நாங்கள் ஏற்க வில்லை. வாங்கிச் சாப்பிடுபவர்களைப் பாதுகாக்க, அதிகபட்ச விலை நிர்ணயம் அவசியம். விவசாயிகளைப் பாதுகாக்க 'மினிமம் ப்ரைஸ்' அல்லது 'ஸப்போர்ட் ப்ரைஸ்' அவசியம். எங்கள் யோசனையின் பேரில் இந்த இரண்டு விலைகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றுதான் டெல்லியில் முடிவெடுக்கப்பட்டது. இந்த நிலையில் விற்க வேண்டியதை விற்க விவசாயிகளுக்கு என்ன ஆட்சேபம்? அவர்கள் வெளியில் விற்க வேண்டும், அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு விற்கக் கூடாது என்று ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? அவர்கள் தங்கள் சாப்பாட்டிற்கு வைத்திருக்கும் தானியத்தைக் கேட்டால் ஆட்சேபிக்கலாம். அப்படிச் செய்தால், அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது. "விற்கக் கூடியதை விற்றுவிடுங்கள்" என்றால் விவசாயிகள் தானியத்தை தாராளமாகக் கொடுக்கிறார்கள். உண்மையிலேயே விவசாயிகள்

மனம் கோணாமல் மனப்பூர்வமாக தானியத்தைக் கொடுக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். ஒரு குழு வேண்டும் என்று சொல்லப்பட்டது; 'போய்ப் பாருங்கள்' என்று சொல்லப்பட்டது. எந்த உறுப்பினரும் கொள்முதல் நடக்கும் இடத்திற்குச் சென்று அங்கே எவ்வாறு கொள்முதல் நடக்கிறது என்று பார்க்கலாம். ஆனால் அவர்கள் அங்கே சென்று 'தானியத்தைக் கொடுக்காதே' என்று விவசாயிகளிடம் சொல்லக் கூடாது. அப்படி அவர்கள் 'வாச்' பண்ணலாம். விவசாயிகள் மனப்பூர்வமாகத்தான் கொடுக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமாக நெல் பயிராகிறது. நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகிற ஜில்லா அது. அந்த ஜில்லா விவசாயிகளை நான் பாராட்டுகிறேன். வடஆர்க்காடு, செங்கற்பட்டு, தென்னார்க்காடு ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களிலும் சேலம், மதுரையிலும் எல்லா ஜில்லாக்களிலும் புரொகியூர்மெண்ட் நடக்கிறது. மனம் கோணாமல்தான் விவசாயிகள் கொடுக்கிறார்கள், 'Procurement without tears' என்று சொன்னது அலங்காரத்துக்காக அல்ல. மிகுதியாக இருந்தால் அதை நாமே கொள்முதல் செய்கிறோம். சில இடங்களில் வியாபாரிகள் குறைந்த
5-20 p.m. விலைக்கு கேட்கிறார்கள் என்று புகார் வருகிறது. அரசாங்கம் இதில் தலையிடவில்லை என்றால் விலையைக் குறைத்துக் கட்டுப்பாடு செய்து வாங்குகிற நிலை வருகிறது. தஞ்சை ஜில்லாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த நிலை ஏற்பட்டது. எல்லா வியாபாரிகளும் கட்டுப்பாடு செய்து கொண்டு அறுவடை காலத்தில் தைமாதம் பிறந்த பிறகு எப்படியாவது விற்கவேண்டுமென்று விவசாயிகள் தவிக்கும் போது குறைந்த விலைக்குக் கேட்டார்கள். வேறு வகையில்லாமல் தஞ்சை விவசாயிகள் அந்தக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது எனக்குத் தெரியும். அரசாங்கம் கட்டுப்படியான விலைக்கு வாங்குகிறது. அப்படி வாங்கி சேமித்து வைப்பதால் சேதம் ஏற்படுகின்றது என்று உறுப்பினர்கள், திரு. ஹண்டேயும் மற்றவர்களும் கூறினார்கள். இப்போது விநியோகிக்கப்படும் அரிசி, நெருக்கடி நிலை ஏற்பட்டபோது ஆந்திராவிலிருந்து வந்த அரிசி; அதைப்பற்றி புகார்கள் வந்தன. இப்போது இல்லை. நாம் கடையில், வாங்கும்போது அதில் கல் இருப்பதில்லையா? கோடவுனில் கல் சேருகிறதா? இட்லி சாப்பிடுகிறோம் அதிலும் கல் வருகிறது. கல் அறைபடாமல் இருக்கிறது. கோடவுன் கட்டுவதுகூட நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிற அளவுக்குக் கட்டப்படுகிறது. இன்றைக்கு புதிதாக சேமித்து வைக்கும் பழக்கம் ஏற்படவில்லை. பண்டைக்காலத்தில்கூட ராஜாக்கள் இதுமாதிரி கோடவுன்கள் கட்டியிருக்கிறார்கள். செஞ்சியில் இன்னும் அப்படிக் கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம், வட ஆர்க்காடு ஜில்லாவில் கட்டப்பட்டிருக்கிறது. பாட்னாவில் பெரிய கோடவுன் கட்டியிருக்கிறார்கள். இப்போது நவீன முறையில் தானியங்கள் கெடாமல் கோடவுன் கட்டப்பட்டு சேமித்து வைக்கப்பட்டு வருகிறது. இப்போது ரொம்பக் கெட்டுப்போகிறது என்று சொல்வதற்கு நியாயமில்லை என்று சொல்வேன். Buyer ஸ்டாக் வைக்கவில்லை என்றால் அடிக்கடி இந்த மாதிரி தொல்லைகள் வரும். ஆட்சி ஏற்றுக்கொண்டபோது என் கோரமான பஞ்சம்

வந்தது? மழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தது. அப்போது செலவழித்ததால் Buffer ஸ்டாக் தீர்ந்துவிட்டது. இப்போது தானியங்களை சேமித்து வைக்கத்தான் வேண்டியிருக்கிறது. எப்படியாவது போகட்டும் என்று இருக்கமுடியாது. டெல்லியில் பெரிய ஸோன் வைக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அதை பலமாக எதிர்த்தோம். மாநிலங்கள் தனித்தனி ஸோனாக இருப்பது நீடிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதுவும் கண்ட்ரோல்தான். அகில இந்தியாவுக்கு ஒரு ஸோன், தென்மண்டலத்திற்கு ஒரு ஸோன் என்று இருக்கிறது. கண்ட்ரோல் வேண்டாமென்றுதான் கனம் உறுப்பினர் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் சொல்வது. பயிரிடுகிறவர்கள் எப்படியாவது விற்கவேண்டியது, பதுக்க வேண்டியவர்கள் பதுக்க வேண்டியது, பட்டினி கிடக்க வேண்டியவர்கள் கிடக்க வேண்டியது, சாக வேண்டியவர்கள் சாக வேண்டியது. அவர்களுக்கு பட்டினி கிடக்கவும் உரிமை இருக்கிறது. சென்ற அக்டோபர், டிசம்பர் மாதங்களில் சென்னை நகரத்தில் இருந்த நிலையைப் பார்த்த பிறகு கண்ட்ரோல் வேண்டாமென்று சொல்லமுடியுமா? யார் கண்ட்ரோலைக் கொண்டுவரச் சொன்னார்கள் என்று கேட்கிறார்கள். நேற்று சுதந்திராக் கட்சியைப் பற்றி சொல்லியதற்காக கோபிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது? மக்களைப் பாதுகாப்பதில் கொஞ்சமாவது . கருணை வேண்டாமா? நாம் வாழ்ந்தால் போதுமென்று இருக்கலாமா? மக்கள் வாழ்ந்தால்தான் நாமும் வாழ முடியும். இது நடந்த பிறகு அரசாங்கத்தின் மீது என் குறை சொல்லவேண்டும்? தீர்மானத்தில் அவர்கள் கொள்கை வரவில்லை. அரசாங்கம் விநியோகிக்க வேண்டுமென்றுதான் போட்டிருக்கிறது. வியாபாரிகள் மூலமாக என்று கூட போடவில்லை. ஏதோ நாங்கள் தகாதது செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். தண்டனையை ஏற்போம். மக்களுடைய தண்டனையைப் பெறுவதற்குத் தயாராகத்தான் பொதுப் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம். அதைப்பற்றி கவலைப்படவில்லை. மக்களை பாதுகாக்கும் வகையில் ஈடுபட்டு பல திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வருகிறோம். ரேஷன் பற்றியும் கூறினார்கள். இன்றைக்கு எட்டு அவுன்சு அரிசியும் நாலு அவுன்சு கோதுமையும் சேர்த்து 12 அவுன்சு கொடுக்கப்படுகிறது. இருபதினாயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நகரங்களுக்கு குடும்ப கார்டு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கோதுமை சிலர் வாங்குகிறார்கள். சிலர் வேண்டாமென்று விட்டுவிடுகிறார்கள். வேறு மாநிலங்களில் ஒருவிதமாகச் சொல்கிறார்கள். இந்த மாநிலத்தில் இல்லை. 60 லட்சம் ஜனத்தொகை என்றால் 80 லட்சத்துக்கு கார்டு கணக்கு வருகிறது. எல்லோருக்கும்தான் கொடுக்கப்படுகிறது. அது இல்லாமல் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் பரிபூரணமாக கிராம பகுதிகள், நகர்ப்பகுதிகள் எல்லாவற்றிற்கும் நாம் ரேஷன் வைத்து எட்டு அவுன்சு அரிசி நான்கு அவுன்சு கோதுமை கொடுக்கிறோம். அதற்குமேல் ராமநாதபுரம், கோவை, திருநெல்வேலி ஆகிய மூன்று பெரிய மாவட்டங்களிலும் பரிபூரணமாக குடும்ப கார்டு கொடுத்து ஏற்பாடு செய்தி

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

ருக்கிறோம். ஓட்டல்களுக்கு, ரெஸ்டாரெண்டுகளுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நாம் கொடுக்க முற்பட்டிருக்கிறோம். மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கும் நோக்கமும் இருக்கிறது. ஓட்டல்களில் அது இல்லை, இது கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? இன்றைக்கு நாம் 12 அவுன்சு கொடுக்கிறோம். அதற்கு மேலும் வேண்டியவர்கள் கடையில் வாங்கிக் கொள்ளலாம். அதிக விலையாக இருக்கலாம். நமக்கு அதிகமாக வேண்டியிருப்பதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நானும் ஒன்று கவனித்திருக்கிறேன். வறுமை மிகுதியாக இருக்கிற இடத்தில் தான் per cpita consumption ஜாஸ்தியாக இருக்கிறது; உயர்வாக இருக்கிற இடங்களில் அது குறைந்திருக்கிறது. மாநிலங்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. ரொம்ப வறுமையில் இருக்கிற மாநிலங்களில் அரிசி தவிர வேறு ஒன்றும் சாப்பிடுவதில்லை. அரிசியே சாப்பிடுவது என்றால் per capita consumption அதிகமாகிறது.

மிஸ்டர் சேர்மன் : அரிசி சாப்பிடுகிறவர்களுக்குத்தான் குழந்தைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறார்களே (சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படியும் இருக்கலாம். கொஞ்சம் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டால் பலகாரம் சாப்பிடுகிறார்கள். அந்த மாதிரி மாநிலங்களில் அரிசி உபயோகம் குறைவாக இருக்கிறது. இது தெரியாமல் 18, 16 அவுன்சு வேண்டுமென்று கேட்டால் என்ன செய்வது? கொடுக்கத் தயாராகத்தான் இருக்கிறோம். அந்த நிலைமை சீக்கிரம் ஏற்படும் என்று நினைக்கிறேன். குறைந்த பட்சம் என்று 12 அவுன்சு கொடுக்கிறோம். ஓட்டல்களுக்கும் கொடுக்கப்படுகிறது. மற்ற ஸ்தாபனங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறவர்கள். அதிகமாகத் தேவைப்படுமென்று அதிகமாக 12 அவுன்சுக்கு மேல் கொடுக்கிறோம். Statutory Rationing பற்றி குறிப்பிட்டார்கள். இப்போது முடிவு செய்திருக்கும் முடிவின்படி பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொண்ட மாநகரங்களுக்கு என்று வைக்கும்போது சென்னை நகரத்தில் சட்டபூர்வமாக ரேஷன் அமைப்பது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கும் இப்போது உள்ளதிற்கும் வித்தியாசம் இல்லை. இன்றைக்குக் கொடுப்பதைத் தான் அன்றைக்கும் கொடுக்கப்போகிறோம். இன்றைக்கு 12 அவுன்ஸ் கொடுக்கின்றோம். 'ஓட்டலிலே கொடுக்கவில்லை, அது இல்லை, இது இல்லை என்று சொல்கிறார்கள். அப்பொழுது சொல்ல இடம் இருக்காது. கனம் அங்கத்தினர் அவர்கள் வாதப்படி வரவேற்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு கொடுக்கிறோம், Informal rationing ஸ்டேசூடரி ரேஷனிங் வந்தால் சொல்ல முடியாது. எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து எல்லாவற்றுக்கும் கிடைக்கும்படி செய்யப்படும். வெளியிலே இருந்து வராது. அது கண்டிப்பாக நிறுத்தப்படும். இப்பொழுது பெரிய நகரங்களில் Statutory Rationing

10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வேண்டுமென்று சொல்கிறார்களென்றால் அதற்குக் காரணம் வாங்கும் சக்தி அதிகமாக இருப்பதாலே இன்னும் கொஞ்சம் வாங்குகிறார்கள். இது கிராமங்களுக்குப் பயன்படவேண்டியது. இதனால் கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. பெரிய நகரங்களை 'கார்டன்' பண்ணிவிட்டால் கிராமங்களுக்கு இன்னும் சுலபமாக கிடைக்கும் என்பதுதான் காரணமாகக் கூறப்பட்டது. அது எப்படி இருந்தாலும் இப்பொழுது செய்வதைத்தான் ஸ்டேசூடரி ரேஷனிங் என்று செய்யப் போகிறோம். இப்பொழுது யந்திரம் தயாராக இருக்கிறது. வெளியில் இருந்து வருவது தடுக்கப்படுகிறது. ஸ்டேசூடரி ரேஷனிங் வந்தால் இன்னும் கொஞ்சம் கண்டிப்பாகத் தடுக்கப்படும்.

பருப்பு தினுசுகளைப் பற்றிக் கூறினார்கள். எனக்கு ஒன்றும் 5–30 p.m.
விளங்கவில்லை. இன்றைக்கு கோர்ஸ் கிரெய்ன்சுக்குத் தான் கண்ட்ரோல் இருக்கிறது. பருப்புக்கு இல்லை. சிலபேர் வேண்டும் என்று கூட கூறினார்கள். கடைசியிலே டெல்லியிலே 6-ம் தேதி நடைபெற்ற மகாநாட்டிலே இதற்கு கண்ட்ரோல் வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. துவரம் பருப்பு, மற்ற பருப்பெல்லாம் நான் 3, 4 ஆண்டுகளாகவே கவனித்துக்கொண்டு வருகிறேன். இவையெல்லாம் பற்றாக்குறை, முன்பெல்லாம் வியாபாரிகள் போய் வாங்கி வருவார்கள். இப்பொழுது அப்படி ஒன்றும் கிடைக்கவில்லை. கண்ட்ரோல் இல்லாமல் விட்டுவிட்டால் அப்படியே தேனும் பாலும் ஓடும் என்று சொல்கிறார்களே, பருப்பு தினுசுகளுக்கு கண்ட்ரோல் இல்லை. அன்றைக்கும் இல்லை. இன்றைக்கும் இல்லை. சில சமயங்களிலே வருவதில்லை. விலை ஏறிவிடுகிறது. ஆகவேதான் நாங்கள், அரசாங்கம் வாங்கி எங்களுக்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுங்கள் என்று சொல்லி அவர்கள் கொடுத்து நாங்கள் வாங்கி விநியோகித்துக்கொண்டு வருகிறோம்.

கனம் எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கண்ட்ரோல் நல்லதல்ல என்று கூறினார்கள். நானும் அப்படியே 100-க்கு 100 ஒத்துக்கொள்கிறேன். கண்ட்ரோல் இல்லாது இருந்தால் நல்லது தான். கண்ட்ரோலை நாங்கள் விரும்பவில்லை. ஏதோ கண்ட்ரோலிலே ஒரு மோகம் இருப்பதாக யாரும் நினைக்கவேண்டாம். ஆனால் எதுவாக இருந்தாலும் மக்களைப் பாதுக்காக்க வேண்டிய நிமித்தம், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய நிமித்தம், அவசியமானால் கண்ட்ரோல் வைத்துத்தான் ஆக வேண்டும். அந்த அளவுக்குத்தான் நிலைமைக்கு விளக்கம் கூறினேன். இருந்தாலும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ சம்பந்தம் அவர்கள் எங்களுக்கு கண்ணில்லை என்கிறார்கள். கண்ணாடி போட்டிருந்தும் கண் மூடித்தனமாக இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். எங்களுக்கு விவேகம் இல்லை என்று நினைக்கிறார்கள். எங்களுக்கு இருக்கிற விவேகம், மூளை இவற்றை வைத்துக் கொண்டு மக்கள் தேவைகளை எந்த எந்த வகையிலே பூர்த்தி செய்ய வேண்டும் என்பதைப் பொருத்து அரசாங்கம் உணவு விநியோகத்தை ஏற்று நடத்திக் கொண்டு வருகிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தைப் பற்றி விளக்கிய பிறகு, இந்த தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

கொள்ள முடியாது என்று உறுதியாக சொல்லவேண்டி இருக்கிறது. இந்த தீர்மானத்தைப் பற்றி விளக்காமல் இருந்திருந்தால் பரவா யில்லை. விளக்கிய பிறகு, கண்ரோல் கூடாது, அரசாங்கம் தவறு செய்து விட்டது, அதைத் தண்டிக்கவேண்டும் என்ற கருத்துத் தான் இந்த தீர்மானத்தின் விளக்கம். இதைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்களின் விளக்கம். ஆகவே இந்தத் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை, எதிர்க்க வேண்டி யிருக்கிறது என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: கனம் தலைவர் அவர்களே, முதன் மந்திரி அவர்கள் வெகு அழகாக இந்த கண்ட்ரோல் தேவை என்பதை விளக்கமாகக் கூறினார்கள். இந்தத் தீர்மானத் தைப் பற்றியும் விவரமாக சொன்னார்கள். நான் இந்தத் தீர்மா னத்தை கொடுக்கும்பொழுதே யோசித்துத்தான், அரசாங்கம் ஒத்துக்கொள்ளும் வகையில் தீர்மானம் இருக்கவேண்டும் என்று தான், இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன் என்பதை அறிவார் கள். இருந்தாலும் ஒன்று சொன்னார்கள், நான் ஆத்திரப்பட்டு பேசிவிட்டேன் என்று அதிகாரம் இல்லாதவர்கள் ஆத்திரப்பட்டுப் பேசினால் பிரயோஜனம் இல்லை. உள்ளதைச் சொன்னால் ஆத்திரப் படுவதாக சொல்வது தவறு. அதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக சென்ற வருஷம் நமது மாநிலத்தில் சென்னையில் மக்கள் பட்ட அவதியைக் கண்ணால் பார்த்தும் தெரிந்தும் அரசாங் கம் செய்தது தவறு என்று சொல்லக்கூடிய நிலையைக்கண்டு நான் வருத்தம் அடைவேன் என்று முதன் மந்திரி அவர்கள் சொன்னார் கள். அது உண்மைதான். ஆனால் சென்ற செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட நிலைமைக்குக் காரணம் யார் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1952-ல் கண்ட்ரோலை நீக்கிய பிறகு கிட்டத்தட்ட 1964-ஆம் வருடம் வரை அரசாங்கம் தலையிடாது இருக்கும் வரையில் விலைவாசிகள் ஏறுவதற்கு வேறு காரணங்க ளைக் கொண்டு ஏறினாலும்கூட ஜனங்கள் வாங்கமுடியாத அளவுக்கு விலைகள் ஏறிவிடவில்லை. விலை உயர்வும் கட்டுப்பாடும் வந்ததற்குக் காரணம் 1962-ல் இந்த அரசாங்கம் கண்ட்ரோலை உணவு தானியங் களுக்குக் கொண்டு வந்து லெவி சிஸ்டத்தைப் புகுத்தி ஒவ்வொரு வியாபாரியும் வாங்கக்கூடியதிலே இத்தனை சதவிகிதம் அரசாங் கத்துக்குக் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்து, அந்த அளவை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பாக்கியுள்ள அரிசியை வியாபாரிகளும் தங்கள் இஷ்டப்படி விற்றுக்கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் சொன்னபோது விலை ஏறிற்று. ஓரளவு அரசாங்கத்தின் கைக்கு அரிசி போய்விட்டது 40 சதவிகிதம் வரையில். எஞ்சியுள்ள அரிசியை அவர்கள் சொன்னதுபோல் அண்டை மாநிலமான கேரளாவிற்கு வியாபாரிகள் சப்ளை செய்யும் நிலைமையை உண்டாக்கினார்கள். அரசாங்கமும் அந்த அரிசியை உடனடியாக விநியோகம் செய்யவில்லை. ஆர்ட்டிபிஷியலாக அரசாங்கம் 1963-ல் கண்ட்ரோலின் மூலம் supply and demand

10th August 1965] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

உண்டாக்கினார்கள். அதை உண்டாக்கினால் என்ன ஆகும் என்று தெரியும். விலைவாசி ஏறுவதற்கு இந்த அரசாங்கம் காரணம் என்பதை நன்றாக நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

with inflation and physical shortages, prices must rise regardless of the moral standard of traders. The responsibility for the price rise and food crises is therefore that of the Planning Commission, the Ministry of Finance and the Reserve Bank of India, though traders and farmers are being made scapegoats.

இந்த மாதிரி அரசாங்கமே விலைவாசி ஏறுவதற்கு காரணங்களை உண்டாக்கிவிட்டது. நேற்று நமது தொழில்துறை மந்திரி இதை ஒத்துக்கொண்டார்கள். நமது ரூபாயின் மதிப்பு 17 பைசாவாக இல்லாவிட்டாலும் 67 பைசாவாக இருக்கிறது. இரண்டு வருஷத்தில் இன்னும் எவ்வளவு குறைந்து இருக்கிறது என்று மந்திரி அவர்களும் கூறுவார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: உலகம் பூராவும் குறைந்து கொண்டு வருகிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார்: உலகம் பூராவும் குறைந் தாலும் எங்கெங்கே குறைகிறதோ அங்கே எல்லாம் இந்தப் பிரச்னை இருக்கிறது என்பதை மந்திரி அவர்கள் உணர்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கணக்கெடுத்துப் பார்த்த தில் பிரான்ஸ் தேசத்தைவிட நமது தேசத்தில் குறைவாகத்தான் குறைந்து இருக்கிறது. பத்து வருஷத்திலே 1954 முதல் 1964 வரையில் 100-க்கு 65 இருக்கிறது. பிரான்சிலே 100-க்கு 64 இருக் கிறது என்றேன்.

DR. H. V. HANDE: Sir, Madras Statistics cost of living index figure is nearby 600. During the last ten years, it has increased by six times.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member is not apparently able to read statistics. In 1936–39, the base figure was taken as 100. That is the pre-war year. If the pre-war year figure was 100, then it is now 500 or 600. But nobody in the world can ever compare the price of the pre-war year with the price now. That is never done.

திரு. எம். சுப்பையா செட்டியார்: பொருளாதார நிபுணர்கள் என்ன அபிப்பிராயங்கள் சொல்கிறார்கள் என்பது எங்களை விட அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் புரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் நல்ல அரிசி குறைந்த விலையில் கிடைக்க வேண் டும். சென்ற வருஷம் ஏற்பட்ட நிலைமைக்கு அரசாங்கம் 40 சத விகிதம் லெவியும் பாக்கியுள்ள அரிசியை அவர்கள் இஷ்டம்போல் விற்றுக் கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் அனுமதித்ததும், அதோடு கேரளாவில் பற்றாக்குறை ஏற்பட்டு கேரளாவுக்கு போவ தற்கு அனுமதித்ததும், இதெல்லாம் உண்மை என்பதை நான் மறுக்கவில்லை. அத்துடன் இவர்கள் கேரளாவுக்கு எப்படிப்

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [10th August 1965

போகப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ அதேபோல ஆந்திராவிலே இருந்து நமக்கு கிடைக்கவேண்டிய நெல்லூர் அரிசி வருகிறதா என்று பார்க்கத் தவறி விட்டார்கள். திடீரென்று விழித்துக் கொண்டார்கள். கூக்குரல் ஏற்பட்ட பிறகு தான் அரிசிப் பஞ்சம் தெரிந்ததே தவிர நாட்டில் என்ன நடந்தது என்று கவனித்தார்களா என்று கேட்கிறேன். சென்ற வருஷம் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. அதனால் இனிமேல் எப்பொழுதும் கண்ட்ரோல் ரேஷனிங் தேவை என்று அரசாங்கம் நினைத்தால் நாங்கள் தடுக்க முடியாது. அவர்கள் சொன்னதைப் போல் மக்கள் வாங்கினால் வைத்துக் கொள்ள வேண்டியதுதான். வாங்காவிட்டால் எடுத்துவிட வேண்டியதுதான். கனம் முதல் மந்திரி அவர்கள் சொன்னதுபோல் மக்களின் தீர்ப்புக்கு எல்லோரும் உட்பட்டவர்கள். சுதந்திரா கட்சிக்காரர்கள் மட்டும் விதிவிலக்கல்ல. இந்த நிலையில் வியாபாரிகளுக்காக வக்காலத்து வாங்கி பேசுவதாகத் தோன்றுகிறது என்று சொன்னார்கள். வியாபாரிகளுக்கு நான் வக்காலத்து வாங்கத்தேவையில்லை. வியாபாரிகளே தங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள். நான் வியாபாரியாக இருந்தாலும் இந்த கண்ட்ரோல் வந்த பிறகு வியாபாரத்தை விட்டுவிட்டேன் என்பதை கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகப் படுத்த ஆசைப்படுகிறேன். சென்ற குறுவை காலத்தில் இந்த தொந்தரவு வரும் என்று தெரிந்தே இந்த வியாபாரத்தை விட்டுவிட்டேன். ஆண்டவன் ஒருவனால்தான் நாம் வாழமுடியுமே தவிர ஏதோ தப்பு, தவறு பண்ணி நீண்ட காலம் வாழ முடியாது என்ற நம்பிக்கை உண்டு. இந்த நிலைமையில் வியாபாரிகளுக்காக வக்காலத்து வாங்க அவசியமில்லை.

பதுக்கல் பற்றிக் குறிப்பிடப்பட்டது. பத்து அல்லது 100 வியாபாரிகளோ மிராசுதார்களோ பதுக்கிவைத்தால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் கோடிக்கணக்கான மக்கள்—ஒவ்வொரு வீட்டில் இருப்பவர்களும்—தானியத்தை தேவைக்கு அதிகமாக வைத்திருந்தால், அது பதுக்கலா என்று கேட்கப்படுகிறது. இதைக் குறிப்பிட பதுக்கல் என்ற வார்த்தையை உபயோகிக்க நான் தயாராயில்லை. இந்த வார்த்தையை உபயோகிப்பதை யாரும் ஆட்சேபிப்பதாக இருந்தால், அதை வாபஸ் பெற்றுக் கொள்ள நான் தயாராயிருக்கிறேன். அரசாங்கம் தங்களுக்கு எப்போதும் அரிசி கொடுக்கும் என்ற உறுதி பொதுமக்களுக்கு இருந்தால் அவர்கள் ஏன் தானியத்தை அவ்வாறு சேர்த்து வைக்க வேண்டும்?

5-40 p.m. மக்களிடம் உபரியாக உள்ள தானியம் கொள்முதல் செய்யப்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. கிராமங்களில் உள்ளவர்களிடமிருந்து உபரி தானியத்தை வாங்கி வந்து விட்டால், அங்கே அரிசிப் பஞ்சம் வரும் பட்சத்தில் அவர்கள் என்ன செய்வார்கள்? கிராமங்களில் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா? சென்னையிலும் திருச்சியிலும், இன்னும் பல நகரங்களிலும் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருச்சியில் கார்டு உள்ளவர்களுக்கு

10th August 1965] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

வாராவாரம் அரிசி கொடுக்கப்படுகிறதா? அவர்களுடைய தேவைக்கேற்ப அரிசி சப்ளை செய்யப்படுவதில்லை. அவர்களில் பெரும்பாலோர் கறுப்பு மார்க்கெட்டில் அரிசி வாங்கித்தான் சாப்பிடுகிறார்கள். கார்டு கொடுக்கப்பட்டவர்களில் 30 அல்லது 40 சதவிகிதத்தினருக்குத்தான் அரிசி கிடைக்கிறது. "ஸ்கேர் அண்ட் ஸ்கேர்ஸிடி" உள்ள நிலைமையை சர்க்கார் உண்டு பண்ணி விட்டனர். சர்க்கார் இந்த நிலைமையை ஏற்படுத்திவிட்டு மக்களுக்கு வாராவாரம் அரிசி கொடுக்கவும் தவறினால் அவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்? 'ஸ்டாசுடரி ரேஷனிங்' வந்துவிட்டால் கறுப்பு மார்க்கெட் வரும்.

நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இங்கே அரிசி உபரியாக இருக்கிறது. மற்ற மாநில ஜனங்கள் கஷ்டப்படும்போது அவர்களுக்கு நாம் உதவ வேண்டியது தான். நமது மாநிலத்திலுள்ள உபரி தானியத்தை அரசாங்கம் வாங்கி மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம். கண்ட்ரோல் முறையும், ரேஷன் முறையும் வேண்டாம். இந்தக் கருத்தை நான் கனம் முதல் மந்திரியிடம் பல முறை சொல்லியிருக்கிறேன். ரேஷன் முறையும், கண்ட்ரோல் முறையும் திட்டக் கமிஷன் பெற்ற குழந்தைகள். அந்தக் குழந்தைகளை வளர்க்க வேண்டியது திட்டக் கமிஷனின் கடமை தான். எனவே இந்த முறைக்கு கனம் முதல் மந்திரி ஒத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

மக்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆனால் அரசாங்கம் அதிகமாகச் செலவு செய்யாமல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். 1952-ஆம் ஆண்டில் கண்ட்ரோல் எடுக்கப்பட்ட பிறகு 1965-ஆம் ஆண்டு வரையில் மக்கள் அரிசிக்காக தெருத் தெருவாக அலையவில்லை. அரசாங்கம் தலையிட்ட பிறகு தான் இந்த நிலைமை வந்துவிட்டது என்பதை நாம் அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் நமக்கு கண்ட்ரோல் தேவையில்லை. இங்குள்ள அரிசி வெளியே போகாதபடி பார்த்துக்கொள்ளலாம்.

தீர்மானத்தை நான் வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்தத் தீர்மானத்தில் ஒரு தவறும் இல்லை. சென்னையில் ஹோட்டல்களுக்கு அரிசி கொடுக்கப்படுவதில்லை. கண்ட்ரோலை எடுத்துவிட்டால் ஹோட்டல்களுக்கு அரசாங்கம் அரிசி கொடுக்க வேண்டாம்; ஹோட்டல்காரர்களும் அரசாங்கத்தை நம்பி இருக்க வேண்டாம். அவ்வாறு செய்வதாக அரசாங்கம் கூறினால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு கனம் அமைச்சருக்கு என்ன ஆட்சேபம் இருக்கிறது? எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்மென்று கனம் முதல் மந்திரியையும் மற்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களையும் சபையின் மற்ற அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சுதந்திரா கட்சியினால் 'அலெர்ஜி' என்ற ஒரு புது வியாதி எல்லோருக்கும் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்த வியாதிக்கு மருந்து சுதந்திரா

கட்சி தான் என்று சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) விஷத்திற்குக் கூட விஷம் தான் மருந்து. இதை கனம் முதல் மந்திரி அனுபவத்தில் உணர்வார். நேற்று சுதந்திரா கட்சியைப் பற்றி அவர் பேசியபோது அவர் எவ்வளவு ஆத்திரப்பட்டார் என்பதை நாங்கள் கவனித்தோம். நேற்று ஒரு காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் பேச எழுந்தபோது காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் பட்டபாடு காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியும். இந்த நிலையில் உள்ள கட்சி கட்டுப்பாடு தேவை என்று சொல்வதில் ஆச்சரியம் இல்லை. மனிதனுக்கு சுதந்திரம் தேவை என்பதை இவர்கள் உணர்வார்கள். என் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் தலைவர் அவர்களே, கிராமங்களிலுள்ள 'மார்க்கெட்டபில் ஸர்ப்லஸ்' அரிசி பூராவையும் அரசாங்கம் கொள்முதல் செய்துவிட்டால், அங்கு அரிசித் தட்டுப்பாடு வரும் பட்சத்தில் அப்போது கிராம மக்கள் என்ன செய்வார்கள் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சுப்பையா செட்டியார் கேட்டார். கிராம மக்கள் அரிசித் தட்டுப்பாட்டினால் கஷ்டப்படாமல் இருக்கும் பொருட்டு, கிராமங்களில் அரிசி கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தும். அந்த அடிப்படையில் தான் பெரிய மாவட்டங்களான திருநெல்வேலி, ராமநாதபுரம், கோவை ஆகிய மாவட்டங்களில் 'informal rationing' கொண்டு வருவதாக இருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுப்பையா செட்டியார் சில மேற்கோள்கள் காட்டினார்; அவை ஸ்வராஜ்யா பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைபற்றி எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை. காந்தியடிகள் வெளியிட்ட கருத்தை அவர் மேற்கோளாகக் காட்டினார். காந்தியடிகள் கண்ட்ரோல் பற்றி பொதுப்படையாகக் கருத்துத் தெரிவித்தார். அந்தப் பொதுப்படையான கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் காந்திஜீ நமக்கு நிலைமைக்குத் தக்கவாறு யோசனைகளை கூறத் தயங்கியதில்லை. காந்திஜீ அங்கீகாரம் இருந்ததால்தான் காஷ்மீருக்குப் படைகள் அனுப்பப்பட்டன. அந்த அந்த சமயத்தில் சந்தர்ப்பத்தில் காந்திஜீ வெளியிட்ட கருத்துக்களை எப்போதும் பின்பற்ற வேண்டும் என்று ஒருவர் கூறுவாரானால், அவர் காந்திஜீயை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று சொல்லலாம்.

MR. CHAIRMAN : Is the hon. Member withdrawing his resolution?

5-50 p.m. SRI M. SUBBIAH CHETTIAR : I am pressing my resolution, Sir.

MR. CHAIRMAN : The question is—

'This House recommends to the Government to take steps to assure regular supply of rice, wheat and other foodgrains to authorised dealers for distribution to family card holders in mofussil cities, and for the supply of adequate foodgrains to establishments like hotels, factory, canteens, etc.'.

The resolution was put and lost.

(2) *Admissions in schools and colleges.*

*** திரு. க. அன்பழகன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் தந்திருக்கின்ற இந்த மிக முக்கியமான தீர்மானத்தை இப்போது முன் மொழிகிறேன்.

"தகுதியுள்ள மாணவர்களுக்கும் மேற்கொண்டும் படிக்க வேறு வழியில்லாமல் உள்ளவர்களுக்கும் இம்மாநிலத்தில் உள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தொழில் நுட்ப கல்வி நிலையங்களிலும் இடம் கிடைப்பதில்லை என்னும் காரணத்தால் எழுகிற நிலையைச் சரிப்படுத்த வழிவகைகளை ஆராய்வதற்கென நிபுணர்கள் குழு ஒன்றை நியமிக்கலாம் என்று இம்மன்றம் அரசாங்கத்துக்கு பரிந்துரைக்கின்றது."

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்த உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது நமக்கு இன்னும் பத்து நிமிஷங்கள் தான் இருக்கின்றன. நீண்ட வாதத்திற்கு அவகாசம் இருக்காது என்று நினைக்கிறேன். அக்டோபர் கூட்டத்தில் இது வரவேண்டியிருக்கும். ஆகையால் முதலில் இதனுடைய நிலைமையை சுருக்கமாக விளக்க விரும்புகிறேன். அதற்கு மேல் அங்கத்தினர் அவர்கள் பேச வேண்டுமென்றால் பேசலாம்.

மிஸ்டர் சேர்மன் : அதுவும் ஆறு மணிவரையில் தான் பேசலாம். (சிரிப்பு.)

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏனென்றால், இந்தத் தீர்மானம் முடிவு பெறாமல் பத்திரிகையில் வந்தால் ஏதோ ஒரு பயங்கரமான நிலைமை மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற தவறான கருத்து ஏற்படலாம் என்பதற்காக நான் விளக்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்கள் எல்லாவற்றையும் பேச வாய்ப்பான நேரமாக இல்லாவிட்டாலும் தீர்மானத்தின் கருத்து என்னவென்று சொன்னால் தான் தீர்மானத்தினைப்பற்றி அமைச்சர் விளக்கம் தருவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று நினைக்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : தீர்மானத்தில்தான் அது இருக்கிறதே?

திரு. க. அன்பழகன் : இத்தீர்மானம் ஒரு அவசர தீர்மானத்தை ஒத்தது. கொள்கை அடிப்படையில் அமைந்ததல்ல. நிலைமை அடிப்படையில் அமைந்தது. உணவுப் பிரச்னை நம்முடைய நேரத்தை மிகுதியாக எடுத்துக்கொண்டது. இந்தக் கல்விப் பிரச்னைக்கு நேரம் இல்லாது போய்விடுமானால் முதலமைச்சர் அவர்களுக்கும் அப்படிப்பட்ட நேர நெருக்கடி இருக்கும். கல்வித் துறையில் இட நெருக்கடி ஏற்பட்டதால் மாணவர்கள் பல்வேறு கட்டங்களில் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு முன் இதுபற்றி

முதல் அமைச்சர் விளக்கம் தருவதாகச் சொல்வதால் அது பயன் படுமென்று கருதி நான் அதை வரவேற்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில் 300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு ஊருக்கும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள் சேர்க்கக்கூடுமென்ற நிலையை வைத்துக் கொண்டு இன்றைக்கு எத்தனை மாணவர்கள் வருகிறார்கள் என்று பார்த்தால் நூற்றுக்கு நூறு மாணவ மாணவிகள் வந்தாலும் இன்றைக்கே சேர்த்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். 100-க்கு 92 விதம் ஆண்கள் பெண்கள் சேர்த்து ஆறு முதல் பதினோரு வயது மாணவ மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தட்டுப்பாடு வருகிறதென்றால் என்ன அர்த்தம்? குறிப்பிட்ட பள்ளிக்கூடங்களுக்குப் போக வேண்டுமென்று விரும்பலாம். அதில் இடமில்லாமல் இருக்கலாம். அது தவிர ஆரம்பப் பள்ளியில் இடமில்லை என்று சொல்வதற்கில்லை. உயர்நிலைப் பள்ளிகள் ஆண்டுதோறும் அதிகமாகி வருகின்றன. 10 ஆயிரம் ரூபாய் டெபாசிட் என்று முதலில் ஐயாயிரம் ரூபாய் கட்டிவிட்டு பின்னால் பாக்கியை கட்டுவது என்றால் உயர்நிலைப் பள்ளி பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறோம் என்கிறார்கள். அவ்வாறு பல உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டிருக்கின்றன. 500 உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு இந்த ஆண்டு தேவையிருக்காது என்று நினைத்தேன். 150-க்கு மேல் புதிதாக ஏற்பட்டிருக்கின்றன. கல்வி நிபுணர்கள் தரம் குறைந்து விடுமே என்று கவலைப்படுகிறார்கள். தரம் குறையக் கூடாது என்ற கவலை அரசாங்கத்திற்கும் உண்டு. வசதிகளைப் பெருக்குவதிலும், அதற்குத் தகுந்த விஞ்ஞான அறிவு பெற்ற ஆசிரியர்களைப் பெறுவதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உயர்நிலைக் கல்வி குறைந்த பட்ச படிப்பு என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பள்ளியில் சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில் அதிகமாகப்போனால் அங்கே ஒரு நெருக்கடி ஏற்படுகிற மாதிரி தோன்றும். ஆனால் இன்றைக்குச் சொல்வேன். ஆண்டுதோறும் இது நாம் அனுபவிக்கிற ஒரு அனுபவம், நாம் காண்கின்ற காட்சி, கேட்கிற ஒரு குறைபாடு. மாணவர்களுக்கு இடமில்லை என்று பத்திரிகைகள் எழுதும்; போட்டோக்கள் போடுவார்கள். ஏதோ இந்த முறை பத்திரிகைகள் போடவில்லை. அது ஒரு பழக்கமாக—பேஷனாகப் போய் விட்டது. யாராவது மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் இடம் கிடைக்காமல் நிறுத்தப்பட்டார்கள் என்று கனம் அங்கத்தினர் ஏதாவது இருந்து சொன்னால் அதில் மேற்கொண்டு கவனம் செலுத்தலாம். ஆரம்பப் பள்ளியில் இடமில்லாமல் வீட்டில் இருப்பதாக யாரும் சொல்லவில்லை. உயர்நிலைப் படிப்பை எடுத்துக்கொண்டாலும் குறைந்த பட்ச படிப்பு என்ற வகையில் கல்லூரி படிப்பில் எல்லோருக்கும் ஆர்வம் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்லூரி வைக்கிறவர்கள்

வைக்கட்டும் என்றும் அதற்கு ஆதரவு கொடுக்கிறோம் என்றும் சொல்கிறோம். மற்றவைகள் பல்கலைக்கழகம் கவனித்துக் கொள்ளும். அப்படியும் அரசாங்கம் ஒன்றிரண்டு கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறது. மேலும் கல்லூரி அமைக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் செய்கிறோம். கோவையிலிருந்து வந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். நாங்களே அமைக்கவேண்டுமென்றால் அவ்வளவு அதிகமான பொருள் திரட்ட முடியாது; அரசாங்கம் அமைக்க முன்வரவேண்டுமென்றார்கள். கோவையிலிருந்து வந்தவர்கள் அப்படிச் சொன்னார்கள். ஆகையால் இதிலும் கஷ்டமிருக்கிறது. ஐந்து லட்சம் நன்கொடையாக வசூலித்துக் கொடுங்கள், மற்ற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னோம். பெண்களுக்கும் பொதுவாகவும் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் கல்லூரிகள்—இந்த ஆண்டிலும் புதிதாகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நெருக்கடிக்குக் காரணம், குறிப்பிட்ட ஒரு கல்லூரிக்கு மனுப்போடுகிறார்கள். சிலர் நான்கைந்து கல்லூரிக்குப் போடுகிறார்கள். முதலில் வருவதை ஏற்றுக்கொள்கிறார்கள். சரியோ, உண்மையோ என்னவென்று தெரியாது. திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரிக்கு 4,000 மனுக்கள் வந்தன என்று சொல்கிறார்கள். கல்லூரியினுடைய பாராட்டுதலாக இருக்கிறதே தவிர உண்மையில் நெருக்கடி என்று எடுத்துக் கொள்ள முடியாது. செயிண்ட் ஜோசப் கல்லூரிக்கு வந்தால் நல்லது என்று நினைக்கிறார்கள். அதில் கிடைக்கவில்லை என்றால் வேறு ஒன்றுக்கு போகிறார்கள். என்னிடம் சிலர் சிபாரிசுக்கு வருகிறார்கள். நான் யார் சிபாரிசு செய்வதற்கு?

மற்றொன்று, ஸ்கூல் பைனல் பரீட்சை முடிவுகள் தாமதமாக தெரிவிக்கப்பட்டதால் கல்லூரிகளுக்கு அப்ளிகேஷன் போட முடியவில்லை என்றார்கள். வைஸ்-சான்சலருக்கு அதைத் தெரிவித்து மேலும் காலம் வேண்டுமென்று கேட்டோம். ஒப்புக் கொண்டார்கள். அப்ளிகேஷன் ஆகஸ்டு 21-ந் தேதி வரையில் போட காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் ஸ்தானங்களை அதிகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. சென்ற ஆண்டும் அப்படித்தான் செய்யப்பட்டது. சென்ற ஆண்டு மாணவ மாணவிகள் வராமல் போகவில்லை. புதிதாக அமைக்கப்பட்ட கல்லூரிகளில் மனுக்கள் சரியாக வரவில்லை. கல்லூரி மேல் படிப்புக்கு அமெரிக்கா, ஜெர்மனி என்று சிலர் போகிறார்கள். அங்கேயே தங்குகிறார்கள். தங்கள் ஊரில் இடம் வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை சிலர். உள்ளூரில் உள்ளவர்களுக்கும் இடம் கொடுங்கள் என்று பல்கலைக் கழகத்துக்கு தெரிவிக்கப்பட்டது. கல்லூரி ஸ்தானங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்தது. பல்கலைக் கழகமும் அனுமதி தரவேண்டும். அவர்களும் ஓரளவு கொடுக்கிறார்கள். விஞ்ஞான பாடங்கள் அதிகப்படுத்த போதிய வசதியில்லை. கொடுக்க முடியவில்லை என்று தெரிவித்ததாகத் தெரிகிறது. வைஸ்-சான்சலருக்கு எழுதியிருக்கிறது. இது வரையில் இல்லாத வகையில் மாணவர்கள் கல்லூரிகளில் சேர விரும்புகிறார்கள். எப்படியாவது இடம் கொடுக்க வேண்டுமென்று

[திரு. எம். பக்தவத்சலம்] [10th August 1965

அரசாங்கம் கருதுகிறது. விஞ்ஞானப் படிப்புக்கு இடம் கொடுப்பது கஷ்டம் என்று பல்கலைக் கழகம் தெரிவித்தது. ஹியூமானிட்டிஸ் (Humanities)-க்கு இன்னொரு செக்ஷன் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு கடலூருக்கு சென்றிருந்தேன். விஞ்ஞானத்திற்கு ஒரு செக்ஷன் கொடுக்கவேண்டுமென்றார்கள். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்தோம். அனுமதி கொடுத்தார்கள். கல்லூரி பிரின்சுபாலுக்கு தெரிவித்தோம். விஞ்ஞானத்திற்கும் இடம் கொடுக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கோவையில் ஹியூமானிட்டீஸ்க்கு புது செக்ஷன் வேண்டுமென்று கேட்டார்கள். இப்படி நெருக்கடி வருவது கூட நல்லது என்று சொல்லவேண்டும். அதனால் ஹியூமானிட்டீஸ் (Humanities) -க்கும் மாணவர்கள் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும் போதெல்லாம் அதிக அக்கறையுடன் பிரச்னைகள் கவனிக்கப்படுகின்றன. கல்லூரிகளிலே சேரமுடியாமல் போகும் நிலை ஏற்படாது. இந்த ஆண்டிலேயும் அதிகமாகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கென்று ஒரு குழு போட்டு அவர்கள் என்ன செய்யமுடியும்? இருக்கிற நிலைமை இதுதான். ஆகையால் இந்தக் குழுவிற்கு அவசியமில்லை என்று கூறி இந்தத் தீர்மானத்தை கனம் அங்கத்தினர் வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : On a point of information, Sir. சென்னை நகரத்திலே மட்டும் பி.யு.சி. வகுப்பிலே சேர விரும்புகிற மாணவர்களிலே 100-க்கு 25-க்கு மேலே சென்னை நகர மாணவர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை சென்னையிலே இருக்கிறது. இது மிகப் பெரிய நகரமாக இருந்து மக்கள் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால் மற்ற நகரங்களிலே இல்லாத அளவு நெருக்கடி இருக்கக்கூடும். ஏறத்தாழ எந்த அளவு மாணவர்கள் சேர்க்கப்பட இடம் இருக்கிறதோ அதை அதிகப்படுத்தி P. U. C வகுப்பில் விஞ்ஞானப் பகுதியிலே சென்னையிலே, மேலும் 500 மாணவர்களையாவது பல்வேறு கல்லூரிகளிலே சேர்க்க அமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத்தின் மூலம் வழி செய்ய வேண்டும். குறிப்பாக விஞ்ஞானப் பயிற்சிக்கு (லெபாரடரி) பயிற்சிக்கூடங்கள் போதுமான அளவு இல்லை என்று சொல்கிற காரணத்தால் விஞ்ஞான மாணவர்கள் வெவ்வேறு நேரத்திலேயாவது காலை 8 மணிக்கோ, மாலை 5½ மணி வரை இருந்தோ பயிற்சி பெறத்தக்க வகையிலே 500 மாணவர்களுக்குப் புதிதாக இடம் கிடைக்க வழி செய்து இந்த நெருக்கடியைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சென்னை நகரிலே 100-க்கு 25 பேருக்கு இடம் கிடைக்கவில்லை என்றால் 75 பேருக்கு இடம் கிடைக்கக்கூடும். எல்லோருக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. இப்பொழுது பாலிடெக்னிக் பற்றி தீர்மானத்திலே இருக்கிறது. இன்ஜினீயரிங் இன்ஸ்டிட்யூஷன் இருக்கிறது.

10th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

எல்லாவற்றுக்கும்தான் போகவேண்டும். எந்த நாட்டிலேயும் மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணுகின்றவர்களுக்கெல்லாம் கல்லூரியிலே இடம் கொடுக்க ஏற்பாடு செய்வதில்லை. இருந்தாலும் எவ்வளவு தூரம் கல்லூரிகளிலே ஸ்தாபனங்களை அதிகப்படுத்த முடியுமோ அதுபற்றி பல்கலைக் கழகத்தோடு தொடர்ந்து பேசி அது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ அதைச் செய்ய அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்று கூறி வேறு விவரங்களை பின்னாலே தெரிவிக்கிறோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Discussion on the resolution will be continued on the next non-official day.

The House will now adjourn and meet again at 3 p.m., tomorrow.

The House then adjourned. 6-20 p.m.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 190 *Notification issued with G.O. Ps. No. 1497, Revenue, dated 8th May 1965 making amendments to the Madras General Sales Tax Rules, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

* 191. *Notification issued with G.O. Ms. No. 1018, Education, dated 14th June 1965 approving the list of all the parks and play-fields set out in the area within the jurisdiction of the Padmanabhapuram Municipal Council in Kanyakumari district. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act XXVI of 1959).]*

* 192 *Notification issued with G.O. Ms. No. 918, Education, dated 1st June 1965 approving the list of all the parks and play-fields set out in the area within the jurisdiction of the Tiruppattur Municipal Council in North Arcot district. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act XXVI of 1959).]*

B. Reports, notifications and other papers.

* 35. *Answer to Legislative Assembly question relating to the particulars of total fish catches for a period of one year during 1963–64 and the steps taken to increase the production of fish in this State.*

* 36. *Reports of the Estimates Committee of the Madras Legislative Assembly on Khadi and Village Industries and Industrial Estates.*

---

* **Laid on the Table of the House on 9th August 1965.**

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Wednesday, the 11th August 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Grade I Sanskrit Pandits

* 101 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state whether Grade I salary is allowed to a Sanskrit Pandit of Grade I qualification handling Higher Forms as the only Sanskrit Pandit in the High Schools, irrespective of the rule of 17 hours work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Grade I scale of pay is allowed to a Sanskrit Pandit of Grade I qualification handling Higher Forms, if there is only one Pandit, irrespective of the rule regarding 17 hours of work, provided he was in service prior to 1st January 1948.

SRI G. KRISHNAMOORTHY : Sir, under what conditions is a Second I Grade Pandit allowed in respect of Sanskrit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Notice, Sir.

SRI G. KRISHNAMOORTHY : Are the rules applicable to the regional language, that is, Tamil, applicable to Sanskrit also in respect of the Sanskrit Pandit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI G. KRISHNAMOORTHY : Sir, in view of the encouragement that is proposed to be given by the Government to Sanskrit, will they extend the same rules as are applicable to Tamil to Sanskrit also in respect of the appointment of I Grade Pandit?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

Non-teaching staff in Secondary Schools

* 102 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any representation has been received from the non-teaching staff in Secondary Schools in Madurai district as regards revision of pay scales and service conditions; and

(b) if so, the action taken thereon?

[11th August 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under consideration.

SRI S. K. SAMBANDHAN : Sir, this is a grievance of all the non-teaching staff in all the schools in the State. Is there any proposal before the Government to come to a quick decision at a very early date?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have stated that the matter is under consideration.

SRI S. K. SAMBANDHAN : Sir, it is the habit of the Government to say "It is under consideration", for years. Will the Government say that they have any proposal before them for giving them any concession or remuneration as they have asked for it, instead of saying for years that it is under consideration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is difficult, whether it is the Government or anybody else, to give up one's habits.

SRI S. K. SAMBANDHAN : Sir, are the Government aware that the cuts in respect of the non-teaching staff have not yet been restored, and, if so, what are the reasons for it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no particulars about it. The hon. Member may put a separate question.

Ranganathaswami temple, Srirangam

* 103 Q.—SRI M. SUBBIAH CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the rampart walls of the Ranganathaswami temple, Srirangam, are in a very dilapidated condition with stones falling from them and endangering the life of people living nearby;

(b) whether the Government have examined the present condition of the walls;

(c) the steps proposed to be taken to keep the walls in good condition; and

(d) the agency to which the responsibility of maintaining them in good repairs has been entrusted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The Chief Engineer (Buildings) after inspection has stated that the walls constitute a danger to the public to a certain extent.

(b) & (c) The Chief Engineer has given instructions to destroy all the live plants grown over the rampart walls. The Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration Department), Madras, who was requested to inspect the premises along with the Executive Engineer, Tiruchirappalli Division, a representative of the temple, and the Municipal

11th August 1965]

Commissioner, to discuss the matter and suggest some workable proposition at the minimum cost in order to avert any possible danger to the public safety, has since submitted his report and it is under scrutiny of the Government.

(d) The matter is under consideration of the Government.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, is it a fact that the ownership of the walls is being disputed and ownership is not acknowledged either by the temple or by the municipality, and, if so, may I know to whom do the walls belong?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is rather an anomalous and confusing position. Adjoining the walls, houses have come up, and there are private residents in those houses. To-day these walls are no-man's property, as a matter of fact. It is very difficult to repair the walls. It is costlier to demolish them. Taking all these into consideration, an estimate has been prepared to repair them and to remove some portion. This estimate comes to a lakh and ten thousand rupees. Now, the Government are considering how the repairs should be carried out in order to avoid public danger.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பழுதுபட்டிருக்கிற இடங்களில் ஆபத்து வரும்போது அதையொட்டிய இடங்களில் குடியிருப்பவர்கள் அங்கில்லாமல் அதைவிட்டு நீங்கிவிடவேண்டு மென்றும் பொதுமக்கள் அந்த இடங்களிலே வரக்கூடிய நிலைமை இருந்தால் அது 'ஆபத்தான இடம், நெருங்காதீர்கள்' என்று அந்த இடங்களில் அறிவிப்பு போடச்செய்ய உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொஞ்ச நாட்கள் முன்பு அங்கு போய்ப் பார்த்து எந்த எந்த விழும் நிலையில் உள்ளதோ அங்கெல்லாம் மார்க் செய்யப் பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களும் அங்கே குடியிருக்கிறார்கள். பப்ளிக் ஹெல்த் இலாகாவினர் ஆபத்து இல்லாமல் பார்த்துக்கொள்ள என்ன செய்யவேண்டுமென்று கவனித்துக்கொள்கிறார்கள். ஆபத்தைத் தவிர்க்க ரிப்பேர் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, does this come under the purview of the Public Buildings Licensing Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am not quite aware of the provisions of the Public Buildings Licensing Act. It is not a question of licensing here. Here is an old wall, and the experts in archaeology say that there is nothing in the wall which has to be preserved except some towers, from the archaeological point of view. Nobody cares to own the walls; and removing the walls appears to be too costly.

SRI M. SUBBIAH CHETTIAR : In view of the explanation given by the Chief Minister that removal of the walls is costlier

[11th August 1965

than repair, will the Government take steps to prevent damage to the adjoining houses and the people therein without any further delay? Will they do the job quickly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In the circumstances, the Chief Engineer has been asked to prepare an estimate, and the estimate has been submitted. It is under the consideration of the Government.

Petroleum investigation

*104 Q.—SRI K. S. ABDUL WAHAB: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the latest position of petroleum investigation near Pudukottai;

(b) the depth to which boring has been done; and

(c) the quantity of petrol expected if the venture is successful?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) to (c) The Oil and Natural Gas Commission conducted driling operations for oil in Pattukottai area of Thanjavur district. To obtain sub-surface geological information about the rock formations at depth, two structural wells were dug in the area near Pattukottai. Drilling had, however, to be discontinued at a depth of 839 metres as against the projected depth of 1,200 metres due to drilling difficulties. Another well which was drilled up to 988 metres near Pattukottai was closed on 13th April 1965 after being logged and plugged. The results of the investigations are awaited.

SRI K. S. ABDUL WAHAB: Sir, may I know the amount spent so far on this investigation and the estimated cost of the total amount to complete this investigation.

THE HON. SRI R. VENKATARAMAN: The project is being conducted by the Government of India. Details with regard to the expenditure, cost, etc., will be available only with the Government of India.

SRI M. SUBBIAH CHETTIAR: Sir, the question deals with Pudukottai though the Hon. Minister has given the answer with reference to Pattukottai. Is there any possibility of getting petrol in Pudukottai area?

THE HON. SRI R. VENKATARAMAN: I thought it was a misprint in the hon. Member's question. Though I could have merely said "No", taking advantage of the typographical error, I said that there was a project in Pattukottai.

SRI M. SUBBIAH CHETTIAR: The Food Minister was reminding us about getting water to Pudukottai. If petrol is not available, at least will Government think of getting the Cauvery water to Pudukottai?

11th August 1965]

THE HON. SRI R. VENKATARAMAN: It is not relevant to the question. We are in a different question.

MR. CHAIRMAN: We are on petrol now.

Bauxite

*105 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state— 3-10 p.m.

(a) whether bauxite is found in Madurai district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) Yes, Sir. Deposits of bauxite have been discovered in the Western Ghats ranges between Kodaikanal and the Top Station. The State Geological Branch of the Industries Department is investigating the area and the work is under progress. The final reserves of the bauxite occurrences can be estimated only when investigations in all the hills have been completed and chemical analysis of the ore is carried out.

SRI S. K. SAMBANDHAN: What is the quantity of bauxite that is available in that area?

THE HON. SRI R. VENKATARAMAN: It is estimated roughly that there will be two million tonnes of bauxite in that area.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே கிடைக்கிற 'பாக்சைட்'டிலிருந்து எடுக்கப்படுகிற அலுமினிய தாது அளவு நூற்றுக்கு ஐம்பது விழுக்காடுக்கு மேல் இருப்பதாகத் தெரிகிறது. சேலத்தில் கிடைப்பதைவிடச் சிறந்தது என்றும் குறிப்பிட்டிருப்பதால் அந்த பாக்சைட்டைக் கொண்டு அலுமினிய உற்பத்தி செய்ய அங்கு பொதுத்துறையில் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே அமைப்பதற்கு உத்தேசமில்லை. அது கட்டுபடியாகாது. சாதாரணமாக உலகத்தில் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் குறைந்த பட்சம் 30 ஆயிரம் டன் இருந்தால்தான் கட்டுபடியாகும் என்றிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற தொழிற்சாலை 10 ஆயிரம் டன்தான். அதிகமாகப் பாக்சைட் கிடைத்தால் அலுமினியமாக 'கன்வர்ட்' செய்து அந்தத் தொழிற்சாலைக்குத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கும்.

திரு. க. அன்பழகன் : அகில இந்திய தேவையைக் கருதிப்பார்த்தால் நமக்குக் கிடைக்கிற அலுமினியம் குறைவாக இருப்பதால் குறைந்த பட்சத்தில் உள்ள திட்டமாக இருந்தாலும் அதற்கு ஒரு திட்டத்தை மேற்கொள்ள மறுபரிசீலனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'நாங்கள் இதை எடுத்து உபயோகப்படுத்தப் போகிறோம்' என்றுதான் சொன்னேன். சர்க்கார் துறையில் செய்தால் கட்டுபடியாகாது என்றேன். அங்கு

[11th August 1965

10 ஆயிரம், இங்கு 10 ஆயிரம், என்று சிறு சிறு பாக்டரிகளாக வைக்க முடியாது என்றுதான் சொன்னேன்.

Cattle disease

* 106 *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of cattle that died due to diseases during 1964 and till April 1965 in the Kanyakumari district, taluk-wise;

(*b*) the percentage of increase, if any, in death toll in the year 1965 when compared to 1964;

(*c*) the reasons therefor;

(*d*) the steps taken by the Government to arrest the same; and

(*e*) the total loss sustained by the agriculturists due to the infectious disease?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*e*) A statement [a] is placed on the table of the House.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலிருந்து தோவாளை தாலுகாவில் சென்ற ஆண்டைவிட ஆறு மடங்கு கன்று காலிகள் இறந்திருப்பதாகத் தெரிகிறது தடுப்பு ஊசிகள் போட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நோய் வாய்ப்பட்டு இறந்த மாடுகளை மேய்ச்சல் தரைக்கு எடுத்துச் சென்று வேலை செய்கிறவர்கள் அவற்றின் தோலை எடுத்துவிட்டு மற்றதை புதைக்காமல் விட்டுப் போவதால் அந்த நோய் பரவுகிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதைத் தடை செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. பி. கக்கன் : அந்த மாதிரி என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. கோமாரி வியாதியால் பாதிக்கப்பட்டதால் இந்த சேதம் ஏற்பட்டதாகத்தான் தகவல் வந்தது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை நோய் பரவுவது இறந்து போன மாடுகளின் தோல்களை உரித்து, உடலைப் புதைக்காமல் மேய்ச்சல் தரையில் விட்டு விடுவதால் என்பது தெரிகின்றது. பஞ்சாயத்துக்கள் மூலம், இறந்த மாடுகளை புதைப்பதற்கு இடம் அமைத்து வரி விதித்தால் பஞ்சாயத்துக்கு வருவாய் வரவும் வழி ஏற்படும். நோயைத் தடுப்பதற்கும் உதவும் என்பதால், அதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

கனம் திரு. பி. கக்கன் : அங்கத்தினரின் யோசனை இது.

Prices of paddy

* 107 *Q.*—SRI M. RAJAH IYER : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the rates fixed by the Government for paddy procured in the districts of Madurai and Ramanathapuram during 1st January 1965 to 1st June 1965; and

(*b*) the reason for the disparity in prices, if any?

---

[a] Printed as Appendix I on pages 44–45.

11th August 1965]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The maximum prices fixed by Government of India for Kattai Samba paddy, a variety of paddy which is mostly consumed in Madras State is Rs. 39·50 per quintal. Based on this, the prices of other varieties of paddy have been worked out and this Government have notified the maximum prices of paddy for different varieties which will apply to the entire Madras State. No separate rates have been fixed by the Government for Madurai and Ramanathapuram districts.

(*b*) Does not arise.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, how many varieties of rice are available in Ramanathapurm district and what prices have been fixed for each variety?

THE HON. SRI V. RAMAIAH : I have just now stated that different varieties of rice are catalogued and prices are fixed. It does not vary from district to district.

Bus signal boards

* 108 *Q.*—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Highways Department has been entrusted with the work of distributing bus signal boards to panchayats and municipalities; and

(*b*) if so, the designation of the officer-in-charge of the work?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Highways and Rural Works Department has not been specifically entrusted with the work of distributing bus signal boards to panchayats and municipalities. The municipalities and the panchayats get the required number of traffic signs from the Highways and Rural Works Department. The Divisional Engineer (Highways and Rural Works), Transport and Machinery Division, Madras, is in charge of manufacturing the traffic signs and supplies them to the municipalities and panchayats on specific requisition from these local bodies.

SRI S. K. SAMBANDHAN : Is it not possible to have some stocks in the district so that the panchayats or municipalities concerned can get it easily?

THE HON. SRI V. RAMAIAH : The Government have not received any complaint regarding lack of supplies.

Kanyakumari District Headquarters Hospital

* 109 *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of doctors serving in the Kanyakumari District Headquarters Hospital;

(*b*) the number of specialists among them; and

(*c*) whether any separate E.N.T. and Ophthalmic Departments have been opened?

[11th August 1965

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Thirteen Medical Officers including the District Medical Officer and the Assistant District Medical Officer.

(b) One specialist in Obstetrics and Gynæcology.

(c) No, Sir.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, நாகர்கோயில் தலைமை மருத்துவ மனை மாவட்ட தலைநகரிலுள்ள மருத்துவ மனையாக இருப்பதால் அங்கு காது, மூக்கு, தொண்டை, கண் ஆகியவற்றைக் கவனிக்கக்கூடிய நிபுணர்களை நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரியிலும் தனிப்பட்ட முறையில் 'இ.என்.டி.' கிளினிக் இருக்கிறது. Ophthalmology ஏற்படுத்துவது தற்போதிருக்கிற நிலைமையில் உடனடியாக இல்லாவிட்டாலும் Phased programme ஆக நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : வேறு ஏதாவது மாவட்ட தலைநகரில் இந்த நிபுணர்கள் இல்லாத மருத்துவமனை உண்டா ?

மிஸ்டர் சேர்மன் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொருத்ததுதான் கேள்வி.

Kanyakumari District Headquarters Hospital

* 110 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any ambulance facility for transporting sick persons from different places to the Kanyakumari District Headquarters Hospital; and

(b) if not, whether there is any proposal to introduce such ambulance facility?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) An ambulance van is proposed to be sent to the hospital.

UNSTARRED QUESTIONS.

Well subsidies

6 Q.—SRI J. PONNUSWAMY VILLAVARAYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the basis on which well subsidies are sanctioned to Scheduled Castes and Scheduled Tribes;

(b) the amount of subsidy sanctioned by the Government during 1963–64;

(c) the number of wells for which subsidies were granted during 1963–64; and

(d) whether the construction of all these wells **has been completed?**

11th August 1965]

A.—(a) The Scheduled Castes or Scheduled Tribes agriculturists in possession of lands not less than 2 acres in extent are eligible for the grant of subsidy for sinking of irrigation wells. The beneficiaries are selected by lot system.

(b) Rs. 3,06,000.

(c) Two hundred and twenty-two.

(d) No. One hundred and forty-seven wells have been completed so far and the construction of the remaining 75 wells is in progress.

பதில்.—

(அ) இரண்டு ஏக்கருக்குக் குறையாத நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கும் ஹரிஜன அல்லது ஆதிவாசி உழவர்கள் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு உதவித் தொகை பெறலாம். இவர்கள் சீட்டுக் குலுக்கு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

(இ) ரூ. 3,06,000.

(உ) 222.

(ஏ) இல்லை. இதுவரையில் 147 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 75 கிணறுகள் தோண்டும் வேலை நடந்து வருகிறது.

Five-Year Plan Publicity

7 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) the amount allotted for the Five-Year Plan Publicity during the current year district-wise; and

(b) the total amount spent on the Five-Year Plan Publicity Week celebrated in April 1965 in Kanyakumari district?

A.—(a) The amount allotted for the Five-Year Plan Publicity during the current year (1965–66) district-wise, is as detailed below :—

Name of district.	*Amount allotted.*
	RS.
Chingleput	3,000
North Arcot	2,500
South Arcot	3,000
Salem	5,000
Coimbatore	3,500
The Nilgiris	1,000
Madurai	4,000
Thanjavur	3,500
Tiruchirappalli	3,500
Ramanathapuram	3,000
Tirunelveli	3,000
Kanyakumari	1,000

(b) A total amount of Rs. 1,000 has been spent on the Five-Year Plan Publicity Week celebrated in Kanyakumari district in April 1965.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS

(1) Message from the Governor.

Mr. CHAIRMAN : I have received messages from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of the following Bills :—

(1) The Madras Appropriation (No. 4) Bill, 1965.

(2) The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965.

(3) The Madras (Transferred Territory) Extension of Laws Bill, 1965.

(2) Message from the Assembly.

Mr. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India :—

(1) The Madras Appropriation (No. 4) Bill, 1965 (L.A. Bill No. 21 of 1965).

(2) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 24 of 1965).

(3) The Madras (Transferred Territory) Extension of Laws Bill, 1965 (L.A. Bill No. 26 of 1965).

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council :—

(1) The Madras Buildings (Lease and Rent Control) (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 23 of 1965).

(2) The Madras Land Encroachment (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 12 of 1965).

(3) The Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 25 of 1965).

(4) The Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965).

(5) The Cotton Ginning and Pressing Factories (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 28 of 1965).

(6) The Indian Partnership (Madras Amendment) Bill, 1965 (L.A. Bill No. 27 of 1965).

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following resolutions as passed by the Assembly on August 11, 1965 :—

(1) "That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Public Accounts of this House for the year 1965–66 and communicate to this House the names of the Members so nominated."

(2) "That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1965–66 and communicate to this House the names of the Members so nominated."

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion as passed by the Assembly on 10th August 1965 for the setting up of a Joint Select Committee of both the Houses consisting of 18 Members (12 Members of the Legislative Assembly and 6 Members of the Legislative Council) to consider the Madras Medical Practitioners Bill, 1965 (L.A. Bill No. 22 of 1965) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1 The Hon. Srimathi Jothi Vencatachellum.
2 Sri K. S. G. Haja Sheriff.
3 Sri P. Ramachandran.
4 Sri M. Alagiriswamy.
5 Sri P. R. Sreenivasa Padayachi.
6 Sri R. Ponnappa Nadar.
7 Sri K. P. Palaniswamy.
8 Sri R. Rangaswamy.
9 Sri Rama Arangannal.
10 Sri S. Murugaiyan.
11 Sri K. R. Nallasivam.
12 Sri P. K. Mookiah Thevar.

III.—STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES.

* The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I wish to make the following statement :—

During the discussion on the Madras State Electricity Board Budget on the floor of this House on the 3rd August 1965, the hon. Member Sri K. Anbazhagan stated that the date of birth of the Personnel Officer had been corrected in the establishment list of the Madras State Electricity Board. In my reply I had stated that the alteration in the date of birth in the Service Register was approved in 1938, about 27 years ago, by the then Chief Engineer

[Sri R. Venkataraman] [11th August 1965

(Electricity), and that I shall personally examine the records. I have since looked into the records relating to the case. The position is as follows :—

The officer entered service on 3rd February 1936 as temporary typist in the Madras Record Office. His date of birth was recorded as 11th October 1916 in his service register based on the entry appearing in his S.S.L.C. book. On 27th July 1936, he joined the office of the Chief Engineer for Electricity as typist. On 15th February 1938, he applied to the Chief Engineer for Electricity for the alteration of his date of birth recorded in his Service Register as "12th October 1917" stating that the entry in his S.S.L.C. book was not correct. He produced an extract from the Birth Register of the Corporation of Madras in support of his request. I have the record also with me. Under the Fundamental Rules the Chief Engineer was competent to alter the date of birth of the non-gazetted staff. The alteration of the date of birth as 12th October 1917 was approved and attested in the Service Register by the then Deputy Chief Electrical Engineer, Mr. E. J. B. Greenwood, on 1st April 1938. Obviously the correction was not carried out in the establishment list of the department till 1953. This is the record which the hon. Member relies on. The correction has been made in the establishment list of the then Electricity Department of the Government of Madras as on 1st October 1953 printed in 1954. The Government are satisfied that the corrections made are sustained.

IV.—GOVERNMENT MOTIONS

(1) ASSOCIATION OF FIVE MEMBERS WITH THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS OF THE LEGISLATIVE ASSEMBLY.

3.20 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I move—

"That this House nominates the following five Members to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1965–66 :—

1 Sri S. K. Sambandhan.

2 Sri N. V. Natarajan.

3 Sri A. Sambasiva Reddiar.

4 Sri K. Rajaram.

5 Sri M. Ethirajulu."

MR. CHAIRMAN : The question is—

"That this House nominates the following five Members to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1965–66 :—

1 Sri S. K. Sambandhan.

2 Sri N. V. Natarajan.

3 Sri A. Sambasiva Reddiar.

4 Sri K. Rajaram.

5 Sri M. Ethirajulu."

The motion was put and carried.

11th August 1965]

(2) ASSOCIATION OF FIVE MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES OF THE LEGISLATIVE ASSEMBLY.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I move—

"That this House nominates the following five Members to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1965–66 :—

1 Sri K. Anbazhagan.

2 Sri M. Subbiah Chettiar.

3 Sri K. K. Kothandaraman.

4 Sri N. R. Thiagarajan.

5. Srimathi S. Manjubashini."

MR. CHAIRMAN : The question is—

"That this House nominates the following five Members to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1965–66 :—

1 Sri K. Anbazhagan.

2 Sri M. Subbiah Chettiar.

3 Sri K. K. Kothandaraman.

4 Sri N. R. Thiagarajan.

5 Srimathi S. Manjubashini".

The motion was put and carried.

V—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 16 OF 1965)—*cont.*

MR. CHAIRMAN : We will now take up the clause-by-clause consideration of the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965. There are no amendments to clauses 2 to 12. I will put the clauses together.

Clauses 2 to 12 were put and carried.

Clause 1.

MR. CHAIRMAN : The motion is—

'That clause 1 do stand part of the Bill'.

SRI S. K. SAMBANDHAN : Mr. Chairman, Sir I move—

"*For* sub-clause (2) of Clause 1, the following be *substituted* :—

'(2) Except section 5 which shall come into force after three years from the date of assent given by the Governor, all other sections shall come into force on such date as the State Government may, by notification, appoint'."

SRI G. KRISHNAMOORTHY : I second the amendment, Sir.

[11th August 1965

* SRI S. K. SAMBANDHAN : Mr. Chairman, Sir, the purpose of my amendment is that Clause 5 of the Bill should come into operation three years after the Bill has received the assent of the Governor.

Sir, the provisions of the Bill have already been discussed in great detail during the first reading stage of the Bill. I feel there is no necessity to bring in such a Bill with such a clause under the present circumstances with power to supersede the Corporation for abuse of power, neglect of duty, and so on and so forth. It has been pointed out very clearly that the powers now vested in the municipal authorities are not even sufficient. When that is the case, it is not fair on the part of the Government to take power for superseding the Corporation in case there is neglect of duty on their part. Even now the Government have sufficient powers and authority to call for explanations, call for records, and take action wherever and whenever necessary; whether it is the Corporation or any other local authority. While that is so, there is no need for this clause (clause 5) empowering the Government to supersede the Corporation under certain circumstances. As I pointed out in my speech during the first reading stage of the Bill, the Government themselves do not act diligently or reasonably. That is the main reason why I object to such a clause being put in the Bill. People like me will welcome the Government taking such a power in their hands, if they are acting reasonably. So far as I can understand, even in small things, the Government take a partial view, prejudiced view mainly basing their views on political motives. Therefore if such power is vested in the Government, it may lead to unwanted action on the part of the Government. So it would be better if the Government themselves do not take such powers. If they think it is absolutely necessary to take such powers into their hands, considering the present circumstances, I should say that it should be postponed for at least another three years till the next elections for the Corporation are over so that the people who are elected —it may be any party, the present ruling party or any other party—may apply their minds to it. And I am sure the people of the City will take care to elect the proper people, and the people so elected, will be more responsible. Thinking they have this power in their hands, the Government should not do anything which is against the interests of the people. So I would request the Government to agree to accept this amendment, so that this particular clause will come into force only after three years after the Bill receives the assent of the Governor.

* திரு. க. அன்பழகன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முதலில் நான் தந்துள்ள திருத்தத்தை முன்மொழிகிறேன்.

" *For* sub-clause (2) of clause I, the following be *substituted* :—

' (2) Except section 5, which shall come into force after five years from the date of assent given by the Governor, all other sections shall come into force on such date as the State Government may, by notification, appoint'."

11th August 1965]

The amendment was duly seconded.

* திரு. க. அன்பழகன் : இந்தத் திருத்தத்தின் நோக்கம் இதைக் காண்கிறபோதே மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்குத் தெளிவாக விளங்கும் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவே நிறைவேற்றப் படக் கூடாது என்பது கூட இந்தத் திருத்தத்தின் நோக்கம் என்று சொல்லலாம். மாநகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம், இந்த மசோதாவின் மூலம் வகுத்துக்கொள்வதை நான் எதிர்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்த வழிமுறைகளை எதிர்க்கவில்லை. 2-வது பிரிவிலிருந்து 12-வது பிரிவுவரையில் நாங்கள் திருத்தங்கள் தராத தற்கு முக்கியமான காரணம் அதுதான். மாநகராட்சி அதிகாரி களையும் மாநகராட்சி இலாகாத் தலைவர்களையும் அரசாங்கம் மாற்று வதையோ, அவர்களை அரசாங்கம் நியமிப்பதையோ, மாநகராட்சி நிர்வாகத்தில் குறைகள் ஏற்படுவதை அரசாங்கம் தவிர்ப்பதையோ நான் எதிர்க்கவில்லை ; அதையெல்லாம் நான் வரவேற்கிறேன் ; அந்த வகையில் கொண்டுவரப்படும் திருத்தங்களால் உண்மை யிலேயே மாநகராட்சி நிர்வாகம் மேலும் சீரடுத்தப்படும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன். ஐந்தாவது பிரிவு இன்னும் ஐந்தாண்டு காலம் வரையிலாவது அமலுக்குக் கொண்டுவரப்படக்கூடாது என்று நான் சொல்வதற்குக் காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட சட்ட மன்றத்தைப் பெரிதும் மதிக்கும்போது, மக்களால் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இன்னொரு மன்றமாகிய மாநகராட்சி மன்றத்தை கேலிக் கூத்தாக ஆக்கக்கூடாது என்ற நோக்கம்தன். மாநகராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் எத்தனை மக்களால் தேர்தெக்டுக்கப் படுகிருரோ அதைவிட அதிகமான மக்களால் சட்ட மன்ற உறுப் பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இரு மன்றங்களும் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவைதான். மக்களால் தேர்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட மன்றங்களைக் கலைப்பது என்பது அவ்வளவு எளிதாக அரசாங்கம் மேற்கொள்ளத் தக்கது அல்ல. " அந்தச் செயலை மேற்கொள்ளத்தான் செய்வோம் " என்று ஆட்சியாளர்கள் கூறுவார்களானால், அதை நான் தடுக்க முடியாது. ஆனால், அந்தச் செயல் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்ட மன்றத்தைச் சிறுமைப்படுத்துவதாக ஆகும். மாநகராட்சி மன்றத்தின் நடவடிக்கைகள் உசிதமானவை யாகத் தோன்ருவிட்டால், அதற்குக் காரணம் கேட்டு, மன்றத் தினர் கொடுக்கும் விளக்கம் திருப்திகரமானதாக இல்லை என்று சொல்லி, மாநகராட்சி மன்றத்தைக் கலைக்கும் high handed action— -ஐ எடுக்க தான் தாம் விரும்பியபடி நடவடிக்கை எடுக்க 5-வது பிரிவில் கேட்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்கள் அரசாங் கத்திற்கு உரிமை அளிக்கின்றன. இந்த அதிகாரங்கள் அரசாங் கத்திற்கு ஒருநாளும் இருக்கக் கூடாது என்று கூறினால், மதிப்பிற் குரிய அமைச்சர்கள் அதை மறுப்பார்கள் ; மாநகராட்சியில் மிகப் பெரிய குற்றங்கள் நடந்தால், இத்தகைய அதிகாரங்கள் இல்லாத அரசாங்கம் என்ன செய்வது என்று அவர்கள் கேட்பார்கள். இந்த அதிகாரங்களை அரசாங்கம் கோரும்போது, தேர்தல்

[திரு. க. அன்பழகன்] [11th August 1965

காலத்திலேயே, இந்த அதிகாரத்திற்கு உட்பட்டே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை மாநகராட்சி உறுப்பினர்களாக வருகிறவர்கள் உணர்ந்து அங்குவரக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும்.

மாநகராட்சியினரால் கட்டப்பட்ட பல வீடுகளை ஒதுக்கும் விஷயத்தில் மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்தைப்பற்றி மதிப்பிற்குரிய அமைச்சர் குறிப்பிட்டார். இதற்கு முன்பு மாநகராட்சியால் வீடுகள் கட்டப்பட்டுப் பலருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் கூட இன்னாருக்கெல்லாம் வழங்கப்படவில்லை என்ற குறை எழுந்தது. அதேபோன்ற குறைதான் இப்போதும் எழுந்திருக்கிறது. மாநகராட்சி மன்றம் தீர்மானித்தபடி வீடுகள் வழங்கப்பட்ட பிறகு அரசாங்கத்திற்கு அதுபற்றி மனு வந்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் சீட்டுப் போட்டு வீடுகளை வழங்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. இன்ன முறையில் அவைகள் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஏற்கெனவே தெரிவித்து அதற்குப் பிறகு மாநகராட்சி மன்றம் அவைகளை வேறு முறையில் வழங்கியிருந்தால், மதிப்பிற்குரிய அமைச்சரின் குற்றச்சாட்டு பொருத்தமானதாக இருக்கும். இதற்கு முன்பு வீடுகளை மாநகராட்சி எந்த முறையில் வழங்கினாலும் அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் வீடுகள் யாருக்குக் கொடுக்கப்பட்டன என்ற பிரச்னை எழுந்தது. அந்தப் பிரச்னை எப்போதும் எழுப்பப்பட முடியும். இந்த விஷயத்தில் மாநகராட்சி மன்றத்தின் தீர்மானமும் இதுவரை அரசாங்கத்தால் ரத்து செய்யப்படவில்லை. அது ரத்து செய்யப்படும் வரையில், வீடுகளை வழங்கும் விஷயத்தில் இன்னொரு முறையைக் கையாளவேண்டும் என்று அரசாங்கம் தெரிவித்தாலும் செயல்பட முடியாது. ஏற்கெனவே இருந்த முறைப்படித்தான் எல்லா வீடுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால் இந்த முறையை இனிமேல் மாற்றலாமேயொழிய, நட்பு முறை தங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதால் மாநகராட்சி மன்றத்தை கலைப்பதற்காக இப்படிப்பட்ட திருத்த மசோதாவைக் கொண்டுவருவது சரியல்ல. மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுவது பற்றி நான் உண்மையில் கவலைப்படவில்லை. மாநகராட்சியில் இருப்பதால்தான் அரசியல் நடத்த முடியும் என்று ஒரு அரசியல் கட்சி கருதுமானால், அதைவிட இழுக்கு அந்த அரசியல் கட்சிக்கு வேறெதுவும் இருக்க முடியாது என்று கூறுவேன். இருந்தாலும் இந்த ஜனநாயக நாட்டில் மாநகராட்சி மன்றத்தில் ஒரு கட்சி சில ஆண்டு காலமாக அதிகாரத்தில் இருக்கும்போது ஆளும் கட்சியினர் தங்களுக்குச் சட்டசபையில் உள்ள செல்வாக்கினால் இந்த மசோதாவை இங்கே சட்டமாக நிறைவேற்றி விட்டால், அதன் விளைவு பொதுமக்களுக்குத் திருப்தியளிப்பதாக இருக்காது என்பது குறித்து வருத்தப்படுகிறேன். எனவே அரசாங்கம் "ஸூபர்ஸீடிங் பவர்ஸ்"-ஐ எடுத்துக் கொள்வதற்கான பகுதியை ஐந்தாண்டு காலம் நிறுத்திவைக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். அன்பழகன் சொல்லுவதை ஏற்றுக்கொள்ள விருப்பம் இல்லாவிட்டால் திரு. சம்பந்தன் தந்துள்ள திருத்தத்தின்படி மூன்றாண்டு காலமாவது இந்தப்

11th August 1965] [திரு. க. அன்பழகன்]

பிரிவை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சியினர் சொல்வதை ஏற்றுக்கொள்ள ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லையானால் "அடுத்த தேர்தல் வரையில் மாநகராட்சி மன்றத்தைக் கலைக்க மாட்டோம்" என்று அவர்கள் சொன்னால், நன்றாக இருக்கும். அப்படிச் சொன்னால்தான் அது அவர்களுக்கு ஜனநாயகத்தில் உள்ள நம்பிக்கையைக் காட்டும் சிறந்த பண்புடைமை ஆகும்.

'யதேச்சாதிகார முறையில் ஆளும் காங்கிரஸ் கட்சியினர் எதிர்க்கட்சியினர் அதிகாரத்திலுள்ள மாநகராட்சி மன்றத்தைக் கலைத்து விட்டனர்' என்ற பழி இந்த ஆட்சியாளர்களுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், இந்தப் பிரிவின் அமலை நிறுத்தி வைக்கவோ, இந்தப் பிரிவை மறுபரிசிலனை செய்யவோ இவர்கள் முன்வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இதை ஏற்றுக் கொள்வதோ, ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதோ, ஆளும் கட்சியின் நல்லெண்ணத்தைப் பொருத்தது. இதை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பற்றித்தான் சந்தேகப்படுவேனே தவிர, அரசாங்கத்தாருக்கு 3-40 p.m.
வரும் அதிகாரங்களைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன் என்று கூறி, என் திருத்தத்தை முன்மொழிகிறேன்.

* திரு. சி. பி. சிற்றரசு : மன்றத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்தைக் கலைப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து, 'மாநகராட்சி மன்றம் எதிர்க்கட்சிக்காரர்கள் கையிலே இருப்பதால் அதைக் கலைக்க ஆளுகின்ற சர்க்கார் முன்வந்தது' என்ற கெட்ட பெயருக்கு இந்த சர்க்கார் ஆளாகக்கூடாது என்று கருதுகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பைக் கலைப்பதற்கு, அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றொரு அமைப்புக்கு சக்தி இருக்கிறது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நம்மைவிட பரவலான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற மத்திய சர்க்கார், இந்த மாமன்றத்தைக் கலைப்பதற்கு முடிவு எடுக்குமானால், இந்த மாமன்றம் எவ்வளவு வேதனைப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைப்பற்றி பேசுகிறபோது, நேற்று ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார் '5 கோடி ரூபாயை 3 பேர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள் என்று'. அதுவே இன்னொரு முறையிலே சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அது அவ்வளவு நாகரிகமாக இருக்காது. '5 கோடி ரூபாயை 3 கோடி பேர்கள் பங்கிட்டுக்கொள்கிறார்கள். 160 கோடி ரூபாயை ஒரு 7, 8 மந்திரிகள் பங்கிட்டுக்கொள்கிறார்கள்' என்றும் சொல்ல முடியும். ஆனால் அது எவ்வளவு நாகரிகம் அல்ல. சரியும் அல்ல.

மிஸ்டர் சேர்மென் : சொல்லக்கூடாது என்று சொல்லியாகி விட்டது.

திரு. சி. பி. சிற்றரசு : சென்னை மாநகராட்சி மன்றம் 1959-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலே வந்தபோது 3½ கோடி ரூபாய்தான் வருமானம் வந்துகொண்டிருந்தது. இப்

பொழுது 6 கோடியே 25 லட்சம் வருமானம் பெறுகின்றது. ஆறு கோடியே 25 லட்சம் ரூபாய் வருமானம் பெறுகின்றது களோ, யார், யார் வரி கொடுக்காமல் ஏமாற்றிக்கொண்டு வந்தார் களோ, யார், யார், பெரிய பெரிய கட்டிடங்களை வைத்துக் கொண்டு குறைவான வரிகளை செலுத்தினார்களோ, அதையெல்லாம் கண்டு பிடித்துத்தான் இந்த வருமானம் அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் நம்முடைய மாகாணத்தில் மத்திய சர்க்காருக்கு சொந்தமாக இருந்த கட்டிடங்களுக்கு இது வரையிலும் வரி வாங்கப்படாமல் இருந்தது இப்பொழுதுதான் அந்தக் கட்டிடங்களுக்கு எல்லாம் வரி செலுத்தவேண்டும் என்று ஏறக்குறைய 20 லட்ச ரூபாய்க்கு மேல் மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று, இரண்டு லட்ச ரூபாய்க்குச் செக் வந்துவிட்டது. ஆகையினாலே அதனுடைய வளர்ச்சியில், அதனுடைய திறமையிலே, பொது மக்கள் சந்தேகப்படவில்லை என்பதை நான் உறுதியாக்க் கூறமுடியும், தவறு செய்கிறார்கள் என்றால் . . .

மிஸ்டர் சேர்மன் : இந்த ஷரா வருவது 3 வருஷம் பொறுத்தா, 5 வருஷம் பொறுத்தா என்பதுதான் கேள்வி.

திரு. சி. பி. சிற்றரசு : குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காவது இதை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், முனிசிபல் சட்டத்தில் 40-வது பிரிவில் இருந்து 44 வரையிலும் சர்க்காருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரங்களைக் கொண்டே அங்கே ஏற்படுகிற தவறுகளை சீர்திருத்த வசதி இருக்கிறபோது, அதை திடீரென்று கலைப்பது, மறுபடியும் மக்களைப்போய் சந்திப்பதற்கு காலத்தை ஒத்திப்போடுவது, என்பதெல்லாம் ஒரு ஜனநாயகம் விரும்பி ஏற்றுக்கொள்ளாத முறை என்று கூறிக்கொண்டு, குறைந்தது மூன்று ஆண்டாகிலும் இதை ஒத்திவைக்க வேண்டுமென்று இந்த சர்க்காரை மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதா முன்பு விவாதத்துக்கு வந்த போது இதன் பல பிரிவுகளைப்பற்றி அங்கத்தினர்கள் கருத்து தெரிவித்தார்கள். நானும் நிலைமையை விளக்கினேன். அதிலும் முக்கியமாக இந்த நகர மன்றத்தைக் கலைத்து விடலாம் என்று அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கும் இந்தப் பிரிவைப் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது. நானும் அரசாங்கத்தின் நிலையை விரிவாக எடுத்துக் கூறினேன். எந்த சூழ்நிலையிலே எந்த நோக்கத்தோடு அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய இத்தகைய பிரிவு இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக் கூறினேன். சென்னை நகர மன்றத்தைப் பொருத்த மட்டிலும் 'இந்த அதிகாரம் இதுவரையிலே இல்லாத அதிகாரம், அரசாங்கத்துக்கு இந்த மசோதாவினால் அளிக்கப்படுகிறது' என்றால் இது ஒன்றும் புதிது அல்ல. மற்ற நகர மன்றங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்

படுகின்ற நகர மன்றங்கள் தான். தொன்று தொட்டு இந்த அதிகாரங்கள் இருந்து வருகின்றன. சிற்சில சமயங்களிலே இந்த அதிகாரம் பிரயோகிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. பஞ்சாயத்துக்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்கள்தான். ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்கள் தான். அதிலேயும் சமீபத்திலே இந்த மன்றத்திலே சட்டம் செய்திருக்கின்றோம், பஞ்சாயத்து ஆட்சியைப்பற்றி அதிலேயும் இந்த மாதிரி அதிகாரம் அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனம் என்ன செய்தாலும் சரி, அரசாங்கத்துக்கு அதை கலைத்துவிடக் கூடிய அதிகாரம் கூடாது; அந்த அதிகாரமே வேண்டாம் என்று யாரும் சட்டத்தை செய்யவில்லை. அதிகாரத்தை அரசாங்கத்துக்கு அளித்துதான், பஞ்சாயத்து பற்றிய சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

நகர மன்ற சட்டம் பழமையாக இருக்கிறது. அது மாற்றப்படவில்லை. இன்று சென்னை நகரமன்ற சட்டத்திலே இது ஒரு குறைபாடாகக் கருதப்பட்டு அதை நீக்கும் வகையிலேதான் இந்தப் பிரிவு சேர்க்கப்படுகிறது. இந்த அதிகாரம் அரசாங்கத்துக்கு வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து இது சேர்க்கப்படுகிறது.

வீடு விநியோகிப்பை நான் அன்று ஒரு திருஷ்டாந்தத்துக்காகச் சொன்னேனே தவிர ஏதோ வீட்டு விவகாரத்துக்கு மட்டும் இதை கலைத்துவிடலாம், என்ற வகையிலே கூறவில்லை. ஆனால் என்னுடைய எண்ணம் என்று குறிப்பிட்டார்கள் கனம் அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் என்னுடைய எண்ணம் அவர்களுக்கு தெரியாது. தெரிந்து கொள்ளவும் முடியாது. நான் திருஷ்டாந்தத்துக்கு சொன்னேன். ஆனால், அது கூட கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதில் இருந்து, 'இது முன்னமேயே நடந்து கொண்டு வந்த ஒரு முறை. அந்த முறைப்படி நகரமன்றம் யோகித்த முறையே தவறு என்று சொல்லக்கூடாது என்று சொல்வதே தவறு' என்று சொல்கிறார்கள். அதாவது கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த நகரமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதியாகக் கூறுகின்றார்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் அப்படி விநியோகித்த முறையே தவறு என்று சொல்லக்கூடாது, என்று சொல்லவில்லை. அப்படி விநியோகிக்கும் முறையை இந்த மன்றத்தில் அனுமதித்து அவர்கள் ஏற்கனவே மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். அதற்குப் பிறகு புதுமுறையிலே விநியோகிக்க வேண்டும் என்ற காரணத்தாலே இடர்ப்பாடு ஏற்படுகிறது. காலத்தவறு என்று சொன்னேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதோடு முன்பெல்லாம் நகரமன்றத்திலே இப்படி அனுமதித்து வந்தது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே 'நகரமன்றத்துக்கு உரிமை இருக்கிறது; அது செய்தது

[திரு. எம். பக்தவத்சலம்] [11th August 1965

சரி; அரசாங்கம் அதிலே தலையிடக்கூடாது' என்றுதான் அவர் கூறினர். அதுகூட சரியில்லை என்று கூறுவேன். எனக்குத் தெரிந்தவரையிலே முன்பெல்லாம் கமிஷனர் அலாட்மெண்ட் செய்தார் இப்பொழுது நகரமன்றத்திலே உறுப்பினர்கள் பங்கு போட்டுக்கொள்ளக் கூடிய வகை இருக்கிறது. தவறுதலாக நான் சொல்லவில்லை. ஏனென்றால் உறுப்பினர்களே சொன்னார்கள். மேயர் அவர்களுடன் சேர்ந்து வந்த டெபுடேஷன், 'நாங்கள் இரண்டு மெம்பர்களுக்கு ஒரு வீடு வைத்துக்கொள்ளக்கூடாதா' என்று கேட்டனர்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே சொன்ன கருத்தை அதே சொற்களாலே சொல்லிவிடுகிற காரணத்தாலே கருத்து மாறுகிறது. இரண்டு மெம்பர்கள் சேர்ந்து சிபாரிசு செய்தால், ஒரு வீடு என்பது, அங்கே இருக்கிற வீடுகள் எல்லாம் பல மெம்பர்கள் சேர்ந்து கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்தால் கொடுக்க முடியாது. இரண்டு பேராவது சிபாரிசு செய்தால் பிரித்துக் கொடுக்க முடியும் என்பதிலேதான் பாகுபாடு. இரண்டு பேர் பிரித்துக் கொள்வதில்லை. சிபாரிசு முறை, ஜனநாயக முறை, நீண்ட நாளாக இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எடுத்துக்கொள்வது அல்ல. இரண்டு மெம்பர் சேர்ந்து யாருக்கு கொடுக்கவேண்டும் என்றால் கொடுக்க வேண்டும். 'இது கூட இல்லையா; நகரமன்ற உறுப்பினர்களாக இருக்கிறபோது இதுகூட கூடாதா' என்றார்கள். அப்படி இல்லை. வீடு இல்லாதவர்கள் ஜாபிதாவை சீட்டுப்போட்டு கொடுப்பதுதான் நல்லது என்று அரசாங்கம் சொல்லிற்று. அது தப்பு, வீடு இல்லாதவர்களா, இருக்கிறவர்களா, என்று தெரியாது. முறைதவறு என்பது அவர்கள் கருத்து. இது ஒரு திருஷ்டாந்தத்துக்கு சொன்னேன். இதுகூட அரசாங்கம் கமிஷனருக்கு சொல்லியது. அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நிலை என்ன? யார் ஏற்றுக்கொள்வது, யார் தப்பாகச் செய்கிறார்கள், என்பதுகூட அல்ல. 1½, 2 வருஷங்களாக 50 வீடுகள் கட்டப்பட்டும், பயன் இல்லாமல் இருக்கிறது. யாருக்கும் இல்லாமல், வீடுகள் இடிந்து விழக்கூடிய நிலையிலே இருக்கின்றன. அது தான் வரி கொடுப்போர் கவனிக்கவேண்டிய விஷயம். கவலைப்படவேண்டிய விஷயம். வரி கொடுப்போர் நலனையொட்டி அரசாங்கம் கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. இது ஒன்றுக்காகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகின்றோம் என்றும் நான் சொல்லவில்லை. ஆனால் இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த அபிப்பிராயத்திலிருந்தே அரசாங்கம் சரி என்று நினைத்தால்கூட 'நாங்கள் இப்படித்தான் செய்வோம்' என்று இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.'

திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் 'இப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது; என்னை சந்தித்த பிறகு நான் சொன்னபடிகூட அவர்கள் செய்ய முனையவில்லை' என்று தெரிவித்தார்கள். ஆனால் ஏற்கனவே இருக்கும்படியான தீர்மானத்தை, நான் அறிந்த வரை

11th August 1965] [திரு. என். வி. நடராசன்]

யில், 347 விதிப்படி ரத்து செய்தால்தான், அவர்கள் சர்க்கார் சொல்லும்படியான அந்த முறையை மேற்கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். 3-50 p.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் ஒன்றும் சொல்லவில்லை. மேயரும் உறுப்பினர்களும் வந்தபோது அவர்கள் சொன்னார்கள். அது சரியில்லை என்று சொன்னேன். 'இந்த அதிகாரம் கூட எங்களுக்கு இல்லையா' என்று கேட்டார்கள். நான் யோசித்துச் சொல்கிறேன் என்று சொன்னேன். பிறகு அரசாங்கத்திலிருந்து உத்தரவு கமிஷனருக்கு அனுப்பப்பட்டது. தீர்மானத்தை அரசாங்கம் ரத்து செய்துவிட்டால் என்ன? அரசாங்கம் இன்று உத்தரவு போட்டிருக்கிறது. முட்டுக்கட்டை போடவேண்டுமென்றால், 'தீர்மானம் இருக்கிறது' என்று இன்னும் பத்து நாட்கள் தள்ளலாம். இன்னும் பத்து நாட்கள் வீடுகள் வினியோகிக்கப்படாமல் இருக்கலாம். இதை ஒரு சாக்காக சொல்லலாமே தவிர, வாதமாக எடுத்துக் கொள்ளமுடியாது. அரசாங்கம் 'இந்த முறையில்தான் வீடு கொடுக்கவேண்டு' மென்று சொன்னார்கள். வகை ஏற்றுக் கொள்ளவில்லை. இது ஒரு திருஷ்டாந்தமாகத்தான் சொன்னேன். வீடு விஷயமாக பேச வந்தவர்களில், காங்கிரஸ்காரர்களும் இருந்தார்கள். எல்லோரும் ஏகோபித்த அபிப்பிராயம்தான் தெரிவித்தார்கள். அவர்களும் சேர்ந்துதான் இருக்கிறார்கள். இதில் அபிப்பிராயபேதமே அவர்களிடத்தில் இல்லை. எல்லோரும் 'நாங்கள் சொல்கிறபடி இரண்டுபேருக்கு ஒரு வீடாக கொடுக்கவேண்டு'மென்று சொன்னார்கள். இதில் கட்சி வகை ஒன்றுமில்லை. ஒருக்கால் இந்த நகரமன்றம் கலைக்கப்படுமானால் இன்றைக்கு மெஜாரிட்டியாக இருக்கிற தி. மு. க. உறுப்பினர்களோடு நாற்பது பேர் காங்கிரஸ் உறுப்பினர்களும் பாதிக்கத்தான் படுவார்கள். அதை அவர்கள் விரும்புகிறார்களா? ஒருக்காலும் விரும்பவில்லை. மைனாரிடியாக இருந்தாலும் அவர்களும் இருக்கத்தான் பிரியப்படுகிறார்கள். அவர்கள் கலைத்துவிடுங்கள் என்று சொல்கிறார்களா? இல்லை. இன்றைக்கு மெஜாரிட்டியாக இருக்கிற தி.மு.க. உறுப்பினர்கள் எவ்வாறு ஆட்சேபிக்கிறார்களோ அவ்வாறுதான் அவர்களும் ஆட்சேபிக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரை சொல்வேன், காங்கிரஸ், தி.மு.க. என்ற பிரச்னை இதில் இல்லை; இன்றைக்கு நகர மன்றத்தில் பல காரியங்கள் செய்யப்படுகின்றன. மக்கள் இன்றைக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்று நான் சொல்வதாகக் கொள்ள வேண்டாம். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் அரசாங்கத்திற்கு பொறுப்பிருக்கிறது. அதை வகிக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பொறுப்பு உணர்ச்சியோடுதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதனால்தான் இன்றைக்கு அந்த அதிகாரத்தை அரசாங்கம் கோருகிறது. மக்களுக்கு விமோசனம் வேண்டாமா? 'மற்றொரு தேர்தல் வரை பொறுத்துக் கொள்ளலாம்' என்று சொல்கிறார்கள். திருத்தம் அதுதான். திருத்தத்தில் மூன்று ஆண்டோ அல்லது ஐந்து ஆண்டோ என்று இருந்தாலும் அதன் உள் நோக்கம் வேறு. 'இந்த அரசாங்கம் அதைச் செய்யக்கூடாது, அடுத்து நாம் வருவோமோ என்னவோ, நகரமே

[திரு. எம். பக்தவத்சலம்] [11th August 1965

வந்து விடலாம்; அப்போது இதை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம், இப்போது இருக்கிற நகரமன்றத்துக்கு பாதகம் வராமல் பார்த்துக் கொள்ளலாம், என்ற இந்த இரண்டு நோக்கமும் சேர்ந்ததுதான் இந்தத் திருத்தம். சட்டம் செய்வது என்றால் விளையாட்டுக்கு செய்வது அல்ல. மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வருவது என்பது அல்ல பிரச்னை. வேண்டாமென்றால் கூடாது என்று சொல்லவேண்டும். அதையும் சொன்னார்கள். அரசாங்கம் வேண்டாமென்று சொல்லவில்லை. திரு. அன்பழகன் அவர்கள் கூறுவதிலிருந்து மற்ற பகுதிகளையாவது அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது இன்றைக்கு சட்டம் செய்கிறோம் என்றால் நாளைக்கு என்ன செய்யப்போகிறோம் என்று சொல்லவில்லை. மறுபடியும் சொல்கிறேன். போதிய ஆதாரத்தோடுதான் எதையும் செய்வார்கள். அதனால் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று சொல்லவில்லை. மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இந்த அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம் இருக்கவேண்டும். சிலசமயம் தவறான காரியங்கள் நடைபெறுகின்றன. அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அதிகாரத்தைக் கோருவதால் இதை மக்கள் பாராட்டுகிறார்கள். அதிகாரக் குறைவு இருக்கக் கூடாது என்றுதான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம், வேறு சில திருத்தங்களோடு மற்றொன்று கூறவிரும்புகிறேன். ஏதோ நாங்கள் கட்சி மனப்பான்மையோடு எதிர்க் கட்சிக்கு, தி.மு.க. விடம் எங்களுக்குள்ள விரோத மனப்பான்மையால், அவர்களுக்குப் பாதகமாக நியாயத்துக்கு விரோதமாக நாங்கள் செய்துகொண்டு போகிறோம் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நினைக்கிறார்கள். அப்படி அல்ல. ஒரு உதாரணத்தை சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட எண்ணம் இல்லை என்பதை மற்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். ஒரு நகரமன்றத்தின் தலைவர் தி.மு.க. வைச் சேர்ந்தவர். இந்த மன்றத்தில்கூட உறுப்பினர். சில தவறான காரியங்களை செய்ததாக அரசாங்கத்திற்குத் தெரிந்தது. செலவு செய்யப்பட்ட விவகாரம் அது. அந்த செலவு செய்து இருக்கக்கூடாது. அந்த செலவு நகர மக்களின் வரிப் பணத்திலிருந்து செய்யப்பட்டது. அது நகரமன்றத்தின் தலைவருடைய பொறுப்பில் நடைபெற்றதாக கருதியதால் அதற்காக அரசாங்கம் நோட்டீஸ் கொடுத்தது. ஜில்லா முனிசிபாலிடி சட்டத்தில் அதற்கு இடமிருக்கிறது. நகரமன்றம் அதைச் செய்யவில்லை. தலைவர் செய்தார். ஆகையால் நகரமன்றத் தலைவரை ஏன் நீக்கக்கூடாது என்றும் அதற்கு சமாதானம் கூறுங்கள் என்றும் இரண்டு மாதங்களுக்கு முன் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. நகரமன்றத் தலைவர் என்ன காரணம் கூறுவார்? அவர் செய்தது சரி என்று சொல்ல முடியாது. அந்த செலவு அதிகமோ, குறைவோ. அதிகமாகவும் இல்லை. இருந்தாலும் ஒரு பைசா அதிக செலவு செய்தாலும் தவறுதான். ஒழுங்கீனம் என்ற முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. தலைவருடைய சமாதானம், 'இஞ்சினியர் சொல்லி அதைக்கட்டிச் செய்தார்' என்பது. அரசாங்கம் என்ன முடிவு செய்தது? 'ஏதோ செய்துவிட்டார்.

11th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்.]

அதோடு விட்டுவிடுவோம்' என்று விட்டுவிட்டது. இது இன்று பிற்பகல் எடுக்கப்பட்ட அரசாங்க முடிவு. 'பரவாயில்லை, இனிமேலாவது சரியாக நடக்கட்டும், விட்டுவிடலாம்' என்று முடிவு செய்திருக்கிறது. அவர் தி.மு.க. வைச் சேர்ந்தவர்தான்; தி.மு.க. என்றால் எப்போதும் விரோத மனப்பான்மையுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு நிதானம் தவறிப் போகவில்லை. கனம் தி.மு.க. தலைவர் மன்ற உறுப்பினர் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் சொன்னார், 'நகர மன்றத்தைப் பிடித்துக் கொண்டுதானா அரசியல் நடத்தவேண்டும்' என்று காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரை, நகரமன்றம் தி.மு.க. விடம் இருப்பதால் கெட்டுப் போகவில்லை. சுதந்திரப் போராட்டம் நடந்தபோது எங்கெங்கு எதிர்ப்பு இருந்தது! சென்னை நகரமன்றம், ஜில்லா போர்டுகள் எல்லாம் எதிர்ப்பாகத்தான் இருந்தது. அப்போது காரியங்கள் நடக்கவில்லையா? சுதந்திரம் வாங்கவில்லையா? தேர்தலில் வெற்றி பெறவில்லையா? இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எங்களுக்கு பொறுப்பு இருக்கிறது. நகரசபையில் தவறு நடந்தால், அப்போது அரசாங்கத்திற்கு போதிய அதிகாரம் இருந்தால், எடுத்துக் கொள்கிறோம். அந்த வகையில் இந்த மசோதா வந்திருக்கிறது. ஆகையால், இந்தத் திருத்தத்தை ஒப்புக் கொள்வதற்கில்லை, எதிர்க்கிறேன், என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Is the hon. Member Sri K. Anbazhagan withdrawing his amendment?

திரு. க. அன்பழகன்: நான் எனது திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

The amendment was, by leave, withdrawn.

MR. CHAIRMAN: Is the hon. Member Sri S. K. Sambandhan pressing his amendment?

SRI S. K. SAMBANDHAN: I press my amendment, Sir.

MR. CHAIRMAN: The question is—

"*For* sub-clause (2) of clause 1, the following be *substituted* :—

'(2) Except section 5 which shall come into force after three years from the date of assent given by the Governor, all other sections shall come into force on such date as the State Government may, by notification, appoint.' ".

The amendment was put and declared lost.

Sri S. K. Sambandhan demanded a poll and the House divided thus:

Ayes

1. Sri K. Balasubramanya Iyer,
2. Sri K. Anbazhagan,
3. Sri G. Krishnamoorthi,

5. Sri N. Subbiah Chettiar.
6. Sri N. V. Natarajan,
7. Sri C. P. Chitrarasu,
8. Sri K. S. Abdul Wahab and
9. Dr. H. V. Hande.

Noes.

1. The Hon. Sri R. Venkataraman,
2. Sri K. Rajaram,
3. Sri V. K. Palaniswamy Gounder,
4. Srimathi S. Manjubashini,
5. Srimathi Saraswathi Pandurangam,
6. Srimathi T. L. Thirupurasundari,
7. Sri K. Ramadoss,
8. Dr. T. V Sivanandam,
9. Sri N. R. Thiagarajan,
10. Sri Mohanlal Mehta,
11. Sri K. Ramakrishna Achari,
12. Sri S. Jayarama Reddiar,
13. Sri K. V. Ramaswamy,
14. Sri S. D. Sundaram,
15. Sri A. Sambasiva Reddiar,
16. Sri R. Sivasankara Mehta,
17. Sri T. V. Devaraja Mudaliar,
18. Sri V. K. Ramaswamy Mudaliar,
19. Sri M. Rajah Iyer,
20. Sri E. Janakirama Mudaliar,
21. Sri V. Rengaswamy,
22. Sri M. Ethirajulu,
23. Sri K. Kamalakannan, and
24. Sri A. Chidambara Mudaliar.

Ayes—9; Noes—24; Neutral—Nil.

The amendment was lost.

Clause 1 was put and carried.

The long title and the Enacting Formula were put and carried.

4-00 p.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965), as passed by the Assembly, be passed.'

MR. CHAIRMAN : Motion moved—

'That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965), as passed by the Assembly, be passed.'

* *திரு. க. அன்பழகன் :* தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்தினுடைய அதிகார வரம்புகள் சென்னை மாநில அரசாங்கத்தினுடைய நிருவாகத்திற்கு முழுவதும், உட்பட்டதாக இல்லாத நிலைமையில், அதை முழுவதும் உட்படுத்த வேண்டுமென்ற வகையில், இப்போது அதைக் கலைப்பதற்கு அதிகாரம் பெற வேண்டுமென்றும், கொண்டு வரப்பட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்படுகிற கட்டத்தை அடைந்திருக்கிறது. அந்த சட்டசபையில் நிறைவேறியது இங்கும் நிறைவேறும் நிலைமையை அடைந்திருக்கிறது. இந்தச் சட்டம் பொதுமக்கள் பலருடைய சிந்தனையைக் கிளறுவதாக இருப்பதால், மன்றத்தினுடைய மற்ற பிரதிநிதிகள் சொல்லியது போலவும், இதன் அவசியத்தை ஆராய ஒரு பொறுக்குக் குழுவுக்கு இதை விடவேண்டுமென்று தி.மு.க. வினரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் கேட்டுக்கொண்டார்கள். என்றாலும், பொறுக்குக் குழுவுக்கு விட்டு மறுமுறையும் விவாதிக்க வாய்ப்பு அளிக்கப் படவில்லை. இந்தச் சட்டத்தில் கொடுமையான பகுதியாக இருப்பது கலைப்பதற்கு அதிகாரம் எடுத்துக்கொள்வதாகும். அதைச் சில ஆண்டுகள் ஒத்திவைக்க வேண்டுமென்றும், நடைமுறையில் உடனே கொண்டுவரக் கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதையும் முதன் மந்திரி அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். முதன் மந்திரி அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களை நான் நன்றாக அறிந்திருக்கிற வகையில், எப்போதும் எதையும் எதற்காகவும் விட்டுக் கொடுத்துப் பழகாதவர்கள் முதல் மந்திரி அவர்கள். ஆகையால் விட்டுக் கொடுப்பது என்ற வழியில் அவர்கள் மனம் மாறப்போவதில்லை. எதிர்க்கட்சிக்கு அவர் விட்டுக்கொடுப்பது என்ற கருத்துக்கே இடமில்லை. மாநிலத்தில் ஆளும் கட்சியாக காங்கிரஸ்காரர்களும் மாநகராட்சியில் தி.மு.க. வினரும் இருக்கிறார்கள்; ஒரு அமைப்புக்கு மற்றொரு அமைப்பு தருகிற முக்கியத்துவமும் மதிப்பும் தரப் பட்டிருக்கவேண்டும். இன்றைக்கு உள்ள மன நிலையில் இந்த சட்டத்தை இப்போது நிறைவேற்றிவிட்டால், நிச்சயமாக அச்சுறுத்தி கெடுபிடி செய்யலாம் என்ற காரணத்தால் எப்படியோ நிறைவேற்ற முன்வருகிறார்கள். உண்மையாகவே, ஜனநாயக முறையில், இந்த அதிகாரம் மக்களின் அரசாங்கத்திற்கு இருக்கிறது, ஆனால் ஜனநாயக மனப்பான்மையில் இந்த அதிகாரத்திற்கு இடம் இல்லை என்று கூற விரும்புகிறேன். மாநகராட்சி நிர்வாகத்தை சரிபடுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம். ஆனால் அந்த நிர்வாகத்தை மாநில அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அதை அரசாங்க அதிகாரிகளைக் கொண்டே நடத்துமானால் அது பொது ஜன உரிமைக் கருத்துக்கு உகந்ததாக இருக்காது.

மாநகராட்சி மன்றம் கலைக்கப்படும் முறையே கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறேன். அது கலைக்கப்பட்டால், உடனே

தேர்தல் நடத்துவதற்கான முயற்சியையாவது அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இதற்கு வகை செய்யத்தக்க திருத்தம் எதுவும் நான் கொடுக்கவில்லை. மாநகராட்சி மன்றத்தைக் கலைப்பது என்பது ஜனநாயக அரசாங்கத்திற்கு இயல்பாக இருக்க வேண்டிய குணங்களுக்கு மாறானது, முறையற்றது.

இந்த மசோதாவின் கடுமையான நோக்கத்தைப் பார்க்கும் போது எனக்கும் என் கட்சியினருக்கும் ஏற்படும் வருத்தம் காரணமாக எங்கள் கண்டனத்தைக் காட்ட நாங்கள் வெளி நடப்புச் செய்ய வேண்டியது அவசியமாக இருந்தாலும், இம் மன்றத்தின் மாண்பையும் மரபையும் கருதி இந்த மன்றத்தில் முதன் முதலாக வெளிநடப்புச் செய்யும் முறையை நாங்கள் மேற் கொள்ள விரும்பவில்லை என்பதையும் சொல்லிக் கொண்டு எங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Sri V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I am one of those who honestly feel that there should be a comprehensive Bill instead of a piecemeal legislation like this. Just before the dissolution of the Assembly, we had some amendments, and on that account, we formed the city council and area committees. That has created a lot of confusion. Further, the city is growing in importance. The population is now 20 lakhs. It is now an A class city, and people overnight want all amenities. We are expecting a lot of grants from the Central Government. The area of the city also has extended to a great extent. Times have changed considerably. This Act came into force in 1919, that is, about 46 years ago. Much water has flowed under the bridge since then. I would request the Hon. Minister in charge to bring forward a very comprehensive Bill, so that we can go into every clause and see what benefits can be derived by the public of Madras. That is all my submission, Sir.

